# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள்

பேராசிரியர் மு. சின்னத்தம்பி



குமரன் புத்தக இல்லம்

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

**புத்தகத்தின் பெயர்** இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள் **அனுமதிப்பத்திரம்** : EPAB

**நூலாசிரியர்** பேராசிரியர் மு. சின்னத்தம்பி

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

**விஜித வெலகெதர**
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2018 மாதம்
கல்வி அமைச்சு "இசுருபாய" பத்தரமுல்ல
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள்

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள்

பேராசிரியர் மு. சின்னத்தம்பி

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2018

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள்

எழுதியது மு. சின்னத்தம்பி ©

முதற்பதிப்பு: 2018

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை -600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Ilankaiyin Porulaathaara Apiviruththip Pokkukal

by M. Sinnaththamby ©

First Edition: 2018

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E-mail: *kumbhlk@gmail.com*
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo - 6

வெளியீட்டு எண்: # 764

ISBN 978-955-659-576-5

எனது தாய், தந்தையருக்கு
இந்நூல் சமர்ப்பணம்

# அணிந்துரை

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் பொருளியல் பேராசிரியர் மு.சின்னதம்பி அவர்களால் எழுதப்பட்ட பொருளாதாரக் கட்டுரைகளின் இத்தொகுப்பு நூலுக்கு அவரது மாணவனான நான் அணிந்துரை வழங்குவதில் மிகவும் பெருமிதம் அடைகிறேன். சரியாக 50 ஆண்டு களுக்கு முன்னர் 1967-68ஆம் ஆண்டுகளில் அவர் பொருளியல் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியபொழுது அவரிடம் பொருளியல் சிறப்புமாணவனாக பொருளியல் பயின்றேன். 1965இல் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக பதவியேற்ற இவர் 1993இல் பேராசிரியராக பதவிஉயர்வு பெற்றார். தோட்டப்புறச்சூழலில் பிறந்த ஒருவர் பல்கலைக்கழகமொன்றில் முதல்முறையாக பேராசிரியராக பதவிஉயர்வு பெற்றமை பதிவுசெய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இவர் தமிழிலே மாத்திரமல்லாது, ஆங்கிலமொழியிலும் ஆரம்பம் முதலே விரிவுரையாற்றி வருவதும், பல்வேறு சஞ்சிகைகளில் கட்டுரைகள் வெளியிடுவதும், பொதுநிகழ்வுகளில் உறையாற்றி வருவதும் இவரது புலமைசார் பங்களிப்பாகும்.

இந்நூலிலே பொருளாதாரத்துறை குறித்து ஆழ்ந்த அனுபவமிக்க ஒருவரின் கருத்துக்கள் கட்டுரைகளாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. மொத்தமாக 12 கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூலில் 8 கட்டுரைகள் அவரது பொருளாதாரப் புலமையையும் ஏனைய கட்டுரைகள் அவரது சமூகஅக்கறையையும் காட்டுகின்றன.

பொருளாதாரம் குறித்த 8 கட்டுரைகள் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்திலும் பல்கலைக்கழகங்களிலும் பொருளியலை பாடமாகப் பயிலுகின்ற மாணவர்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளன. இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கண்ணோட்டம், மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு முதலீடு, ஊழியச்சந்தை, இறைக்கொள்கை போன்ற தலைப்பிலான கட்டுரைகள் பொருளாதாரம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம் அல்லாது பொருளாதாரம் பற்றி அக்கறைகொண்ட பொதுவாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. பொருளாதாரம், அதனது பல்வேறு

மூலகங்கள் என்பன குறித்த அவரது விளக்கங்கள் இலங்கையின் பொருளாதார நிலைமையை வெளிக்காட்டுகின்றன. இலகுதமிழில் ஆற்றொழுக்குபோன்ற தெளிந்தநடையில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய மையக்கருத்துக்களை வாசகர் களிடையே கொண்டுசேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

பூகோளமயமாக்கல் பற்றிய மூன்று கட்டுரைகள் இந்நூலுக்கு ஒரு முத்தாய்ப்பாக அமைந்துள்ளன. இன்றைய சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்து அதிகம் பேசப்படுவது பூகோளமயமாக்கம் என்பதாகும். உலகப் பொருளாதாரத்தை இயக்குகின்ற தாராளவாத பொருளாதாரக் கருத்துக்களின் உச்சக்கட்டமாகத் திகழ்வது புகோளமயமாக்கமாகும். நாடுகளிடையே நெருங்கிய தொடர்புகள், தொழிநுட்ப-விஞ்ஞான வளர்ச்சி, மக்களின் குடிப்பெயர்வுகள், நாடுகள் தனித்து செயற்பட முடியாமை என்பன இப்பூகோளமயமாக்கலை செறிவுள்ளதாக்குகின்றன. உலகத்தை ஒரு கிராமமாகப் பார்க்கின்ற பார்வை பூகோளமயமாக்களின் ஒரு நேரடிவிளைவாகும். இந்த பூகோளமயமாக்கல் குறித்து அதனுடைய சாதகபாதகங்கள் குறித்தும் இக்கட்டுரைகள் எடுத்துக்கூறுகிறன. பூகோள மயமாக்கலை வரவேற்கின்ற அதேவேளையில் அதற்கு எதிராக தேசிய நிலைப்பாடுகள் வலுவடைந்து வருகின்ற நிலையையும் காணக்கூடிய தாகவுள்ளது. தொழிலாளர்களுடைய நிலைமை, அவர்களுடைய உரிமைகள், தொழிற் சங்க இயக்கங்கள் போன்ற கட்டுரைகள் இதனை நன்கு புலப்படுத்துகின்றன. இந்நூலில் ஆங்காங்கே அட்டவணைகளும் வரைபடங்களும் சேர்க்கப்பட்டிருப்பது நூலுக்கு மெருகூட்டுகிறது.

'தேயிலையின் செழுமையும் தொழிலாளர்களின் ஏழ்மையும்' என்ற ஆய்வுநூலுக்காக 2015ஆம் ஆண்டிற்கான சாகித்திய விருதினைப் பெற்ற பேராசிரியர் அவர்களது இந்த நூல் வாசகர்களிடையே நன்மதிப் பைப்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பொருளாதாரம் போன்ற முக்கியமானதொரு துறைசார்ந்த இந்த நூல் வெளியீட்டுத்துறையில் முத்திரை பதிப்பதோடு, அத்துறையின் பல்வேறு அம்சங்களில் பொதுவாசகர்களின் அக்கறையை அதிகரிக்கச் செய்யக்கூடியதாக இருக்கின்றமை வரவேற்க தக்க ஒன்றாகும்.

**எம். வாமதேவன்**
ஆலோசகர்,
மலைநாட்டு புதியகிராமங்கள், உட்கட்டமைப்பு,
மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

## முன்னுரை

இத்தொகுப்பு நூலில் இணைக்கப்பட்டுள்ள 12 கட்டுரைகளில் முதல் எட்டு கட்டுரைகளும் இலங்கையினது பொருளாதாரத்தையும் அதனோடு தொடர்புள்ள சில முக்கிய விடயங்களையும், அடுத்துவரும் நான்கு கட்டுரைகளும் பொருளாதார அபிவிருத்தி, பூகோளமயமாக்கம் போன்ற அரசியல்-சமூக-பொருளாதாரம் சார்ந்த விடயங்களையும் ஆராய்கின்றன. மேற்படிக்கட்டுரைகள் பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு நோக்கங்களுக்காக எழுதப்பட்டனவாகும். ''சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் பொருளாதாரம்'', ''தாராளமயமாக்கமும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும்'', ''இலங்கைக்கு வெளிநாட்டு நிதிகளின் உட்பாய்ச்சல்'' ஆகிய மூன்று கட்டுரைகள் மட்டுமே இந்த நூலுக்கென விசேடமாக எழுதப்பட்டனவாகும்.

இதிலுள்ள கட்டுரைகள் சில அவற்றின் ஆரம்பவடிவங்களில் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டனவாகும். இவற்றுட் சில வீரகேசரி நிறுவனத்தின் வாராந்த வெளியீடான 'நாணயம்' பத்திரிகையில் 2014ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளிவந்தன. இன்னும் சில கட்டுரைகள் வீரகேசரி, தினக்குரல் என்பவற்றின் ஞாயிறு இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. ஏனைய சில பல்வேறு கருத்தரங்குகள், விசேட கலந்துரையாடல்கள் என்பவற்றில் வாய்மொழிமூலமாக ஆற்றிய உரைகளைப் பின்னணியாகக் கொண்டு பின்னர் கட்டுரைகளாக எழுதப்பட்டனவாகும்.

மேற்படிக்கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ள பல விடயங்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரவகுப்பில் (G.C.E.A/L) பொருளியல், வணிகவியல் போன்ற பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கும், அதே பாடங்களை பல்கலைக்கழகங்களில் கற்கும் இளமாணிப்பட்டதாரி மாணவர்களுக்கும் பயனுள்ளவையாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். இந்த எண்ணமே மேற்படி ஆக்கங்களை ஒன்று திரட்டி ஒரு தொகுப்பு நூலாக வெளியிட என்னைத் தூண்டியது. பொருளாதார அபிவிருத்தியின் வேறுபட்ட பரிமாணங்கள், பூகோளமயமாக்கம் போன்ற கட்டுரைகள் மேலே குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டுமன்றி, இவ்விடயங்களைப்பற்றிய

பொதுவான அறிவினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைருக்குமே பயனுள்ளவையாக இருக்கும் எனக்கூறின் அது மிகையாகாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்த பூகோளமயமாக்கமானது முதலாம் உலகப்போரின் பின்னரும், பெருமந்த காலத்திலும் சற்றுத் தளர்ச்சியடைந்தது. 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் பல்வேறு நாடுகளில் அமுலாக்கப்பட்டு வரும் அமைப்புசார் சீராக்கல் கொள்கைகள் காரணமாக அது புத்துயிர் பெற்றுள்ளதோடு, அதனுடன் தொடர்புபடுத்தப்படும் பல்வேறு பொருளாதார, சமூகநிகழ்வுகளின் பண்பும் வேகமும் இப்பொழுது புதிய பரிமாணங்களைப் பெற்றுவிட்டன. முதலாளித்துவ அமைப்பின் சமகால அபிவிருத்தியே பூகோளமயமாக்கம் என்றும் கூறலாம். பூகோளமயமாக்கம் பலதசாப்தங்களுக்கு முன்னர் இருந்தே உலகில் பரவலாக இடம்பெற்று வந்துள்ளபோதும், எண்பதாம் ஆண்டுகளின் பின்னரே அது உலகளாவியரீதியில் அனைத்து நாடுகளையும் அனைத்து சமூகங்களையும் பாதிக்கும் ஒன்றாக வளர்ச்சி அடைந்துள்ளதோடு, இப்பொழுது அதுபற்றி பரவலாக கலந்துரையாடப் பட்டும் வருகின்றது. உலகமக்கள் அனைவரையும் பாதிக்கும் விடயமாக மாறியுள்ள அது இன்று சமூகத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் ஒரு விடயமாக உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே இது தொடர்பான மூன்று கட்டுரைகள் இங்கே இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலை வாசிக்கும் மாணவர்களும் ஏனையோரும் இதில் இணைக்கப்பட்டுள்ள கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் நன்மை அடைவார்களாயின் இதனை வெளியிட்டதன் நோக்கம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக நான் திருப்திஅடைவேன் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

* * * * *

எனது இந்த நூலுக்கு ஓர் அணிந்துரையை எழுதித் தருமாறு பேராதனை பல்கலைக்கழகத்திலே எனது ஆரம்பகால மாணவனும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் தொடர்ந்து தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளாகவும் அரசாங்கத்தில் பல்வேறு உயர் பதவிவகித்து ஓய்வுபெற்றதன் பின்னர் இப்பொழுது மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராகக்

கடமையாற்றுபவருமான திரு. எம். வாமதேவன் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அருமையான ஒரு அணிந்துரையை எழுதித் தந்தமைக்காக அவருக்கு எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலில் இணைக்கப்பட்டுள்ள வரைபடங்களை திறம்பட தயாரித்துக் கொடுத்த எனது மாணவனும், பேராதனைப் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும், அத்துறையின் இன்றைய தலைவருமான திரு. எஸ். விஜயசந்திரன் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். இந்த நூலில் அடங்கியுள்ள கட்டுரைகளுள் பெரும்பாலன வற்றை பல்வேறு காலப்பகுதிகளில் கணினியில் பொறித்துக் கொடுத்த கண்டி மகாகந்தையைச் சேர்ந்த செல்வி ஆனந்தி பொருமாள் அவர் களுக்கு என்து நன்றிகள். நான் பல்கலைகழகத்திலிருந்து ஓய்வுபெற்று கொழும்பிற்கு வந்த பின்னரும் அவரது இந்த சேவை தொடர்ந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்த நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த குமரன் பதிப்பகத்தாருக்கு எனது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன். அவர்களது இந்த சேவை தொடர இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

மு. சின்னத்தம்பி

## உள்ளடக்கம்

அணிந்துரை vii

முன்னுரை ix

1. சுதந்திரத்திற்குப்பிந்திய இலங்கையின் பொருளாதாரம்: ஒரு சிறு கண்ணோட்டம் 1

2. தாராளமயமாக்கமும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் 29

3. இறைக்கொள்கையும் இலங்கையில் அதன் செயற்பாடும் 42

4. இலங்கையினது வெளிநாட்டு வர்த்தகத்தின் கட்டமைப்பும் அதன் போக்குகளும் 52

5. இலங்கையின் வெளிநாட்டுக்கடன்கள் 60

6. இலங்கையின் ஊழியச்சந்தை 67

7. இலங்கைக்கு வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சல்: நேரடி முதலீடுகளும் வெளிநாட்டு உதவியும் 76

8. பூகோளமயமாக்கம் கருத்தும் பரிமாணங்களும் அதனாலேற்படும் விளைவுகளும் 92

9. பூகோளமயமாக்கமும் அபிவிருத்தியும் 104

10. பூகோளமயமாக்கமும் தொழிற்சங்க இயக்கமும் 115

11. அபிவிருத்தியின் வேறுபட்ட பரிமாணங்கள் 128

12. சமூகநலன்சேவைகளின் வழங்களும் ஊழியத்தினது உற்பத்தித்திறனும்: இலங்கையின் தேயிலைத்தொழில் 135

# சுதந்திரத்திற்குப்பிந்திய இலங்கையின் பொருளாதாரம்
## ஒரு சிறு கண்ணோட்டம்

துரிதமான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் கிடைத்த வாய்ப்புகள் பல வற்றை நழுவவிட்ட ஒரு நாடாக இலங்கை கருதப்படுகின்றது. 1960ஆம் ஆண்டுகளில் தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தலாவருமானத்திற்குச் சமமான தலாவருமானத்தைக் கொண்டிருந்த இலங்கை சுமார் நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர், மேலே குறிப்பிட்ட நாடுகளின் தலாவருமானங்கள் பன்மடங்குகள் அதிகரித்தநிலையில் இலங்கையின் தலாவருமானம் அதேவேகத்தில் வளர்ச்சி அடையாததால், மேற்படி நாடுகளுடன் ஒப்பீட்டுரீதியில் அது குறைந்த தலாவருமானத்தைக் கொண்ட ஒரு நாடாக மாறியது. சமூக-பொருளாதார அபிவிருத்தியில் உயர்ந்த ஒரு நிலையை அடைந்துவிட்ட கிழக்காசிய நாடுகளோடு ஒப்பீட்டுரீதியில் இலங்கையின் இவ்வாறான பின்னடைவிற்கு பல காரணிகள் பங்களித்தன: முதலாவதாக, பல தசாப்தங்களாக நாட்டில் நிலவிவந்த இனநெருக்கடியும், சுமார் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்துவந்த விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டமும், அதனைத் தொடர்ந்து உருவாகிய போர்ச்சூழலும், இறுதியாக நடந்துமுடிந்த ஆயுதப் போரும் நாட்டின் சமூக-பொருளாதார செயற்பாட்டில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. இரண்டாவதாக, நாட்டினது பொதுநிறுவனங் களின் செயற்பாட்டிலும் ஆளுமையிலும் ஏற்பட்டுவந்த பலவீனங்களும் பொருளாதார அபிவிருத்தியைப் பாதிப்பனவாக இருந்தன. இறுதியாக, 1960ஆம் ஆண்டுகளின் பின்னர் உற்பத்தித்திறன்குன்றிய பொதுத்துறைக்கே கூடிய முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளித்த அரசு, தனியார் துறையின்மீது கவனம் செலுத்தத்தவறியமை பொருளாதார வளர்ச்சியிலும் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதிலும் பல பின்னடைவுகளை ஏற்படுத்திற்று.

இவ்வாறானதொரு நிலைமையிலுங்கூட, மனிதசாதனங்களில் முதலீடு செய்வதிலும் பாலியல் சமத்துவத்தை ஊக்குவிப்பதிலும் வளரும் நாடு

களுக்கிடையே இலங்கை முதலிடம் வகித்து வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. சமூகநலனை மேம்படுத்துவதற்கு முப்பதாம் ஆண்டுகளின் நடுப்பகுதி முதலே அரசு பெருமளவு செலவீடுகளை மேற்கொண்டு வந்தது. எல்லோருக்குமே இலவசக்கல்வியையும், இலவச சுகாதாரவசதி களையும் உணவுமானியத்தையும் வழங்குதல், முழுநாட்டையும் உள்ளடக்கியதும் மானியத்துடன் கூடியதுமான போக்குவரத்துவசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றின் மூலம் சமூகநலனை மேம்படுத்தும் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. இதன் விளைவாக, மனிதஅபிவிருத்தியில் கிழக்காசிய உயர்வருமான நாடுகளுக்கு நிகரான ஒரு நிலையினை அடையக்கூடியதாக இருந்ததோடு, பால்நிலைசமத்துவம், குறைந்த தாய் - சேய் மரணவிகிதங்கள் போன்ற ஆயிரமாம் ஆண்டு இலக்குகள் பலவற்றை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அடைந்து கொள்ளக்கூடிய ஒரு நிலையையும் இலங்கை எய்தியது.

மனிதஅபிவிருத்தியில் இலங்கை மேற்படி சாதனைகளை நிலை நாட்டியுள்ளபோதும், அதன் இந்த மனிதஅபிவிருத்திச் சாதனையானது சிலமுக்கிய குறைபாடுகளையும் கொண்டதாக உள்ளது என்பது பல்வேறு சாரார்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமைமீறல்கள், தனிப்பட்டோர் காணாமற்போதல், ஆயுதப்போரினால் ஏற்பட்ட பாரிய உயிர்-உடைமைச்சேதங்கள், மனஇறுக்கம் காரணமாக மக்களிடையே பொதுவாக அதிகரித்துவரும் மதுப்பழக்கம், கொலைகள், தற்கொலைகள் உட்பட வேறு குற்றச்செயல்கள், வேலையின்மை என்பவற்றோடு, இராணுவ நடவடிக்கைகள் காரணமாக நாட்டுமக்களில் ஒரு சாரார் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளமையும் நாடு அடைந்துள்ள மனிதஅபிவிருத்தியை கேள்விக்குறிக்கு உள்ளாக்கி யுள்ளன. அபிவிருத்திச் செயற்பாடுகளிலிருந்து பல்வேறு சமூகக்குழுக்கள் ஒதுக்கிவைக்கப்படுதல் அல்லது ஓரங்கட்டப்படுதல் அண்மைக்காலத்தில் அதிகரித்து வந்துள்ளது. போர் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் இருந்து இடம்பெயர்ந்து பின்னர் மீளக்குடியமர்வோர் எதிர்நோக்கும் பிரச் சினைகள், பொதுச்சேவைகளின் நன்மைகளைப் பெறமுடியாதிருக்கும் பெருந்தோட்டத்தொழிலாளர், பொதுவசதிகள் குறைவாக இருக்கும் நாட்டின் எல்லைப்புறக் கிராமங்களில் வாழ்வோர் போன்றோரை அபிவிருத்திச் செயற்பாடுகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளோருக்கு உதாரணமாகக் கூறலாம்.

சுதந்திரத்திற்குப்பிந்திய இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றிய அரசியல் கட்சிகள் தமது சமூக-பொருளாதார அரசியல் சித்தாந்தங் களுக்கு ஏற்பவும், சர்வதேச பொருளாதாரச்சூழலில் ஏற்பட்டு வந்த மாற்றங்களுக்கு ஏற்பவும் நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நிர்ணயித்து வந்துள்ளன. பொதுவாக அவை, ஒன்றில் சந்தைசார்ந்த கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிப்பனவாகவோ (1948-70), திட்ட மிடலுடன் கூடிய ஒரு கலப்புப்பொருளாதாரத்தை ஆதரிப்பனவாகவோ (1970-77) அல்லது ஒரு திறந்த கட்டில்லாப் பொருளாதாரத்தை ஆதரிப் பனவாகவோ (1977ற்குப் பிந்திய இலங்கை) இருந்து வந்துள்ளன. பொருளாதாரக்கொள்கைகளில் ஏற்பட்ட மேற்படி மாற்றங்கள் நாட்டிற்கு நன்மைகளை ஏற்படுத்திய அதேவேளையில் எதிர்மறையான விளைவு களையும் ஏற்படுத்தின. அரசியல் மயமாக்கப்பட்ட ஒரு ஊழியப்படையை யும் பலவீனமான ஒரு வர்த்தக வகுப்பையும் இவை உருவாக்கியமையை இங்கு குறிப்பிடலாம். இந்நிலையில் சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை யின் பொருளாதாரத்தை ஆராயும்பொழுது அதனை இக்காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்களின் அடிப்படையிலான சிறு காலப்பகுதிகளாகப் பிரித்து ஆராய்வது உசிதமாகும். இந்த அடிப்படையிலேயே சுதந்திரத் திற்குப் பிந்திய இலங்கையின் பொருளாதாரம் இங்கு ஆராயப்பட்டுள்ளது:

### 1. 1948–1956 காலப்பகுதி

மத்தியகாலந்தொட்டே நவரத்தினங்கள், யானைத்தந்தம், முத்துக்கள் போன்ற விலைஉயர்ந்த பண்டங்களின் ஏற்றுமதியில் புகழ்பெற்று விளங்கிய இலங்கை கறுவா, ஏலம், மிளகு, கராம்பு போன்ற வாசனைத் திரவியங்களையும் ஏற்றுமதி செய்து வந்தது. பிரித்தானிய குடியேற்ற ஆட்சிக்காலத்தில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் போன்ற பெருந்தோட்டப்பண்டங்களையும் அது ஏற்றுமதி செய்யத்தொடங்கிற்று. சுமார் ஒன்றரை நூற்றாண்டுகால பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றபோது அதன் பொருளாதாரம் ஏற்றுமதிசார்ந்த ஒரு இரட்டைப்பொருளாதாரமாக (A dualistic Export Economy) இருந்த தென கூறப்படுகின்றது. ஏற்றுமதி சார்ந்த ஒரு பொருளாதாரம் எனக்கூறும் போது அது பொருளாதாரத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் பெருமளவிற்கு ஏற்றுமதிக்கான உற்பத்தியோடு தொடர்புள்ளனவாக இருப்பதைக் குறிக்கும். இலங்கையைப்பொறுத்தவரை, அக்காலப்பகுதியில் மொத்தத் தேசியஉற்பத்தியில் ஏற்றுமதிகளின் பங்கு உயர்வாக இருந்ததோடு,

பொருளாதார நடவடிக்கைகளும் பெருமளவிற்கு ஏற்றுமதிகளிலேயே தங்கிஇருந்தன. மறுபக்கத்தில், இரட்டைப் பொருளாதாரம் என்பது ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதுமான இரண்டு பொருளாதாரத்துறைகள் அருகருகே அமைந்திருந்தும் அவை ஒன்றுடனொன்று தொடர்பின்றி தனித்தனி வழிகளில் பயணிப்பதைக் குறிக்கும். இலங்கையின் மத்தியமலைநாட்டில் பெருந்தோட்டங்கள் ஒருபுறமும் உள்நாட்டு விவசாயத்துறை மறுபுறமும் ஒன்றுடனொன்று தொடர்பில்லாத வகையில் செயற்படுவதையே இங்கு இரட்டைப் பொருளாதாரம் என்பது குறிக்கின்றது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் இலங்கையின் மத்தியமலைநாட்டின் பல பிரதேசங்களில் பெருந் தோட்டங்கள் தாபிக்கப்பட்டமையே பெருந்தோட்டத்துறை, உள்நாட்டு சிறுநிலவிவசாயத்துறை என்ற இந்த இரு துறைகளைக்கொண்ட ஒரு இரட்டைப்பொருளாதாரம் இங்கு உருவாகுவதற்குக் காரணமாயிற்று.

வெளிநாட்டு மூலதனத்தையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு ஊழியத்தையும் கையாண்டு வெளிநாட்டு முயற்சியாளரால் விசாலமான காணிகளில் பணப்பயிர்கள் செய்கைபண்ணப்பட்டு அவை ஏற்றுமதி செய்யப்படுவதே பெருந்தோட்டப் பொருளாதாரம் எனக்கூறப் படுகின்றது. இலங்கையில் இவ்வாறான பொருளாதாரமொன்று காணப் பட்ட அதேவேளையில் உள்நாட்டுக் கிராமியத்துறையில் உள்நாட்டு ஊழியத்தையும் பாரம்பரிய உற்பத்திமுறைகளையும் கையாண்டு சுயதேவை பூர்த்திக்காக சிறுநிலவிவசாயமும் குடிசைக்கைத்தொழில்களும் மேற்கொள்ளப்பட்டுவந்தன. இவ்விரு துறைகளும் அருகருகே அமைந் திருந்தபோதும், அவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு உற்பத்திக் காரணிகளின் பாய்ச்சல்களோ, உற்பத்திப்பண்டங்களின் கொள்வனவு, விற்பனவுகளோ இடம்பெறவில்லை. பெருந்தோட்டத்துறைக்கும் வெளி யுலக நாடுகளுக்குமிடையே இருந்த பாரிய வர்த்தகப்பாய்ச்சல்களோடு ஒப்பிடும்போது மேலே குறிப்பிட்ட இரு துறைகளுக்குமிடையே காணப் பட்ட வர்த்தகத்தொடர்புகள் மிகமிகக்குறைவாகவே இருந்தன.

அந்நியமூலதனம், முயற்சி, ஊழியம் (நிலம் மட்டுமே ஒரேயொரு உள்நாட்டு உற்பத்திக்காரணியாக இருந்தது) என்பவற்றைக் கையாண்டு ஏற்றுமதிக்காக பணப்பயிர்களை உற்பத்திசெய்த பெருந்தோட்டத்துறை உள்நாட்டுசிறுநில விவசாயத்துறையின் மீது குறிப்பிடத்தக்க தாக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான சிறுநிலவிவசாயிகள்

உள்நாட்டு நுகர்விற்காக உணவுப்பண்டங்களை அதிலுங்குறிப்பாக, அரிசியை உற்பத்தி செய்வதிலேயே ஈடுபட்டு வந்தனர். இந்த சீவனமட்ட உள்நாட்டுவிவசாயத்துறைக்கு மாறாக பெருந்தோட்டத்துறையானது பெருமளவு பொருளாதாரமிகையினை உருவாக்கியது. ஏற்றுமதியின் மூலம் கிடைத்த இம்மிகையின் பெரும்பகுதி இலாபப்பங்குகள், வெளி நாட்டு மூலதனத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள் போன்ற வடிவங் களில் வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இது உள்நாட்டு நுகர்விற்கோ, முதலீட்டிற்கோ எந்தவிதத்திலும் உதவவில்லை. இத் துறையினின்று உழைக்கப்பட்ட மொத்தஇலாபத்தில் ஒரு சிறுபகுதி மட்டுமே உள்நாட்டில் தங்கியது. பின்னையதன் கணிசமானபகுதி அத் துறையிலேயே மீள்முதலீடு செய்யப்பட்டது. எஞ்சிய இன்னொருபகுதி உள்நாட்டு உயர்வருமான வகுப்பினரின் அதிகரித்த நுகர்விற்கு பயன் படுத்தப்பட்டது. இந்த அதிகரித்த நுகர்வுச்செலவுங்கூட, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், சேவைகள், என்பவற்றின் மீது செலவிடப்படாததால், இவ்விரு துறைகளுக்கும் இடையிலான உறவுகள் மிகமிகக் குறைவாகவே இருந்தன. அத்துடன், உள்நாட்டுப் பொருளா தாரத்தின் ஏனையதுறைகளில் முதலீடு செய்வதற்கு பெருந்தோட்டத்துறை தனது மிகைஉற்பத்தியின் ஒரு பகுதியை ஒதுக்கத்தவறியது. எனவே, சிறுநிலவிவசாயத்துறையானது குறைந்த சீவனமட்டத்தில் ஒரு பின்தங்கிய துறையாக தொடர்ந்தும் இருந்துவந்தது. இக்காலப்பகுதியில் நாட்டில் குறிப்பிடத்தக்க ஒரு கைத்தொழில்துறையும் இருக்கவில்லை. இருந்த ஒரு சில கைத்தொழில்களும் பெருந்தோட்டப்பயிர்களை பதப்படுத்துதல், அத்துறைக்கு தேவையான சக்தி, பொறித்தொகுதிகள் என்பவற்றை உற்பத்திசெய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனவாக இருந்தன. மேலும், வர்த்தகம், நிதி, வங்கித்தொழில், காப்புறுதி, போக்குவரத்து போன்ற பொருளாதாரத்தின் சேவைகள்துறையும் பெருமளவிற்கு பெருந்தோட்டத் துறையின் உற்பத்தி, வர்த்தகம் என்பன சார்ந்த நடவடிக்கைகளுக்கே தமது சேவைகளை வழங்குவனவாக இருந்ததால் அவையும் பெருந் தோட்டத்துறையின் செல்வாக்கிற்கு உட்பட்டனவாகவே இருந்தன.

இக்காலப்பகுதியில் அரசாங்கம் பின்பற்றிய தலையிடாமைக் கொள்கையின் கீழ் இறக்குமதிப்பொருட்கள் தாராளமாக கிடைக்கக் கூடியதாக இருந்ததால், அப்பொருட்களை அல்லது அவற்றிற்கான பதிலீடுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யவேண்டிய கட்டாயம் இருக்க

வில்லை. உள்நாட்டுமூலதன ஆக்கமும் மிகவும் குறைவாகவே இருந்தது. சிறிதளவு மூலதனஆக்கத்தை மேற்கொண்டவர்களும் பெருந்தோட்டத் துறையில் அதனை பாதுகாப்பான முதலீடுகளில் கையாள்வதிலேயே ஆர்வம்காட்டினர். எனவே, குறிப்பிடத்தக்க கைத்தொழில்துறையொன்று இங்கு வளர்ச்சியடையவில்லை. ஆரம்ப காலப்பகுதியில் பெருந்தோட்டப் பண்டங்களின் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருவாயிலேயே நாடு தங்கி இருந்தது. அது பெருமளவு வெளிநாட்டுச்செலாவணியை உழைத்துக் கொடுத்ததோடு, மொத்தத் தேசியவருமானத்திற்கும் பெரும் பங்களித்தது. ஏற்றுமதிகளுக்கும் மொத்தத் தேசியஉற்பத்திக்கும் இடையிலான விகிதா சாரத்தொடர்பு (Export/GDP Ratio) உயர்வாக இருந்தது. அத்துடன் ஏற்றுமதிவரிகளினூடாக அரசாங்கத்திற்கு பெருமளவு வரிவருவாயையும் அது பெற்றுக்கொடுத்தது. இந்த ஏற்றுமதி வருவாயைக் கையாண்டே பல்வேறு நுகர்பொருட்களையும் முதலீட்டுப்பொருட்களையும் நாடு இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தது. பொருளாதாரத்தில் வெளிநாட்டு மூலதனத்தின் ஆதிக்கம் நிறைந்து காணப்பட்டது. உள்நாட்டு விவசாயத் துறை தொழில்நுட்பரீதியாகப் பின்தங்கியதாகவும், பெருமளவிற்கு சீவனமட்ட உற்பத்தி நடவடிக்கைகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் தேவைகளை இலக்காகக்கொண்டு செயற் பட்டுவந்த சேவைகள்துறையும் வெளிநாட்டு மூலதனத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவே இருந்தது. தனது வருமானத்திற்கு வெளிநாட்டு வர்த்தகப் பாய்ச்சல்களில் தங்கியிருக்கும் பாரிய அரசாங்கத்துறை ஒன்றும் நாட்டில் இருந்தது. எனினும், காலப்போக்கில் இந்த அரசாங்கத்துறையானது வளர்ச்சியடைந்து வந்த ''நலன்சார்ந்த அரசிற்குத்'' (Welfare State) தேவை யான ஒரு கட்டமைப்பை தக்கவைத்துக் கொள்வதிலேயே அக்கறை கொண்ட ஒன்றாக மாறியது. அரசாங்கம் வழங்கிய இலவச சமூகநலன் சேவைகள் நாட்டுமக்களின் கல்வி, சுகாதாரம், பொதுநலன் என்பவற்றின் மேம்பாட்டிற்குப் பெரும் பங்களித்தன. இறப்புவிகிதங்கள் வீழ்ச்சி அடைந்ததன் காரணமாகவும் சுகாதாரசேவைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள் காரணமாகவும் நாட்டின் சனத்தொகை துரிதவளர்ச்சி கண்டது.

இரண்டாம் போர்க்காலச்சூழலில் வெளிநாடுகளிலிருந்து பொருட் களை இறக்குமதி செய்வதில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக இறக்குமதி பதிலீட்டுத்தொழில்கள் சில ஆரம்பிக்கப்பட்டன. போரின் பின்னர் அவற்றுள் பெரும்பாலானவை கைவிடப்பட்டபோதும், ஒருசில

தொடர்ந்தும் செயற்பட்டுவந்தன. வெளிநாட்டு வர்த்தகத்தில் நாடு பெரிதும் தங்கிஇருந்ததனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைக் கவனத்திலெடுத்து வெளிநாட்டு வர்த்தகத்தில் தங்கியிருத் தலைக் குறைப்பதற்கான எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வில்லை. 1950-1952 காலப்பகுதியில் இடம்பெற்ற ''கொரியசெழிப்பு'' (Korean Boom) காரணமாகவும், 1954 - 1955இல் ஏற்பட்ட ''தேயிலை செழிப்பு'' (Tea Boom) காரணமாகவும் நாட்டில் ஒருவித செழிப்புநிலை காணப்பட்டது. அந்நியசெலாவாணி ஒதுக்குகள் அதிகரித்து அவை வலுவானநிலையில் இருந்ததோடு, ஏற்றுமதிப்பண்டங்களின் விலை ஏற்றத்தின் காரணமாக ஏற்றுமதிகளின் கொள்வனவுசக்தியும் உயர்வாக இருந்தது. இதன் காரணமாக, வரவு-செலவுத்திட்ட செயற்பாடுகளும் மிகவும் நேர்த்தியாக இருந்தன. நாட்டில் குறிப்பிடத்தக்க ஒரு பொருளாதார செழிப்புநிலையும் காணப்பட்டது.

தேசியவருமானம், அரசாங்கவரிவருவாய் என்பவற்றின் பெரும் பகுதி வெளிநாட்டு வர்த்தகத்திலேயே தங்கிஇருந்தது. மொத்தத் தேசிய வருமானத்தின் அரைவாசிக்கும் மேலானபகுதி பெருந்தோட்டத்துறை யினின்று பெறப்பட்ட அதேவேளையில், அரசாங்கவரி வருவாயியின் 50.0 வீதத்திற்கும் மேலானபகுதி பெருந்தோட்டப்பண்டங்களின் ஏற்றுமதி களின் மீதான சுங்கத்தீர்வைகளினின்றே பெறப்பட்டது. சுருக்கமாக இவற்றைக் கூறுவோமாயின்:

1. மூன்று முதல்நிலைப்பண்டங்களினது ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வருமானத்திலேயே நாடு பெரிதும் தங்கி இருந்தது.

2. நுகர்வுப்பொருட்களினதும் மூலதனப்பொருட்களினதும் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அப்பண்டங்களின் இறக்குமதி யிலேயே நாடு தங்கி இருந்தது.

3. நாட்டினது பொருளாதாரத்தில் வெளிநாட்டு மூலதனம் ஆதிக்கம் செலுத்தியது.

4. பாரிய உள்நாட்டு விவசாயத்துறை ஒன்று காணப்பட்டபோதும் அது தொழில்நுட்பரீதியாக பின்தங்கியதாகவும், குறைந்த விளைச்சலைக் கொண்டதாகவும், பெருமளவிற்கு சீவனமட்ட உற்பத்தி சார்ந்த தாகவும் இருந்தது.

5. ''ஏற்றுமதிப் பொருளாதாரத்தின்'' தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென ஒரு சேவைகள்துறை காணப்பட்டது. ஆனால் அதிலும் வெளிநாட்டு முதலே ஆதிக்கம் செலுத்தியது.

6. வெகுஅண்மையிலேயே காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நாட்டிற்கு பாரிய அளவினதான அரசாங்கத்துறை ஒன்று காணப்பட்டமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. ஆனால், அதுவும் வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் கிடைத்த வரிவருமானத்திலேயே பெரிதும் தங்கி இருந்தது. நலன்சார்ந்த அரசாக இருந்த அதனைக் கொண்டுநடத்துவதற்கு விரிவான ஒரு கட்டமைப்பைக் கொண்டதாக அது இருந்தது.

பொருளாதாரத்தின் நவீனதுறை எனக்கருதப்பட்ட பெருந்தோட்டத் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியின் நன்மைகள் மரபுவழித்துறையில் வாழ்ந்துவந்த பெரும்பாலான மக்களைச் சென்றடையவில்லை. பெருந்தோட்டத்துறை உருவாக்கிய மிகையானது அத்துறையிலேயே பயிர்மீள் நடுகை, பயிர்பராமரிப்பு, வெளிநாட்டுச்செலுத்தல்கள் (இலாபப்பங்குகளும் வட்டிக்கொடுப்பனவுகளும்), ஊழியருக்கான வேதனங்கள் என்பவற்றிற்கும் உள்நாட்டு உயர்வருமான வகுப்பினரின் ஆடம்பர நுகர்வுச்செலவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. போர்க்காலச்சூழல் காரணமாக இறக்குமதி செய்த பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை சமாளிப்பதற்காக இறக்குமதி பதிலீட்டுத்தொழில்கள் சில உள்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டன என்பது ஏலவே குறிப்பிடப்பட்டது. போரின்பின்னர் வழமையான இறக்குமதிகளின் வருகை தொடங்கியதும் இத்தொழிற்களில் பல கைவிடப்பட்டன. அதேவேளையில், அரசாங்கத்தினது சமூகநலன் சேவைகளின் கீழ் இறப்புவிகிதங்கள் குறைந்து சனத்தொகை வேகமாக அதிகரிக்கத் தொடங்கியதால் அரசாங்கத்தின் சமூகநலன் சேவைகளுக்கான செலவீடுகளும் அதிகரித்து வந்தன. நுகர்வில் ஏற்பட்ட அபரிமிதமான அதிகரிப்பினால் இறக்குமதிகளிலும் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. ஐம்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சர்வதேசசந்தையில் பெருந்தோட்டப் பண்டங்களின் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கியதால் ஏற்றுமதி வருமானத்தில் தொய்வுநிலை தோன்றியது. இவையிரண்டும் சேர்ந்து சென்மதிநிலுவை நடைமுறைக்கணக்கில் தொடர்ச்சியான குறைநிலைகளை ஏற்படுத்தின. கடந்தகால வர்த்தகசெழிப்பு காரணமாக திரட்டப்பட்டிருந்த அந்நியசெலாவணி ஒதுக்குகள் (ஸ்ரேலிங் ஒதுக்குகள்)

இக்குறைநிலைகளை ஈடுசெய்வதற்கு கையாளப்பட்டதால் வெளிநாட்டு ஒதுக்குகளில் கடும்வீழ்ச்சி ஏற்பட்டது. சென்மதிநிலுவையில் தொடர்ந்து வீழ்ச்சிப்போக்கு ஏற்பட்டதோடு, உள்நாட்டு விலைமட்டங்களும் உயரத் தொடங்கின. ஐம்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் 6 வருட அபிவிருத்தித் திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டம் கைத்தொழில் களுக்கு மிகக்குறைந்த முக்கியத்துவத்தையே கொடுத்ததால் அது கைத் தொழில்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தத்தவறியது. இதனால் கைத்தொழில் பொருட்களுக்கு நாடு இறக்குமதிகளிலேயே தங்கி இருக்கவேண்டியநிலையில் இறக்குமதிகள் அதிகரித்து சென்மதி நிலுவைக் குறைநிலை தீவிரமடைந்ததால் பொருளாதார வளர்ச்சியிலும் மந்தம் ஏற்பட்டது. மேற்படிக்காரணிகளால் ஐம்பதாம் ஆண்டுகளின் இறுதிப்பகுதியில் மூன்று மாதகால இறக்குமதிகளுக்குப் போதுமான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மட்டுமே அரசாங்கத்திடம் எஞ்சியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வீழ்ச்சிப்போக்கிலிருந்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமாயின், அபிவிருத்திக்கொள்கையில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவேண்டு மென்பதை ஆட்சியாளர் உணர்ந்தனர். எனவே, இறுக்கமான ஒரு இறக்குமதிக்கொள்கையைக் கையாண்டதோடு, செலாவணிக்கட்டுப்பாடு களுடன் கூடிய ஒரு இறக்குமதி பதிலீட்டுக்கொள்கையை அமுல்படுத்து வதற்கும் அரசாங்கம் தீர்மானித்தது. அது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தது:

1. முக்கிய துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளை அரசே கையேற்றல்.
2. புதியதொழில்களுக்கு வரிஊக்குவிப்பு, மாற்றுவிகித ஊக்குவிப்பு என்பவற்றை வழங்குதல்.
3. விவசாயத்துறையில் வறண்ட பிரதேசத்தில் குடியேற்றங்களை ஏற்படுத்தல்.
4. கைத்தொழில்துறையில் இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் மிதமான ஒரு செயற்றிட்டத்தை அமுலாக்குதல்.
5. சீமெந்து, எஃகு, கடதாசி, கோஸ்டிக்சோடா உற்பத்தி போன்ற போர்க்கால இறக்குமதி பதிலீட்டுத்தொழில்களை மீளமைத்தல்.

இலங்கையில் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கு 1952ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த உலகவங்கிக்குழு கைத்தொழில் அபிவிருத்தி பற்றி பின்வரும் கருத்துகளை முன் வைத்தது:

1. உள்நாட்டுச்சந்தையின் அளவு சிறிதாக இருந்தமை.
2. நாட்டில் மூலதனம், தொழில்நுட்பத்திறன் என்பவற்றுக்குத் தட்டுப் பாடு காணப்பட்டமை.
3. கனரகத்தொழில்களைத் தாபிப்பதற்கு சார்பான கருத்துகளை வெளிடாத அது சிறியதும், நடுத்தர அளவிலானதுமான தொழில்களையே சிபாரிசு செய்தது.
4. இவ்வாறான தொழில்களுள் பெரும்பாலானவை தனியார்துறையின் கைகளிலேயே இருக்கவேண்டும் என்பதையும் அது வலியுறுத்திற்று. அரசாங்கத்தின் 1954-1959ஆம் ஆண்டுகாலப்பகுதிக்கான ஆறாண்டு அபிவிருத்தித்திட்டம் (6 Year Development Plan) தனது மொத்த முதலீட்டில் ஒரு சிறிய அளவை (4.7%) மட்டுமே கைத்தொழில் களைத் தாபிப்பதற்கென ஒதுக்கியது. எனவே, புதிய கைத்தொழில் களைத் தாபிப்பதற்கு அத்திட்டம் அதிக ஊக்கம் அளிக்கவில்லை எனக்கூறலாம்.

## 2. 1956–70 காலப்பகுதி

1956ஆம் ஆண்டு இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபோது இலங்கை பல்வேறு பிரச்சினைகளுக்கு உட்பட்டிருந்தது:

1. இதுவரைகாலமும் இலங்கைக்குச் சாதகமாக இருந்துவந்த வர்த்தக மாற்றுவிகிதம் இலங்கைக்குப் பாதகமாகத் திரும்பி இருந்தது. இது சென்மதிநிலுவையில் தொடர்ச்சியான குறைநிலைகள் ஏற்படுத்தியது.
2. சென்மதிநிலுவை வீழ்ச்சியடைந்து வேலையின்மை படிப்படியாக அதிகரித்தது.
3. நாட்டின் பொதுவிலைமட்டமும் மேல்நோக்கி நகரத்தொடங்கியது.
4. சர்வதேசசந்தையில் இலங்கையின் மூன்று முக்கிய விவசாயப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகாரணமாக பெருந் தோட்டத்துறையின் சுபிட்சத்தில் தொய்வுநிலை ஏற்பட்டது.

5. அதிகரித்துச்செல்லும் உள்நாட்டு மிகைக்கேள்வியினால் இறக்குமதி களுக்கான செலவுகள் அதிகரித்தன. 1960ஆம் ஆண்டளவில் அந்நிய செலாவணி ஒதுக்குகளில் இது கடும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

6. நாட்டின் சனத்தொகை துரிதகதியில் அதிகரித்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் புதியதொழில்களை உருவாக்கக்கூடிய கைத்தொழில் துறை ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவமும், பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கான தேவையும் உணரப்பட்டது. இந்நிலையில் இறக்குமதிகளின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதன்மூலம் இறக்குமதி பதிலீட்டுத்தொழில்களைத் தாபிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்தது. இதனை செயற்படுத்துவதற்கு மத்திய திட்டமிடல்முறை ஒன்று அவசியமானது என்பது உணரப்பட்டதால் தேசியதிட்டமிடல் ஆணைக்குழு (National Planing Commission-NPC) ஒன்றும் உருவாக்கப்பட்டது. அரசாங்க முனைப்புடனான கைத்தொழில் களை நிறுவும் நோக்குடன் 10 ஆண்டுஅபிவிருத்தித்திட்டம் ஒன்றை இத்திட்டமிடல் ஆணைக்குழு முன்வைத்தது. ஆறாண்டுத்திட்டத்தைப் போலன்றி இப்புதிய திட்டம் தனது திட்டமிட்ட மொத்தமுதலீட்டில் 20.0 வீதத்தை கைத்தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கியமை இங்கு குறிப் பிடத்தக்கது.

இறக்குமதிப்பதிலீட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 1957-58 வரவுசெலவுத்திட்டத்தில் இறக்குமதித் தீர்வைகளைக் கையாளும்முறை - இளம்பருவ கைத்தொழில் பாதுகாப்புக் கொள்கை (Infant Industry Protection Policy) - அறிமுகம் செய்யப்பட்டது. மறுபக்கத்தில், மூலதன உபகரணங்கள், கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் இறக்குமதிகள் என்பவற்றிற்குக் குறைந்ததீர்வைகள் விதிக்கப்பட்டன. தொடர்ந்து, இறக்குமதியாளருக்கு கோட்டாமுறையொன்றும் அமுலாக்கப் பட்டது. 1964இல் திறந்த இறக்குமதி உரிமைப்பத்திரத்திற்குப் பதிலாக இறக்குமதிகளுக்கு விசேட உரிமைப்பத்திரம் வழங்கும் ஒருமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வித இறக்குமதிக் கட்டுப்பாட்டுமுறை யானது பொருளாதாரத்தில் அடிப்படையான அமைப்புசார்மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தூண்டுகோளாக அமைந்தது. பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச்சந்தையில் இறக்குமதி பதிலீட்டுத்தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டன. இவற்றிற்கு வரிச்சலுகைகள், வரிவிடுமுறைகள் என்பன அளிக்கப் பட்ட அதேவேளையில், அரசுக்கு உடைமையான கைத்தொழில்கள்

பலவும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றினூடாக கைத்தொழில்மயமாக்க மானது பரந்தஅளவிலான இறக்குமதிக்கட்டுப்பாடுகளின் ஒரு பக்க விளைவாக மாற்றப்பட்டது. இதன்கீழ், அத்தியாவசியமற்றதும் அரைகுறை அத்தியாவசியம் வாய்ந்ததுமான பல கைத்தொழில்களும் தாபிக்கப் பட்டன. இக்கைத்தொழில்களின் இறக்குமதிச்சேர்க்கை உயர்வாக இருந்தது. அத்துடன், அவை உற்பத்தி செய்த பொருட்கள் தரங்குன்றியன வாகவும், உயர்ந்த உற்பத்திச்செலவினைக் கொண்டனவுமாக இருந்தன. உள்நாட்டில் மிகைக்கேள்வி காணப்பட்டதால் இறக்குமதிச்செலவுகள் அதிகரித்தன. இது சென்மதிநிலுவையில் தொடர்ச்சியான குறைநிலைகளை ஏற்படுத்திற்று. 1950ஆம் ஆண்டுகளின் இறுதிப்பகுதியில் 3 மாத காலத் திற்குத் தேவையான பண்டங்களை இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணி ஒதுக்குகள் மட்டுமே அரசாங்கத்தின் கையில் எஞ்சி இருந்தன.

அறுபதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் பொருளாதாரத்தை பாரிய சிக்கல்களினின்றும் காப்பாற்றுவதற்கான புதிய அபிவிருத்திக்கொள்கை ஒன்றினைக் கையாளவேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டது. எனவே, இறுக்கமான இறக்குமதிக்கட்டுப்பாடுகளையும் செலாவணிக் கட்டுப்பாடுகளையும் கொண்ட ஒரு கைத்தொழில் பதிலீட்டுக்கொள்கையை அமுலாக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்தது. முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத்துறைகளின் பொருளாதாரநடவடிக்கைகளை அரசே கையேற்றது. சந்தைசக்திகளின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதோடு, கைத்தொழில்களைத் தாபிப்பதற்கு வரிஊக்குவிப்புகளும் செலாவணி ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு தாபிக்கப்பட்ட கைத் தொழில்களின் இறக்குமதிச்சேர்க்கை மிகவும் உயர்வாக இருந்தது. அத்துடன், அவை தரங்குன்றியனவும் உயர்ந்த உற்பத்திச்செலவினைக் கொண்டனவுமான பொருட்களையே உற்பத்தி செய்தன. மூலப்பொருள் பிரச்சினை காரணமாக இக்கைத்தொழில்களின் இயலளவு உற்பத்தியில் முழுமையாகக் கையாளப்படாதநிலையில் மேற்படி தொழில்மயமாக்கம் பெருமளவு அந்நியசெலாவணியை விரயம் செய்வதாக இருந்தமையால் அது சென்மதிநிலுவைக்கு எந்தவிதத்திலும் உதவுவதாக இருக்கவில்லை.

1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதிவரை விவசாயத்துறையின் உற்பத்திப் பண்டங்களை இறக்குமதிகளின் போட்டியினின்றும் பாதுகாப் பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 1965ஆம்

ஆண்டின் பின்னரே இதற்கான நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப் பட்டன. இந் நடவடிக்கைகளுள் பின்வருவன முக்கியமானவையாகும்:

1. உணவு உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
2. உபஉணவுப்பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது.
3. மானியவிலையில் உணவுப்பண்டங்களை விநியோகம் செய்வது மட்டுப்படுத்தப்பட்டது. உணவு மானியத்திற்குப் பதிலாக "உணவு முத்திரை" (Food Stamps) வழங்கும்முறை அறிமுகம் செய்யப்பட்டது. இந்த முத்திரையைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் பண்டங் களின் விலைகள் சந்தை சக்திகளால் நிர்ணயிக்கப்பட்டனவாக இருந்தன. மேலும், இத்திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருந்த உணவுப்பங்கீட்டு அட்டைகளில் 58.7 வீதமானவை மட்டுமே புதுப் பிக்கப்பட்டதனால் உணவு மானியத்திற்கான அரசாங்கத்தின் செலவு வீழ்ச்சியடைந்தது.
4. ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்து வதற்குமென 1967ஆம் ஆண்டு ரூபா நாணயம் 20.0 வீதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.
5. மரபுசாரா விவசாயப்பண்டங்களின் ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டது.
6. 1968இல் இரட்டைநாணயமாற்றுவிகிதத்தைக் கொண்ட அந்நிய செலாவணித்திட்டம் (Foreign Exchange Entitlement Certificate - FEEC) அறிமுகம் செய்யப்பட்டது.

மேற்படி நடவடிக்கைகள் விவசாயப்பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கங்களைக் கொண்டனவாக இருந்தன. 1969இல் இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கும், தொழில்நுட்ப-கைத்தொழில் சேவைகளை வழங்குவதற்குமென கைத் தொழில் அபிவிருத்தி சபை (Industrial Development Board–IDB) என்ற ஒரு சபை உருவாக்கப்பட்டது. அடிப்படை வினைத்திறன்களில் பயிற்சி அளித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், கைத்தொழில் சார்ந்த சேவைகளையும் சந்தைப்படுத்தல் தகவல்களையும் வழங்குதல் போன்றன இதன் கடமைகளாக இருந்தன. இக்காலப்பகுதியில் தனியார் முதலீட்டின் மூலம் தாபிக்கப்பட்ட எந்த ஒரு தொழிலிலுமே வெளிநாட்டுப் பங்கெடுப்பு இருக்கவில்லை. இத்தொழில்கள் தேசியமயமாக்கப்படலாம்

என்ற ஐயப்பாடும், இவற்றின் இலாபங்களையும் இலாபப்பங்குகளையும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்ற பயமும் இதற்கான முக்கிய காரணங்களாக இருந்திருக்கலாம்.

### 3. 1970–77 காலப்பகுதி

1971ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் மோசமான ஒரு சர்வதேச பொருளாதார நிலைமையை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. 1973ஆம் ஆண்டு ஏற்பட்ட கச்சா எண்ணெய் விலையேற்றமானது மேற்கத்தைய கைத்தொழில் நாடுகளில் ஒரு பெரும் பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்த எண்ணெய் விலையேற்றம் காரணமாக கைத்தொழிற் பொருட்களின் உற்பத்திச்செலவு அதிகரித்ததால் அவற்றின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இது இந்த உற்பத்தியில் கையாளப்பட்ட மூலப்பொருட் களுக்கான கேள்வியில் ஏற்படுத்திய வீழ்ச்சியினால் அம்மூலப்பொருட் களினது சந்தைவிலைகள் சரிவடைந்தன. இது அம்மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் மூன்றாம் உலகநாடுகளின் ஏற்றுமதி வருமானங்களில் கடும் வீழ்ச்சியை ஏற்படுத்தியதால் அவை தமது வெளிநாட்டுக்கடன்களை மீளச்செலுத்த முடியாதநிலையில் பெரும் கடன்நெருக்கடிக்கு (Debt Crisis) உள்ளாகின. கச்சா எண்ணெய் விலையேற்றமும் தொடர்ந்து ஏற்பட்ட இக்கடன் நெருக்கடியும் 1970ஆம், 1980ஆம் ஆண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இரண்டு பேரினப்பொருளாதார அதிர்ச்சிகளாக (Macro-Economic Shocks) கருதப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உலகஅளவிலான உணவுப்பொருட்களுக்கான கட்டுப்பாடும் அதனால் அப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் ஏற்கனவே நிலவிய நெருக்கடியை மேலும் தீவிரமாக்கின. இக்காலப் பகுதியில் இலங்கையில் நிலவிய மோசமான வறண்ட காலநிலையினால் உள்நாட்டு உணவுஉற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு உணவுப்பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் உள்நாட்டிலும் அவற்றின் விலைகள் உயர்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படிக்காரணிகள் சென்மதிநிலுவையில் ஏற்படுத்திய தொடர்ச்சி யான குறைநிலைகளினால் அந்நியசெலாவணிக்கு நாட்டில் கடும்தட்டுப் பாடு ஏற்பட்டது. சென்மதி நிலுவைக்குறைகளை சமாளிப்பதற்காக அரசாங்கம் பெருமளவு வெளிநாட்டுக்கடன்களைப் பெற்றதனால் நாட்டின் கடன்சேவைவிகிதம் அதிகரித்தது. 1965இல் 3.5 வீதமாகவிருந்த கடன் சேவைவிகிதம் 1974இல் 20.1 வீதமாக அதிகரித்தது. உணவுப்பொருட்

களினதும் மூலதனப்பொருட்களினதும் விலைகள் தொடர்ந்து அதிகரித்தமையால் (1970இல் 140 ஆகவிருந்த இறக்குமதி விலைச்சுட்டெண் 1974இல் 370 ஆக அதிகரித்தது) இதனைத் தொடர்ந்து இறக்குமதிகளின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு ஏற்படுத்திய கடும் தட்டுப்பாட்டின் காரணமாக அப் பொருட்களை அல்லது அவற்றிற்கான பதிலீடுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த இறக்குமதிப் பதிலீட்டுத்தொழில்களை இறக்குமதி களின் போட்டியினின்றும் பாதுகாப்பதற்காக அப்பொருட்களின் இறக்குமதியின் மீது இறுப்புக்கட்டுப்பாடுகளும் இறுப்புகள் அல்லாத வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. மேற்படிக்கட்டுப்பாடுகளின் விளைவாக நாட்டில் உள்நோக்கிய அல்லது மூடிய (Inward–looking or Closed) பொருளாதாரக்கொள்கை ஒன்று அறிமுகமாகியது. தொடர்ந்தும் நீடித்து வந்த அந்நியசெலாவணித் தட்டுப்பாட்டினின்றும் விடுபடுவதற்கு மேற்படி கட்டுப்பாடுகள் மேலும் மேலும் இறுக்கமாக்கப்பட்டன.

மேலே குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின் மொத்தவிளைவாக நாட்டில் முதலீடுகளும் பொருளாதாரவளர்ச்சியும் வீழ்ச்சியடைந்தன. 1966-70 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.0 வீதமாகவிருந்த முதலீடுகள் 1970-76 காலப்பகுதியில் 15.0 வீதமாக வீழ்ச்சியடைந்தன. அதேபோன்று, 1960-66 காலப்பகுதியில் 3.8 வீதமாகவிருந்த வருடாந்தப் பொருளாதார வளர்ச்சி 1966-70 காலப்பகுதியில் 5.3 வீதமாக அதிகரித்த போதும், 1970-76 காலப்பகுதியில் 2.9 வீதமாக வீழ்ச்சியடைந்தது. எழுபதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் ஆரம்பித்த இந்த வீழ்ச்சிப் போக்கு எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதிவரை நீடித்தது. பல்வேறு கட்டுப்பாடுகளின் ஊடாகவே சென்மதிநிலுவைக் குறைநிலையையும் நடைமுறைக்கணக்கு மீதியையும் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடியதாக இருந்தது. கிடைக்கப்பெறும் சாதனங்களுக்கேற்ப வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்துவதன் மூலமும், அதாவது, உள்நாட்டில் ஓரளவு சுயதங்கியிருத்தலை ஊக்குவிப்பதன் மூலமும், செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலமுமே இது சாத்தியமாகிற்று. இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடிமுதலீடுகள், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு உதவிகள் என்பன மூலம் நாட்டிற்குக் கிடைத்த வெளிநாட்டுச் செலாவணி யும் மிகவும் குறைவாகவே இருந்தமை இப்பிரச்சினையை மேலும்

சிக்கலாக்கிற்று. இந்நிலையில் இறக்குமதிகளின் மீதும், வெளிநாட்டு செலாவணிக் கொடுப்பனவுகளின் மீதும் நேரடியான கட்டுப்பாடுகளை விதிப்பது தவிர்க்க முடியாததாயிற்று. மேற்படிப்பிரச்சினைகள் மேலும் மேலும் தீவிரமடைந்ததோடு, கைவசமிருந்த செலாவணி ஒதுக்குகள் தேவைக்கேற்ப கையாளப்பட்டதால் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு களிலும் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் நாட்டில் பின்பற்றப்பட்ட கைத்தொழில் கொள்கையானது மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தது:

1. உள்நாட்டுத்தொழில்களில் அதிகரித்த அளவில் உள்நாட்டு மூலப் பொருட்களையே கையாளுதல்.
2. கைத்தொழில்துறையில் அதிகரித்த வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
3. கைத்தொழிற் பொருட்களளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

இக்காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட 5 ஆண்டுத்திட்டத்தில் இவை உள்ளடக்கப்பட்டிருந்தன. வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு சிற்றளவுத்தொழில்களை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது.

இதற்கமைய உருவாக்கப்பட்ட கைத்தொழில்கள் பின்வரும் பண்பு களைக் கொண்டனவாக இருந்தன:

1. புதிதாக உருவாக்கப்பட்ட கைத்தொழில்கள் இறக்குமதிக் கட்டுப் பாடுகள், கோட்டாக்கள் என்பவற்றின் ஒரு வெளிப்பாடாக இருந்தன. அதாவது, இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளான பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இது இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில்மயமாக்கம் (Import – Substituting Industrialization) என அழைக்கப்பட்டது. ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவது இந்த அரசாங்கத்தின் ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. இதன்கீழ், இத்தொழில்களுக்கு உற்பத்தி சார்ந்ததும், வரிசார்ந்ததுமான ஊக்குவிப்புகள் அளிக்கப்பட்டன. ஆனால், அரசாங்கத்தினது ஒட்டுமொத்தக் கொள்கையானது தனியார்துறை உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பொதுவாகவும், ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகளுக்குக் குறிப்பாகவும் சாதகமாக இருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

2. இறக்குமதி செய்த மூலப்பொருட்களில் தங்கியிருந்த கைத்தொழி களின் தேறிய சேர்க்கப்பட்ட பெறுமதி குறைவாக இருந்தது. உதாரணமாக, 1975இல் இவற்றின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி ரூபா 5966 மில்லியனாகவும், இதில் கையாளப்பட்ட மூலப்பொருட் களின் பெறுமதி ரூபா 3576 மில்லியனாகவும் இருந்தது. அதாவது, கைத்தொழில்களின் மொத்த உற்பத்திப்பெறுமதியில் 60.0 வீதம் மூலப்பொருட்களின் மீதான செலவுகளாக இருந்தமையால் அவற்றின் தேறிய சேர்க்கப்பட்ட பெறுமதி குறைவாக இருந்தது. மேலும், இக்கைத்தொழில்கள் தமது மொத்த இயலளவை முழுமையாகக் கையாள்வதற்கு மூலப்பொருட்களின் கிடைக்குந் தன்மையும் அவற்றிற்கான அதிகரித்தசெலவும் பிரச்சினைகளை ஏற்படுத்தின. இதன் காரணமாக, 64.0 வீதமான இயலளவை மட்டுமே உற்பத்தியில் கையாளக்கூடியதாக இருந்ததால் அவற்றின் உற்பத்திச்செலவு உயர் வாக இருந்தது. மேலும், இக்கைத்தொழில் களுள் பெரும்பாலானவை அவசியமற்றதும் அரைகுறை அவசியம் வாய்ந்ததுமான பொருட்களையே உற்பத்தி செய்தன. இவற்றினது இறக்குமதிச்சேர்க்கையும் உயர்வாக இருந்தது. அதேவேளையில், அரசாங்கம் முன்நோக்கியதும் பின்நோக்கியதுமான பிணைப்புகளை ஏற்படுத்தக்கூடிய கனரகத் தொழில்கள், அடிப்படைத் தொழில்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முதலீடுகளை மேற்கொண்டது.
3. மொத்த ஊழியப்படையில் தொழில்புரிந்தோரில் ஒரு சிறுபகுதி யினரே இக்கைத்தொழில்துறையில் தொழில்புரிந்தனர்.
4. தனியார்துறைக்கு உரித்தானவையாக இருந்த இக்கைத்தொழில்களுள் பெரும்பாலானவை ஒரு சில தனியாரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

**1977ஆம் ஆண்டிற்குப் பிந்திய காலப்பகுதி**

1960-77 காலப்பகுதியில் இலங்கையில் உள்நோக்கியதும். கட்டுப்படுத்தப் பட்டதுமான ஒரு பொருளாதாரக்கொள்கை அமுலாக்கப்பட்டது என்பது மேலே விபரிக்கப்பட்டுள்ளது. சென்மதிநிலுவையில் தொடர்ச்சியான குறைநிலைகள், அதிகரித்த வேலையின்மை, உயர்ந்து செல்லும் பணவீக்கம், குறைந்தமட்டப் பொருளாதாரவளர்ச்சி, தரங்குன்றிய அரசசேவைகள் என்பவற்றிற்கு இது இட்டுச்சென்றது. இவையே இக்காலப்பகுதியின்

முக்கிய பொருளாதார அம்சங்களாக இருந்தன. 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய அரசு இவற்றினின்றும் விடுபடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பொருளாதாரக்கொள்கையை அமுலாக்கத் தொடங்கியது.

1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட உலகமயமாக்கம் (Globalization) காரணமாக சர்வதேச நிதிநிறுவனங்களும் உதவிவழங்கும் மேற்கத்தைய நாடுகளும் மூன்றாம் உலக நாடுகள் தமது வர்த்தகக் கொள்கைகள், பேரினப்பொருளாதாரக்கொள்கைகள், சந்தையினது போட்டித்தன்மை என்பவற்றில் மாற்றங்கள் செய்ய வேண்டியதன் அவசியத்தை ஒருமித்த குரலில் வலியுறுத்தி வந்தன. சர்வதேச நிதி நிறுவனங்களின் கடன்கொள்கைகளிலும் இக்காலப்பகுதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன:

1. வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களின் அசைவுகளை நெருக்க மாகக் கண்காணித்து வந்த சர்வதேசநாணயநிதியம் வழமையாக அங்கத்தவநாடுகள் தமது சென்மதிநிலுவைக் குறைநிலைகளை நிதிப்படுத்துவதற்கு குறுங்காலக்கடன்களை வழங்கிவந்தது. இது குறுங்கால உறுதிப்படுத்தலுக்கான கடன் எனக்கூறப்பட்டது. 1960 -77 காலப்பகுதியில் அமுலாக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் கூடிய இறக்குமதி பதிலீட்டுத்தொழில்மயமாக்கல் கொள்கைகள் சேமிப்பு, முதலீடு, பொருளாதாரவளர்ச்சி என்பவற்றில் சீர்குலைவுகளை ஏற்படுத்தி பொருளாதாரத்தில் மோசமான ஏற்றத்தாழ்வுகளையும் ஏற்படுத்தின. எனவே, சர்வதேச நாணயநிதியம் தனது குறுங்காலக் கடன்களுக்கு மேலதிகமாக 1977ஆம் ஆண்டின் பின்னர் அமைப்புசார் சீராக்கல்வசதி (Structural Adjustment Facility – SAF) என்ற புதிய திட்டத்தின் கீழ் நிபந்தனைகளுடன் கூடிய நடுத்தரக்கால அமைப்பு சார்சீராக்கல் கடன்களையும் வழங்கத்தொடங்கிற்று. 1986/87இல் இது மேலும் விரிவாக்கப்பட்டு விரிவாக்கிய அமைப்புசார் சீராக்கல் வசதி (Extended SAF) என்ற பெயரில் மேலதிகக்கடன்கள் வழங்கப் பட்டன. மூன்றாம் உலகநாடுகளின் சென்மதிநிலுவைப் பிரச்சினைக் கான அமைப்புசார்ந்த காரணங்களை அகற்றுவதையும் அநாடுகளின் கடன்களின் மீதான வட்டியை மீளச்செலுத்துவதற்கு உதவுவதையும் இவை நோக்கமாகக் கொண்டிருந்தன. வறுமையைக்குறைப்பதற்கு புதிய முதலீடுகளை நிதிப்படுத்துவதற்காக உலகவங்கியும் இக்காலப் பகுதியில அதிகரித்த கடன்களை வழங்கத்தொடங்கிற்று.

2. பல்வேறு பொருளாதாரத்துறைகளில் செயற்றிடங்களை நிதிப்படுத்து வதற்கென 1986/87 காலப்பகுதியில் உலகவங்கி இந்நாடுகளுக்கு நெடுங்காலக்கடன்களை வழங்கத்தொடங்கியது. இவை அமைப்புசார் சீராக்கலுக்கான கடன்கள் எனக் கூறப்பட்டன. மூன்றாம் உலகநாடுகள் தமது சென்மதிநிலுவைப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கும் தமது கடன்களின் மீதான வட்டியை செலுத்துவதற்குமான கடன்களாக இவை இருந்தன. பொருளாதாரவளர்ச்சியை நிலைபெறச்செய் வதையும் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதையும் இவை நோக்கங் களாகக் கொண்டிருந்தன. இக்கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அங்கத்துவநாடுகள் கடுமையான அமைப்புசார்சீராக்கல் கொள்கை களை அமுலாக்க வேண்டி இருந்தது. பொருளாதாரத்திறனை உயர்த்தி வளர்ச்சியை நிலைபெறச் செய்யக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்ட அமைப்புசார்சீராக்கல் கொள்கைகளின் அடிப்படையிலேயே இக்கடன்கள் வழங்கப்பட்டன.

உள்நாட்டுக்கேள்வியை கட்டுப்படுத்தத்தூண்டிய அதேவேளையில் உலக வங்கியானது அங்கத்தவநாடுகள் பொருளாதாரவளர்ச்சியை ஊக்குவிப் பதற்கு விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் ஆதரித்தது. இந்நிலையில் உலகவங்கியினதும் சர்வதேச நாணயநிதியத்தினதும் கடன்கொள்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்டனவாக இருந்தன எனக் கூறலாம். சர்வதேசநிதிநிறுவனங்களின் மேற்படிக்கொள்கை மாற்றங்களின் விளைவாக மூன்றாம் உலகநாடுகள் அவற்றின் சிபாரிசுகளுக்கு செவிசாய்க்க வேண்டிய கட்டாயநிலைக்கு உள்ளாகின. இலங்கையும் இச்சிபாரிசுகளை ஏற்று அதற்கேற்ப தனது பொருளாதாரக்கொள்கைகளை வகுக்கத் தொடங்கிற்று. 1977ஆம் ஆண்டின் பின்னர் மேற்படி சர்வதேச நிதிநிறுவனங்களின் அனுசரணையுடன் கூடிய ஒரு பொருளாதாரக் கொள்கை இலங்கையில் அமுலாக்கப்பட்டு வருகின்றது. இது அமைப்பு சார்சீராக்கல் செயற்றிட்டம் (SA Program) என அழைக்கப்படுகின்றது. பொருளாதாரத்தை திறன்மிக்கதாக ஆக்குவதும் நிலைத்திருக்கக்கூடிய பொருளாதாரவளர்ச்சியை ஏற்படுத்துவதும் இந்த செயற்றிட்டத்தின் நோக்கங்களாகும். பொருளாதாரத்தை திறன்மிக்கதாக ஆக்கி, நிலைத் திருக்கக்கூடிய பொருளாதாரவளர்ச்சியை ஏற்படுத்தும் ஒன்றாக மாற்று வதற்கே இச்செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இது இரண்டு கட்டங்களாக அமுலாக்கப்பட்டது:

**1. அமைப்புசார் சீராக்கலின் முதலாவது கட்டம்: 1977-88**

இந்த முதலாவது கட்டத்தில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

i. அரசாங்கச்செலவீடுகள் குறைக்கப்பட்டன.

ii. நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டு அது சந்தையில் மிதக்கவிடப் பட்டது. சந்தைசக்திகளின் அடிப்படையில் நாணய மாற்றுவிகிதத்தை நிர்ணயிப்பது இதன் நோக்கமாக இருந்தது ; வர்த்தகம் தாராளமய மாக்கப்பட்டது. இதன்கீழ் விலைகள், நாணயமாற்றுவிகிதம், வர்த்தகம் என்பவற்றின் மீதான நிர்வாகக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

வர்த்தகத்தைத் தாராளமயப்படுத்தியமை இதில் முக்கியமான ஒரு நடவடிக்கையாக இருந்தது. ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது இதன் ஒரு பிரதான நோக்கமாக இருந்ததால், நடைமுறையிலிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள், செலாவணிக்கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தளர்த்துவதன் மூலமோ அல்லது முற்றாகவே நீக்கிவிடுவதன் மூலமோ வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டு திறந்த அல்லது வெளிநோக்கிய (Open or Outward-Looking) பொருளாதாரக்கொள்கை ஒன்று அறிமுகம் செய்யப் பட்டது. இதன்கீழ், பொருளாதாரம் வெளிநாடுகளுக்குத் திறந்துவிடப் பட்டதால் உள்நாட்டு உற்பத்தியாளர் சர்வதேசசந்தை விலைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. எனவே, அவர்கள் தமது உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை மொத்தத் தேசியஉற்பத்தியில் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்கினை உயர்த்தி பொருளாதாரத்தை உலகசந்தையோடு பிணைத்ததால் இது ஏற்றுமதியால் உந்தப்பட்ட அல்லது ஏற்றுமதி சார்ந்த (Export-led or Export- Oriented) ஒரு அபிவிருத்தி உபாயம் எனக்கூறப்படுகின்றது. நிதித்துறையிலும் பல மாற்றங்கள் புகுத்தப்பட்டன. பொருளாதாரத்தில் அரசாங்கத்தினது கட்டுப்பாடுகள், தலையீடுகள் என்பன கணிசமாகக் குறைக்கப்பட்டதோடு, அரசாங்கசெலவீடுகளும் குறைக்கப்பட்டன. பொருளாதாரத்தைத் தாராளமயமாக்குவதன் ஒரு பகுதியாக கட்டில்லா வர்த்தக வலயங்கள் (Free Trade Zones – FTZs) அல்லது ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் (Export Processing Zones- EPZs) உருவாக்கப் பட்டன. சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்,

விசேட ஊக்குவிப்புகளை வழங்குதல், அரச நிர்வாகக் கட்டுப்பாடுகளை இழிவுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் வெளிநாட்டு முதலீட் டாளர்களை ஈர்ப்பதே மேற்படி வலயங்களைத் தாபிப்பதன் நோக்கமாக இருந்தது. எனவே, இந்த வலயங்களில் தாபிக்கப்படும் தொழில்களுக்கு அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புகளை வழங்கிவருகின்றது. இவற்றுள் பின்வருவன முக்கியமானவையாகும்:

1. வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு அவை தாபிக்கும் தொழில் களில் நூறுவீத உடைமை அனுமதிக்கப்படுகின்றது.
2. அவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு வரிவிலக்கும் அளிக்கப் படுகின்றது.
3. இயந்திரங்கள், கட்டுமானப்பொருட்கள், உற்பத்திக்கான உள்ளீடு கள் என்பவற்றின் இறக்குமதிகளுக்கு வரிவிலக்கு உண்டு.
4. குறைந்தவட்டியில் வெளிநாட்டுநாணயத்திற்கு வரையறையற்ற கிடைக்குந்தன்மை உறுதி செய்யப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக இவ்வலயங்களில் சிறந்த உட்கட்டமைப்பு வசதி களும், பல்வேறு விசேட ஊக்குவிப்புகளும் வழங்கப்படுவதோடு, குறைந்தளவான நிர்வாகக் கட்டுப்பாடுகளே இங்கு நடைமுறையில் உள்ளன. முதலீட்டுச்செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் அதற்கு உதவுவதற்கென ஒரு முதலீட்டுச்சபையும் (Board of Investment – BOI, அதனைக்கொண்டு நடத்துவதற்கென பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (Greater Colombo Economic Commission GCEC) என்ற ஒரு ஆணைக்குழுவையும் அரசாங்கம் நிறுவியது. நாட்டிற்குள் வரும் எல்லா வெளிநாட்டுக் கம்பெனிகளும் தம்மை இந்த முதலீட்டுச்சபையில் பதிவு செய்துகொள்வதோடு, அதன் சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டு மென்றும் பணிக்கப்பட்டது. ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது இதன் பிரதான நோக்கமாக இருந்தது. ஆரம்பகாலத்தில் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட BOI கம்பெனிகள் வெளிநாட்டு முதலீட்டைக்கொண்டிருந்ததோடு, அவற்றுள் 80.0 வீதத்திற்கும் மேலானவை உள்நாட்டுநிறுவனங்களுடன் கூட்டுமுயற்சியிலும் ஈடுபட்டன. புடவைக்கைத்தொழில், தைத்த ஆடைத் தொழில் என்பவற்றுடன் ஆரம்பித்த இக்கூட்டுமுயற்சிகள் பின்னர் காலணி உற்பத்தி, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், பிளாஸ்டிக் பொருள் உற்பத்தி, றப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், மட்பாண்ட

உற்பத்தி போன்றவற்றிற்கும் விஸ்தரிக்கப்பட்டன. வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதும், உள்நாட்டுத்துறைக்கு அதிகசெலவின்றி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதும், உயர்தொழில்நுட்பங் களை நாட்டிற்குள் கொண்டு வருவதும் இவற்றின் நோக்கங்களாக இருந்தன.

## 2. அமைப்புசார் சீராக்கலின் இரண்டாவது கட்டம்: 1988ற்குப்பிந்திய காலப்பகுதி

1980ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பொருளாதாரத்தின் செயற்றிறன் பலவீனமடைந்த நிலையில் அரசாங்கம் புதிய அமைப்புசார் சீர்திருத்தங் களை அமுலாக்குவதற்கு முன்வந்தது. இது அமைப்புசார் சீராக்கலின் இரண்டாவது கட்டமாக இருந்தது. அமைப்புசார் சீராக்கல் செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்தில் அத்திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே செயல்படுத்தப் பட்டது. 1988இல் ஆரம்பித்த அதன் இரண்டாவது கட்டத்தில் பேரினப் பொருளாதார சமமின்மையைக் குறைப்பதற்கான விரிவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தனியார்துறை அபிவிருத்தியை ஊக்குவித்தல், நாட்டினது வறுமைஒழிப்பு செயற்றிட்டத்தை மறுசீரமைத்து அதன் செயற்றிறனை அதிகரித்தல், இறுக்கமான ஒரு பணக்கொள்கையைக் கையாளுதல், சென்மதிநிலுவைக் குறைநிலைகளை வெகுவாகக்குறைத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அமைப்புசார்சீராக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக பொதுத்துறை நிறுவனங்கள் பல தனியார்மயமாக்கப்பட்டன. பொதுத் துறை அல்லது அரசதுறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் இந் நடவடிக்கை "மக்கள்மயமாக்கல்" (Peoplisation) என அழைக்கப்பட்டது. அரசதுறை நிறுவனங்களின் பங்குகளில் 30.0 வீதத்தை பொதுமக்களுக்கு விற்றல், 10.0 வீதமான பங்குகளை அந்நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இலவசமாகப் பங்கீடுசெய்தல் என்பவற்றின் மூலம் அவற்றின் உரிமையைப் பரவலாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது பின்வரும் நோக்கங் களைக் கொண்டிருந்தது:

1. அடிப்படை உற்பத்திசாதனங்களின் திறமையான பயன்பாட்டை உறுதி செய்தல்.
2. நட்டத்தில் செயற்படும் அரசநிறுவனங்கள் அரசாங்கநிதிகளின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறைத்தல்.

3. அரசுக்கு உடைமையான நிறுவனங்களின் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை அகற்றுவதன் மூலம் அவற்றின் திறமையான செயற்பாட்டை உறுதிசெய்தல்.

மக்கள்மயமாக்கத்தின் கீழ் அரசுக்கு உடைமையான நிறுவனங்களின் பங்குகளில் ஒரு பகுதியை ஊழியருக்கு இலவசமாக வழங்குவது ஒரு விரும்பத்தகு தனியார்மயமாக்கல் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சில நிறுவனங்கள் பேச்சுவார்த்தைகளின் மூலம் வெளிநாட்டாருக்கு விற்கப்பட்டன. 1992இல் அரசுக்கு உடைமையான 449 பெருந் தோட்டங் களின் முகாமை இலாபத்தை பங்கிட்டுக்கொள்ளும் அடிப்படையில் 22 தனியார் கம்பெனிகளுக்கு மாற்றப்பட்டது. இத்தனியார்மயப்படுத்தல் திட்டத்தை செயற்படுத்துவதற்கென பொதுத்துறை நிறுவனங்களை மறுசீரமைக்கும் குழு (Public Enterprise Reform Committee - PERC) என்ற ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு மேற்படித்திட்டத்திற்கு வெளிநாட்டு நிதிகளை ஈர்த்ததோடு, பொதுக்கடன்களின் ஒரு பகுதியை மீளச் செலுத்தவும், பொதுக்கடன்களின் மீதான வட்டிச்செலவைக்குறைக்கவும் வரவு-செலவுத்திட்டசெலவீடுகளை நிதிப்படுத்துவதற்கு கடன்பெறுவதைக் குறைப்பதற்கும் உதவியது.

அமைப்புசார்-சீராக்கல் செயற்றிட்டமானது இறுக்கமான ஒரு நாணயக் கொள்கை, சென்மதிநிலுவையின் நடைமுறைக்கணக்கு, வரவு-செலவுத் திட்டம் என்பவற்றில் குறைநிலைகளை கணிசமானஅளவு குறைத்தல் என்பவற்றோடு வேறு சில கூறுகளையும் கொண்டிருந்தது:

i. பெயரளவிலான இறுப்புகளின் உச்சஎல்லையைக் குறைத்தல்.

ii. மரபுசார்ஏற்றுமதிகளின் மீதான தீர்வைகளை நீக்குதல்.

iii. நாணயமதிப்பிறக்கம்.

iv. வருமானவரி, தாபனரீதியானவரிகள் என்பவற்றைக் குறைத்தல்.

v. சொத்துவரி, மூலதனவரிகள் என்பவற்றைக் குறைத்தல்.

vi. அரசாங்க நிர்வாகத்தை சீரமைப்பதன் மூலம் அதன் நிர்வாகத்திறனை மேம்படுத்தல்.

vii. சென்மதிநிலுவை நடைமுறைக்கணக்கின் மீதான செலாவணிக்கட்டுப் பாடுகளைத் தாராளமயப்படுத்தல்.

viii. ஏற்றுமதிகளை ஊக்குவித்தலும் வறுமைஒழிப்புத்திட்டத்தை மறு சீரமைத்தலும்.

1977ஆம் ஆண்டின் பின்னர் அமுல்படுத்தப்பட்ட கொள்கைகளினாலும் வேறு நடவடிக்கைகளினாலும் பொருளாதாரத்தினது கட்டமைப்பிலும் வளர்ச்சியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன:

i. பொருளாதாரத்தில் விவசாயப்பண்டங்களைப் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் தொழில்களினதும், குடிசைக்கைத்தொழில்களினதும் சார்புப்பங்குகள் குறைந்து, ஆலைத்தொழில்களின் சார்புப்பங்கு அதிகரித்துள்ளது.

ii. 1960ஆம், 1970ஆம் ஆண்டுகளில் அதிகரித்துவந்த பொதுத்துறை கைத்தொழில்களின் பங்கு குறைந்து, 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் தனியார்துறைத்தொழில்களின் பங்கு அதிகரித்துள்ளது.

iii. 1977ஆம் ஆண்டின் பின்னர், கைத்தொழில்துறை வளர்ச்சிசார்ந்த ஒன்றாக மாறியுள்ளதோடு, நாட்டினது ஒட்டுமொத்த உற்பத்தி, மொத்தத்தொழில் வாய்ப்புகளின் உருவாக்கம், ஏற்றுமதி வருமானங் களை உழைத்தல் என்பவற்றிலும் அதனது பங்கு அதிகரித்து வந்துள்ளது.

iv. பேரளவு கைத்தொழில்களின் சார்புப்பங்கு அதிகரித்துள்ளது.

v. மொத்த உள்நாட்டுஉற்பத்தியில் 1950இல் 16.9 வீதமாக இருந்த கைத் தொழில்துறையினது பங்கு 1971இல் 18.2 வீதமாகவும், 1996இல் 21.0 வீதமாகவும் அதிகரித்தது. நாட்டினது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்முறையாக 1995இல் விவசாயத்துறையினது பங்கினை விட கைத்தொழில்களின் பங்கு உயர்வாக மாறியது. அதேபோன்று, புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதிலும், கைத்தொழில்துறையின் பங்கு இப்பொழுது அதிகரித்து வருகின்றது. புதிய தொழில்வாய்ப்புகளில் பெரும்பகுதி முதலீட்டுச்சபையின் கீழ் தாபிக்கப்பட்டு ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்களிலேயே உருவாக்கப் பட்டுள்ளது.

vi. மொத்த ஏற்றுமதி வருமானத்திலும் கைத்தொழில்துறையின் பங்கு அதிகரித்துள்ளபோதும், கைத்தொழில் உற்பத்தி இறக்குமதிசெய்த மூலப்பொருட்களில் பெரிதும் தங்கியிருப்பதால் ஏற்றுமதி வருமானத் திற்கு அதன் தேறிய பங்களிப்பு குறைவாக உள்ளது.

அமைப்புசார்சீராக்கல் எனக்கூறப்பட்ட சர்வதேச நிதிநிறுவனங்களின் இச்செயற்றிட்டத்தை தெற்காசியாவில் முதன்முதலாக அமுல்படுத்திய நாடு இலங்கையாகும். 1977ஆம் ஆண்டின் பின்னர் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இது சர்வதேசநிதிநிறுவனங்களினதும் உதவிவழங்கும் நாடு களினதும் பூரணஆதரவையும், அனுசரணையையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எழுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அரசாங்கம் பொருளாதாரத்தின் மீதான கட்டப்பாடுகளை அகற்றி அதனைத் தாராளமயப்படுத்தியதோடு, வெளிநாட்டுப்போட்டிக்கும் திறந்துவிட்டது என்பது மேலே விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தொடர்ந்துவந்த காலப் பகுதியில் இலங்கை பல்வேறு சர்வதேச - உள்நாட்டு சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதால் பொருளாதாரவளர்ச்சி தளம்பல்களுக்கு உள்ளானது.

1970-77 காலப்பகுதியில் 2.9 வீதமாக தேக்கநிலையில் இருந்த பொருளாதார வளர்ச்சியானது 1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அமுலாக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் விளைவாக அடுத்து வந்த ஆறுஆண்டு காலப்பகுதியில் 6.0 வீதமாக உயர்ந்தது. ஆனால் அரசாங்கத்தினால் இந்த வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்ள முடிய வில்லை. 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆடிக்கலவரம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுப்போர் என்பவற்றாலும், உட்கட்டமைப்பு களின் மேம்பாட்டிற்காக அரசாங்கம் மேற்கொண்டு வந்த பாரிய முதலீட்டுத் திட்டத்தின் கட்டுமான வேலைகள் முடிவுற்றநிலையில் முதலீடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டதாலும் எண்பதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி மீண்டும் வீழ்ச்சி அடையத்தொடங்கியது. அத்துடன், வருமானப்பங்கீட்டிலும் கணிசமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு சமூகத்தில் ஒரு சாராரின் வறுமைநிலை தீவிரமடைந்ததால் அரசாங்கம் வறுமை ஒழிப்புத்திட்டங்களை அமுலாக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது. சர்வதேசநாணயநிதியத்தின் அனுசரணையுடன் 1991இல் மேற்கொள்ளப்பட்ட மூன்றாண்டு செயற்றிட்டத்தின் கீழ் பேரினப்பொருளா தார சமமின்மையைக் குறைப்பதற்கும், பொதுத்துறையை பகுத்தறிவான முறையில் சீரமைப்பதற்கும், தனியார்துறை அபிவிருத்தியை ஊக்குவிப் பதற்கும், நாட்டின் வறுமை ஒழிப்புத்திட்டத்தை மறுசீரமைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் பொருளாதார வளர்ச்சி மீண்டும் உத்வேகம் பெறத்தொடங்கிற்று. பணவீக்கமும் வேலையின்மையும் வீழ்ச்சி கண்டன. இருப்பினும், நாடு எதிர்கொண்ட சில பாதகமான

உள்நாட்டு-வெளிநாட்டு சூழ்நிலைகளினால் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் முதன்முறையாக 1991ஆம் ஆண்டில் நாடு எதிர்க்கணிய பொருளாதாரவளர்ச்சியை அனுபவித்தது. அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அதற்கு முந்திய ஆண்டினது உற்பத்தியோடு ஒப்பீட் டளவில் 1.4 வீதம் குறைவாக இருந்தது.

பல ஆண்டுகளாக நீடித்துவந்த உள்நாட்டுப் போரின் பின்னர் 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட அமைதிச்சூழலில் பொருளா தாரம் மீண்டும் வளர்ச்சி அடையத்தொடங்கிற்று. இக்காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி மீட்சி பெற்றது:

i. பணவீக்கம், வேலையின்மை என்பவற்றில் தளர்ச்சி ஏற்பட்டது.

ii. தேக்கநிலை அடைந்திருந்த வெளிநாட்டுமுதலீடுகள் அதிகரித்ததோடு, உள்நாட்டு உல்லாசப்பயணத்துறையிலும் துரித வளர்ச்சி ஏற்பட்டது.

iii. பாதுகாப்புச் செலவினத்தில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டது.

vi. பார்ச்சூழலினால் போக்குவரத்து வசதிகள் இன்றி துண்டிக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளோடு மீண்டும் பிணைக்கப்பட்டதால், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே வர்த்தகத் தொடர்புகள் வளர்ச்சி அடையத் தொடங்கின.

v. ஆயுதப்போர் இல்லாத சமாதான சூழ்நிலையினால் துரித பொருளா தார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கான சூழ்நிலை நாட்டில் உருவாகிற்று.

vi. வரியிடல்முறை, தொழிற்சட்டங்கள், தனியார்மயமாக்கம், பொதுத் துறை என்பன தொடர்பாக அமுலாக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களும் இதற்கு உதவின.

ஆனால் 2004ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்த பின்னர் பொருளாதார சீர்திருத்தங்களை அமுலாக்குவதில் ஏற்பட்ட தளர்ச்சியினாலும், சமாதானப்பேச்சுகளில் ஏற்பட்ட தேக்கநிலையினாலும் உறுதியற்ற ஒரு அரசியல்நிலை ஏற்பட்டு சமாதான சூழ்நிலையின் மூலம் ஏற்பட்டிருக்கக்கூடிய நன்மைகளை நாட்டுமக்கள் அனுபவிக்க முடியாத நிலை உருவாகிற்று. இதனால் பொருளாதாரவளர்ச்சி மந்தமடைந்தது. 2004ஆம் ஆண்டு 5.4 வீதமாக இருந்த அது 2005ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிப்பேரலையின் தாக்கத்தினால் சற்றுக்குறைவடைந்தது. சுனாமிப்

பேரலையானது 21,000 பேரைக் காவு கொண்டதோடு சுமார் ஒரு மில்லியன் பேரை வீடற்றோர் ஆக்கியது. இதனால், 2006ஆம் ஆண்டில் இலங்கை 4.8 வீத வளர்ச்சியையே அடையமுடிந்தது. நாட்டில் காணப் பட்ட அரசியல் சூழ்நிலை உள்நாட்டு-வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு சாதகமாக இருக்கவில்லை. தொண்ணூறுகளில் 27-28 வீதமாக இருந்த முதலீடுகள் 2005ஆம் ஆண்டு 22.0 வீதமாக வீழ்ச்சி அடைந்தன. 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்த பின்னரே பொருளாதார வளர்ச்சி மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. 2010இல் அது 8.0 வீதமாகவும் 2012இல் 6.8 வீதமாகவும் இருந்தபோதும், தொடர்ந்து வந்த ஆண்டுகளில் சற்று வீழ்ச்சி கண்டது. நாட்டில் நிலவிய வறட்சியான காலநிலை, அரசியல்சூழலில் ஏற்பட்ட மாற்றம் என்பவற் றோடு உலகநாடுகளில் நிலவிய பொருளாதார நெருக்கடி, மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட அமைதியற்ற சூழ்நிலை போன்றனவும் இதற்குப் பங்களித்தன. வறட்சியினால் உள்நாட்டு விவசாய உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஓரளவு உறுதியானதாக இருந்து வந்துள்ளது. 2002-2012 காலப்பகுதியில் அது ஏனைய தெற்காசிய நாடுகளினது பொருளாதார வளர்ச்சியிலும் பார்க்க சற்று உயர்வாக இருந்தது. 2010-2015 காலப்பகுதியில் 6.4 வீத சராசரி வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. அதேவேளையில், பொருளா தாரத்தின் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. இதுவரை காலமும் ஒரு விவசாயப்பொருளாதாரமாக இருந்து வந்த இலங்கையினது பொருளாதாரம் சேவைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளா தாரமாக மாறிற்று. 2015இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைகள் துறையினது பங்கு 62.4 வீதமாகவும், கைத்தொழில், விவசாயத்துறை என்பவற்றின் பங்குகள் முறையே 28.9 வீதமாகவும், 8.7 வீதமாகவும் இருந்தன. மேலும், 2015ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆயிரமாம் ஆண்டு சமூக அபிவிருத்தி இலக்குகளை இலங்கை கடந்து விட்டது. அந்த ஆண்டில், இலங்கை 3,924 அமெரிக்க டொலர் தலாவருமானத்தைப் பெற்றது. தலாவருமானம் இவ்வாறு அதிகரித்ததால் ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டில் இலங்கை இன்று ஒரு கீழ் நடுத்தர வருமானத்தைக் (Lower Middle Income) கொண்ட நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

துரிதமான பொருளாதாரவளர்ச்சியை அடைந்து கொள்வதற்கான எல்லா நிபந்தனைகளையுமே பூர்த்திசெய்துள்ள ஒரு நாடாக இலங்கை

கருதப்பட்டபோதும், அவ்வித துரிதமான வளர்ச்சியை அது இன்னமும் அடைந்து கொள்ளாமலே இருந்து வருகின்றது. கடந்தகாலங்களில் இலங்கையினது கைத்தொழில் கொள்கையானது நாட்டில் காணப்பட்ட சாத்தியமான வாய்ப்புகள் பலவற்றை பூரணமாக பயன்படுத்திக்கொள்ளத் தவறவிட்டமையே இதற்கான பிரதான காரணமாக கூறப்படுகின்றது:

1. கைத்தொழில் வளர்ச்சிக்குப் போதுமான பௌதிகரீதியானதும் தாபன ரீதியானதுமான கட்டமைப்புவசதிகள் இன்றியே தாராளமயமாக்கல் கொள்கையின் கீழ் சந்தை வெளிநாட்டுப்போட்டிக்கு திறந்துவிடப் பட்டது. இது உள்நாட்டுச்சந்தையை இலக்காகக்கொண்டு உற்பத்தியை மேற்கொள்ளும் சிற்றளவானதும் நடுத்தரஅளவானதுமான கைத் தொழில்களை வெளிநாட்டுப் போட்டிக்கு உள்ளாக்கிற்று.
2. தெற்காசியாவிலேயே மிகவும் கவர்ச்சிகரமான தாராளமயமாக்கத்தைக் கொண்ட இலங்கையின் பொருளாதாரசூழலினால் ஈர்க்கப்பட்டு பெருமளவு வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் வந்தபோதும், இவற்றுள் பெரும்பாலானவை ஊழியச்சறிவு கொண்டனவும், சுய தேவைபூர்த்தி செய்வனவுமான கைத்தொழில்களிலேயே தமது முதலீட்டுநடவடிக்கைகளை மேற்கொண்டன. இதனால் அவை உள்நாட்டுத்தொழில்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்யத்தவறின.
3. கைத்தொழில்களுக்கு தேசியமட்டத்திலான அபிவிருத்தித்திட்டம் ஒன்று இல்லாத நிலையில் எதிர்கால கைத்தொழில் கட்டமைப்பை நிர்ணயிக்க முடியாதநிலை காணப்பட்டது. பொருளாதாரத்தின் முதன்மைத்துறைகளை ஊக்குவித்தல், கைத்தொழில்களின் இட அமைவு என்பன பற்றிய தீர்க்கமான கொள்கைகள் இல்லாததால் தனியார்துறையினர் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.
4. கைத்தொழில்துறையில் முதலீட்டுச்சபைக் கைத்தொழில்கள் அவ்வாறல்லாத கைத்தொழில்கள் என்ற இரட்டைத்தன்மையும், ஆலைக்கைத்தொழில்கள் - குடிசைக்கைத்தொழில்கள் என்ற இரட்டைத் தன்மையும் உருவாகியுள்ளது.

இலங்கை துரிதமான வளர்ச்சியை அடைந்து கொள்ளவேண்டுமாயின் மேற்படிக்குறைபாடுகள் களையப்படுவது இன்றியமையாததாகும்.

2

# தாராளமயமாக்கமும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும்

## இலங்கையினது பொருளாதாரம்

சுமார் 21.0 மில்லியன் மொத்த சனத்தொகையையும் 3,294 டொலர் தலாவருமானத்தையும் கொண்ட இலங்கை அண்மைய ஆண்டுகளில் உயர்ந்த பொருளாதாரவளர்ச்சியை அனுபவித்து வந்துள்ளது. 2010க்கும் 2015க்குமிடையே 6.4 வீத வருடாந்த சராசரி வளர்ச்சியைக் கொண்டிருந்த அது பொருளாதார வளர்ச்சியில் இப்பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளுக் கிடையே முன்னிலை வகிக்கின்றது. உலகவங்கியானது உலகநாடுகளை அவற்றின் தலாவருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தாழ்வருமானத் தைக் கொண்ட நாடுகள், கீழ்நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகள், உயர்நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகள், உயர்வருமானத்தைக் கொண்ட நாடுகள் என வகைப்படுத்துகின்றது. அண்மைக்காலம்வரை தாழ்வருமானத்தைக் கொண்ட ஒரு நாடாக கணிக்கப்பட்டு வந்த இலங்கை 2013இல் அதன் தலா தேசியவருமானம் 2000 டொலர்களைக் கடந்து விட்டநிலையில் இப்பொழுது கீழ்நடுத்தர வருமானத்தைக் கொண்ட ஒரு நாடாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மனித அபிவிருத்திச் சுட்டியைப் பொறுத்தவரை, உலக நாடுகளிடையே இலங்கை 73வது இடத்தில் உள்ளது. மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் 2000ஆம் ஆண்டு உச்சிமகாநாட்டில் பிரகடனம் செய்யப்பட்ட 2015ஆம் ஆண்டிற்கான ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals – MDGs) எட்டில் பலவற்றை ஏற்கனவே அடைந்துவிட்ட அது ஏனையவற்றை அடைந்து கொள்வதற்கும் சரியான திசையில் பயணித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இந்த இலக்குகளுள் ஒன்றான வறுமையை அரைவாசியாகக் குறைப்பதில் இலங்கை கண்டுள்ள வெற்றியை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். ஒரு தசாப்த காலப்பகுதியில் ஏற்பட்டு வந்த உறுதியான பொருளாதார வளர்ச்சி காரணமாக 2002இல் நாட்டினது மொத்த சனத்தொகையில் 23.3 வீதமாக இருந்த வறியோரின்

விகிதாசாரம் 2009ம் ஆண்டில் 9.0 வீதமாகவும், 2012/ 13இல் 6.7 வீதமாகவும் குறைந்தது. மேலே கூறியவாறு வறுமையின் பிடியிலிருக்கும் சனத்தொகையின் விகிதாசாரம் குறைந்துவந்துள்ள போதும் நாட்டில் இன்னும் மிதமான ஒரு வறுமைநிலை காணப்படவே செய்கின்றது. நாட்டின் வடக்கு-கிழக்கு பிரதேசங்கள், பெருந்தோட்டப் பகுதிகள், மொனராகலை மாவட்டம் ஆகியவற்றில் வாழும் மக்களே இவ்வாறு வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். அரசு வழங்கும் பல்வேறு சலுகைகளைப் பெற்றுக்கொள்வதிலும், ஊழியச்சந்தையில் பங்குபற்று வதிலும் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களினாலேயே அவர்கள் வறுமைநிலைக்கு தள்ளப்படுவதாகத் தெரிய வருகின்றது. உலகவங்கியின் அண்மைக்கால ஆய்வு ஒன்று நாட்டில் தமிழ்மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களிலேயே மக்கள் வறுமையின் அதியுச்சப்பிடியில் சிக்கி இருப்பதாகக் காட்டுகின்றது. வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களையும், மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தையும், ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்டத்தையும் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள மாவட்டங்களாக இங்கு குறிப்பிடலாம். வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை, அவர்களை வறுமைநிலைக்குத் தள்ளுவதில் யுத்தத்தின் கோரவிளைவுகள் ஒரு முக்கிய பங்கு வகித்திருக்கும் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமிருக்க முடியாது.

**பொருளாதார தாராளமயப்படுத்தலுக்கான கோட்பாட்டுப் பின்னணி**

பொருளாதாரத் தாராளமயமாக்கல் என்பது பொருளாதாரத்தில் தனியார்துறையினது பங்கெடுப்பினை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பொருளாதாரத்தின் மீது தான் விதிக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள், வரையறைகள் என்பவற்றைத் தளர்த்துவதை அல்லது அகற்றுவதைக் குறிக்கும். அதாவது, பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கக்கட்டுப்பாடுகள், வரையறைகள் என்பன தளர்த்தப்படுவதை அல்லது அகற்றப்படுவதை அது குறிக்கும். அரசாங்க நிறுவனங்களையும், பொதுசொத்துக்களையும் பகுதி, பகுதியாகவோ, முழுமையாகவோ தனியார் மயப்படுத்தல், ஊழியச்சந்தையினது நெகிழ்ச்சித்தன்மையினை அதிகரித்தல், வியாபாரத்தாபனங்களின் மீதான வரிவிகிதங்களைக் குறைத்தல், உள்நாட்டு முதலீடுகள், மூலதனங்கள் என்பவற்றிற்குக் குறைந்த அளவான கட்டுப்பாடுகளை விதித்தல், திறந்த சந்தைகளை

உருவாக்குதல் போன்றன இதிலடங்கும். பிரேசில், இந்தியா, சீனா போன்ற நாடுகள் தமது பொருளாதாரங்களை வெளிநாட்டு முதலீடுகளுக்குத் திறந்து விடுவதன் மூலம் வேகமான பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று பல நாடுகள் அதிலுங்குறிப்பாக, மூன்றாம் உலகநாடுகள் உள்நாட்டு - வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக தமது பொருளாதாரங்களைத் தாராளமயமாக்குவதை விட வேறு மாற்றுவழிகள் இல்லாத நிலையில் உள்ளன. உதாரணமாக, 1991இல் இந்தியா மாற்றுவழிகள் இல்லாத நிலையில் தாராளமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டிய கட்டாயநிலைக்குத் தள்ளப்பட்டது. TINA என சுருக்கமாகக் கூறப்படும் இது "there is no alternative" (தாராளமயமாக்கத்திற்கு மாற்றுவழிகள் இல்லை) என்பதைக் குறிக்கும். இன்று பலநாடுகளில் சேவைகள்துறையே ஆகக்கூடிய தாராளமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இது அத்துறைக்கு சர்வதேசரீதியான போட்டித்தன்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். வளரும் நாடுகளில் சேவைகளின் ஏற்றுமதி (உதாரணமாக, IT சேவைகள்) இப்பொழுது வளர்ச்சிக்கான ஒரு முக்கிய உபாயமாக மாறியுள்ளது. வர்த்தகத்தைத் தாராளமயமாக்குவது பல்வேறு ஆபத்துக்களைக் கொண்டது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நிதிச்சந்தைகள் சர்வதேசப்போட்டிக்கு திறந்துவிடப்படுவதாலும், மூலதனப்பாய்ச்சல்களின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாலும் அச்சந்தைகள் வெளிநாட்டுசக்திகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு பலநாடுகளில் நாணய-நிதி நெருக்கடிகள் ஏற்பட்டதையும், வேறு சில நாடுகளில் அவ்வித நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருவதையும் இங்கு குறிப்பிடலாம். வரிகள் தளர்த்தப்படுவதனால் வரிவருமானங்கள் குறைந்து ஒரு நாடு கடன் சுழற்சிக்கு உள்ளாகுதல், சூழல்ரீதியான ஆபத்துக்கள் ஏற்படுதல், பால் - இனரீதியான சமத்துவமின்மை அதிகரித்தல், மூளைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறுதல் போன்றனவும் இதிலடங்கும். வெளிநாட்டுப்பங்குதாரர்கள் இருப்பார்களாயின், அவர்கள் உள்நாட்டில் முதலீடுகளையும் வினைத்திறன்களையும் மேம்படுத்துவதற்குப் பதிலாக இலாபங்களைத் தமக்கே உரித்தானவையாக ஆக்கிக்கொள்வதோடு, அவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லும் ஆபத்தும் உண்டு.

தாராளமயமாக்கல் மேற்படி ஆபத்துக்களைக் கொண்டிருந்தபோதும், அது ஏற்படுத்தும் பாதகமான விளைவுகளிலும் பார்க்க அது ஏற்படுத்தும் சாதகமான விளைவுகள் கூடுதலாக இருக்குமென சிலர் வாதிடுகின்றனர். உள்நாட்டுக்கம்பெனிகள் வெளிநாட்டுப்போட்டிக்கு முகம்கொடுப்பதற்கு முன்னர் அவை தம்மை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு அவற்றிற்கு பாதுகாப்பு அளிப்பது தேவையானது என்பது வேறு சிலரது கருத்தாகும்.

## இலங்கையில் தாராளமயமாக்கக்கொள்கையின் அறிமுகம்

1960ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் ஒரு கட்டுப்படுத்திய பொருளாதாரமுறை நடைமுறைக்கு வந்தது. இதன்கீழ், மூடியதும், உள்நோக்கியதுமான பொருளாதாரக்கொள்கை ஒன்று அமுலாக்கப்பட்ட நிலையில் பொருளாதாரவளர்ச்சி குறைந்தமட்டத்திலேயே இருந்துவந்தது. 1960-70 காலப்பகுதியில் அது 3.8 வீதமாகவும், 1966-70 காலப் பகுதியில் 5.3 வீதமாகவும், 1971-77 காலப்பகுதியில் 2.9 வீதமாகவும் இருந்தது. ஏனைய விருத்தியடையும் நாடுகளோடு ஒப்பிடும்போது இந்த வளர்ச்சி திருப்திகரமானதாக இருந்தபோதும், இலங்கை மக்களின் எதிர்பார்க்கைகளோடு ஒப்பிடும்போது அது போதுமானதாக இருக்க வில்லை என்றே கூறலாம். தொடர்ந்து பேணக்கூடிய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம், கைத்தொழில் அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி என்பன இக்காலப்பகுதியில் குறைந்த மட்டத்திலேயே இருந்துவந்த போதும், சமத்துவம் நோக்கியபோக்கு நாட்டில் முன்னேற்றமடைந்து வந்தது. இறக்குமதிகளின் மீதும், வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் மீதும் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் சென்மதி நிலுவைக்குறைநிலைகள் குறைந்தமட்டத்தில் பராமரிக்கப்பட்டன. இருந்துங்கூட, எழுபதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் உலகசந்தையில் மசகு எண்ணெய், உணவுத்தானியங்கள் என்பவற்றின் விலைகள் உயர்ந்ததனால் பிரச்சினைகள் ஏற்படத்தொடங்கின. உள்நாட்டில் நிலவிய கடும்வறட்சியும் சர்வதேச சந்தையில் மேற்படிப்பொருட்களின் விலை களில் ஏற்பட்ட அதிகரிப்பும் உள்நாட்டில் உணவுத்தானியங்களினதும் ஏனைய பொருட்களினதும் விலைகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தன. இந்த விலையேற்றம் சென்மதிநிலுவையைப் பாதித்ததோடு, நாட்டில் வேலையின்மையையும் பணவீக்கத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளையில், பொதுமக்களுக்கு அரசு வழங்கும் பல்வேறு சேவை களின் தரமும் வீழ்ச்சியடைந்தது. இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே

1977ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தங்கள் இங்கு அறிமுகம் செய்யப்பட்டன.

1977ஆம் ஆண்டிற்குப் பிந்திய இக்கொள்கை சீர்திருத்தங்கள் கட்டமைப்புசார் சீராக்கல் (Stabilization and Structural Adjustment – SSA) கொள்கை என அழைக்கப்படும். மேற்படி சீர்திருத்தங்கள் இலங்கையில் இரண்டு கட்டங்களாக அமுலாக்கப்பட்டன. அதன் முதலாவது கட்டத்தில் (1977-88) முதலாளித்துவ வளர்ச்சிக்கான நன்கு திட்டமிடப்பட்ட ஒரு கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டளவில் இலங்கை ஒரு புதிய கைத்தொழில்மயமாகிய நாடு (NIC) என்ற அந்தஸ்தினை அடையவேண்டும் என்பதற்காக நாட்டினது பொருளாதாரக்கொள்கைகளை கிழக்காசிய நாடுகளின் கொள்கைகளுக்கு இசைவானவையாக ஆக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. விலைநிர்ணயம், முதலீடுகள், வெளிநாட்டுவர்த்தகம், வெளிநாட்டுக்கொடுப்பனவுகள் என்பவற்றின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவன்மூலம் தனியார்துறை யினதும் சந்தையினதும் பங்கினை மேம்படுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. இதன்கீழ், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன:

- அரசாங்கத்தினது நடப்புச்செலவுகள் குறைக்கப்பட்டன.
- நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டு அது சந்தையில் மிதக்கவிடப் பட்டது.
- பொருளாதாரம் திறந்துவிடப்பட்டு வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டன.
- இதற்கென நாட்டில் கட்டில்லா வர்த்தகவலயங்கள் (Free Trade Zone – FTZs) சிலவும் தாபிக்கப்பட்டன.

அரசாங்க உணவு மானியத்திட்டத்தின் கீழ் 1972வரை 90.0 வீதமா னோருக்கு உணவு மானியம் (மானிய விலையில் அரிசி) வழங்கப்பட்டு வந்தது. இது பின்னர் உணவு முத்திரை (Food Stamp) வழங்கும் திட்டமாக மாற்றப்பட்டு வருடாந்தம் ரூபா 3600க்குக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டதால், மானியம் பெறு வோரின் விகிதாசாரம் 58.7 வீதமாக மட்டுப்படுத்தப்பட்டது. இதனூடாக, உணவுமானியம் வழங்குவதற்கான அரசாங்கச்செலவு குறைவடைந்தது. பொருளாதாரம் வெளிநாடுகளுக்குத் திறந்து விடப்பட்டதால் உள்நாட்டு

உற்பத்தியாளர் உலகசந்தை விலைகளை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்பட்டதால் அவர்கள் தமது உற்பத்தித்திறனையும் போட்டித் தன்மை யையும் உயர்த்திக் கொள்ள வேண்டிய கட்டாயநிலைக்கு தள்ளப்பட்டனர். அதேவேளையில், மகாவலி அபிவிருத்தித்திட்டம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நகர அபிவிருத்தி என்பவற்றின் மீதான மூலதனசெலவீடுகள் அதிகரிக்கப்பட்டன.

## பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்: கட்டமைப்பு மாற்றங்கள்

கடந்த சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களுள் பொருளாதாரத்தினது கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியமானவையாகும். ஐம்பதாம் ஆண்டுகளில் பொருளாதாரத்தில் விவசாயஉற்பத்தியே முதன்மை வகித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அது 45.3 வீதத்தையும், கைத்தொழிற்றுறை 19.6 வீதத்தையும், சேவைகள்துறை 35.1 வீதத்தையும் கொண்டிருந்தன. விவசாய உற்பத்தியானது 1865ம் ஆண்டளவில் தொடங்கிய முதல்விளைவுப் பொருட்களாகிய தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கிய பணப்பயிர்களையும், கிராமிய சீவனோபாயத்துறையில் உற்பத்தி செய்யப்படும் அரிசி, பல்வேறு உபஉணவுப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள், மரக்கறி வகைகள் என்பவற்றையும் கொண்டிருந்தது. மேலே கூறியவாறு, விவசா யத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த இலங்கையின் பொருளாதாரம், 1977ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கை யின் காரணமாக ஏற்பட்ட சேவைகள்துறையின் அபரிதமான வளர்ச்சி யினால் உந்தப்பட்டு நகரமயமாகிக் கொண்டுவரும் ஒரு பொருளாதாரமாக இப்பொழுது மாறிக்கொண்டு வருகின்றது. 2015ம் ஆண்டு நாட்டினது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 62.4 வீதமாக உயர்ந்திருந்த சேவை கள்துறை மொத்தஊழியப்படையில் 45.0 வீதமானோருக்கு வேலை வாய்ப்புக்களையும் அளித்தது. சேவைகள்துறையானது வங்கித்தொழில், நிதி, காப்புறுதி, போக்குவரத்து, சில்லறை வர்த்தகம், உல்லாசப்பயணத் துறை போன்றவற்றை உள்ளடக்கியதாகும். 1997இல் 14.0 வீதமாக விருந்த கைத்தொழிற்றுறையின் பங்கு 2015இல் 28.9 வீதமாக உயர்ந்த அதேவேளையில், விவசாயத்துறையின் பங்கு 8.7 வீதமாக வீழ்ச்சி

அடைந்தது. மேலே குறிப்பிட்டவாறு, பொருளாதாரத்தின் உற்பத்தித்துறைகளின் சார்பு முக்கியத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுவந்த அதே வேளையில், அவற்றில் பண்புரீதியான மாற்றங்களும் ஏற்பட்டன. 1977ற்கு முன்னர், கைத்தொழிற்றுறை வெளியீட்டில் புடவைகள், மட்பாண்டப்பொருட்கள், மரக்கறி எண்ணெய் வகைகள், பசளை, சீமெந்து, கண்ணாடி போன்றன காணப்பட்டன. 1977ம் ஆண்டு சீர்திருத்திருத்தங்களின் பின்னர் ஏற்பட்ட வெளிநாட்டுமுதலீடுகளின் அதிகரிப்பு காரணமாக கைத்தொழிற்றுறை குறிப்பிடத்தக்க அளவு விரிவடைந்ததோடு, அது பன்முகப்படுத்தவும்பட்டது. 1978ற்கு முன்னர், கைத்தொழிற்றுறை வெளியீட்டில் முதன்மை வகித்த அரசதுறையின் இடத்தை இப்பொழுது தனியார்துறை பிடித்துவிட்டது. கைத்தொழிற்றுறை உற்பத்தியின் 86.0 வீதமான பகுதி தனியார்துறையிலேயே இடம் பெறுகின்றது. கைத்தொழிற்றுறை உற்பத்தியின் 50.0 வீதத்திற்கும் மேலான பகுதி தைத்தஆடைகளாக இருந்தபோதும், ஏற்றுமதிக்காக பல்வேறு கைத்தொழிற்பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆலைத்தொழில்கள் விரிவடைந்த அதேவேளையில் பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச்சந்தையின் நுகர்பொருள் தேவைகளைப் பூர்த்தி செய்துவந்த சிறு கைத்தொழில்களும் குடிசைக்கைத்தொழில்களும் இப்பொழுது தமது முக்கியத்துவத்தை இழந்துவிட்டன.

### பொருளாதார வளர்ச்சிப்போக்கு

சுதந்திரத்திற்குப்பிந்திய காலப்பகுதியில் (1950-2013) இலங்கை வருடாந்தம் 4.5 வீத சராசரி வளர்ச்சியையே அடைந்து வந்தது. 2009ம் ஆண்டு உள்நாட்டுப்போர் முடிவிற்கு வந்த பின்னரே அது 7.5 வீதமாக அதிகரித்ததோடு, வறுமை 9.0 வீதமாக வீழ்ச்சியடைந்தது. ஆயுள் எதிர் பார்க்கை 75.1 ஆகவும், வயதுக்கு வந்தோரின் படிப்பறிவு விகிதம் 92.2 ஆகவும் உயர்ந்த அதேவேளையில், சிசுமரணவிகிதம் 9.4 வீதமாகக் குறைந்தது. மேற்படி சாதனைகளுக்கு மத்தியிலும் பொருளாதாரத்தில் சில பலவீனங்கள் காணப்படவே செய்தன. உயர்ந்தமட்ட உள்நாட்டு - வெளிநாட்டுக் கடன்கள், அவற்றால் ஏற்படும் அதிகரித்த கடன்பளு, ஏற்றுமதி வருமானங்கள் போதாமை, உயர்ந்த வரவு-செலவுத்திட்டக் குறைநிலைகள் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கீழ்க்கட்டுமான வசதிகள், உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருந்தபோதும், கல்வி-சுகாதாரம் என்பவற்றிற்கு

ஒதுக்கப்படும் நிதிகள் போதாதிருப்பது பொருளாதார வளர்ச்சியை பாதிக்கக்கூடும்.

அறுபதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் 4.5 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி அத்தாசப்தத்தின் பிற்பகுதியில் 4.8 வீதமாக அதிகரித்தது. 1970-77 காலப்பகுதியிலும், 1987-89 காலப் பகுதியிலும் வெவ்வேறு காரணங்களினால் பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது. இவற்றுள் முதலாவது காலப்பகுதியில் காணப்பட்ட குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டில் நிலவிய கடும் வரட்சி, உணவுத் தானியங்களுக்கான தட்டுப்பாடு, இதனால் அவற்றின் விலைகள் உயர்ந் தமை, பாதகமான வர்த்தக மாற்றுவிகிதம் போன்றன காரணமாக இருந்தன. 1987-89 காலப்பகுதியில் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சி பொருளாதார வளர்ச்சியைப் பாதித்தது. 1977ம் ஆண்டு பொருளாதார சீர்த்திருத்தங் களினால் 8.2வீதமாக உயர்ந்த அது 1978-84 காலப்பகுதியில் 5.9 வீதமாகக் குறைந்தது. 1990இல் 5.2வீதமாகவும், 1990 - 93 காலப் பகுதியில் 5.5 வீதமாகவும் இருந்த அது 1999 - 2004 காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் காரணமாக 4.5 வீதமாக வீழ்ச்சியுற்றது. 2009ம் ஆண்டின் பின்னர் நாட்டில் சமாதான சூழ்நிலை உருவாகியதால் பொருளாதார வளர்ச்சி 2010ம் ஆண்டில் 8.0 வீதமாகவும், 2012இல் 9.1 வீதமாகவும் உயர்ந்தது. போருக்குப் பிந்திய காலத்தில் நிர்மாணத்துறை, உல்லாசப்பயணத்துறை, தகவல் தொடர்பாடல் துறை, வர்த்தக சேவைகள், வங்கித்தொழிலும் நிதியும் என்பனவே வளர்ச்சிக்கான பிரதான மூலமாக இருந்தன. 2011-13இல் ஏற்றுமதிகள் குறைந்து, இறக்குமதிகள் அதிகரித்ததால், வர்த்தகக் குறை நிலை அதிகரித்து அது சென்மதிநிலுவையை பாதித்ததனால் வெளிநாட்டு நிதிகளில் தங்கியிருக்கும் தன்மை அதிகரிக்கத் தொடங்கியது. பொருளாதார வளர்ச்சி 3.4வீதமாக வீழ்ச்சியடைந்து, 2014இல் 4.5வீதமாக சற்று உயர்ந்தது.

2011ம் ஆண்டு உச்சமடையத்தொடங்கிய வெளிநாட்டு வர்த்தகம், குறிப்பாக ஏற்றுமதிகள் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கின. இலங்கை யின் ஏற்றுமதிகளுக்கு பிரதான சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையும், அதனால் அந்த நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடியும், அந்த நாடுகளுக்கான ஏற்றுமதியில் இலங்கைக்கு இருந்து வந்த இறுப்புச்சலுகைகள் (GSP சலுகைகள்) நீக்கப்பட்டதும் இதற்கான பிரதான காரணங்களாகும்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 50.0 வீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கே செல்வதால் அங்கு ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை இலங்கையின் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியை ஏற்படுத்திற்று. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிய அமைதியற்ற சூழல், ஈராக் மீதான அமெரிக்க பொருளாதாரத்தடை என்பனவும் இலங்கையின் ஏற்றுமதிகளில் என்றும் இல்லாத அளவிற்கு தாக்கங்களை ஏற்படுத்தின. இதனால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் இலங்கை தனது ஏற்றுமதிகளுக்கு மாற்றுச்சந்தைகளை உறுதி செய்துகொள்ளத் தவறிற்று. ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்து வந்தநிலையில் இறக்குமதிகளை கட்டுப்படுத்த முடியாததன்மையும் இலங்கையில் காணப்பட்டது. இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் சுமார் 25.0 வீதம் பெட்ரோலியப் பொருட் களாகவும், முதலீட்டுப் பொருட்களாகவும் உள்ளதால் இறக்குமதிகளில் நெகிழ்ச்சித்தன்மை குறைவாக உள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த முயன்றால் அது பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். ஏற்றுமதிகளின் வீழ்ச்சியும் இறக்குமதிகளின் நெகிழ் வற்ற தன்மையும் சேர்ந்து ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. 1983இல் டொலருக்கு ரூபா 16.53 ஆகவிருந்த நாணயமாற்று விகிதம் 2011 இல் ரூபா 110.00 ஆகவும், 2012இல் ரூபா 131.00 ஆகவும் அதிகரித்தது.

1977ம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக 1977-82 காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி 6.5 வீதமாக உயர்ந்தது. ஆனால், 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் வளர்ச்சி பாதிக்கப் பட்டதோடு, 1986-87இல் திறந்த வேலையின்மை 16.0 வீதமாக அதிகரித்தது. இக்காலப்பகுதியில் உள்நாட்டுப்போரும் தொடங்கியதன் காரணமாக இராணுவச்செலவீடுகள் அதிகரித்தன. இது பேரினப் பொருளாதார சமமின்மையை ஏற்படுத்தியதோடு, பொருளாதார வளர்ச்சி யையும் தளர்ச்சியடையச் செய்தது. 1988இல் வரவு-செலவுத்திட்டக் குறைநிலை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.0 வீதமாக அதிகரித்த தோடு, சென்மதிநிலுவை நடைமுறைக்கணக்குக் குறைநிலை 1985-89 காலப்பகுதியில் 9.0 வீதமாக அதிகரித்தது. வறுமை, சமத்துவம், சமூக நீதி என்பனவும் பாதிக்கப்பட்டன.

கட்டமைப்புசார் சீராக்கல் கொள்கையின் முதலாவது கட்டத்தில் அக்கொள்கையின் ஒரு பகுதி மட்டுமே அமுலாக்கப்பட்டது. 1989இல்

ஆரம்பித்து இரண்டாவது கட்டத்தில் (ESAF) பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் மேலும் உயிரூட்டம் உள்ளதாக ஆக்கப்பட்டது.

பேரினப் பொருளாதார சமமின்மை குறைக்கப்பட்டு பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட்டது. பொதுத்துறை, தனியார்துறை அபிவிருத்தி ஊக்குவிக்கப்பட்டது. நாட்டினது வறுமை ஒழிப்புத்திட்டம் மறுசீரமைக்கப் பட்டது. இறுக்கமான ஒரு பணக்கொள்கை கையாளப்பட்டது. சென்மதிநிலுவை நடைமுறைக்கணக்குக் குறைநிலை பெருமளவு குறைக்கப்பட்டது. வரவு - செலவுத்திட்டக்குறைநிலைகள் குறைக்கப் பட்டன. பொதுத்துறை முயற்சிகள் பல தனியார்மயமாக்கப்பட்டன.

1960க்கும் 1977க்குமிடையே ஒரு சிறு காலப்பகுதி (1965-70) தவிர்ந்த ஏனைய காலப்பகுதிகளில் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பொருளாதாரக்கொள்கையே இலங்கையில் பின்பற்றப்பட்டு வந்தது. 1970-77 காலப்பகுதியில் அது உள்நோக்கியதும், முன்னரிலும் பார்க்க இறுக்கமாக கட்டுப்படுத்தப்பட்டதுமான ஒரு கொள்கையாக மாறிற்று. இக்காலப்பகுதியில் அமுலாக்கப்பட்ட இறுக்கமான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகவும், வேறும் சில உள்நாட்டு - வெளிநாட்டுக் காரணிகளினாலும் சென்மதிநிலுவையில் தொடர்ச்சியான குறைநிலை களும், அதிகரித்த வேலையின்மையும், உயர்ந்து செல்லும் பணவீக்கமும், மக்களுக்கு தரங்குன்றிய அரசசேவைகளின் வழங்கலும் பொருளா தாரத்தின் முக்கிய பண்புகளாக இருந்தன. இந்நிலையில், 1977ம் ஆண்டு இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. புதிதாகப் பதவிக்கு வந்த அரசு இவற்றினின்றும் விடுபடுவதை நோக்கமாகக் கொண்ட தாராளமயமாக்கப்பட்டதும் திறந்ததுமான பொருளாதாரக்கொள்கை ஒன்றினை அமுலாக்கத் தொடங்கிற்று. சர்வதேசநிதிநிறுவனங்களின் அனுசரணையுடன் கூடிய மேற்படி பொருளாதாரக்கொள்கையே இலங்கையில் இப்பொழுதும் அமுலாக்கப்பட்டு வருகின்றது. அமைப்பு சார்சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் (SA Program) என அழைக்கப்படும் இப்பொருளாதாரக்கொள்கையானது பொருளாதாரத்தை திறன்மிக்கதாக ஆக்குவதையும் பேண்தகுபொருளாதாரவளர்ச்சியை ஏற்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டதாகும். இப்புதிய கொள்கை பின்வருவற்றை உள்ளடக்கியதாக இருந்தது:

- பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டது.
- ஏற்றுமதி - இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

- ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நாணய மாற்றுவிகிதத்தைக் கையாண்டதோடு, நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டு சந்தையில் மிதக்கவிடப்பட்டது.
- பொருளாதாரத்தில் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டன.
- பஸ் கட்டணம், பெட்ரோலியம் போன்ற ஒரு சில பொருட்கள் தவிர்ந்த ஏனையவற்றின் உள்நாட்டு சந்தைவிலைகள் சந்தைக்கேள்வி - நிரம்பல் சக்திகளாலேயே நிர்ணயிக்கப்பட்டன
- ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட கைத்தொழில்கள் தாபிக்கப்பட்டன

இச்சீர்த்திருத்தங்கள் கடந்தகால பொருளாதாரமுறைகளினின்று ஒரு முக்கிய திருப்புமுனையாக இருந்தன.

1970-77 காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட மூடியதும், இறுக்கமாக கட்டுப்படுத்தப்பட்டதும், உள்நோக்கியதுமான பொருளாதாரக்கொள்கை வெளிநோக்கியதும், சந்தைசார்ந்ததுமான ஒரு கொள்கையாக மாற்றப் பட்டது. அது வர்த்தகத்தையும் செலாவணிக் கட்டுப்பாடுகளையும் தாராளமயப்படுத்தல், தனியார்முதலீட்டிலும் சந்தைசக்திகளிலும் தங்கியிருக்கும் ஒரு பொருளாதார உத்தியினைக் கையாளுதல் என்ப வற்றை ஊக்குவிப்பதோடு, ஏற்றுமதிகளில் தங்கியிருப்பதையும் ஆதரித்தது. இதன்கீழ், அரசாங்கம் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நாணய மாற்றுவிகிதத்தைக் கையாண்டது மட்டுமன்றி, நாணயத்தை மதிப்பிறக்கம் செய்து அதனை சந்தையில் மிதக்கவும் விட்டது. இலங்கையினது இச் சீர்த்திருத்தங்கள் சர்வதேசநிதிநிறுவனங்களினதும், உதவி வழங்கும் நாடுகளினதும் பூரணமான ஆதரவையும் அனுசரணையையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1977ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட சீர்திருத் தங்களில் வர்த்தகத்தைத் தாராளமயமாக்கியமை முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது இதன் ஒரு பிரதான நோக்கமாக இருந்ததால், நடைமுறையிலிருந்த இறக்குமதிக்கட்டுப்பாடுகள். செலாவணிக்கட்டுப்பாடுகள் என்பன தளர்த்தப்பட்டன அல்லது முற்றாகவே நீக்கப்பட்டன. இதன்மூலம் வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டு திறந்த அல்லது வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கையொன்று இங்கு அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்றுமதி சார்ந்த ஒரு பொருளாதார உத்தியே நாட்டிற்குச் சிறந்தது என்பதற்கு தொடர்ந்து வந்த ஆண்டுகளில்

ஏற்பட்ட இலங்கையின் அனுபவம் ஆதாரமாக இருந்தது. பொருளாதாரம் உயர்ந்தவிகிதத்தில் வளர்ச்சி அடைந்ததோடு, பொருளாதாரத்தில் நல்ல கட்டமைப்பு மாற்றங்கள் பலவும் ஏற்படத்தொடங்கின. முதல்விளைவுப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருந்த ஏற்றுமதிக்கட்டமைப்பு கைத்தொழில் ஏற்றுமதிசார்ந்த ஒன்றாக மாறியது. உள்நாட்டு உற்பத்திக்கு கைத்தொழிற்றுறையும் சேவைகள்துறையும் விவசாயத்துறையிலும் பார்க்கக்கூடிய பங்கினை அளிக்கத்தொடங்கின. அதேபோன்று, நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்கு தனியார்துறையின் பங்களிப்பும் அதிகரித்தது.

மேற்படிப் பொருளாதார சீர்திருத்தங்களும் அவற்றின் விளைவாக அதிகரித்து வந்த வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சலும் நாட்டினது பொருளாதாரவளர்ச்சியை ஊக்குவித்தன. 1977க்கும் 1983க்குமிடையே பொருளாதாரம் 6.0 வீதவளர்ச்சியை அனுபவித்தது. ஆனால் 1983ம் ஆண்டு இடம்பெற்ற நாடுதழுவிய இனக்கலவரம் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. வெளிநாட்டுச்சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இது வீழ்ச்சியை ஏற்படுத்திற்று. இலங்கையில் புதிய முதலீடுகளை செய்வதற்கு திட்டமிட்டிருந்த வெளிநாட்டவர்களுக்கு இனக்கலவரம் அவற்றைக் கைவிடவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. பல உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் குறிப்பாக, வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில், பாதிக்கப்பட்டன. தொடர்ந்து ஏற்பட்ட தனிநாட்டுக்கோரிக்கையும் பயங்கரவாத நடவடிக்கைகளும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தியதோடு, சுற்றுலாத்துறை, விவசாயநடவடிக்கைகள், மீன்பிடித்தொழில் போன்றவற்றையும் பாதித்தன. ஒட்டுமொத்தமாக பொருளாதாரத்தினது செயற்றிறனில் இவை கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தின.

இந்த தசாப்தத்தின் பிற்பகுதியில் பொருளாதாரத்தின் செயற்றிறன் இவ்வாறு பலவீனமடைந்த நிலையில் 1989ம் ஆண்டு அரசாங்கம் புதிய அமைப்புசார் சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்கு முன்வந்தது. வரவு-செலவுத்திட்டமுகாமையை பலப்படுத்துதல், சென்மதி நிலுவை யையும், பெரிதும் பலவீனமடைந்திருந்த வெளிநாட்டு ஒதுக்குநிலைமை யையும் சீராக்குதல் என்பவற்றை இவை நோக்கமாகக் கொண்டிருந்தன. இவற்றைக் கருத்தில்கொண்டு பொருளாதாரம் மேலும் தாராளமயமாக்கப் பட்டதோடு, இறுப்புக்களின் கட்டமைப்பும் எளிமைப்படுத்தப்பட்டது. இறக்குமதித்தீர்வைகள் குறைக்கப்பட்டு, நடைமுறைக்கணக்கு கொடுக்கல்-வாங்கல்களின் மீதான செலாவணிக்கட்டுப்பாடுகள்

அகற்றப்பட்டன. 1989ம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் ரூபாய் நாணயம் 17.0 வீதத்தால் தேய்வடைவதற்கு அரசாங்கம் விட்டுக் கொடுத்தது. வரவு-செலவுத் திட்டச்செலவுகள் 20.0 வீதமாக குறைக்கப் பட்டன. 1989-92 காலப்பகுதியில் சேமிப்புக்களின் மீதான வரிகளைக் குறைப்பதற்காக தாபனம்சார்வரிகளின் ஆகக்கூடிய மட்டம் 35.0 வீதமாகவும், தனிநபர்வரிகள் 40.0 வீதமாகவும் குறைக்கப்பட்டன. இறக்குமதிகளின் மீது நான்கு படைகளைக்கொண்ட (band) சுங்கத் தீர்வைகளை விதிப்பதன் ஊடாக இறுப்புக்களின் கட்டமைப்பு எளிமைப்படுத்தப்பட்டது. தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் என்பவற்றின் மீதான ஏற்றுமதித்தீர்வைகள் 50.0 வீதமாகக் குறைக்கப்பட்டு, 1992ம் ஆண்டு அவை முற்றாகவே அகற்றப்பட்டன.

1950களில் மெய்த்தலா உள்நாடு உற்பத்தியில் ஆசிய நாடு களுக்கிடையே இலங்கை யப்பானுக்கும் மலேசியாவிற்கும் அடுத்ததாக மூன்றாம் இடத்தில் இருந்தது. எனினும், சில வருடங்களின் பின்னர் இலங்கையைப் புறம் தள்ளிவிட்டு தாய்லாந்தும் இந்தோனேசியாவும் இந்த இடத்தினைப் பிடித்தன. இலங்கையின் பொருளாதாரக்கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், நாட்டில் விரிவான சமூக நலன் திட்டமொன்று அமுலாக்கப்பட்டமை, மிகையான நுகர்வு போன்றனவே பொருளாதார வளர்ச்சியில் எதிர்க்கணிய விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தன. எனினும், 1977ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையினால் நேர்கணிய மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின.

1. இலங்கையினது பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கத் தொடங்கிற்று.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கையில் விரும்பத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன.
3. வேலையின்மைப் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்பட்டது.
4. முதலீட்டு விகிதாசாரம் அதிகரித்தது.
5. ஏற்றுமதிகளின் கட்டமைப்பில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன.

இவை மேலே விரிவாக ஆராயப்பட்டுள்ளன. நாடு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பதற்கு இவை தளம் அமைத்துள்ளன. எனவே, எதிர்காலத்தில் இலங்கை துரித வளர்ச்சி அடையுமென எதிர்பார்க்கலாம்.

3

# இறைக்கொள்கையும் இலங்கையில் அதன் செயற்பாடும்

பல்வேறு வழிகளினூடாக வருவாய்களைத் திரட்டிக்கொள்வதன் மூலமும் அவ்வாறு திரட்டிய வருவாய்களை வேறுபட்ட அரசாங்கத்தேவைகளுக்கு செலவிடுவதன் மூலமும் அரசாங்கம் பொருளாதாரத்தின் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது பற்றியதே இறைக்கொள்கையாகும். பல்வேறு பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரசாங்கம் தனது வரவு-செலவுத்திட்டத்தை எவ்வாறு கையாளுகின்றது என்பதே இறைக்கொள்கை என்றும் கூறலாம். அரசாங்க வரவு-செலவுத்திட்டம் என்பது குறிப்பிட்ட ஒரு ஆண்டிற்கான அரசாங்கத்தினது வரவுகளையும் செலவுகளையும் மதிப்பிட்டுக்காட்டும் ஒரு திட்டமாகும். குறிப்பிட்ட ஆண்டிற்கான அரசாங்க வரவு-செலவுத்திட்டங்கள் பொருளாதார ரீதியான தூயவரவு-செலவுத்திட்டங்களைப் போன்று, உற்பத்தி சாதனங்களை பொருளாதார நோக்கங்களுக்கு ஆகச்சிறந்த முறையில் கையாளும் ஆளுமைத்தன்மை வாய்ந்த ஒன்றாக மட்டும் இருக்க மாட்டாது. குறிப்பிட்ட ஒரு ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவுகளையும் செலவுகளையும் எதிர்வுகூறுவதாக இருக்கும் அது, பொருளாதாரத்தின் பல்வேறு சாராரது முரண்பட்ட நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசியல் அடிப்படையைக் கொண்டதாகவும் இருக்கும். வரவு-செலவுத்திட்டத்திற்கு ஒரு பொருளாதார-தொழில்நுட்ப அடிப்படை இருப்பது போன்றே அதற்கு கட்டாயமாக ஒரு அரசியல் அடிப்படையும் இருக்கும் என்பதை இது உணர்த்துகின்றது.

அரசாங்கசெலவுகள் என்பன அரசாங்கத்தின் நுகர்வு அல்லது நடப்புச் செலவுகளையும், முதலீட்டுச்செலவுகளையும் உள்ளடக்கும். நுகர்வுச் செலவுகள் என்பன அரசாங்கம் ஒரு பொருளை அல்லது சேவையை வழங்குவதற்கு ஏற்படும் பல்வேறு செலவுகளைக் குறிக்கும். அரச ஊழியர்களது வேதனங்களும், சம்பளங்களும், அரசாங்க நிறுவனங்களினது நுகர்வுச் செலவுகள் (உ-ம் கடதாசி, எழுதுகருவிகள், மின்சாரம்,

நீர்விநியோகம், போன்றன தொடர்பான செலவுகள்), வேலையற்றோருக்கான உதவித்தொகைகள், அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றோருக்கான ஓய்வூதியங்கள் போன்ற நலன்சார்ந்த கொடுப்பனவுகள் போன்றவற்றை அது உள்ளடக்கும். இச்செலவுகள் அனைத்துமே மீளெழும் (recurring) தன்மைவாய்ந்தனவாகும். அதாவது அவை மீண்டும் எழும் செலவுகளாகும். முதலீட்டுச்செலவுகளானவை அரசாங்க செயலகக் கட்டடங்களை நிர்மாணித்தல், கீழ்க்கட்டுமான அபிவிருத்தி, புதிய தொழிற் சாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றை நிர்மாணித்தல் போன்ற வற்றிற்கான செலவுகளை உள்ளடக்கும். இவை பதில் வைத்தல்செலவு களாகவோ, புதியவற்றை நிர்மாணிப்பதற்கான செலவுகளாகவோ இருக்கலாம்.

பொருளாதாரத்தை வழிநடத்துவதற்கு ஒரு அரசாங்கம் முதலாவதாக, பொருளாதாரத்தினது பொதுவானபோக்கு என்னவென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அதேபோன்று, பொருளாதாரத்தின் மீது தனது செல்வாக்கினைச் செலுத்துவதற்கு வரிகளின் சேர்க்கை, வரிவிகிதங்கள், தனது செலவீடுகள் என்பவற்றைப் பொருத்தமான முறையில் அது மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். இதனை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் ஒரு கருவியே இறைக்கொள்கை யாகும். வரியிடல்மட்டம், வரிகளின் சேர்க்கை, வரிகளின் மூலம் திரட்டிய வருவாயைச் செலவிடும்முறை என்பவற்றினூடாக, அதாவது, இறைக் கொள்கையினூடாக அரசாங்கம் மொத்தக்கேள்விமட்டம், பொருளாதார நடவடிக்கைமட்டம் என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தமுயலும். தனது செலவீடுகளுக்குத் தேவையான வருவாயைத் திரட்டிக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகள் உள்ளன: வரியிடல் (இது ஏற்கனவே அமுலில் இருக்கும் வரிவிகிதங்களை உயர்த்துவதையும் புதிய வரிகளை விதிப்பதையும் உள்ளடக்கும்), புதிய நாணயத்தை அச்சிட்டு வெளியிடுதல், ஏற்கனவே தன்னிடமிருக்கும் நிதி ஒதுக்கீடுகளில் ஒரு பகுதியைச் செலவிடுதல், நிலம் போன்ற நிலையான சொத்துகளை விற்றல் அல்லது குத்தகைக்கு விடுதல் போன்றவற்றின் மூலம் அது வருமானத்தை உழைக் கலாம். இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் செலவுகளை நிதிப்படுத்து வதற்கு போதாதிருக்குமாயின் அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் கடன்பெறுதல் போன்றவற்றின் மூலம் அது வருமானத்தைப் பெறும். உள்நாட்டில் கடன்பெறும்போது அரசாங்கம் ஆவணங்கள், அரசாங்கப்பிணைகள், திறைசேரி உண்டியல்கள் என்பவற்றை பிணையாகக்

கொடுத்தே கடன்பெறும். வங்கித்துறையிலிருந்து அதிலுங்குறிப்பாக, மத்திய வங்கியிடமிருந்து கடன்பெறும்போது மத்திய வங்கி அந்தப்பிணை ஆவணங்களுக்கு எதிராக புதிய பணத்தை அச்சிட்டு திறைசேரியிடம் கொடுக்குமாயின், அது அரசாங்கத்தினது கடனையும், வட்டிப்பளுவையும் அதிகரிக்கமாட்டாது. ஆனால், மத்திய வங்கிக்கடன்கள் புதிய நாணயங்கள் அச்சிடப்படுவதற்கு இடமளிப்பதால் நாட்டின் பணநிரம்பலை அதிகரித்து அது பணவீக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியம் உண்டு. வெளிநாட்டு நன் கொடைகளைப் பெற்றுக்கொள்ளுதல் இன்னொரு வழியாகும். வருவாய் களைத் திரட்டிக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு மேற்கூறிய பல்வேறு வழிகள் இருந்த போதும் பொதுவாக வரியிடலின் மூலமே அது ஆகக்கூடுதலான வருவாயைப் பெற்றுக்கொள்ளும். உலகப்பெருமந்தம் ஏற்படுவதற்கு முன்னர் (அதாவது, 1930ஆம் ஆண்டுகளுக்கு முன்னர்) பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவிற்கு தனியார்துறையினரின் கட்டுப்பாட்டிலேயே இருத்துவந்தன. இவ்வாறானதொரு நிலையில் பொருளாதார விடயங்களில் அரசாங்கங்கள் தலையிடாமைக் கொள்கையை பின்பற்றி வந்தன. தனியார்துறையினது கட்டுப்பாட்டில் இருத்துவந்த பொருளாதார நட வடிக்கைகளில் தலையிடுவதை அரசாங்கங்கள் இயன்ற அளவிற்கு தவிர்த்துக்கொண்டன. இதன்விளைவாக உருவாகிய ஒரு பொருளாதார முறைமையே தனியார் முயற்சிப்பொருளாதாரம் என அழைக்கப்பட்டது. இரண்டாம் போரின் பின்னர் இதில் பல மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. துரிதகதியில் அதிகரித்துவந்த வேலையின்மையையும், பணவீக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்கும், வர்த்தக சகடஓட்டங்களை உறுதிநிலைப்படுத்துவதற்கும் இறைக்கொள்ளையைக் கையாளும் அதே வேளையில், பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு வட்டிவீதத்தைக் கையாளமுடியும் என்பதும் உணரப்பட்டது. எனவே, அரசாங்கங்கள் மேற்படிக் கொள்கைகளைக் கையாண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்து வதற்குத் தொடங்கின. இந்த மாற்றமானது 1930 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த கெயின்சிய பொருளாதாரக் கருத்துகளின் ஒரு விளைவு எனக்கூறலாம். இறைக் கொள்கை, பணக்கொள்கை என்பவற்றைக் கையாளுவதன் மூலம் பொருளாதாரத்தினது செயற்பாட்டின் மீது அரசாங்கம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தமுடியும் என்பதைக் கெயின்சு தனது ஆய்வுகளில் விளக்கினார். வரிவிகிதங்களையும் செலவீட்டுமட்டத் தையும் மாற்றுவதன் மூலம் அரசாங்கம் பொருளாதாரத்தினது செயற்பாட்டில்

மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்பதை கெயின்சு தனது ஆய்வுகளில் தெளிவாக எடுத்துக் காட்டினார். உதாரணமாக, ஒரு பொருளாதாரம் மந்தநிலையில் இருக்கும்பொழுது வரிவிகிதங்களைக் குறைப்பதன் மூலமோ, உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் போன்றவற்றின் மீதான செலவீடுகளை அதிகரித்தல், வேறு முதலீடுகளை மேற்கொள்தல் போன்றவற்றின் மூலமோ அல்லது இவ்விரு வழிகளையுமே கையாண்டு அரசாங்கம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் ஊடாக வேலையின்மை மட்டத்தைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியைத் தூண்டலாம். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஆட்சியிலிருக்கும் அரசியல் சக்திகள் தமது அரசியல் சித்தாந் தங்கள், அரசியல் நோக்கங்கள் என்ப வற்றிற்கேற்ப மேற்படி இருகொள்கை களினதும் பொருத்தமானதொரு சேர்க்கையைக் கையாளுவதன் மூலம் பொருளாதார நிகழ்வுகளை விரும்பியதிசையில் நெறிப்படுத்த முடியும் என்பதும் அவரது ஆய்வு களில் வெளிக்கொணரப்பட்டது.

1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெருமந்தம் பற்றி ஆராய்ந்த கெயின்சு மொத்தக்கேள்வி மட்டத்தில் ஏற்பட்ட போதாமையினாலேயே பொருளாதாரத்தில் மந்தநிலை தோன்றியது என விளக்கினார். சந்தையில் பொருட்கள், சேவைகளுக்கான மொத்தக்கேள்வியில் ஏற்படும் போதாமை யினால் அவற்றின் சந்தைவிலைகள் வீழ்ச்சியடைவதால் உற்பத்தியாளரது இலாபங்கள் பாதிக்கப்படும். இலாபங்கள் இவ்வாறு குறையும்போது உற்பத்தியாளர் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு தயக்கம் காட்டு வதால் முதலீடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டு உற்பத்தியும் தொழில்மட்டமும் பாதிக்கப்படும். இதன் ஒரு விளைவே பொருளாதார மந்தநிலை என்பதையும், இதனைப்போக்குவதற்கு பொருளாதாரத்தில் மொத்தக்கேள்வி மட்டம் உயரவேண்டும் அல்லது உயர்த்தப்பட வேண்டும் என்பதையும் அவர் தெளிவுபட விளக்கினார். அரசாங்கம் குறைநிலை வரவுசெலவுத் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலமும் வட்டிவீதங்களைக் குறைப் பதன் மூலமும் மொத்தக் கேள்விமட்டத்தைத் தூண்டலாம் என்பதையும், இதில் அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு என்பதையும் அவர் கோட்பாட்டுரீதியாக விளக்கினார்.

குறிப்பிட்ட ஒரு நேரத்தில் நாட்டினது தேவைகளுக்கேற்ப திட்டமிடப் பட்ட வரவுகளும் செலவீடுகளும் விரிவாக்கத்தன்மை கொண்டனவாகவோ (வருவாய்களிலும் பார்க்க செலவீடுகள் கூடுதலாக இருத்தல்) சுருக்கத்

தன்மை கொண்டனவாகவோ (வருவாய்களிலும் பார்க்க செலவீடுகள் குறைவாக இருத்தல்), நடுவுநிலைமை வகிப்பனவாகவோ (வருவாய்களும் செலவீடுகளும் சமமாக இருத்தல்) இருக்கலாம். இந்த அடிப்படையில், பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான தேவை இருக்கும்பொழுது விரிவாக்கத்தன்மை கொண்ட இறைக்கொள்கையும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இருக்கும்பொழுது சுருக்கத்தன்மை கொண்ட இறைக்கொள்கையும் கையாளப்பட வேண்டும். வரவுசெலவுத்திட்டங்கள் பொதுவாக குறை நிலையில் இருப்பது சகஜமாகும். இறைக்கொள்கை தனது நோக்கங்களை அடைந்து கொள்வதில் எந்தளவு செயற்றிறன் வாய்ந்தது என்பது பற்றி பொருளியலாளரிடையே தொடர்ந்தும் கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

## இறைக்கொள்கையின் நோக்கங்கள்

இறைக்கொள்கைக்குப் பொதுவாக ஒன்றுடனொன்று தொடர்புபட்ட மூன்று பரந்த நோக்கங்கள் உண்டு:

**1. அரசாங்கம் தனக்குத் தேவையான வருவாயைத் திரட்டிக் கொள்ளுதல்:** வரிகள், சலுகைஅடிப்படையிலான வெளிநாட்டுக்கடன்கள், வெளிநாட்டு நன்கொடைகள் என்பவற்றின் மூலமாக அரசாங்கம் தனக்குத்தேவையான வருவாயைத் திரட்டிக்கொள்ளலாம். அரசாங்கத்திற்கு வரியல்லா வருவாய்களும் இருந்தபோதும் மொத்த வருவாயியில் அவற்றின் பங்கு குறைவாகவே இருக்கும்

**2. சமூகநலன் நோக்கம்:** மேலே குறிப்பிட்டவாறு பல்வேறு வழிகளில் வருவாயைத் திரட்டிக்கொள்ளும் அரசாங்கம் அவ்வாறு திரட்டிய வருவாய்களைப் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு செலவிடும். இவ்வித செலவீடுகளின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து நாட்டுமக்களது நீண்டகாலநலனை மேம்படுத்துவது அதன் நோக்கமாகும்.

**3. பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்:** பொருளாதாரத்தில் ஏற்படும் பாரிய தளம்பல்கள் மக்களது பொதுவான நலனை வெகுவாகப் பாதிக்கக்கூடும். பொருளாதாரப் பின்னடைவு ஏற்படும் போது உருவாகும் உயர்ந்த வேலையின்மை, உற்பத்தித்திறன் வீழ்ச்சி என்பன சில சந்தர்ப்பங்களில் நிரந்தரமானவையாக மாறிவிடவும் கூடும். இவ்வாறான

சந்தர்ப்பங்களில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவது இறைக் கொள்கையின் ஒரு முக்கிய நோக்கமாக இருக்கும்.

இறைக்கொள்கையின் இந்த நோக்கங்கள் ஒவ்வொன்றையும் அரசாங்கம் தனித்தனியாக அடைந்து கொள்ளமுடியாது. பொருளா தாரத்தை உறுதிப்படுத்தல், சாதனங்களைப்பங்கீடு செய்தல் என்பவற்றை பொருளாதார வளர்ச்சியையும் தொழில்மட்டத்தையும் உறுதிப்படுத்துவ தனின்றும் பிரித்து நோக்கமுடியாது.

## இறைக்கொள்கை சார்ந்த நடவடிக்கைகள்

இறைக்கொள்கையோடு தொடர்புள்ள அரசாங்க நடவடிக்கைகள் பொது வாக பின்வருவனவற்றை உள்ளடக்கும்: வருவாய்களைத் திரட்டுதலும் அவற்றைப் பல்வேறு நோக்கங்களுக்கு செலவிடுதலும், வருவாயிலும் பார்க்க செலவீடுகள் கூடுதலாக இருக்கும் போது ஏற்படும் வரவுசெலவுத் திட்டக்குறைநிலையை நிதிப்படுத்துதல், அதனால் ஏற்படும் பொதுக்கடனை முகாமை செய்தல் என்பனவே இவையாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, அரசாங்கம் பல்வேறு மூலங்களிலிருந்து வருவாயைத் திரட்டிக் கொள்ளும் அதேவேளையில், அதனது செலவீடுகளும் பல்வேறு வகைப் பட்டனவாகவும் பல்வேறு நடவடிக்கைகள் சார்ந்தனவுமாக இருக்கும். அரசாங்க வருவாய்களுக்கும் செலவுகளுக்கும் இடையிலான தொடர்பினை வரவுசெலவுத்திட்டக் குறைநிலை, மிகுநிலை என்பன பிரதிபலிக்கும். குறைநிலை காணப்படுமாயின் அக்குறைநிலையானது எவ்வாறு நிதிப் படுத்தப்படுகின்றது என்பது பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் மீது இறைக்கொள்கை கொண்டிருக்கும் தாக்கத்தினை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

## இலங்கையில் இறைக்கொள்கை

மேலே குறிப்பிட்ட இறைக்கொள்கையின் நோக்கங்களை அடைவதில் இலங்கை எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பது சுருக்கமாக கீழே ஆராயப்பட்டுள்ளது:

### வரிவருவாய்களும் செலவீடுகளும்

**வரி வருவாய்கள்:** அரசாங்கம் தனது மொத்தவருவாயியில் பெரும் பகுதியை வரிகளின் மூலமே பெற்றுக்கொள்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளிற்போலன்றி, இலங்கை போன்ற வளரும் நாடுகளில் நேர்வரி களிலும் பார்க்க நேரில்வரிகளின் மூலமே அதிகமான வருவாய் பெற்றுக்

கொள்ளப்படுகின்றது. உதாரணமாக, அரசாங்கத்தின் மொத்த வரிவருவாயியில் நேரில்வரிகளின் பங்கு 1990இல் 88.0 வீதமாகவும், 2010 இல் 81.3 வீதமாகவும் இருந்தது. இறக்குமதித்தீர்வைகள், விற்பனைப் புரள்வு வரிகள், கலால்வரிகள், முத்திரைக்கட்டணங்கள் என்பனவே பிரதான நேரில்வரிகளாக இருந்தன. இக்காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கையின் கீழ் இறக்குமதிகளின் மீதான தீர்வைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டதால் அரசாங்கம் வரிகள் மூலமான வருவாய்க்கு சர்வதேச வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் வரிகளில் தங்கியிருக்கும்தன்மை குறைந்தது. அதேவேளையில், வருவாயினைத் திரட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் கலால்வரி, வர்த்தகப் புரள்வுவரி போன்ற நேரில்வரிகளில் தங்கியிருக்கும்தன்மை அதிகரித்தது. பொருட்கள், சேவைகள் வரி (Goods and Services Tax - GST) என்ற புதியவரி ஒன்றினை அரசாங்கம் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிமுகம் செய்தது.

நேர்வரிகளுள் முக்கியமான வருமானவரி அரசாங்கத்திற்கு குறைந்தளவு வருமானத்தையே ஈட்டித்தருகின்றது. கடந்த இரண்டு தசாப்தகாலப் பகுதியில் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.0 தொடக்கம் 4.0 வீதமாக மட்டும் இருந்தமை இதனை விளக்கும். வருமானவரியின் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருவாய் குறைவாக இருப்பது பொருளாதாரத்தின் குறைவிருத்தித் தன்மையையும் நாட்டினது வரிதிரட்டல் முறையில் காணப்படும் பலவீனங்களையும் பிரதிபலிப்பதாகக் கூறலாம்.

**வரியல்லா வருவாய்கள்:** அரசாங்கத்தின் வரியல்லா வருவாய்கள் பொது நிறுவனங்களுக்கு அது வழங்கும் கடன்களின் மீதான வட்டி மூலமான வருவாய், மத்திய வங்கியினது இலாபப்பங்கு (மத்தியவங்கி தனது இலாபங்களில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்தும்), அரசாங்க வர்த்தக நிறுவனங்களின் இலாபங்கள், பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கம் விதிக்கும் நிர்வாகக் கட்டணங்கள், அரசாங்க முதலீடுகளிலிருந்து கிடைக்கும் இலாபங்கள், நிலவாடகை அல்லது குத்தகை மூலம் கிடைக்கும் வருமானம் போன்றவற்றை உள்ளடக்கும். அரசாங்கத்தினது மொத்தவருவாயியில் வரியல்லா மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட வருவாய்கள் 2010இல் 11.3 வீதமாக மட்டுமே இருந்தன. வெளிநாட்டு நன்கொடைகளும் அரசாங்கத்தினது மொத்த வருவாயில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படும்.


## அரசாங்க செலவீடுகள்

அரசாங்கச்செலவீடுகள் நடப்பு (மீள்எழும்) (செலவீடுகளையும்) மூலதன (அல்லது) முதலீட்டுச்செலவீடுகளையும் உள்ளடக்கும். மீள்எழும் செலவீடுகள் மூன்று பிரதான கூறுகளைக் கொண்டிருக்கும்:

1. அரசஊழியருக்கான சம்பளங்கள், வேதனங்கள், பல்வேறுபடிகள் என்பவற்றிற்கான கொடுப்பனவுகளும் அரசாங்கத்தின் அன்றாட செயற்பாட்டிற்குத் தேவைப்படும் பொருட்களின் மீதான செலவுகளும்.
2. வீட்டுத்துறையினர், பொதுத்துறை நிறுவனங்கள், அரசாங்கத்துணை நிறுவனங்கள், உள்ளூர் அதிகாரசபைகள் என்பவற்றிற்கான மாற்றல் கொடுப்பனவுகள்.
3. அரசாங்கத்தினது கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவுகள், அரசாங்கத்தின் செலவீடுகள், வருவாய்கள் என்பன தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளன:

**அட்டவணை 6.1: அரசாங்க வருவாய்களும் செலவீடுகளும் (ரூபா/மில்)**

| வருடம் | வருவாய்களும் நன்கொடைகளும் | செலவீடுகள் | வரவு-செலவுத் திட்டக்குறைநிலை |
|---|---|---|---|
| 1990 | 74,662 | 99,814 | -25,152 |
| 1995 | 118,543 | 203,484 | -84,941 |
| 2000 | 182,392 | 335,823 | -153,431 |
| 2005 | 336,628 | 584,783 | -248,155 |
| 2010 | 725,671 | 120,205 | -445,076 |




வரைப்படம் 6.1: அரசாங்க வருவாய்களும் செலவீடுகளும் (ரூபா/மில்லியனில்)

## இறைக்கொள்ளையின் சமூகநலன் நோக்கம்

நாடு சுதந்திரம் பெற்ற காலந்தொட்டே அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமது வரவுசெலவுத்திட்டங்களினூடாக நாட்டுமக்களின் ஒட்டுமொத்த நலனையும் உயர்த்துவதற்கு முயன்று வந்துள்ளன. கல்வி, சுகாதாரம், வேறும் சமூகநலன் சேவைகள் என்பவற்றை மேம்படுத்து வதற்காக அவை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தன. நாட்டினது குறைந்தமட்ட தலாவருமானத்திற்கு மாறாக நாட்டில் காணப்படும் உயர்ந்த கல்வியறிவு விகிதம், நீண்ட ஆயுள்எதிர்பார்க்கை போன்றவற்றிற்கு இதுவே காரணமாக இருந்தது. 1960க்கும் 1977க்குமிடையே இதற்கான செலவீடுகள் நாட்டினது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.5 வீதமாகவும் அரசாங்க வரவுசெலவுத்திட்டச்செலவீடுகளின் மூன்றில் ஒரு பங்காகவும் இருந்தன.

1978ஆம் ஆண்டு இக்கொள்கையிலிருந்து சற்றுவிலகிய அரசாங்கம் அதுவரைகாலமும் அமுலாக்கிவந்த உணவு மானியத்திட்டத்திற்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கும் திட்டமொன்றை அறிமுகம் செய்தது. அனைவருக்கும் உணவு மானியம் வழங்குதல் என்ற முன்னைய திட்டத் திற்குப்பதிலாக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உணவு முத்திரை வழங்கப்பட்டதால் அது உணவு மானியத்திற்கான செலவைக்குறைப்பதற்கு உதவியது. உணவு மானியத்திட்டத்திற்குப் பதிலாக குறைந்த வருமான வகுப்பினரின் வறுமைநிலையைக் குறைப் பதற்காக அவர்களது விசேட வினைத்திறன்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவதனூடாக அவர்களிடையே சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. இதற்கென ஜனசவிய திட்டத்தையும் தொடர்ந்து சமூர்த்தி உதவித்திட்டத்தையும் அமுலாக்கிய தோடு, பாடசாலை மாணவர்களுக்கான இலவச மதிய உணவுத்திட்டம், இலவச சீருடை, இலவச பாடப்புத்தகவிநியோகம் என்பவற்றையும் அறிமுகம் செய்தது.

## பொருளாதார உறுதிப்படுத்தல் நோக்கம்

1977ஆம் ஆண்டு தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகம் செய்யப் பட்டதன் பின்னர் அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்திற்குப் பின்வரும் தொழிற்பாடுகளை நிர்ணயித்தது:

i. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான சாதனங்களைத் திரட்டுதல்.

ii. வரவுசெலவுத்திட்ட குறைநிலைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தனியார்துறையின் செயற்பாட்டிற்கு சாதகமான ஒரு சூழலை உருவாக்குதல்.

iii. கல்வி. சுகாதாரம், ஏனையசேவைகள் என்பனவற்றிற்குத் தேவையான சாதனங்களைத் திரட்டுதல்.

iv. வறியமக்களின் வருமானத்தை உயர்த்துவதற்குத் தேவையான சாதனங்களை ஒதுக்குதல்.

பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் சரிப்படுத்துவதற்கும் பாரிய செயல்திட்டமொன்றும் 1989ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதன் நோக்கங்கள் பின்வருமாறு:

- வரவுசெலவுத் திட்டக்குறைநிலைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்.
- கோதுமை மா, பாண், போக்குவரத்து, மின்சாரம், பெட்ரோல், டீசல் என்பவற்றிற்கு அரசாங்கம் வழங்கிவந்த மானியங்களை அகற்றுவதன் மூலம் அவற்றின் விலைகளில் காணப்பட்ட சீர்குலைவை நீக்கி கட்டில்லாச்சந்தை சூழலிற்குப் புத்துயிரளித்தல்.
- வெளிநாட்டு வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பவற்றை தாராளமயப் படுத்தல்.
- இறக்குமதிகளின் மீதான தீர்வைகள், வர்த்தகப்புரள்வு வரிகள் என்பவற்றில் காணப்பட்ட வரிவீச்சினைக் குறைத்தல்.
- ஏற்றுமதித் தீர்வைகளைப் படிப்படியாக அகற்றுதல்.
- வருமான வரிகளை இலகுபடுத்தல்.
- அரசாங்கத்தினது பொதுவான நடப்பு (மீள்எழும்) செலவீடுகளைக் கட்டுப்படுத்தல்.

# இலங்கையினது வெளிநாட்டு வர்த்தகத்தின் கட்டமைப்பும் அதன் போக்குகளும்

ஒரு நாடு தான் உற்பத்தி செய்யும் பொருட்களையும் சேவைகளையும் ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்வதோடு (அதன் ஏற்றுமதிகள்), ஏனைய நாடுகளிடமிருந்து பொருட்களையும் சேவைகளையும் கொள் வனவும் (அதன் இறக்குமதிகள்) செய்யும். இதன்மூலம் எழும் ஒரு நாட்டினது ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகமே அந்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் அல்லது சர்வதேச வர்த்தகம் எனக்கூறப்படும். இவ்வித வர்த்தகமானது அதில் பங்குபற்றும் நாடுகளினது பரஸ்பர தேவைகளைத் திருப்தி செய்து கொள்வதற்காகவே மேற்கொள்ளப்படும்.

உற்பத்திச்சாதனங்களின் வழங்களானது நாட்டிற்கு நாடு வேறுபட்டதாக இருக்கும். சில நாடுகள் அபரிதமான இயற்கை வளங்களையும், வேறுசில நாடுகள் வினைத்திறன் வாய்ந்த மனிதவளத்தையும் கொண்டனவாக இருக்கும். இப்படியான நாடுகள் ஒன்றுடனொன்று வர்த்தகத்தில் ஈடுபட்டு தமது உற்பத்திப்பொருட்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதன் மூலம் நன்மையடைய முடியும். ஒரு நாடு தன்னிடம் மலிவாகக் கிடைக்கும் உற்பத்திக்காரணிகளை செறிவாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே ஏற்றுமதி செய்வதால் அப்பொருட்களின் ஏற்றுமதி விலைகளும் மலிவாக இருக்கும். அதேபோன்று, தன்னிடம் அரிதாகக் கிடைக்கும் உற்பத்திக்காரணியை செறிவாகக் கொண்டு உற்பத்தி செய்யப் படும் பொருட்களை மலிவுவிலையில் கிடைக்கும் ஏனைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும். இப்படியான நாடுகள் ஒன்றுடனொன்று பரஸ்பர வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நன்மையடைய முடியும். இது நாடுகளுக்கிடையே ஊழியப்பிரிவையும், உற்பத்தியில் சிறக்கும் இயல்பையும் ஏற்படுத்தும். அதாவது, தனிப்பட்ட நாடுகள் ஒப்பீட்டு நலனின் அடிப்படையில் குறிப்பிட்ட பொருட்களின் உற்பத்தியில் சிறக்குமியல்பு பெறும். பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியில் காணப்படும் ஒப்பீட்டுநலனின் அடிப்படையில் (அதாவது, ஒப்பீட்டுச்

செலவுகளின் அடிப்படையில்) இது ஏற்படுவதால் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் வர்த்தகத்தில் ஈடுபடும் இவ்விருநாடுகளுமே நன்மை அடையக்கூடியதாக இருக்கும். பொருளியல் கோட்பாடுகளில் இது வர்த்தகம் தொடர்பான ஒப்பீட்டுநலன் கோட்பாடு என விளக்கப் படுகின்றது.

ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு அல்லது அந்நிய நாணயஉழைப்புகள் அந்நாட்டினது வர்த்தகநிலுவையையும், அதன் இறக்குமதி இயலளவின் கணிசமான பகுதியையும் (இறக்குமதி இயலளவை நிர்ணயிப்பதில் சென்மதி நிலுவையின் வேறுசில கணக்குகளும் ஓரளவு பங்களிக்கும் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்) உழைத்துக் கொடுக்கும்.


இலங்கையினது பொருளாதாரத்தில் வெளிநாட்டு வர்த்தகம் முக்கிய மானதொரு பங்கினை வகிப்பதால் அது ஒரு ஏற்றுமதி-இறக்குமதிப் பொருளாதாரமென வர்ணிக்கப்படுகின்றது. இலங்கையினது பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவிற்கு வெளிநாட்டு வர்த்தகம் சார்ந்தனவாக இருப்பதை இது குறிக்கின்றது. ஒரு நாடு எந்தளவிற்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் தங்கியிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள அந்நாட்டின் ''வர்த்தகத்தில் தங்கி இருக்கும் விகிதாசாரத்தை'' (Trade Dependency Ratio – TDR) கணிக்க வேண்டும். ஏற்றுமதி-இறக்குமிகளினது பெறுமதி களின் கூட்டுத்தொகையை அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு விகிதாசாரமாகக் கணிப்பிடுவதன் மூலம் இதனை அளவிடலாம். இது எந்தளவு உயர்வாக இருக்கின்றதோ அந்தஅளவிற்கு அந்த நாட்டினது வர்த்தகத்தில் தங்கியிருக்கும் தன்மையும் உயர்வாக இருக்கும். இலங்கை யைப் பொறுத்தமட்டில், இது உயர்வாக இருப்பதோடு, காலப்போக்கில் மாற்றமடைந்தும் வந்துள்ளது. 1970-79 காலப்பகுதியில் 33.0 வீதமாக இருந்த அது எண்பதுகளின் முற்பகுதியில் 25.0 வீதமாகக் குறைந்தது. ஆனால் 1999இல் அது 66.0 வீதமாக உயர்ந்தது. அதேபோன்று, 1971-75 காலப்பகுதியில் மொத்தத் தேசிய உற்பத்தியின் 38.0 வீதமாக இருந்த இறக்குமதிகள், பொருளாதார தாராளமயப்படுத்தலின் கீழ் இறக்குமதி களின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் எண்பதாம் ஆண்டு களில் 54.0 வீதமாக உயர்ந்தது.

1977ஆம் ஆண்டின் பின்னர், இலங்கையின் ஏற்றுமதி-இறக்குமதி களின் அளவிலும் பெறுமதியிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. ஏற்றுமதி - இறக்குமதிகளில் காணப்பட்ட

அட்டவணை 3.1: வெளிநாட்டுவர்த்தகம் 1970-2010 (ரூபா/மில்.)

| வருடம் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தகமீதி | வர்த்தகமாற்று விகிதம் (1978=100) |
|---|---|---|---|---|
| 1970 | 2,033 | 2,313 | -280 | 106.0 |
| 1980 | 17,295 | 33,942 | -16,347 | 58.0 |
| 1990 | 76,674 | 105,559 | -28,935 | 87.4 |
| 2000 | 420,114 | 554,290 | -134,176 | 100.0 |
| 2010 | 974,387 | 1,519,757 | -545,370 | 90.0 |

வரைபடம் 3.1: வெளிநாட்டுவர்த்தகம் 1970-2010




பொதுவான போக்குகள் கீழே அட்டவணை 7.1 இல் காட்டப்பட்டுள்ளன. வருடாவருடம் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் அதிகரித்து வந்துள்ளதை இப்புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

1970இல் ரூபா 2,133 மில்லியன் ஆகவிருந்த ஏற்றுமதிகள், 2000ஆம் ஆண்டில் ரூபா 420,114 மில்லியனாகவும், 2010இல் 974,387 மில்லிய னாகவும் அதிகரித்தன. ஏற்றுமதி வருவாய்களை இவ்வாறு மொத்த அடிப்படையில் காட்டுவது ஒரு நாட்டினது அந்நிய செலாவணி உழைப்பை பற்றி பிழையானதொரு தகவலைத்தருகின்றது என்பதும் இங்கு கவனிக்கத்

தக்கது. இக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உற்பத்தியில் இறக்குமதிச் சேர்க்கை உயர்வாக இருப்பதால், அதாவது, அவற்றின் உற்பத்தியில் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் அதிகமாகக் கையாளப் படுவதால், அவற்றின் உள்நாட்டில் சேர்க்கப்பட்ட பெறுமதி குறைவாகவே உள்ளது. அவற்றின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் உண்மையான வெளி நாட்டு நாணயஉழைப்பு மொத்த நாணயஉழைப்பின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அதாவது, இந்த ஏற்றுமதி வருமானங்களிலிருந்து கிடைக்கும் தேறிய வெளிநாட்டு நாணய உழைப்பே (மொத்த வெளிநாட்டு நாணய உழைப்பிலிருந்து அவற்றின் உற்பத்தியில் கையாளப்படும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் பெறுமதியைக்கழித்து வந்த தொகையே) அவற்றின் உண்மையான வெளிநாட்டு நாணய உழைப்புகளாகும். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின உற்பத்தியில் பெருமளவு இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் கையாளப் படுவதால் மொத்த நாணய உழைப்புகளிலும் பார்க்க தேறிய வெளிநாட்டு நாணயஉழைப்பு குறைவாகவே இருக்கும்.

இக்காலப்பகுதி முழுவதுமே ஏற்றுமதிகளிலும் பார்க்க இறக்குமதிகள் கூடுதலாக இருந்ததால் வர்த்தகநிலுவையானது தொடர்ந்து இலங்கைக்குப் பாதகமாக இருந்துவந்தது. அதேபோன்று, வர்த்தகமாற்றுவிகிதமும் இலங்கைக்குச் சாதகமாக இருக்கவில்லை. 1970இல் 106 ஆகவிருந்த அது 2010இல் 90 ஆக வீழ்ச்சிஅடைந்தது. இக்காலப்பகுதியில் ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க இறக்குமதி விலைகள் உயர்வாக இருந்ததை இது காட்டுகின்றது.

## ஏற்றுமதி–இறக்குமதிகளின் கட்டமைப்பு அல்லது சேர்க்கை

ஏற்றுமதிகளின் கட்டமைப்பு அல்லது சேர்க்கை என்பது எவ்வகையான பொருட்கள் அல்லது பண்டங்கள் என்னென்ன விகிதாசாரத்தில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதைக் குறிக்கும். இலங்கையின் ஏற்றுமதிகளை மத்தியவங்கி விவசாயப்பண்டங்கள், கைத்தொழிற்பொருட்கள், கனியப் பொருட்கள் என மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளது. எழுபதாம் ஆண்டு களுக்கு முன்னர் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் என்ற மூன்று பாரம்பரிய விவசாயப்பண்டங்களின் ஏற்றுமதியே இலங்கைக்கு ஆகக் கூடிய ஏற்றுமதி வருவாயைத் தேடித்தந்தன. எழுபதாம் ஆண்டுகளின்


பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தும் முயற்சிகள் ஐயத்திற்கு இடமின்றி, ஏற்றுமதிச்சேர்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தின என்பதை எண்பதாம் ஆண்டுகளின் பின்னர் ஏற்றுமதிச் சேர்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பிரதிபலிக்கின்றன. 1970இல் மொத்த ஏற்றுமதி வருவாயில் 2.0 வீதமாக இருந்த கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதிப்பங்கு 1980ஆம் ஆண்டில் 33.0 வீதமாகவும், 2010ஆம் ஆண்டில் 70.7 வீதமாகவும் உயர்ந்தது. அதேபோன்று, எழுபதுகளில் 95.0 வீதமாக இருந்த விவசாயபண்டங்களின் ஏற்றுமதி 2010இல் 28.7 வீதமாக வீழ்ச்சியடைந்தது. எனவே, விவசாயப் பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்து இலங்கையின் ஏற்றுமதிகள் இக்காலப்பகுதியில் விவசாயம் சாராத பண்டங்களின் ஏற்றுமதியை நோக்கி நகர்ந்தன எனக்கூறலாம்.

அண்மைக்காலத்தில் ஆடைகள், தைத்தஆடைகள், விலையுயர்ந்த கற்கள், மீன் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. இவ்வித ஏற்றுமதிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தாராள ஊக்குவிப்புகளே இதற்குக் காரணமாக இருந்தன.

அட்டவணை 3.2: ஏற்றுமதிகளின் கட்டமைப்பு, 1970-2010

| ஏற்றுமதி வகைகள் | 1970 | 1980 | 2000 | 2010 |
|---|---|---|---|---|
| 1. விவசாயப்பொருட்கள் | 95.0 | 60.0 | 18.8 | 26.7 |
| 2. கைத்தொழிற்பொருட்கள் | 2.0 | 33.0 | 57.5 | 70.7 |
| 3. கனியப்பொருட்கள் | 1.0 | 4.5 | 18.01 | 0.1 |
| 4. வகைப்படுத்தப்படாதவை | 2.0 | 2.5 | 5.6 | 2.5 |
| 5. மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

வரைபடம் 3.2: ஏற்றுமதிகளின் கட்டமைப்பு, 1970-2010



## இறக்குமதிகளின் கட்டமைப்பு அல்லது சேர்க்கை


ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் கட்டமைப்புரீதியான மாற்றங்களை அந்நாட்டினது இறக்குமதிகள் பிரதிபலிக்கும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் முக்கியமான நுகர்வுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதோடு, கைத்தொழில் உற்பத்திக்குத் தேவையான இடைநிலைப்பொருட்களையும், மூலதனப்பொருட்களையும் அவை உள்ளடக்கும். இறக்குமதிக் கட்ட மைப்பில் எற்படும் மாற்றங்கள் இறக்குமதிப்பதிலீடு அல்லது ஏற்றுமதி ஊக்குவிப்புகளினூடாக ஏற்படும் கைத்தொழில்மயமாக்கத்திற்கு ஒரு அடையாளமாக இருக்கும்.

ஒரு நாடு இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்மயமாக்க உபாயத் தைக் கையாளும்போது நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி குறைந்து இடைநிலைப்பொருட்களினதும் மூலதனப்பொருட்களினதும் இறக்குமதி கள் அதிகரிக்கும். அண்மைக்காலத்தில் இலங்கையின் இறக்குமதிச் சேர்க்கையில் இதனை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்மயமாக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மொத்த இறக்குமதிகளில் நுகர்பொருட்களின் இறக்குமதி வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 3.3: இறக்குமதிகளின் கட்டமைப்பு

| பண்டவகை | 1970 | 1988 | 2000 | 2010 |
|---|---|---|---|---|
| 1. நுகர்பொருட்கள் | 57.0 | 35.0 | 18.8 | 32.0 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 19.0 | 46.0 | 57.5 | 52.7 |
| 3. முதலீட்டுப்பொருட்கள் | 24.0 | 18.0 | 18.0 | 15.2 |
| 4. வகைப்படுத்தப்படாதவை | - | 1.0 | 5.7 | 0.1 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

வரைபடம் 3.3: இறக்குமதிகளின் கட்டமைப்பு - 1970 - 2010



1970இல் 57.0 வீதமாகவிருந்த நுகர்பொருட்களின் இறக்குமதிப்பங்கு 2010இல் 32.0 வீதமாகக் குறைந்தது. அதேவேளையில், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி 19.0 வீதத்திலிருந்து 59.7 வீதமாக உயர்ந்தது. துணிவகைகள், பெட்ரோலியப்பொருட்கள், உணவுப்பண்டங்கள் என்பனவே இலங்கையின் பிரதான இறக்குமதிகளாகும்.

மேலே விளக்கியவாறு இக்காலப்பகுதியில் ஏற்றுமதி-இறக்குமதி களின் சேர்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தபோதும், நாடு வெளி நாட்டு வர்த்தகத்தில் தங்கியிருக்கும் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை.

இலங்கையின் இறக்குமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 30.0 வீதமாகவும், ஏற்றுமதிகள் 20.0 வீதமாகவும் உள்ளன. ஏற்றுமதிகள் மூலம் கிடைக்கும் அந்நியசெலாவணி மொத்த இறக்குமதிகளில் 63.0 வீதத்தை நிதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இதனுடன், வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள் அனுப்பும் வருமானச் செலுத்தல் களையும் சேர்த்துக் கொள்வோமாயின் அது 92.0 வீதமாக உயர்கின்றது. எனவே, இறக்குமதிகளுக்குத் தேவையான வெளிநாட்டு நாணயத்தின் பெரும்பகுதியை இவற்றின் மூலம் இலங்கை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதால், இறக்குமதிகளை நிதிப்படுத்துவதில் இலங்கை ஓரளவிற்குப் பலமான நிலையிலேயே உள்ளதெனக் கூறலாம்.

**வர்த்தகப் பாய்ச்சல்களின் திசை**

வர்த்தகப்பாய்ச்சல்களின் திசை என்பது இலங்கையினது ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்யும் நாடுகள் எவை, இலங்கை தனக்குத் தேவையான இறக்குமதிகளை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றது என்பவற்றைக் குறிக்கும்.

இலங்கையினது ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்யும் நாடுகளை ஒரு குழுவாக நோக்குவோமாயின், மேற்கத்திய நாடுகள் இதில் முன்னிலை வகிக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவும், ஐக்கிய இராச்சியமும் இதில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பிடிக்கின்றன. பெல்ஜியம், லக்ஸம் பேர்க், இத்தாலி, ஜேர்மனி போன்ற ஐரோப்பிய ஒன்றியநாடுகளும் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு முக்கிய சந்தைகளாக உள்ளன. உண்மை யில் ஐரோப்பிய ஒன்றியநாடுகளின் இறக்குமதிகளை மொத்தமாக நோக்குவோமாயின், ஐக்கிய இராச்சியத்தைவிட அவையே கூடுதலான இறக்குமதிகளைச் செய்வதால், ஐக்கிய அமெரிக்காவிற்கு அடுத்த

இடத்தை அவையே பிடிக்கும். இதனால் ஐக்கிய இராச்சியம் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும். 2000ஆம் ஆண்டு முதல், இந்திய-இலங்கை கட்டில்லா வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான ஏமது ஏற்றுமதிகள் அதிகரித்து வருகின்றன. அதேபோன்று, இலங்கை இப் பொழுது ஆகக்கூடிய அளவு இறக்குமதிகளை இந்தியாவிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றது (25.0%). முன்னர் யப்பான் இந்த இடத்தை வகித்தது. இந்தியாவிடம் இருந்தான இறக்குமதிகளில் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், மருந்துவகைகள், கோதுமை, அரிசி, போக்கு வரத்து சாதனங்கள் என்பன உள்ளடங்கும். ஐரோப்பிய ஒன்றியநாடுகளை ஒரு குழுவாக நோக்குவோமாயின், இலங்கையின் பொருட்களை இறக்குமதி செய்வதில் அவையே இரண்டாம் இடத்தைப்பெறும். சீனா அதற்கு அடுத்த இடத்தில் இருக்கும். இலங்கைப் பொருட்களின் இறக்கு மதிக்கு சிங்கப்பூர் (8.0%), ஈரான் (6.0%) என்பனவும் பங்களிக்கின்றன.

# 5

## இலங்கையின் வெளிநாட்டுக்கடன்கள்

ஒரு நாடு உலகின் ஏனைய நாடுகளுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களே அதன் வெளிநாட்டுக்கடன்களாகும். அதேபோன்று, ஒரு நாடு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செலுத்த வேண்டிய கடன்களின் கூட்டுத்தொகையே அந்நாட்டினது மொத்த தேசியக் கடன்கள் எனக்கூறப்படும். எனவே, இலங்கையினது வெளிநாட்டுக் கடன்கள் என்பன நாட்டினது மொத்தக்கடனில் வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய பகுதியைக் குறிக்கும். இவ்வெளிநாட்டுக் கடன்கள் வெளிநாட்டுத் தனியார் வங்கிகள், ஏனைய நாட்டு அரசாங்கங்கள் என்பன உட்பட, சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய கடன்களை உள்ளடக்கும். ஒரு நாட்டில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவோரை சர்வதேச நாணய நிதியம் நான்கு துறைகளைச் சேர்ந்தவர்களாக வகைப்படுத்தி உள்ளது:

1. மத்திய அரசாங்கமும் அதன் பல்வேறு அமைச்சுகளும்
2. நாணய அதிகாரசபை
3. வங்கித்துறை நிறுவனங்கள்
4. ஏனையதுறைகளைச் சேர்ந்தோர்

இலங்கையினது வெளிநாட்டுக்கடன்களில் 75.0 வீதமானவை அரசாங் கத்தினது கடன்களும், 7.0 வீதமானவை அரசகூட்டுத்தாபனங்களினது கடன்களுமாகும். எஞ்சியன மட்டுமே தனியார்துறையைச் சேர்ந்தவர் களால் பெறப்பட்ட கடன்களாகும்.

1950ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி முதல் தொடர்ந்து இடம்பெற்று வந்த சென்மதிநிலுவைக் குறைநிலைகள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதன் பின்னரே வெளிநாட்டுக் கடன்களின் அளவும் உயரத் தொடங்கிற்று. சென்மதிநிலுவைக்குறைநிலைகளை நிதிப்படுத்துவதற்கு அரசாங்கம் பெருமளவு வெளிநாட்டுக்கடன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டி இருந்ததால் வெளிநாட்டுக்கடன்தொகையில் அதிகரிப்பு

ஏற்பட்டது. நாட்டின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, றப்பர் போன்ற பொருட்களுக்கு 1950ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதிவரை காணப்பட்ட செழிப்புநிலைக்கு மாறாக, பின்வந்த காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் அப்பண்டங்களுக்கான விலைகள் வீழ்ச்சி அடைந்த தால் அவற்றின் ஏற்றுமதி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்திலும் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அமைவாக இறக்குமதிகளை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப் பட்டதால் சென்மதிநிலுவைக்குறைநிலைகள் விரிவடைந்தன. 1960ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும், 1970-77 காலப்பகுதியிலும் பெருமளவு இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் கையாள்வதன் மூலம் அரசாங்கத்தினால் இக்குறைநிலைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடிந்தது. இறக்கு மதிக் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாக, இக்காலப்பகுதியில் செலாவணிக் கட்டுப்பாடுகளும் கையாளப்பட்டதோடு, படிப்படியாக அக்கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கவும் பட்டன.


1978ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொருளாதாரத் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டபோது இறக்குமதிக்கட்டுப்பாடுகளும் செலாவணிக்கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டதால் இறக்குமதிகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி உள்வரத்தொடங்கின. ஏற்றுமதிகள் அதேயளவு அதிகரிக்கத்தவறியதால் சென்மதிநிலுவைக்குறைநிலைகள் அதிகரித்தன. தொடர்ந்துவந்த காலப்பகுதியில் ரூபாநாணயமும் சந்தையில் மிதக்க விடப்பட்டது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாகவே சென்மதிநிலுவைக் குறைநிலைகள் விரிவடைந்தன. இச்சூழ்நிலையில், சென்மதிநிலுவைக் குறைநிலைகளை நிதிப்படுத்துவதற்காக அரசாங்கம் வெளிநாடுகளிட மிருந்து பெருமளவு குறுங்காலக்கடன்களைப் பெற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாயிற்று. ஆரம்பத்தில் மேற்படிக் காரணங்களே வெளிநாட்டுக் கடன்கள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. இது தொடர்பான கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன:

**அட்டவணை 4.1: வெளிநாட்டுக்கடன்கள் (US$ மில்லியன்/பில்லியன்)**

| வருடம் | கடன்தொகை | கடன் சேவை விகிதம் |
|---|---|---|
| 1960 | 62.0 மில்லியன் | 5.0 |
| 2000 | 9000 மில்லியன் | 14.7 |
| 2005 | 11400 மில்லியன் | 7.9 |
| 2009 | 18600 மில்லியன் | 19.0 |

| | | |
|---|---|---|
| 2013 | 33700 மில்லியன் | 25.3 |
| 2015 | 35400 மில்லியன் | 27.7 |

**வரைபடம் 4.1: வெளிநாட்டுக்கடன்கள்**




1960ஆம் ஆண்டில் 62.0 மில்லியன் டொலராகவிருந்த வெளிநாட்டுக் கடன்கள் 2000ஆம் ஆண்டில் 9.0 பில்லியனாகவும், 2015ஆம் ஆண்டில் 35.4 பில்லியன் டொலராகவும் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் வெளிநாட்டுக்கடன்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது என்பதை இது காட்டுகின்றது. 2015ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 54.4 வீதமாகவும், நாட்டினது மொத்த (தேசிய)க்கடன்கள் அதன் 79.0 வீத மாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இது மிகமிக உயர்வான கடன் விகிதாசாரங்களாகும். நாடுகளின் கடன் பெறுவதற்கான தகுதியை மதிப்பீடு செய்யும் Standard and Poor's என்ற அமெரிக்கக்குழு உலகில் அதிகூடிய கடன்வாங்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று எனக்குறிப் பிட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு ஆண்டில் வெளிநாட்டுக்கடன்களை அடைப் பதற்கு ஒரு நாடு செலுத்த வேண்டிய தவணைக்கட்டணத் தொகையையும் அவ்வாண்டிற்கான அக்கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவுகளையும் கூட்டிவந்த தொகையை அவ்வாண்டின் பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஒரு விகிதாசாரமாகக் கூறுவது அந்நாட்டினது கடன்சேவை விகிதம் (Debt Service Ratio) எனக் கூறப்படும். பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தில் எத்தனை வீதம் கடன்களை அடைப்பதற்காக செலவிடப்படுகின்றது என்பதை இது காட்டும். இந்த விகிதாசாரம் உயர்வாக இருக்குமாயின், ஏற்றுமதிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தின்

பெரும்பகுதி வெளிநாட்டுக்கடன்கள் மீதான கடன்சேவைக்கொடுப் பனவாக செலுத்தப்படுவதையும், பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் இறக்குமதிக்கு அதன் ஒரு சிறு பகுதி மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதையும் இது குறிக்கும். எனவே, கடன்சேவை விகிதம் உயர்வாக இருப்பது ஒரு நாட்டிற்கு நல்லதன்று. 2012 ஆம் ஆண்டு இலங்கையில் அரசாங்கத்தினது செலவீட்டில் வெளிநாட்டுக்கடன்களை மீளச்செலுத்துவதற்கான தொகை (9.3 பில்லியன் டொலர்) பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதி வருமானத்தின் 21.2 வீதமாக இருந்தது. அண்மைக்காலத்தில் அதிகரித்து வரும் வர்த்தக்குறைநிலையானது வெளி நாட்டுக்கடன்களின் மூலமே நிதிப்படுத்தப்பட்டு வருகின்றது. மறுபக்கத்தில், அதிகரித்து வரும் கடன் சேவைக்கொடுப்பனவுகளும் வர்த்தக்குறைநிலை அதிகரிப்பதற்குப் பங்களிக்கின்றன. கடன்சேவைக்கொடுப்பனவுகள் ஒரு நாட்டினது வெளிநாட்டுஒதுக்குகளையும் பாதிக்கக்கூடும் என்பதால் வெளிநாட்டுக்கடன்கள் அதிகரித்து வருவதை பாரதூரமான ஒரு பொருளா தாரப் பிரச்சினையாகக் கருதலாம். கடந்தகாலங்களில் போலன்றி அரசாங்கம் பெறும் வெளிநாட்டுக்கடன்களில் பெரும்பகுதி இப்பொழுது வர்த்தகரீதியான கடன்களாக உள்ளன. கடந்தகாலங்களில் இலங்கை இருபக்க, பல்பக்க மூலகங்களிலிருந்து, அதாவது, ஏனைய நாட்டு அரசாங்கங்களிடமிருந்தும் சர்வதேச நிதிநிறுவனங்களிடமிருந்தும் சலுகை அடிப்படையிலான கடன்களையே பெருமளவு பெற்றுக்கொண்டது (இவை குறைந்த வட்டிவீதத்தையும் திருப்பிச் செலுத்துவதற்கான இலகு வான நிபந்தனைகளையும் கொண்ட கடன்களாகும்). ஆனால் இப்பொழுது மொத்த வெளிநாட்டுக்கடன்களில் இவற்றின் பங்கு குறைந்து வருகின்றது. சலுகைகளற்ற கடன்களும் உயர்ந்த வட்டியில் பெறப்படும் வர்த்தகரீதியான கடன்களுமே இப்பொழுது முதன்மை வகிக்கின்றன. உதாரணமாக, 2002ஆம் ஆண்டு மொத்த வெளிநாட்டுக்கடன்களில் 7.2 வீதமாகவிருந்த வர்த்தகரீதியான கடன்கள் 2012ஆம் ஆண்டு 50.5 வீதமாக அதிகரித்தன. கடன்சேவைவிகிதம் உயர்வாக இருப்பதற்கு அதிகரித்து வரும் வர்த்தக ரீதியான கடன்களும் சலுகைகளற்ற கடன்களும் ஒரு முக்கிய காரணம் எனலாம். வெளிநாடுகளில் தாழில்புரியும் இலங்கையர்களின் அதிகரித்து வரும் வெளிநாட்டு நாணயச்செலுத்தல்களின் மூலம் கிடைக்கும் வெளி நாட்டு நிதிகளின் மூலமே இந்த சாதகமற்ற நிலைமையினை அரசாங்கம் சமாளித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மேற்படி வெளிநாட்டு நாணயச்செலுத்தல்கள் எண்பது வீதமான வர்த்தகக் குறைநிலையினை

நிதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. அத்துடன், சுற்றுலாத்துறையின் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு நாணயஉழைப்புகளும் இதற்கு உதவுகின்றன. கடந்த அரசாங்கத்தினால் உயர்ந்தவட்டியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பெருமளவு கடன்களில் ஒரு பகுதியைப் புதிய அரசாங்கம் திருப்பிச் செலுத்தி விட்டதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.0 வீதமாக இருந்த இக்கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் இப்பொழுது 3.5 வீதமாகக் குறைந்துள்ளன.

**வெளிநாட்டு நிதிகளின் பயன்பாடு**

வெளிநாடுகளிடமிருந்து கடன் பெறுவதால் ஏற்படும் மேற்படிப் பிரச் சினைகளால் வெளிநாடுகளிடமிருந்து கடன்பெறுவது விரும்பத்தகாத ஒரு விடயமா என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஒரு நாடு ஏனைய நாடுகளிடமிருந்து கடன்பெறுவது ஒன்றும் புதிதல்ல. பல நூற்றாண்டு களுக்கு முன்பிருந்தே நாடுகள் தமது பல்வேறு தேவைகளுக்காக தத்தமது நட்பு நாடுகளிடமிருந்து கடன் பெற்று வந்துள்ளன. இவ்வாறான கடன் களைப் பெறுவது பூகோளரீதியான ஒரு நிகழ்வாக இருப்பதால், இவ்விதக் கடன்களை வழங்குவதற்கென இப்பொழுது சர்வதேசநாணயநிதியம், உலகவங்கி போன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஒரு நாடு தனக்கு சொந்தமான சாதனங்களை மட்டும் கையாண்டு அடையக்கூடிய பொருளாதார வளர்ச்சிமட்டத்திலும் பார்க்க வெளிநாட்டுக் கடன்களின் மூலம் பெறப்பட்ட சாதனங்களையும் இணைத்துக் கையாள் வதன் மூலம் அதிலும் பார்க்க உயர்ந்த ஒரு வளர்ச்சிமட்டத்தை அடைந்து கொள்வது சாத்தியமாகும். மேலும், அபிவிருத்திக்கு வரையறையாக இருக்கும் வெளிநாட்டு நாணயத்தட்டுப்பாட்டை வெளிநாட்டுக்கடன்கள் மூலம் தீர்த்து வைக்கலாம்.

பாரிய உட்கட்டமைப்புவசதிகளை உருவாக்குவதற்கு உள்நாட்டு சேமிப்புக்கள் போதுமானதாக இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் வெளி நாட்டுக்கடன்களை பெற்றுக்கொள்வது அதற்கு உதவியாக இருக்கலாம். அபிவிருத்திக்கு வரையறையாகவிருக்கும் வெளிநாட்டு சாதனங்களுக் கான தட்டுப்பாட்டை வெளிநாட்டுக்கடன் தீர்த்து வைக்கும். சென்மதி நிலுவையில் ஏற்படும் தற்காலிகப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவ தற்கும் அவை உதவியாக இருக்கும். எனினும், வெளிநாட்டுக்கடன்களின் அளவு, அக்கடன்களை பெற்றுக் கொள்வதற்கான செலவுகள், கடன்மீதான நிபந்தனைகள், அவ்வாறு பெறப்பட்ட கடன்கள் எதற்காக செலவிடப்

படுகின்றன என்பன ஒரு நாட்டினது பொருளாதார அடிப்படைகளின் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

வெளிநாடுகளிடமிருந்து கடன்பெறுவது ஒரு நாட்டினது பொருளா தார உறுதிப்பாடு, அபிவிருத்தி என்பவற்றின் மீது சாதகமானதும் பாதக மானதுமான விளைவுகளைகொண்டிருக்கும். கடனின்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நிதிகள் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கும் இறக்குமதி களைக் குறைப்பதற்கும் கையாளப்படலாம். இவ்வித நோக்கங்களுக்கு அவை கையாளப்படுமாயின் அது கடன் பளுவைக் குறைப்பதற்கு உதவியாக இருக்கும். இலங்கையைப்பொறுத்த வரை, நிதிஅமைச்சின் தகவல்களின்படி, 75.0 வீதமான வெளிநாட்டுக் கடன்கள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கே கையாளப்பட்டுள்ளன. இக்கடன் கள் எரிசக்தி, துறைமுகங்கள், தெருக்கள், பாலங்கள், நீர்விநியோகம், விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடித்துறை போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் நோக்குவோ மாயின், வெளிநாட்டுக் கடன்கள் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றியுள்ளன என அவற்றை நியாயப்படுத்தலாம். ஆனால் சில உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் நீண்டகால இடைவெளியின் பின்னரே பயனளிக்கத் தொடங்கும் என்பதும் கவனிக்கத்தக்கது. எனவே, உட் கட்டமைப்புகளின் மீது செலவிடும்போது அவை நாட்டின் சென்மதி நிலுவைக்கு எவ்வாறான பங்களிக்கும் என்பதை கவனத்தில் கொள்வது ஒரு நல்ல உத்தியாகும்.

உட்கட்டமைப்புகளின் மீதான எல்லா முதலீடுகளுமே பொருளாதார ரீதியாக சிறந்தவை எனக்கூறமுடியாது. உட்கட்டமைப்புக்களின் மீதான சில முதலீடுகள் செலவு கூடியனவாகவும், உடனடியாக பயன்தராதன வாகவும், அவசியம் அற்றனவாகவும் இருக்கலாம். எனவே, உட்கட்ட மைப்புகளுக்காக செலவுகளை மேற்கொள்ளும் போது அவற்றின் பொருளாதார முக்கியத்துவம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

சர்வதேசநாணயநிதியம் இவ்வித கடன்களை வழங்கும்போது அரசாங்க செலவீட்டினைக் குறைத்தல், வரவு-செலவுத் திட்டக்குறை நிலைகளை மட்டுப்படுத்தல், நாணயத்தை மதிப்பிறக்கம் செய்தல் போன்ற இறுக்கமான நிபந்தனைகளை விதிப்பது சகஜமாகும். புதிய கடன்களைப்

பெறுவதற்கு இலங்கை இவ்வித நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாதது. இக்கடனானது இறுக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும். இலங்கை இவ்வித கடன்களைப் பெறுவது அதிகரித்து வரும் பொருளாதாரப் பிரச்சினையின் ஒரு வெளிப்பாடே எனக்கூறுவோமாயின் அது தவறாகாது.

வெளிநாட்டுக்கடன்களைப் புத்திசாலித்தனமாகக் கையாள்வதற்கு அவற்றைப் பராமரிப்பதற்கான வழிகளை உறுதி செய்துகொள்வது இன்றியமையாததாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் அண்மைக்கால கணிப்பீடுகளின்படி வெளிநாட்டுக்கடன் நெருக்கடிக்கு உட்பட்டுள்ள 22 நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30.0 வீதத்திற்குக் கூடுதலாகவும், அரசாங்க வருவாயின் 15.0 வீதத்திற்கு மேலானதுமான கடன் கொடுப்பனவைக் கொண்ட நாடுகளே கடன் நெருக்கடியில் இருப்பதாக கூறப்படுகின்றது. இலங்கையில் இவை முறையே 34.0 வீதமாகவும், 15.8 வீதமாகவும் உள்ளன. இவ்வாறான ஒரு நிலையில் புதிய கடன்களைப் பெறுவது மக்களது வாழ்க்கைத்தரத்தை மேலும் பாதிக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

வெளிநாட்டுக்கடன்களை புத்திசாலித்தனமாகக் கையாள்வதற்கு அவற்றைப் பராமரிப்பதற்கான வழிகளை உறுதி செய்துகொள்வதும் இன்றியமையாததாகும். நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தி, பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றை உறுதி செய்து கொள்வதற்கு வெளிநாட்டு கடன்சேவைக்கான செலவினை சரியானமுறையில் முகாமை செய்வது இலங்கை போன்ற ஏற்றுமதி-இறக்குமதிப் பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டிற்கு இன்றியமையாததாகும்.

# இலங்கையின் ஊழியச்சந்தை

**ஊழியம்**

ஆகக்குறைந்தளவு ஊழியமாவது இன்றி எந்த ஒரு உற்பத்தி நடவடிக்கையையும் மேற்கொள்ளமுடியாது என்பதால் பல்வேறு உற்பத்திக் காரணிகளுள் ஊழியமே உற்பத்திக்கு அடிப்படையான உற்பத்திக்காரணியாக கருதப்படுகின்றது. ஏனைய உற்பத்திக் காரணிகளைப் போலன்றி ஊழியம் தான் வேலைசெய்யும் சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருப்பதால் அது சற்று சிக்கல்நிறைந்த ஒரு காரணியுமாகும். எனவே, ஊழியச்சந்தையின் பண்புகள், அதிலேற்படும் அபிவிருத்திகள், மாற்றங்கள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு ஏற்ப ஒரு நாடு ஊழியச்சந்தை சம்பந்தமான தனது கொள்கைகளை வகுத்துக்கொள்வது உசிதமானதாகும்.

**ஊழியச்சந்தை**

தொழிலாளர் தமக்கு வருமானத்தைத் தரக்கூடிய ஒரு தொழிலை தேடிக் கொள்வதற்கும், தொழில்வழங்குநர் வேலைசெய்ய விரும்புவோரிலிருந்து தமது தொழிலிற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கும், இருசாராரும் சேர்ந்து வேதனங்களை நிர்ணயித்துக் கொள்வதற்குமான ஒரு இடமே ஊழியச்சந்தையாகும். வேதனவிகிதங்கள், வேலைநிபந்தனைகள், சந்தையினது போட்டித்தன்மை என்பன பற்றிய தகவல்களைத் தொழிலாளரும் தொழில்வழங்குநரும் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு தாபனஏற்பாடும் அதுவேயாகும். ஊழியத்தினது நிரம்பல் (தொழிலில் சேருவதற்குத் தயாராக இருப்போரின் எண்ணிக்கை), சந்தையில் ஊழியத்திற்கான கேள்வி (சந்தையில் காணப்படும் வேலைவாய்ப்புகள்), வேதனவிகிதம் என்பன பற்றிய பொதுமைப்படுத்திய ஒரு எண்ணக்கருவே ஊழியச்சந்தை என்றும் கூறலாம்.

**ஊழியப்படை**

ஒரு நாட்டினது மொத்த ஊழியப்படையானது ஏற்கனவே தொழிலில் இருப்போர், அவ்வாறல்லாதோரில் சந்தையில் தொழில் ஒன்றை முனைப்

புடன் தேடிக்கொண்டிருப்போர் என்ற இரு பிரிவினரை உள்ளடக்கும். ஒரு நாட்டினது ஊழிப்படையின் அளவானது சனத்தொகையினது பருமன் சனத்தொகையின் ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் ஊழியப்படையில் பங்குபற்றுவோரின் விகிதாசாரம் என்ற இரண்டு காரணிகளில் தங்கி யிருக்கும். ஒரு நாட்டில் கல்விக்கும் பயிற்சிக்குமான வாய்ப்புகள் அதிகரிக்கும்பொழுது இளைஞர்கள் ஊழியப்படையில் சேருவதை பின்போடுவதால் ஊழியப்படையில் பங்குபற்றுவோரின் விகிதத்தை அது குறைவடையச்செய்யும். ஊழியப்படையில் சேர்ந்து கொள்வதற்கு அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வயது எல்லையானது நாட்டிற்கு நாடும், ஒரே நாட்டிற்குள்ளேயே காலத்திற்குக் காலமும் மாற்றமடையக்கூடியதாகும். ஊழியச்சந்தையில் உண்மை யாகவே பங்குபற்றுவோரை மொத்த சனத்தொகையில் வேலைசெய்யும் வயதிற்கு உட்பட்டோரின் ஒரு விகிதாசாரமாகக் கூறுவதே ஊழியப் படையின் பங்குபற்றல்விகிதம் எனப்படும். ஒரு நாட்டினது சனத்தொகை யில் ஏற்கனவே தொழிலில் இருப்போர், தொழில் ஒன்றை செய்வதற்குத் தயார்நிலையில் இருக்கும் 15 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்டோர் ஆகியோர் ஊழியப்படையில் அடங்குவர்.

இலங்கையினது மொத்த சனத்தொகையில் வேலைசெய்யும் வயதிற்கு உட்பட்டோருள் ஊழியப்படையில் பங்குபற்றுவோரின் விகிதமானது 1996க்கும் 2014க்குமிடையே 34.7 சதவீதத்திலிருந்து 53.6 சதவீதமாக அதிகரித்தது. ஒரு வேலையில் சேருவதற்கான ஆகக்குறைந்த வயது 15 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் 2014ஆம் ஆண்டில் 15 வயதிற்கு மேற்பட்டோர் 15.4 மில்லியனாகவும், அதில் ஊழியப்படையில் பங்கு பற்றுவோர் 8.8 மில்லியனாகவும் (47.8 வீதமாகவும்) இருந்தனர் என்றும் ஆண்களிடையே அது 74.9 வீதமாகவும், பெண்களிடையே 35.6 வீதமா கவும் இருந்தது என்றும் அந்த ஆண்டிற்கான ஊழியப்படை அளவை யீட்டு அறிக்கை கூறுகின்றது. பெண்களது ஊழியப்படை பங்குபற்றல் விகிதத்திலும் பார்க்க ஆண்களிடையே ஊழியப்படை பங்குபற்றல் விகித மானது குறிப்பிடத்தக்க அளவு உயர்வாக உள்ளதை இது காட்டுகின்றது.


**பிரதான உற்பத்தித்துறைகளுக்கிடையே ஊழியத்தின் பரம்பல்**

கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது போன்று கடந்த சுமார் இரண்டு தசாப்த காலப்பகுதியில் ஊழியத்தின் துறைசார்பரம்பலில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளது:

1. ஊழியப்படையில் ஆகக்கூடிய அளவானோர் வர்த்தகம், போக்கு வரத்து, தொடர்பாடல், வங்கித்தொழிலும் நிதியும் போன்றவற்றை உள்ளடக்கிய சேவைகள்துறையிலேயே தொழில்புரிகின்றனர்.
2. அண்மைக்காலம்வரை தொழில்துறையில் முன்னணி வகித்துவந்த காட்டுத்தொழில், மீன்பிடித்தொழில், சுரங்கத்தொழில் போன்றவற்றை உள்ளடக்கிய முதன்மை உற்பத்தித்துறையான விவசாயத்துறையில் தொழில்புரிவோரின் பங்கு இப்பொழுது குறைந்து வருகிறது 1990 இல் 48.4வீதமாக இருந்த அது 2014இல் 28.2வீதமாகக் குறைந்துள்ளது.
3. 1990இல் 13.3 வீதமாகவிருந்த இரண்டாம் நிலைத்துறையான கைத்தொழில்துறையில் தொழில்புரிவோரின் பங்கு 2014இல் 26.9 வீதமாக அதிகரித்துள்ளது.
4. மொத்த ஊழியப்படையில் சமயாசமயஊழியர், சுயதொழில்புரிவோர் ஆகியோரின் பங்கும் கணிசமானதாக உள்ளது. மொத்த ஊழியப் படையில் 31.4 வீதமானோர் சுயதொழில் புரிவதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
5. ஊழியச்சந்தையில் ஏற்பட்டு வரும் இன்னொரு முக்கிய மாற்றம் பெருமளவான தொழிலாளர் பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கும் சுயதொழிலுக்கும் மாறிவருவதாகும்.

அட்டவணை 5.1: துறைசார் ஊழியப்பரம்பல் - 1990 2012

| துறை | 1990 | 1995 | 2000 | 2005 | 2014 |
|---|---|---|---|---|---|
| விவசாயம் | 48.4 | 38.4 | 38.0 | 30.3 | 28.2 |
| கைத்தொழில் | 13.3 | 14.7 | 15.2 | 26.3 | 26.9 |
| சேவைகள் | 46.2 | 55.2 | 43.8 | 42.0 | 44.9 |
| ஏனையன | 3.2 | 5.4 | 3.0 | - | - |



## இலங்கையில் ஊழியச்சந்தையினது கட்டமைப்பு

இலங்கையினது ஊழியச்சந்தையைப் பாதுகாக்கப்பட்டதுறை, அவ்வாறு பாதுகாக்கப்படாததுறை என இரண்டாகப் பிரிக்கலாம். அதேபோன்று, இவற்றில் தொழில்புரிவோரையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் முன்னையது, அரசாங்கத்துறையிலும் அரசாங்கத்துடன் தொடர்புபட்ட தாபனங்களிலும், ஒழுங்குபடுத்திய தனியார்துறையிலும் தொழில்புரிவோரையும், பின்னையது, முறைசாராத்துறையில் காணப்படும் நிறுவனங்களிலும் தாபனங்களிலும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள வர்களையும் சுயதொழில்புரிவோரையும் குறிக்கும். விவசாயத்தொழிலாளர், சமயாசமயஊழியர், சிறியதும் மிகச்சிறியதுமான தொழில்முயற்சிகளில் தொழில்புரிவோர், சுயதொழில் செய்வோர் போன்றோர் இதில் உள்ளடங் குவர். 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாட்டின் மொத்த ஊழியப் படையில் ஏதாவது ஒரு தொழிலிலைப்புரிந்தோரில் 62.7 வீதமானோர் முறைசாராத்துறை தொழில்முயற்சிகளிலேயே தொழில்வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். மேலே குறிப்பிட்ட இரண்டு பிரிவுகளுக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு யாதெனில், பாதுகாக்கப்பட்டதுறையில் ஊழியச்சந்தை தொடர்பான அரசாங்க விதிமுறைகள் முறையாக அமுல்படுத்தப்படு வதோடு அரசாங்க நியதிகளுக்கு உட்பட்ட வேதனம் சார்ந்ததும், வேதனம் சாராததுமான பல்வேறு நலன் திட்டங்களும் அங்கு முறையாக செயல் படுத்தப்படும். இதனாலேற்படும் நன்மைகளை அங்கு தொழில் புரிவோர் அனுபவிக்கக் கூடியதாக இருப்பதால் அவர்கள் சராசரி வேதனங்களிலும் பார்க்க சற்று உயர்ந்த வேதனங்களைப் பெறுவதோடு தொழில்பாதுகாப்பு, வேதனங்கள் சாராத நன்மைகள் என்பவற்றையும் அனுபவிப்பர். நாட்டில் மொத்தமாகத் தொழில்புரிவோரின் எண்ணிக்கையில் 25.0 சதவீதமானோர் மட்டுமே தொழிற்சந்தையின் மேலே குறிப்பிட்ட பாதுகாக்கப்பட்ட தொழில்களைப் புரிகின்றனர்.

மேலேகூறியவாறு, ஊழியச்சந்தையானது இருபிரிவுகளைக் கொண்ட தாக இருப்பது வேலையற்றோர் நல்லவேலையொன்று கிடைக்கும்வரை காத்திருப்பதை ஊக்குவிக்கின்றது. உதாரணமாக, அரசதுறை வேலை வாய்ப்புகள் சுருங்கிக்கொண்டு வரும் நிலையிலும் வேலையற்றபட்ட தாரிகள் அத்துறையிலேயே வேலைவாய்ப்பினை நாடிநிற்கின்றமையை இங்கு குறிப்பிடலாம். ஊழியச்சந்தையின் இன்னொரு பிரிவான பெருந் தோட்டத்துறைசார்ந்த ஊழியர்கள் அரசாங்கத்தின் தொழிற்சங்க சட்டங்

களுக்கும் ஏனைய விதிமுறைகளுக்கும் உட்பட்டோராக இருந்தபோதும், அவர்கள் செய்யும் தொழிலில் காணப்படும் விசேட பண்புகள் காரணமாக அவர்களை வேறுபடுத்தி ஆராய்வது உசிதமாகும். தோட்டங்களிலேயே வதிவதும் கட்டுண்டதுமான பெருந்தோட்ட ஊழியர் தோட்டமுகாமையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டோராக இருப்பதால் அவர்களை ஊழியச் சந்தையின் தனிப்பட்ட ஒரு பிரிவினராகக் கருதுவது தவறன்று. சனத் தொகையில் வேலைசெய்யும் வயதுப்பிரிவினரில் ஊழியச்சந்தையில் பங்குபற்றுவோரின் விகிதாசாரமும் (45.0%) ஊழியச்சந்தையில் பங்கு பற்றும் பெண்களின் விகிதாசாரமும் (43.4%) இத்துறையிலேயே உயர்வாக உள்ளதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## வேலையின்மை

வேலையின்மை என்பது வேலையின்றி இருப்போருள் வேலையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு முழுமூச்சுடன் ஈடுபடுவோரையும், வேலையொன்று வழங்கப்படுமானால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்போரையும் உள்ளடக்கும். இதனை நாட்டினது மொத்த ஊழியப்படையின் விகிதாசாரமாகக் கூறுவதே அந்நாட்டின் வேலையின்மைவிகிதம் எனப்படும். உயர்ந்த வேலையின்மை மட்டமே ஒரு நாட்டில் காணப்படும் பல்வேறு பேரினப்பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் அரசியல் அமைதியின்மைக்கும் காரணமென நம்பப்படுவதால், ஏறக்குறைய எல்லா நாடுகளுமே வேலையின்மை விகிதத்தை உறுதியாகவும் குறைந்தமட்டத்திலும் வைத்துக்கொள்ள முயலுகின்றன.

1980ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் ஆண்பெண் இருபாலாரிடையேயுமான பொதுவான வேலையின்மை விகிதம் உயர்வாக இருந்ததோடு, பெண்களிடையே அது இதைவிடவும் உயர்வாக இருந்தமை கீழே விளக்கப்பட்டுள்ளது. எழுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதி முதல் அமுலாக்கப்பட்ட தாராள பொருளாதாரக்கொள்கையின் கீழ் வேலைவாய்ப்புகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டமையால் ஆண் பெண் இருபாலாரிடையேயும் வேலையின்மையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 2014ஆம் ஆண்டில் ஆண், பெண் இரு பாலார்களிடையே பொதுவான வேலையின்மையானது 4.1 வீதத்திற்கு வீழ்ச்சி அடைந்தபோதிலும், பெண்களிடையேயும் படித்த இளைஞர்களிடையேயும் அது உயர்வாக இருந்தது. கல்விப் பொதுத்தராதர உயர்தரத்திற்கு மேலே படித்த ஆண், பெண்களிடையே 6.9 வீதமாக இருந்த அது, ஆண்களிடையே 3.6

வீதமாகவும், பெண்களிடையே 10.3 வீதமாகவும் இருந்ததை இங்கு குறிப்பிடலாம்.

இலங்கையில் இளம்வயதினரிடையே வேலையின்மை உயர்வாக இருப்பதும், தோட்டஇளைஞர்களிடையே அதிகரித்துவரும் வேலையின்மையும், கீழுழைப்பும் இன்று முக்கிய பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக, தோட்டஇளைஞர்களில் 15-19 வயதினரிடையே வேலையின்மை 14.8 வீதமாகவும், 20-24 வயதினரிடையே 38.7 வீதமாகவும் உயர்வாக உள்ளது. மொழிப்பிரச்சினை, கல்விக்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளமை, புவியியல்ரீதியான தனிமைப்படுத்தல் என்பன காரணமாக பெருந்தோட்ட இளைஞர்களைப் பொறுத்தவரை, ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு அதிகம் தெரிவு இருப்பதில்லை. வறுமை, மனிதஅபிவிருத்தி என்பவற்றோடு அவர்களது வேலையின்மை தொடர்பு கொண்டதாக இருப்பதால் வேலையின்மையானது அவர்களிடையே மோசமான ஒரு சமூகபொருளாதாரப் பிரச்சினையாகவும் அபிவிருத்தி சார்ந்த ஒரு பிரச்சினையாகவும் கருதப்படுகின்றது. தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதன் பின்னர் தோட்ட இளைஞர்களிடையே வேலையின்மை அதிகரித்து வந்ததாகக் கூறப்பட்டது. பொதுவாக, அவர்களிடையே 10.5 வீதமாக இருக்கும் வேலையின்மை படித்தவர்களிடையே மேலும் உயர்வாக உள்ளதுடன், தொழில்புரியும் இளைஞர்களுள் 25.0 வீதமானோர் மட்டுமே தாம்செய்யும் தொழில் குறித்து திருப்தியடைவதாகவும் கூறப்படுகின்றது. அவர்கள் செய்யும் தொழில்களில் காணப்படுகின்ற குறைந்தமட்டவேதனங்கள், ஊக்குவிப்புகள் போதாமை, தொழில்களினது குறைந்த சமூகஅந்தஸ்து, அவற்றில் சமூகபாதுகாப்புகள் இல்லாமை என்பனவே இதற்கான காரணங்களாகும்.

நாட்டின் ஏனைய துறைகளில் தொழில் சம்பந்தமான இளைஞர்களின் எதிர்பார்க்கைகளுக்கும் சந்தையில் அவர்களுக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையிலான சமமின்மையானது அவர்களின் கல்வித்தகைமைகள், அவர்களிடம் காணப்படும் வேறு திறமைகள் என்பவற்றிற்கும் சந்தையில் காணப்படும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையிலான வேறுபாட்டினால் ஏற்படுகின்றது. ஆனால், தோட்ட இளைஞர்களைப் பொறுத்தவரை, அவர்களது கல்வித்தகைமைகளோ, வேறு திறமைகளோ அன்றி அவர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் குறைந்த வருமானத்தைத் தருவனவாகவும் குறைந்த அந்தஸ்தைக் கொண்டனவாகவும் இருப்பதே இவ்வாறான சமமின்மைக்குக் காரணமாக உள்ளன.

**ஊழியச்சந்தையில் பெண்கள்**

இலங்கையின் மொத்த ஊழியப்படையில் பெண்கள் 53.6 வீதமானோராக இருந்தபோதிலும் அவர்களில் 36.6 வீதமானோர் மட்டுமே ஊழியச் சந்தையில் பங்குபற்றுகின்றனர். பெண்களின் ஊழியச்சந்தை பங்குபற்றல் விகிதமானது ஊழியச்சந்தையில் அவர்கள் எந்தஅளவிற்கு முனைப்புடன் பங்கு கொள்கின்றனர் என்பதில் தங்கி இருக்கும். பெண்களது ஊழியப் படை பங்குபற்றல் விகிதமானது ஆண்களைப் போலன்றி வேறு காரணி களிலும் தங்கிஇருக்கும்: திருமணம் செய்யும் வயதில் ஏற்படும் மாற்றம், கருவளவிகிதத்தில் ஏற்படும் வீழ்ச்சி என்பன பெண்களது ஊழியப்படை பங்குபற்றலின் மீது நேர்மறை விளைவுகளையும், மாறாக, உயர்ந்த வேலையின்மை விகிதம், உயர்வான உள்நாட்டு வேதனங்கள் என்பன எதிர்மறை விளைவுகளையும் கொண்டிருக்கும். அண்மைக்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் கிடைக்குந்தன்மை இலங்கைப் பெண்களின் ஊழியப்படை பங்குபற்றலை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

இலங்கையில் பெண்களிடையே கருவளவிகிதம் குறைவாகவும், அவர்களிடையே பாடசாலை செல்வோரின் விகிதம் உயர்வாகவும் இருக்கும் நிலையிலும் அவர்களது ஊழியச்சந்தை பங்குபற்றல் விகிதம் குறைவாக இருப்பது சற்று வியப்பானதே. ஊழியப்படையில் பெண்கள் அதிகரித்த அளவில் பங்குபற்றிவருவது 1990ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் பூகோளமட்டத்தில் இடம் பெற்றுவரும் ஒரு நிகழ்வாக உள்ளது. இக்காலப்பகுதியில், ஆபிரிக்கா தவிர்ந்த உலகின் ஏனைய பிராந்தியங் களில் ஆண்களிலும் பார்க்கக் கூடுதலான பெண்கள் ஊழியப்படையில் இணைந்துகொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. 1990ஆம் ஆண்டிற்குப் பின்னர், தொழிற்சந்தையில் தொழில்ஒன்றில் முதன்முறையாக இணைந்து கொள்வோரின் ஊழியப்படை விகிதாசாரம் இலங்கையிலும் பெண் களிடையேதான் உயர்வாக உள்ளது. கடந்த மூன்று தசாப்தகாலப்பகுதியில், அதற்கு முந்திய காலப்பகுதியோடு ஒப்பிடும்போது பெண்கள் நவீன மயமாக்கல் சக்திகளின் அதிகரித்த செல்வாக்கிற்கு உட்பட்டு வந்துள்ளனர். மேலும், அதிகரித்துவரும் பணவீக்கம், பெண்களது கல்விநிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சமூகத்தில் உயர்ந்துவரும் பெண்களது அந்தஸ்து என்பனவும் தொழில்புரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்குப் பங்களித்தன. எழுபதாம் ஆண்டுகளின்

பிற்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட திறந்த அல்லது தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக்கொள்கைகளின் கீழ் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு தாபிக்கப்பட்ட மின்னியல் தொழில்கள், தைத்தஆடைகள் தொழில் போன்றவற்றில் பெண்களுக்கே கூடுதலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. அதேபோன்று, இக்காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சி அடைந்துவந்த சில்லறை வியாபாரத்துறையிலும் பெண்களுக்கே அதிகரித்த வேலைவாய்ப்புகள் உருவாகின. மேற்படிக்காரணங்களினால் 1992இல் பெண்களிடையே 22.4 வீதமாகவிருந்த வேலையின்மை விகிதம் 2014இல் 6.1 வீதமாகக் குறைந்தது.

உலகில் இன்று குறைந்த சனத்தொகை வளர்ச்சி விகிதத்தைக் கொண்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்றாக உள்ளது. அதேவேளையில், இலங்கையின் சனத்தொகை வயதுமுதிர்ச்சி அடைந்து வருவதனால் சனத்தொகையில் இளைஞர்களின் பங்கு குறைந்து, 60 வயதுக்கு மேற்பட்டோரின் பங்கு அதிகரித்து வருகின்றது. 2011இல் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 11.0 வீதமாக இருந்த 60 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் பங்கு 2020இல் 16.0 வீதமாகவும், 2050இல் 29.0 வீதமாகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறைவானதும் வீழ்ச்சியடைந்து வருவதுமான பிறப்புவிகிதமும் அதிகரித்துவரும் ஆயுள்எதிர்பார்க்கையுமே சனத்தொகை வயதுமுதிர்ச்சி அடைவதற்கான முக்கிய காரணங்களாகும்.

இலங்கையில் 2012ஆம் ஆண்டில் 0.89 வீதமாக மதிப்பிடப்பட்ட சனத்தொகை வளர்ச்சிவிகிதம் அடுத்த மூன்று தசாப்தகாலப்பகுதியில் பூஜ்ஜியமாகக் குறைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சனத்தொகையின் வளர்ச்சிவிகிதம் வீழ்ச்சியடைந்து வருவதால் ஊழியப்படை வயது முதிர்ச்சி அடைவதுடன் ஊழியப்படையினது பருமனும் குறைவடைந்து வருகின்றது. இலங்கையின் இக்குடித்தொகைப்பண்புகள் ஐரோப்பிய யூனியன் நாடுகளினதும் யப்பானினதும் குடித்தொகைப்பண்புகளை ஒத்தனவாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், மேலே குறிப்பிட்ட நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையின் தலாவருமானம் மிகவும் குறைவானதாக இருப்பதால் சனத்தொகை முதிர்ச்சியடைந்துவருவது இங்கு பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கலாம்:

1. முதியோருக்கான வருமான ஆதாரம், அவர்களது சுகாதார நலன் பேணல், அவர்களது நீண்டகாலப் பராமரிப்பு என்பவற்றிற்கான செலவுகள் அதிகரிக்கும்.

2. இச்செலவுகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கமும் தனியார்துறையும் பெருமளவு நிதிகளை ஒதுக்க வேண்டிஇருக்கும். ஆனால் நாட்டின் இன்றைய பொருளாதாரநிலையில் இது இலகுவான ஒரு காரியமாக இருக்கமாட்டாது.

3. முதியோருக்கு குடும்பப்பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய தேவையும் உள்ளது. ஆனால், பரம்பரை பரம்பரையாக நம் நாட்டில் இருந்துவந்த முதியோருக்கான குடும்பப்பாதுகாப்பு பராமரிப்பு என்பவற்றில் பல்வேறு காரணங்களால் இப்பொழுது தளர்ச்சி ஏற்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

4. இவ்வாறானதொரு சூழ்நிலையில் முதியோர் வறுமையின் பிடிக்குள் சிக்கக்கூடிய சாத்தியமும் ஆபத்தும் உண்டு.

ஊழியப்படை வயதுமுதிர்ச்சி அடைந்துவருவது காலப்போக்கில் அதன் பருமனையும் வீழ்ச்சியடையச்செய்யும் எனலாம். மொத்த சனத்தொகை யில் 30 வயதிற்குக் குறைந்தவர்களின் சனத்தொகைப் பங்கைக்குறைத்து, 50 வயதுக்கு மேற்பட்டோரின் பங்கை உயர்த்தி ஊழியப்படையினது வயதுச்சேர்க்கையிலும் அது மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க் கலாம்.

இலங்கையின் ஊழியப்படையின் எதிர்காலம் பற்றிய எதிர்வுகூறல்கள் அடுத்துவரும் இரண்டு தசாப்தகாலப்பகுதியில் ஊழியப்படையின் அளவு அதிகரித்து அதன் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்குமெனக் கூறுகின்றன. 2016ஆம் ஆண்டளவில் 9.0 மில்லியனாகவும், தொடர்ந்து 2021இல் 9.3 மில்லியனாகவும் அதிகரிக்கும் ஊழியப்படையின் பருமன் அதன் பின்னர் படிப்படியாக வீழ்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7

# இலங்கைக்கு வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சல்

## நேரடி முதலீடுகளும் வெளிநாட்டு உதவியும்

ஒரு நாட்டினது பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டிற்குள் பாயும் வெளிநாட்டு நிதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளவேண்டுமாயின் ஒரு நாட்டிற்கு வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சல் இன்றியமையாததாகும். பொருளாதார வளர்ச்சியானது (Growth Rate of GDP) **இரண்டு** முக்கிய காரணிகளில் தங்கியிருக்கும்: **ஒன்று,** குறிப்பிட்ட நாட்டினது மொத்தத் தேசியஉற்பத்தியில் எத்தனை விகிதம் முதலீடு செய்யப்படுகின்றது (Investment Rate) என்பதாகும். **மற்றது,** அவ்வாறு செய்யப்படும் முதலீட்டினது செயற்றிறன் (Investment Efficiency) அல்லது அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருவாய் விகிதமாகும் (முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய் முதலீட்டின் எத்தனை விகிதமாக உள்ளது என்பதை இது குறிக்கும்). தேசிய சேமிப்புகளே முதலீட்டை நிதிப்படுத்துவதற்கான பிரதான மூலாதாரமாகும். குறித்த ஒரு ஆண்டில் ஒரு நாட்டினது திட்டமிட்ட முதலீடுகளிலும் பார்க்க உள்நாட்டு சேமிப்புகள் குறைவாக இருக்குமாயின், வெளிநாட்டு சேமிப்புகளைக் கொண்டே அந்நாடு அந்த இடைவெளியை நிரப்ப வேண்டி இருக்கும். வெளிநாட்டு சேமிப்புகள் என்பன அந்நாட்டிற்கு வரும் வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சலைக் குறிக்கும். இவ்வித நிதிஉட்பாய்ச்சலானது பல்வேறு வகையினதாக இருக்கும்: பங்குமூலதனம் Equity Capital, வெளிநாட்டு நேரடிமுதலீடுகள், ஏற்கனவே மேற்கொள்ளப் பட்ட வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து மீள்முதலீடு செய்யப்படும் பகுதி, கம்பனிகளுக்கிடையிலான கடன் கொடுக்கல்-வாங்கல்களில் கையாளப்படும் மூலதனம், வெளிநாட்டு உதவி என்பவற்றை அது உள்ளடக்கும். மேலே கூறப்பட்ட பல்வேறு வகையான வெளிநாட்டுநிதிகளின் உட்பாய்ச்சலையும் வெளிநாட்டு உதவியையும் உள்ளடக்கியதே ஒரு நாட்டிற்கான வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல்களாகும். இன்றைய பூகோள அரசியல் - பொருளாதார சூழ்

நிலையில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் மிகமிகக் குறைவானதேயாகும். இலங்கையைப் பொறுத்த வரை, அண்மைக்காலத்தில் அதன் தலா தேசியவருமானம் 2000 டொலர் களைக் கடந்துவிட்டதால், அது ஒரு கீழ்நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடென (Lower Middle Income Country) உலகவங்கி வகைப்படுத்து கின்றது. இவ்வித நாடொன்று வெளிநாட்டு உதவியை பெற்றுக்கொள் வதற்கான தகுதியை இழந்து விட்டதாக கருதப்படும். அதாவது, இவை தமது சுயவருமானத்தினைக் கொண்டு தம்மைத்தாமே பராமரித்துக் கொள்ளும் தகுதியைக் கொண்டனவாக கருதப்படுவதால் அவற்றிற்கு வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படுவதில்லை. எனவே, முதலீட்டு - சேமிப்பு இடைவெளியை நிரப்புவதற்கு இலங்கை போன்ற நாடுகள் இன்று வெளிநாட்டு நேரடிமுதலீகளிலேயே பெரிதும் தங்கி இருக்க வேண்டிய நிலையில் உள்ளன.

## 1. வெளிநாட்டுநேரடிமுதலீடு

**வெளிநாட்டுநேரடிமுதலீடு என்பது யாது?**

முதலீட்டாளர் பல்வேறு நோக்கங்களுக்காக தமது மூலதனத்தை வெளிநாடு களில் முதலீடு செய்ய விரும்புவர். அவர்களுள் ஒரு சாரார், வெளிநாடு களில் காணப்படும் நம்பகமான வருமானத்தைத் தரக்கூடிய துறைகளில் அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் தமது மூலதனத்தை முதலீடு செய்தோ அல்லது அந்நாடுகளில் புதிய தொழில்களைத் தாபித்தோ இலாபம் உழைக்க முயல்வர். இன்னொரு சாரார், வெளிநாட்டுப் பங்குச் சந்தைகளில் சாதாரண பங்குகளைக் கொள்வனவுசெய்து அப்பங்குகளின் விலைகள் உயரும்பொழுது அவற்றை சந்தையில் விற்று மூலதனஆதாயத்தை உழைக்க முயல்வர். பங்குகளின் சந்தைவிலைகள் வீழ்ச்சியடையவும் கூடும் என்பதால் பங்குச்சந்தை முதலீட்டு நடவடிக்கைகள் ஆபத்துகள் நிறைந்தனவாக இருக்கும் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மேலேகூறிய அடிப்படையில் ஒரு நாட்டிற்குள் பாயும் வெளிநாட்டு மூலதனத்தை **இரண்டு** வகைகளாகப் பிரிக்கலாம்: இவற்றுள் **முதலாவது**, வெளிநாட்டு முதலீடுகளை உபசரிக்கும் நாடுகளில் உற்பத்தி நடவடிக் கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வெளிநாட்டவர்கள் செய்யும் நீண்டகால முதலீடுகளாகும் (Foreign Direct Investment-FDI). இவை

பன்னாட்டுக்கம்பெனிகளின் பூகோளரீதியான வியாபார நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவும் இருக்கலாம். ஒரு நாட்டிற்குள் பாயும் இவ்வித நீண்டகால முதலீடானது அம்முதலீட்டை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு வெளிநாடுகளில் அது முதலீடு செய்யும் சொத்துகளின் உரிமையையும் பெற்றுக்கொடுக்கும். முதலீடு செய்யும் கம்பெனிகளில் வாக்குரிமையை பெற்றுக்கொள்வதற்கு இது நூறுவீத உரிமையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. முதலீடு செய்யும் வெளிநாட்டு நிறுவனம் குறிப்பிட்ட நிறுவனத்தின் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட உரிமையை பெற்றுக்கொள்ளுமாயின் அதுவே போதுமானதாகும். இரண்டாவதுவகை முதலீடுகள் வெளிநாட்டு பங்குச்சந்தைகளில் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்து அவற்றின் விலை உயரும்போது அப்பங்குகளை விற்று மூலதனஆதாயம் அடையும் நோக்கில் வெளி நாட்டவர்கள் மேற் கொள்ளும் நிதிச்சொத்துக்களின் மீதான முதலீடுகளாகும் (Portfolio Investment). இங்கு நிதிச்சொத்துக்களின் பட்டியல் என்பது ஒரு தனிநபரிடம் அல்லது ஒரு வங்கியிடம் அல்லது ஒரு நிதிநிறுவனத்திடம் இருக்கும் நிதிச்சொத்துக்களின் ஒரு பட்டியல் ஆகும். முதலாவது வகை முதலீடுகள் பொதுவாக நீண்டகால முதலீடுகளாகவும், இரண்டாவது வகை முதலீடுகள் குறுங்கால முதலீடுகளாகவும் இருக்கும். தகவல்தொழில்நுட்பம் சார்ந்த துறையில் ஏற்பட்டுவந்துள்ள தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பின்னைய வகையைச்சார்ந்த நிதிகளை இப்பொழுது நாடுகளுக்கிடையே மின்னல் வேகத்தில் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவாக, அண்மைய ஆண்டுகளில் நாடுகளுக்கிடையிலான குறுங்கால மூலதனப் பாய்ச்சல்கள் அதிகரித்து வருவதுடன், உலக மூலதனச்சந்தைகள் இலகுவில் நிலைகுலையும் ஆபத்துகளும் அதிகரித்துள்ளன. முதலீட்டாளர்கள் மந்தைகளைப்போன்று நடந்து கொள்வதாலேயே, அதாவது, ஒருவரைத் தொடர்ந்து மற்றையோரும் தமது குறுங்காலநிதிகளை குறிப்பிட்ட நாடுகளுக்குள்ளேயும் வெளியேயும் சடுதியாக கொண்டுசெல்ல முயலுவ தாலேயே மூலதனச்சந்தைகள் இவ்வாறு பலவீனமடைகின்றன. பாரியள விலான இவ்வித குறுங்கால மூலதனப்பாய்ச்சல்களினால் பொருட்களின் உற்பத்தி, விற்பனை என்பவற்றிற்கு தொடர்பில்லாத வகையில் சந்தை விலைகள் தளம்புகின்றன. அத்துடன், மூலதனத்தை வெளிநாட்டு நிதிச்சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கு வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்ய வேண்டி இருப்பதால், இம்மூலதன அசைவுகள் நாணயமாற்றுச்சந்தையிலும் பெரும் தளம்பல்களை ஏற்படுத்துகின்றன.

மூலதன உட்பாய்ச்சலும் சடுதியாக அது வெளியே கொண்டு செல்லப் படுவதும் உற்பத்தி நிறுவனங்களையும் வங்கிகளையும் படுகடன்நிலைக்கு உள்ளாக்குவதோடு, சில சந்தர்ப்பங்களில் அவற்றை வங்குறோத்தடை யவும் செய்கின்றன. இவ்வாறான ஒரு நெருக்கடிநிலையே 1997 இல் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டது. இது போன்ற நெருக்கடிகள் ஏற்படுவ தற்கான சாத்தியக்கூறுகள் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

அண்மைக்காலங்களில் விருத்தியடையும் நாடுகள் தமது வரவு - செலவுத்திட்டக் குறைநிலை, ஏற்றுமதி-இறக்குமதிகளுக்கிடையில் ஏற்படும் இடைவெளி (சென்மதிநிலுவைக் குறைநிலைகள்), சேமிப்பு - முதலீட்டு இடைவெளி, வேலையின்மை போன்ற பல்வேறு பிரச்சினை களிலிருந்து விடுபடுவதற்கு வெளிநாட்டுநிதிகளைக் கையாண்டு வந்துள்ளன.

**வெளிநாட்டுநேரடிமுதலீடுகளின் மூலம் ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் நன்மைகள்**

வெளிநாட்டு முதலீடுகள் ஒரு நாட்டிற்கு பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தவல்லனவாகும்:

1. ஒரு நாட்டிற்கு அது மூலதன உட்பாய்ச்சலைக் கொண்டு வரும்.
2. இம்மூலதனப்பாய்ச்சலினால் நாட்டில் புதியதொழில்கள் தாபிக்கப் படலாம். அவ்வித தொழில்கள் புதியவேலைவாய்ப்புகளை உருவாக்கவும் கூடும்.
3. முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் என்பன சார்ந்த விசேட நிபுணத்துவத்தையும் அவை அறிமுகம் செய்யவல்லன.
4. இத்தொழில்கள் அந்நாட்டின் ஏற்றுமதி வருமானங்களை உயர்த்தக் கூடும்.
5. ஒரு நாடு எதிர்நோக்கும் சென்மதிநிலுவைப் பிரச்சினைகளை வெற்றி கரமாக எதிர்கொள்வதற்கு வெளிநாட்டு முதலீடுகள் உதவக்கூடும்.
6. வெளிநாட்டு முதலீடுகளினால் நாட்டில் சமூக-பொருளாதார அபிவிருத்தியும் பிரதேச அபிவிருத்தியும் ஏற்படக்கூடும்.
7. வெளிநாட்டு முதலீடுகள் ஒரு நாட்டிற்கு சர்வதேச (வெளிநாட்டு) சந்தைக்குள் புகுவதற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும்.

இலங்கையைப் போன்ற ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான தேவையையும் நாட்டிற்கு அது ஏற்படுத்தக்கூடிய நன்மைகளையும் மிகைப்படுத்திக் கூறுதல் இயலாது.

**ஒரு நாடு எவ்வாறு வெளிநாட்டுமுதலீட்டை ஈர்க்கலாம்?**

மேலே குறிப்பிட்டவாறு ஒரு நாட்டிற்கு பல்வேறு நன்மைகளைப்பயக்கும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கு அந்நாடு இறைவரி சார்ந்த ஊக்குவிப்புகளை வழங்குவது தேவையானதாக இருந்தபோதும், இவ்வித முதலீட்டை ஈர்ப்பதற்கு அவை மட்டும் போதுமானவையன்று. வெளிநாட்டு முதலீட்டாளரைப் பொறுத்தவரை, தாம் முதலீடு செய்ய விரும்பும் நாட்டில் உறுதியானதும், கவர்ச்சிகரமானதுமான ஒரு முதலீட்டு சூழல் காணப்படுவது இன்றியமையாததாக இருக்கும். முதலீட்டுசூழல் என்பது முயற்சியாண்மை, சந்தைகளின் திறமை என்பவற்றை ஆதரிக்கும் அல்லது ஆதரிக்கத்தவறும் கொள்கை, தாபனரீதியானதும், ஆட்சி சார்ந்ததுமான சூழல் என்பவற்றைக்குறிக்கும். ஒரு நாட்டில் பின்வருவன காணப்படுவது வெளிநாட்டு நேரடிமுதலீட்டை ஈர்ப்பதற்கு தக்கசூழலை உருவாக்கும் எனலாம்:

1. வினைத்திறன் கொண்ட ஊழியப்படையொன்று அங்கு இருத்தல்.
2. நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காணப் படுதல்.
3. பன்னாட்டுக் கம்பெனிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கைத்தொழில் அமைப்பொன்று அங்கு காணப்படுமாயின், வெளி நாட்டு முதலீட்டாளர் தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவை யான ஒரு பகுதி மூலப்பொருட்களையும் வேறு உள்ளீடுகளையும் உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்வதற்கு அது உதவியாக இருக்கும்.
4. வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதி வழங்குவதற்கான செயல் முறைகள் நட்பு சார்ந்தனவையாக இருப்பதும், முதலீடுகளின் மீதான நிர்வாகக்கெடுபிடிகள் குறைவாக இருப்பதும் முக்கியமானதாகும்.
5. முதலீட்டிற்கான விதிமுறைகள் தொடர்பான பொறிமுறைகள் நெகிழ்ச்சித்தன்மை கொண்டனவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.
6. முதலீட்டிற்கான விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதோடு அங்கு ஊழல்கள் இல்லாது இருப்பதும் சிறந்தது.

7. தனியார்சொத்துடைமைக்கு உத்தரவாதம் காணப்படுதல் ஒரு முக்கிய தேவையாகும்.

பொதுவாக, முதலீட்டின் வருவாய்விகிதங்கள் உயர்வாக இருப்பதோடு நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படுவதும் வெளி நாட்டுமுதலீட்டை ஈர்க்கும் முக்கிய காரணிகள் ஆகும். வெளிநாட்டு முதலீடுகளைத் தத்தமது நாட்டிற்கு ஈர்த்துக் கொள்வதற்கு நாடுகள் பல ஒன்றுடனொன்று போட்டி இட்டுக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலை யில் போட்டிநாடுகளுக்கெதிராக ஒரு நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் நாட்டிற்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதில் அங்கு காணப்படும் பொதுவான சூழல் முக்கிய பங்கினை ஆற்றும்.

முதலீட்டிற்கான தீர்மானங்களை மேற்கொள்வதில் முதலீட்டாளர் கவனத்தில் கொள்ளும் பல்வேறு விடயங்களை அடக்கிய பொதுவான தொரு சொற்பிரயோகமே முதலீட்டிற்கான சூழல் எனப்படும். அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. நாட்டில் அரசியல் உறுதிப்பாடு காணப்படுதல்.
2. வெளிநாட்டு முதலீட்டாளரின் பங்கேற்பு தொடர்பாக அந்நாட்டில் காணப்படும் பொதுவான மனப்பாங்கு அதற்கு சாதகமாக இருத்தல்.
3. நாட்டில் நல்லாட்சி காணப்படுதல்.
4. அரசியல் சார்ந்ததும் கொள்கை சார்ந்ததுமான உறுதிப்பாட்டின் மூலம் எழும் உறுதியானதும் எதிர்வு கூறக்கூடியதுமான ஒரு பேரினப் பொருளாதாரக் கொள்கை அங்கு காணப்படுதல். இது வெளிநாட்டு முதலீட்டிற்கான ஒரு முன்நிபந்தனையாகும்.
5. வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான அரசாங்கத்தினது மனப்பாங்கு, அதாவது, வெளிநாட்டு முதலீட்டாளர் தமது இலாபங்களைத் தத்தமது நாடுகளுக்குக் கொண்டு செல்வது தொடர்பான விதிமுறைகள் உறுதி யானவையாக இருத்தல்.
6. இவ்விதிகளைச் செயற்படுத்துவதில் நிர்வாகத்திறமை காணப்படுதல்.
7. தனியார் சொத்துரிமைக்கு அரசாங்க உத்தரவாதம் காணப்பட வேண்டும்.
8. பொதுவாக, முதலீகளினின்று கிடைக்கும் வருவாய் விகிதம் உயர்வாக இருப்பதும், ஒரு நாட்டில் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தியடைந்து

காணப்படுவதும் வெளிநாட்டு நேரடிமுதலீடுகளின் மீது நேர்மறையான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

வெளிநாட்டுமுதலீட்டிற்குச் சாதகமான மேற்படி அம்சங்கள் அனைத்துமே ஒரு நாட்டில் காணப்படாவிடினும், இவற்றுள் முக்கியமானவைகளாவது அங்கு காணப்படுவது வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு உதவும் எனலாம்.

**இலங்கைக்கு வெளிநாட்டுநேரடிமுதலீடுகளின் உட்பாய்ச்சல்**

ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு அங்கு உறுதியானதும் கவர்ச்சிகரமானதுமான ஒரு பொருளாதாரசூழல் காணப்படவேண்டும் என்பது மேலே விளக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஆங்கிலேயரே இங்கு பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டனர். பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்திக்குத் தேவையாகவிருந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், வங்கித்துறை - நிதித்துறை நிறுவனங்கள், தொடர்பாடல்துறை என்பவற்றை விருத்தி செய்வதற்கும், மலைநாட்டிற்கான புகையிரதப்பாதைகள், தெருக்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் இம்முதலீடுகள் கையாளப்பட்டன. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் பொதுத்தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த அரசியல் கட்சிகள் தமது அரசியல் சித்தாந்தங்களுக்கு ஏற்ப நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நிர்ணயித்து வந்தன. பொதுவாக, அவை ஒன்றில் சந்தை சார்ந்த கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிப்பனவாகவோ (1948-70) அல்லது திட்டமிடலுடன் கூடிய ஒரு கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிப்பனவாகவோ (1970-77) இருந்து வந்தன. 1970 - 1977ஆம் ஆண்டிற்குமிடையே சுதந்திர இலங்கையில் இரண்டாவது வகை பொருளாதார உபாயங்களே கையாளப்பட்டன.

இந்நிலையில் வெளிநாட்டு நேரடிமுதலீடுகளை அனுமதிக்கும் செயல்முறையினை அரசாங்கம் இறுக்கமாக்கிற்று. எனினும், ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தும் தனது நிலைப்பாட்டிற்கமைய ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு முதலீடுகளுக்கு அது முன்னுரிமை அளித்தது. இருப்பினும், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரக்கொள்கை தனியார்துறை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சார்பானதாக இருக்கவில்லை. முதலீட்டுச் செயற்பாட்டிலும், வருமானப்பங்கீடு தொடர்பான விடயங்களிலும் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதில் அரசாங்கமே ஒரு பாரிய

முயற்சியாளராகச் செயற்பட்டு வந்தநிலையில், இக்காலப்பகுதியில் தனியார்துறை முதலீடுகள் பொதுவாகவே ஊக்குவிக்கப்படவில்லை எனக்கூறலாம். எனவே, வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சல் குறைவாகவே இருந்தது. வருடாந்தம் சராசரி 0.5 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீடுகள் மட்டுமே உட்பாய்ந்தன. இது மொத்த உள் நாட்டு மூலதன ஆக்கத்தின் 2.0 வீதமாக இருந்தது.

தொடர்ந்து வந்த காலப்பகுதியில் சேவைகள்துறையும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு திறந்து விடப்பட்டதோடு, தொடர்பாடல்துறை, மின் உற்பத்தி, கைத்தொழில்துறை, துறைமுகநிர்மாணம் உட்பட பல்வேறு கட்டமைப்பு நிர்மாணம், உல்லாசப்பயணத்துறை போன்றவற்றிலும் வெளிநாட்டு முதலீடு அனுமதிக்கப்பட்டது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு இக்காலப்பகுதியில் இலங்கை பல்வேறு சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்கியது. மேற்படி சலுகைகள், ஊக்குவிப்புகள் என்பவற்றுடன் நாட்டில் வினைத்திறன் கொண்ட ஊழியப்படையொன்றும் காணப்பட்டபோதும், கிழக்காசிய நாடுகளோடு ஒப்பிடும்போது வெளிநாட்டு நேரடிமுதலீட்டிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதாசாரம் (FDI/GDP, வெளிநாட்டு நேரடிமுதலீட்டிற்கும் மொத்த உள்நாட்டு மூலதனஆக்கத்திற்கும் இடையிலான விகிதாசாரம் (FDI/GDCF) என்பவற்றின் அடிப்படையில் வெளிநாட்டு நேரடிமுதலீடு களின் உட்பாய்ச்சல் இங்கு குறைவாகவே இருந்தது. 1983ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரமும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட இனப்பிரச் சினையும் காரணமாக வெளிநாட்டு முதலீட்டில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது.

இலங்கையில் நிலவிய அரசியல் உறுதிப்பாடின்மை, நாட்டில் காணப் பட்ட பலவீனமான பாதுகாப்புநிலைமை, பொருளாதாரத்திலும் தொழிற் சட்டங்களிலும் காணப்பட்ட நிச்சயமற்றதன்மை என்பன வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதாக இருக்கவில்லை. அண்மைக்காலம்வரை நாட்டில் நிலவிய உள்நாட்டுப்போர்ச்சூழலும் அமைதியின்மையும் இதற்குப் பங்களித்த ஏனைய காரணிகளாகும். இவற்றின் காரணமாக, எண்பதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் யப்பான் அனுபவித்து வந்த பாரிய சென்மதி நிலுவைமிகைகளின் நன்மையை, கிழக்காசிய நாடுகளைப் போன்று, இலங்கையால் அனுபவிக்க முடியவில்லை. அதேவேளையில், இனநெருக்கடி காரணமாக நாட்டில் காணப்பட்ட ஆபத்தான முதலீட்டுச்

சூழல் கைத்தொழில்களின் கட்டமைப்பையும் பாதித்தது. குறைந்தளவு நிலையான மூலதனச் செலவுகளைக்கொண்ட தைத்த ஆடைத்தொழில், மின்னியல் தொழில்கள் போன்ற தொழில்களுக்கே நாட்டின் முதலீட்டுச் சூழல் சாதகமாக இருந்தது. எனவே, அவ்வித தொழில்களுக்கே வெளிநாட்டுமுதலீடுகள் பாய்ந்தன. உள்நாட்டுப்போர் நடைபெற்ற காலப்பகுதியில் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையினால் சில நாடுகள் இலங்கையிலிருந்து தமது முதலீடுகளைப் பின்வாங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 2. வெளிநாட்டுஉதவி

### வெளிநாட்டுஉதவி என்பது யாது?

உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே மூன்றாம் உலகநாடுகளும் தமக்குத் தேவையான அந்நியசெலாவணியில் பெரும்பகுதியை தமது ஏற்றுமதி வருமானத்தில் இருந்தே பெற்றுக் கொள்கின்றன. இதற்கு மேலதிகமாக அவை இன்னொரு மூலத்தில் இருந்தும் அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அதுவே அந்நாடுகளுக்கான வெளிநாட்டு அல்லது சர்வதேசஉதவி எனப்பொதுவாக அழைக்கப்படுகின்றது. இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகளின் அளவு, அவை எங்கிருந்து கிடைக்கின்றன, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அவை ஆற்றும் பங்கு யாது என்பன பற்றி ஆராய முன்னர் ''வெளிநாட்டுஉதவி'' என்பது யாது என்பதை ஆராய்வது பொருத்தமானதாகும்.

வெளிநாட்டுஉதவி என்பது விருத்தி குறைந்த அல்லது விருத்தியடையும் நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து கிடைக்கும் இருபக்க-பல்பக்கக் கொடுப்பனவுகளைக் குறிக்கும். இந்த உதவிகள் நிதிசார்ந்தனவாகவோ (சலுகையுடன் கூடிய கடன்கள், நன்கொடைகள் என்பன), பண்டஉதவிகளாகவோ (விவசாயப்பண்டங்கள், மூலப் பொருட்கள், நுகர்வுப்பொருட்கள் என்பவற்றின் வடிவில் கிடைப்பன), தொழில்நுட்பஉதவியாகவோ இருக்கலாம். உதவியைப் பெற்றுக்கொள்ளும் ஒரு நாடு அந்த உதவியின் மூலம் கிடைக்கும் நவீன தொழில்நுட்பங் களைக் கையாண்டு தனது பொருளாதார அபிவிருத்தி வேகத்தை உயர்த்திக் கொள்வதற்கு உதவுவதே தொழில்நுட்ப உதவியின் நோக்கமாகும். வெளிநாட்டு உதவிகள் இருபக்கஉதவிகளாகவோ, பல்பக்கஉதவி

களாகவோ இருக்கலாம். இருபக்க உதவிகள் என்பன இரு நாடுகளுக் கிடையிலான உதவிகளையும், பல்பக்கஉதவிகள் என்பன உலக வங்கி, சர்வதேசநாணயநிதியம் ஆசியஅபிவிருத்திவங்கி போன்ற சர்வதேசநிதி நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளையும் குறிக்கும். இருபக்க உதவிகள் வெளிநாட்டு அரசாங்கங்களிடம் இருந்தோ, வெளிநாட்டு தனியார்துறை நிறுவனங்களிடம் இருந்தோ கிடைக்கலாம். இவ்வாறு உதவியாக வழங்கப்படும் கடன்களில் குறைந்தது 25.0 வீதமோ, அதற்கு மேற்பட்டபகுதியோ நன்கொடைகளாக இருக்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது. இதனால் வெளிநாட்டு உதவியின் மூலம் ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் கடனின் முழுத்தொகையையும் மீளச்செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்க மாட்டாது. நன்கொடைகள் தவிர்ந்த ஏனைய கடன்களையே அது திருப்பிச்செலுத்த வேண்டி இருக்கும். நன்கொடை களின் மீது வட்டிக் கொடுப்பனவுகளோ, உதவித்தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயமோ இருக்கமாட்டாது என்பதால் அவற்றை ஒரு நாட்டிற்குக்கிடைக்கும் இலவச வெகுமதிகளாகக் கருதுவதில் தவறில்லை.

வெளிநாட்டு உதவிகள் **இரண்டு** முக்கிய தகுதிவிதிகளைக் கொண் டிருக்க வேண்டுமென கூறப்படும்: **ஒன்று**, உதவி வழங்கும் நாடுகள் அல்லது தாபனங்களைப் பொறுத்தவரை, அவற்றின் நோக்கம் வர்த்தகம் சார்ந்ததாக இருக்கக்கூடாது. ஆயினும், நடைமுறையில் வெளிநாட்டு உதவியானது பல சந்தர்ப்பங்களில் அரசியல், பொருளாதார, தந்திரோபாய காரணங்களுக்காகவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் நீண்ட காலத்தில் உதவி வழங்கும் நாடுகளுக்கு ஏதோ ஒரு வகையில் நன்மை பயப்பனவாகவும் இருக்கலாம். **மற்றது,** வெளிநாட்டு உதவியின் கீழ் இடம்பெறும் கடன்கள் வர்த்தகரீதியான கடன்களின் மீதான நிபந்தனைகளிலும் பார்க்க இலகுவான நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். கடன்களின் மீதான வட்டிவீதம் குறைவானதாகவும், கடன்களை திருப்பிச்செலுத்துவதற்கான காலப்பகுதி, கடன் தொடர்பான வேறு நிபந்தனைகள் என்பன இலகுவானவையாகவும் இருக்க வேண்டும் என்பதை இது குறிக்கும். உதாரணமாக, இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்கள் 0.5 வீதம் என்ற குறைவான வட்டிவீதத்தையும், கடனை திருப்பிச் செலுத்துவதற்கான 30 வருடகால காலஇடைவெளியைக் கொண்டனவாகவும் இருந்தமையை இங்கு சுட்டிக்காட்டலாம். அதேபோன்று, உலகவங்கியினது கடன் 0.75 வீதம்

குறைந்த வட்டியையும், 40 வருடகால திருப்பிச் செலுத்துவதற்கான காலஇடைவெளியையும் கொண்டதாக இருந்தது. இராணுவரீதியான கடன்கள் வெளிநாட்டு உதவியில் உள்ளடக்கப்படமாட்டா. ஆனால் நடைமுறையில் தூய அபிவிருத்திசார்ந்த கடன்களை இராணுவரீதியான கொடுப்பனவுகளிலிருந்து வேறுபடுத்தி நோக்குவது இலகுவானதாக இருக்கமாட்டாது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு உதவி ஏன் தேவைப்படுகின்றது?**

ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு உதவி ஏன் தேவைப்படுகின்றது என்பதை விளக்குவதற்கு சிலர் "இரட்டை" இடைவெளி மாதிரியினைக் (Dual Gap Model) கையாளுவர். உள்நாட்டில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகளை பூரணமாக பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான உள்நாட்டு சேமிப்புகள் போதாமல் இருப்பதனால் எழும் முதலீட்டு-சேமிப்பு இடைவெளி இவற்றுள் முதலாவதாகும். மற்றது, உள்நாட்டு முதலீடுகளிற்குத் தேவைப்படும் மூலதனப்பொருட்களையும் இடைநிலைப்பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு (அதாவது, இறக்குமதி செய்து கொள்வதற்கு) ஒரு நாட்டிடம் கைவசம் இருக்கும் அந்நிய செலாவணி போதாமையினால் ஏற்படும் அந்நிய செலாவணி தட்டுப்பாடுமாகும். இவை இரண்டுமே இந்த இரட்டை இடைவெளிகளாகும். இந்த இடைவெளிகளை நிரப்புவதற்கு வெளிநாட்டு உதவி தேவைப்படும் என்பதை இந்த மாதிரி விளக்குகின்றது. வெளிநாட்டு உதவியின் மூலம் கிடைக்கும் சாதனங்களைக் கையாண்டு பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்குத் தேவையான உயர்மட்ட மனிதவளத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வெளிநாட்டு உதவி தேவைப்படும். அதாவது, மனிதவளத்தில் காணப்படும் இடைவெளியினை நிரப்புதல் (தொழில்நுட்பவினைத்திறன், முயற்சியாண்மை வினைத்திறன், வினைத்திறன் உள்ள ஊழியம் என்பவற்றை இது கருதும்). சில சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு உதவியானது மனிதாபிமான காரணங்களுக்காகவும் வழங்கப்படலாம். உதாரணமாக, இயற்கை அழிவுகள், அரசியல் உறுதிப்பாடின்மை, உள்நாட்டு முரண்பாடுகள் என்பவற்றால் ஏற்படும் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கு இவை தேவைப்படலாம். சுனாமி அனர்த்தம், வெள்ள அனர்த்தம் என்பவற்றிற்குப்பின்னர் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப்பணிகளுக்காக இலங்கைக்குக் கிடைத்த உதவிகள் இந்த வகையைச் சேர்ந்தனவாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை, பலவீனமான இறைசார் (Fiscal) நிலைமைகளினால் (உதாரணமாக, தொடர்ச்சியான வரவு-செலவுத் திட்டக்குறைநிலைகளையும் அவற்றை நிதிப்படுத்துவதற்கான தேவையையும் குறிப்பிடலாம்) ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சலுகையுடன் கூடிய வெளிநாட்டுஉதவி ஒரு குறுங்காலத் தேவையாக உள்ளது. அதேபோன்று, முதலீட்டுச் செலவுகளை நிதிப்படுத்துவதிலும் வெளிநாட்டு உதவி முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தவகையில், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினை ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதலாம். இத்திட்டத்திற்குத் தேவைப்பட்ட நிதிகளில் பெரும்பகுதி (80.0 வீதமானது) உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்தே பெறப்பட்டது. போருக்குப்பிந்திய வடக்கு-கிழக்கு கீழ்க்கட்டுமான புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குப் பெருமளவு வெளிநாட்டு உதவி தேவைப் படுகின்றது. இத்தேவைகளுக்கு உள்நாட்டுக் கடன்களைப் பெறுவது உள்நாட்டு வட்டிவீதங்களை உயர்த்தும் என்பதனால் உள்நாட்டில் கடன்பெறுவது தவிர்க்கப்படுகின்றது. மேலும், பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ளுதல் என்ற வழமையான நோக்கத்திலிருந்து ஒரு படி மேலேசென்று இலங்கை இப்பொழுது நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தல், சனநாயகம் - மனித உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல், சிவில் சமூகத்தின் அபிவிருத்திக்கு உதவுதல், உள்நாட்டில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தல் போன்ற பல்வேறுபட்ட நோக்கங்களுக்கும் வெளிநாட்டு உதவியினை பயன்படுத்துகின்றது.

**இலங்கைக்கு எங்கிருந்து வெளிநாட்டுஉதவிகள் கிடைக்கின்றன?**

1948-70 காலப்பகுதியில் வெளிநாட்டு உதவியை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை வளர்ச்சியடைந்த மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளிலேயே பெரிதும் தங்கி இருந்தது. 1956-77 காலப்பகுதியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சோஷலிஸசார்புள்ள அரசாங்கங்களின்கீழ் உதவிகளை வழங்குவதில் சோவியத் ஒன்றியமும் சீனாவும் முக்கிய இடத்தைப் பிடித்தன. 1965க்கும் 1977க்குமிடையே இலங்கைக்கு உதவி வழங்கும் எல்லா நாடுகளும் பாரிஸ் உதவிக்குழுவின் (Paris Aid Consortium) கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு உலகவங்கியின் அனுசரணையுடன் செயற்படத் தொடங்கின. 1977ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் அமுலாக்கப்பட்ட தாராளபொருளாதாரக்கொள்கையின் கீழ் ஏற்பட்ட பாரிய செலாவணித் தட்டுப்பாட்டினை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு பெருமளவு வெளி

நாட்டு உதவி தேவைப்பட்டது. இலங்கையினது தாராளமயமாக்கல் அல்லது திறந்த பொருளாதாரக்கொள்கையை ஆதரித்த உலகவங்கியும் ஏனைய உதவி வழங்கும் நாடுகளும் இலங்கைக்கு தாராளமாக உதவுவதற்கு முன்வந்தன. 1978இல் 25.1 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டு உதவிகள் 1986இல் 178.8 மில்லியன் டொலராக அதிகரித்தமை இதற்கு சான்று பகருகின்றது. இதில் பெரும் பகுதி பல்வேறு செயற்றிட்டங்களுடன் பிணைக்கப்பட்டதாக இருந்தது. பிணைக்கப்பட்ட உதவிகளிலுள்ள சில குறைபாடுகளையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். பிணைக்கப்பட்ட உதவியின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்குத் தேவையான உள்ளீடுகளைக் குறிப்பிட்ட உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்தே கொள்வனவு செய்ய வேண்டி இருக்கும் என்பதால் உள்நாட்டு உள்ளீடுகளையோ, வேறுநாடுகளில் மலிவான விலைகளில் கிடைக்கும் உள்ளீடுகளையோ கையாளமுடியாத நிலை காணப்படும். இதனால் முதலீட்டிற்கான செலவுகள் கூடுதலாக இருக்குமென ஆபிரிக்க நாடுகளைப் பற்றிய ஐக்கிய நாடுகளின் ஆய்வொன்று கூறுகின்றது. இது உதவியைப் பெறும் நாட்டிற்கு உதவியின் பெறுமதியை 25.0 தொடக்கம் 40.0 வீதத்தால் குறைவடையச் செய்யுமென அது குறிப்பிடுகின்றது. மேலும், உதவி வழங்கும் நாட்டிலிருந்தே உதவிபெறும் நாடு பொருட்களையும் சேவைகளையும் இறக்குமதி செய்வது உதவி பெறும் நாட்டினது தேவைகளுக்கு எந்தளவு பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதும் கேள்விக்கு உரியதாகும். இதற்கு மாறாக, உதவியின் மூலம் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு உள்நாட்டு உள்ளீடுகள் கையாளப்படுமாயின் அது உள்நாட்டு கைத்தொழில்களை ஊக்குவித்து புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, பொருளாதார வளர்ச்சியையும் துரிதப்படுத்தும். உதவி வழங்கும் நாடுகளிலிருந்தே இவற்றை இறக்குமதி செய்யும்போது உதவிபெறும் நாடு மேற்படி நன்மைகளை இழக்கின்றது.

1987இல் 493.0 மில்லியன் டொலர் உதவியை வழங்க உதவி வழங்கும் நாடுகள் இணக்கம் தெரிவித்தன. இதனால் வெளிநாட்டு உதவிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.0 வீதமாக அதிகரித்தன. இக்காலப்பகுதியில் வெளிநாட்டு உதவிக்கான மூலங்களும் பன்முகப்படுத்தப்பட்டன. ஐக்கியஅமெரிக்கா, யப்பான், மேற்கைரோப்பிய நாடுகள், சர்வதேசநிதி நிறுவனங்கள் போன்றன இதில் முக்கிய இடம் வகித்தன. வளரும் நாடுகளுக்கு உதவி வழங்குவதில் அண்மைக்காலம் வரை

முக்கிய இடம் வகித்து வந்த மேற்கத்திய நாடுகளின் இருபக்க-பல்பக்க உதவிகளில் இப்பொழுது ஒரு நிச்சயமற்றதன்மை காணப்படுகிறது. உதாரணமாக, சலுகையுடன் கூடிய கடன்கள் வழங்குவதை நிறுத்திக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் ஏற்றுமதி வங்கிகளினூடாகவே புதிய கடன்களை வழங்குவதால் இக்கடன்கள் சந்தைநியதிகளுக்கு உட்பட்டன வாக அதாவது, உயர்ந்த வட்டிவீதங்களையும், இறுக்கமான வேறு நிபந்தனைகளையும் கொண்டனவாக மாறிவிட்டன. அதேவேளையில், சர்வதேச அபிவிருத்தி வங்கிகளும் பல்நாட்டு முகவர் நிறுவனங்களும் முன்னதை விடக்கூடுதலான வர்த்தகரீதியிலான கடன்களையே வழங்கு கின்றன. இலங்கைக்கு இப்பொழுது பல்பக்க உதவிகளின் உட்பாய்ச்சல் குறைந்து வருகின்றது. இலங்கையினது தேசிய தலாவருமானம் 2000 அமெரிக்க டொலர்களைத் தாண்டிவிட்டதே இதற்கான முக்கிய காரண மாகும். இவ்வித நாடுகளை உலகவங்கியானது கீழ் நடுத்தர வருமானத் தைக் கொண்ட நாடுகளாக (Lower Middle Income Countries) கணிப்பிடு கின்றது. அதிகரித்த தலாவருமானம் காரணமாக இவை தமது சொந்த முயற்சியினூடாக தம்மைத்தாமே பராமரித்துக் கொள்ளக்கூடியன என்பது உலக வங்கியின் கணிப்பீடாகும். எனவே, பல்பக்க உதவிகளைப் பெறுவதற்கான தகுதியை இவை இழந்துவிட்டதாக கருதப்படுகின்றது. இதுவே இலங்கைக்கான பல்பக்கஉதவிகள் வீழ்ச்சி அடைந்தமைக்கான முக்கிய காரணமாகும்.

சலுகை அடிப்படையிலான கடன்கள் வீழச்சியுற்ற அதேவேளையில் சர்வதேச அபிவிருத்தி வங்கிகளும் பல்நாட்டு முகவர்நிறுவனங்களும் முன்னரை விடக்கூடுதலான கடன்களை வழங்குகின்றன. இவை வர்த்தக ரீதியான கடன்களாக இருப்பதால் உயர்ந்தவட்டியையும் இறுக்கமான வேறு நிபந்தனைகளையும் கொண்டனவாக உள்ளன. இது வளரும் நாடுகளினது கடன்பளுவை உயர்த்தி, இந்நாடுகளில் மோசமான ஒரு கடன்படுநிலையையும் அதனூடாக கடன் நெருக்கடியையும் உருவாக்கி வருகின்றன. உதாரணமாக, 2009ஆம் ஆண்டு இலங்கையின், பொதுத் துறைக் கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 86.5 வீதமாக உயர்ந்த மட்டத்தை அடைந்தன. அதேபோன்று, 2005ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.02 வீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன்சேவை விகிதம் 2005ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.69 விகிதமாக உயர்ந்ததை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறானதொரு சூழ் நிலையில் வளரும் நாடுகள் புதிய அல்லது மரபுசாரா நாடுகளிடமிருந்து

உதவியை பெறத்தொடங்கியுள்ளன. இலங்கை இப்பொழுது தெற்காசிய நாடுகளிடமிருந்தும் கிழக்காசிய நாடுகளிடமிருந்தும் உதவிகளைப் பெறுவதில் கவனம் செலுத்தி வருகின்றது. இதில் யப்பான், சீனா, இந்தியா என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. வடக்கிற்கான தொடரூந்துப்பாதை நிர்மாணம், வடக்கு-கிழக்கு வீடமைப்பு என்பவற்றிற்கு இந்தியாவும், தென்பகுதி நெடுஞ்சாலையை அமைத்தல், கடல்சார்பாதுகாப்பு, பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் செய்மதி தொடர்பாடல், விண்வெளி தொழில்நுட்பம், துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல், தெருக்கள், பாலங்கள் என்பவற்றை நிர்மாணித்தல், மின்சக்தி உற்பத்தி (20.0%), துறைமுகங்கள், விமானப்போக்குவரத்து (17.0%) உட்பட வேறு கீழ்க்கட்டுமான அபிவிருத்தி என்பவற்றிற்கு சீனாவும் உதவுகின்றன. இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் முதலிடம் வகித்த யப்பானின் இடத்தை இப்பொழுது சீனா பிடித்துவிட்டது. யப்பானை விடக்கூடுதலான சலுகையுடன் கூடிய கடன்களை இப்பொழுது சீனா இலங்கைக்கு வழங்குகின்றது. 1971க்கும் 2012க்குமிடையே சீனா இலங்கைக்கு 5,056 மில். டொலர்களை உதவியாக வழங்கிற்று. இதில் 97.0 வீதம் கடந்த 8 ஆண்டுகளிலேயே வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான மொத்த வெளிநாட்டுஉதவியில் 3.0 வீதமாக இருந்த சீனாவின் பங்கு 2012இல் 32.0 வீதமாக உயர்ந்தது. இக்கடன்கள் 2.0 முதல் 3.0 வீதவட்டியைக் கொண்ட சலுகை அடிப்படையிலானதும், 20 வருடகாலப்பகுதியில் திருப்பிச் செலுத்தவேண்டியனவுமாகும். சீனா வழங்கும் பெரும்பாலான கடன்கள் வர்த்தகரீதியானவையும், ஏற்றுமதி சார்ந்தனவும், உயர்ந்த வட்டியையும், திருப்பிச்செலுத்துவதில் இறுக்கமான நிபந்தனைகளையும் கொண்டனவுமாகும். 2008ஆம் ஆண்டு முதல் இந்தியாவும் இலங்கைக்கு பெருமளவு உதவிகளை வழங்கி வருகின்றது. இலங்கைக்கும் இந்தியா விற்கும் இடையிலான அபிவிருத்திசார்ந்த உறவுகள் 40 வருடகால வரலாற்றைக் கொண்டன என்பது கவனிக்கத்தக்கது. வடக்கிற்கான தொடரூந்துப்பாதை நிர்மாணம், வடக்கு-கிழக்கிற்கான வீடமைப்பு என்பவற்றிற்கு இந்திய உதவிகள் கையாளப்படுகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகள் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7 வீதத்தை மூன்றாம் உலகநாடுகளுக்கு உதவியாக வழங்க வேண்டு மென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், ஒரு சில நாடுகள் மட்டுமே இந்த இலக்கைப் பூர்த்தி செய்கின்றன. இதற்கு மாறாக, மரபுசாரா உதவி

வழங்கும் நாடுகள் அண்மைக்காலத்தில் தமது உதவிகளை அதிகரித்துள்ளன என்பதை கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது:

**அட்டவணை 5.1 இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த உதவிகள் (மில்./டொலர்கள்) - 2009, 2012**

| | 2009 | 2012 |
|---|---|---|
| மரபுசார்ந்த உதவிவழங்கும் நாடுகள் | 181.1 | 359.4 |
| ஏற்றுமதிக்கடன்கள், பிணைகள் என்பன | 833.0 | 2,096.4 |
| புதிய/மரபுசாராத உதவிவழங்கும் நாடுகள் | 968.7 | 997.8 |
| மொத்தம் | 1,982.8 | 3,403.6 |

சலுகையற்ற கடன்கள் அதிகரித்துவரும் அதேவேளையில் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன தமது சலுகையுடன் கூடிய கடன்களைக் குறைத்துள்ளன. இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே சீனா, இந்தியா போன்ற நாடுகளின் உதவிகள் அதிகரித்து வருகின்றன. சீனாவுடனான வர்த்தக உறவுகள் தொடர்பான வரலாற்றுப் பின்புலமானது 1952இல் சீனாவுடன் கைச்சாத்திடப்பட்ட றப்பர்-அரிசி ஒப்பந்தத்துடன் ஆரம்பமாகிற்று. இலங்கை-சீனா வர்த்தக உறவானது இப்பொழுது சுமார் 4.0 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் சீனமயமாக்கப்படுகின்றது என்று கூறுமளவிற்கு இந்த உறவுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. சீனாவிடமிருந்து பாரியளவு தொகை கடனாகப் பெறப்பட்டுள்ளபோதும், இதன் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் கடனிற்கான வட்டியை செலுத்துவதற்குக்கூட போதுமானதாக இல்லை எனக்கூறப்படுகின்றது.

உலகஅரங்கில் இன்று ஒரு வல்லரசாக வளர்ந்து கொண்டிருக்கும் சீனாவின் வளர்ச்சிக்கு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் அமைவிடம் ஒரு முக்கிய ஈர்ப்புசக்தியாக உள்ளது. எனவேதான் அது, இலங்கையுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுவதற்கு விரும்புகின்றது. அதேபோன்று, சார்க் நாடுகளுக்கான இந்தியாவினது உதவியில் 50.0 வீதமானது இலங்கைக்கான உதவியாக உள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு, தமிழ்நாட்டுத்தேர்தல்கள், சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் அதிகரித்து வரும் இலங்கையின் உறவுகள் என்பவற்றோடு, சார்க் அமைப்பில் ஒரு பிரதான நாடு என்ற வகையில் தனது இந்த முதன்மை இடத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே இந்தியா இலங்கைக்கு பெருமளவு உதவிகளை வழங்கிவருகின்றது.

## பூகோளமயமாக்கம்
## கருத்தும் பரிமாணங்களும் அதனாலேற்படும் விளைவுகளும்

இரண்டாவது உலகப்போருக்குப் பிந்தியகாலப்பகுதியில் உலகப் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளதோடு, கடந்த இரண்டு முதல் மூன்று தசாப்தங்களில் முன்னொருபோதும் இல்லாத வகையில் பொருளாதாரரீதியானதும் அரசியல்ரீதியானதுமான பல மாற்றங்களுக்கும் அது உள்ளாகியுள்ளது. இம்மாற்றங்களின் விளைவாக, உலகப்பொருளாதாரம் போட்டித்தன்மை நிறைந்ததாக மாறிவருவதோடு, நாடுகளுக்கிடையிலான பரஸ்பர தங்கியிருக்கும்தன்மையும் அதிகரித்து வருகின்றது. தொழில்நுட்பங்கள் சர்வதேசமயமாக்கப்பட்டு வருவதால் தகவல் பரிமாற்றத்துறையில் ஏற்பட்டுவரும் வியத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள், உற்பத்திசார்ந்த தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள அதிநவீன அபிவிருத்திகள் என்பவற்றின் நன்மைகளை இப்பொழுது பெருமளவான உலகநாடுகள் அனுபவிக்கக் கூடியதாக உள்ளது. அதிகரித்து வரும் தாராளமயமாக்கல், தனியார்மயப்படுத்தல், அவற்றின் விளைவாக ஏற்படும் பூகோளமயமாக்கம் என்பவற்றின் செல்வாக்கிற்குட்பட்டதாக உலகம் மாறிக்கொண்டு வருகின்றது. ''தாராளமயமாக்கல்'' என்பது நாடுகளுக்கிடையே பொருட்கள் - சேவைகள், முதலீடுகள், மூலதனம் என்பவற்றின் பாய்ச்சல்களின் மீது இருந்துவரும் கட்டுப்பாடுகள் தளர்த் தப்படுவதை அல்லது அகற்றப்படுவதைக் குறிக்கும். வெளிநாட்டுச் செலாவணி, மூலதனம் போன்றவற்றின் பாய்ச்சல்களின் மீது அரசாங்கங்கள் விதிக்கும் நிர்வாகக்கட்டுப்பாடுகள், அவற்றிற்கு அரசாங்கம் வழங்கும் மானியங்கள் என்பன அகற்றப்படுவதையும் இது உள்ளடக்கும். அரசுக்கு உடைமையான தாபனங்களின் உடைமை, கட்டுப்பாடு என்பவற்றை தனியார்துறை நபர்களுக்கும் தாபனங்களுக்கும் மாற்றுவது தனியார் மயமாக்கல் எனப்படும். இவற்றின் மொத்தவிளைவாக ஏற்படுவதே பூகோளமயமாக்கமாகும்.

தொழில்சார்நிபுணர்கள் இப்பதத்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்ட கருத்துகளில் கையாளுவதால் இதனை வரையறுக்க முயலும் போது சிக்கல்கள் எழுகின்றன. இருந்தபோதிலும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் அதேபோன்று, பொருளாதாரம் சாராத ஏனைய துறைகளிலும் உலகம் இன்று புதியதொரு பண்புசார்ந்த ஒருங்கிணைப் பினைக் கண்டு வருகின்றது என்ற கருத்து இவற்றில் பரவலாகக் காணப் படுவதை அவதானிக்கலாம். இந்த ஒருங்கிணைப்பு இரண்டு முக்கிய பரிமாணங்களைக் கொண்டிருப்பதும் கவனிக்கற்பாலது. இவற்றுள் முதலாவது, உலகவர்த்தகமும், நாடுகளுக்கிடையிலான மூலதனப் பாய்ச்சல்களும் தாராளமயமாக்கப்பட்டு வருவதாலும், தகவல் பரிமாற்றல் துறையில் வியத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதாலும் தகவல், அறிவு என்பவற்றின் பரிமாற்றம் உலகளாவியரீதியில் அதிகரித்து வருகின்றது. இதன்மூலமாக நாடுகளுக்கிடையே பூகோளமட்டத்தில் இடம்பெற்று வரும் துரிதமான ஒருங்கிணைப்பையே பூகோளமயமாக்கல் என்பது குறிக்கும். மற்றையது, இவ்வித மாற்றங்களின் விளைவாக பூகோளமட்டத்திலும், பிராந்தியமட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் ஏற்பட்டுவரும் தாபனரீதியான மாற்றங்களைக் கருதும். பூகோளமயமாக்கம் தொடர்பான மேற்படி விளக்கத்திற்கு மாறாக, கடந்த சுமார் இரு தசாப்த காலப்பகுதியில் தேசியநிதிச்சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவை ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டு பூகோளரீதியிலான நிதிச்சந்தையொன்று உருவாகியுள்ளமையே பூகோளமயமாக்கல் எனக் கருதுவோருமுண்டு.

பூகோளமயமாக்கம் என்ற பதம் எண்பதாம் ஆண்டுகளில் உபயோகத் திற்கு வந்து தொண்ணூறாம் ஆண்டுகளிலேயே பிரபல்யமடைந்தபோதும், இப்பதம் நடைமுறை உபயோகத்திற்கு வருமுன்னரே பூகோளமயமாக்கம் இடம்பெற்று வந்துள்ளதால், உலகிற்கு இது ஒன்றும் புதிய நிகழ்வன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்த பூகோள மயமாக்கமானது முதலாம் உலகப்போரின் பின்னரும், பெருமந்த காலத்திலும் சற்றுத் தளர்ச்சியடைந்தது. 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் பல்வேறு நாடுகளில் அமுலாக்கப்பட்டு வரும் அமைப்புசார் சீராக்கல் கொள்கைகள் காரணமாக அது புத்துயிர் பெற்றுள்ளதோடு, அதனுடன் தொடர்புபடுத்தப்படும் பல்வேறு பொருளாதார, சமூகநிகழ்வுகளின் பண்பும் வேகமும் புதிய பரிமாணங்களைப் பெற்றுவிட்டன. முதலாளித்துவ

அமைப்பின் சமகால அபிவிருத்தியே பூகோளமயமாக்கம்' என்றும் கூறலாம். பூகோளமயமாக்கம் இவ்வாறு துரிதமடைந்தமைக்கு பல்வேறு காரணிகள் பங்களித்துள்ளன. அவற்றுள் பின்வருவனவற்றை விசேடமாகக் குறிப்பிடலாம்:

1. சோவியத் யூனியனின் தலைமையில் செயற்பட்டு வந்த திட்ட மிட்டதும், கட்டுப்படுத்தியதுமான பொருளாதாரங்களின் வீழ்ச்சி.
2. தொழில்நுட்ப-விஞ்ஞானப்புரட்சி பூகோளரீதியாக ஏற்படுத்தியுள்ள தாக்கம்.
3. இந்தியா, சீனா, வியட்நாம் போன்ற நாடுகளின் சந்தைகள் வெளிநாடு களுக்குத் திறந்து விடப்பட்டமை.
4. விருத்தியடைந்து வரும் நாடுகள் பலவற்றில் அமைப்புசார்சீராக்கல் கொள்கைகள் அமுலாக்கப்பட்டு வருகின்றமை.
5. ஆசியான், சார்க், ஒபெக், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அரசியல் - பொருளாதார பிராந்தியக் கூட்டுக்கள் உருவாக்கப்பட்டமை. வர்த்தகம், இறுப்புக்கள் என்பன தொடர்பான பொது உடன்படிக்கையின் கீழ் நடைபெற்ற உறுகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்று, 1995 ஜனவரியில் உலக வர்த்தகத்தாபனம் (WTO) தாபிக்கப்பட்டமை.

உலக வர்த்தகத்தாபனத்திற்கு அடிப்படையாகவிருக்கும் மறக்காஷ் (Marrakesh) உடன்படிக்கை (1994) உலகவர்த்தகத்திற்குத் தடையாக விருக்கும் இறுப்புக் கட்டுப்பாடுகளைப் படிப்படியாக 35.0 வீதத்திற்குக் குறைப்பதோடு, இறுப்புகளல்லாத ஏனைய தடைகளை அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏற்கனவே செயற்படத் தொடங்கிவிட்ட இது உலகை கட்டற்ற வர்த்தகத்திற்கு இட்டுச்செல்வதை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பூகோளமயமாக்கம் என்பது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது: மூலதனம், முதலீடுகள், பொருட்கள், தொழில்நுட்பம் என்பனவும் மக்களும் நாடுகளுக்கிடையே அசைதல், புதிய தொடர்புச்சாதன தொழில்நுட்பங்களினூடாக மக்களிடையே ஏற்படும் நெருக்கமான பிணைப்புகள், வெளிநாட்டுக்கம்பனிகளின் நடவடிக்கைகளினூடாக பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தி கட்டங்கட்டமாக பல்வேறு நாடுகளில் நடைபெறுதல் என்பன சேர்ந்து

சர்வதேசரீதியான புதியதொரு தொழிற்பிரிவினை ஏற்படுத்தி வருகின்றமை, முழு உலகத்தையுமே அச்சுறுத்திவரும் ஆபத்துகள் பற்றிய அதிகரித்த விழிப்புணர்வு, சர்வதேசரீதியான தாபனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறான பல்பரிமாணங்களைக் கொண்ட பூகோளமயமாக்கத்தை பொருளாதாரப் பரிமாணம் என்ற ஒன்றினை மட்டும் கொண்டு விளக்க முடியாது. பூகோளமயமாக்கம் பற்றி இன்று இடம்பெற்று வரும் விவாதங்களின் அடிப்படையில் நோக்குவோமாயின், அது பின்வரும் **நான்கு** விடயங்களுள் ஏதாவதொன்றையோ அல்லது அவை அனைத்தையுமோ குறிக்கலாம்: **முதலாவது,** பூகோளரீதியான தாக்கத்தைக் கொண்டிருக்கும் சூழல் தொடர்பான ஆபத்துகளும் சூழலின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவோருக்கும் அவ்விளைவுகளால் பாதிக்கப்படுவோருக்குமிடையே ஏற்படும் பூகோளரீதியான இணைப்பும்; **இரண்டாவது,** வளரும் நாடுகள் படிப்படியாக மேற்கத்திய பொருளாதார அமைப்பிற்குள் உள்வாங்கப்படுவதனால் அவை மேற்கத்திய சந்தைப் பொருளாதார மாதிரியினது செல்வாக்கிற்கு உட்பட்டு பாரம்பரிய கலாசாரங்களை இழந்து வருதலும், விருத்தி குறைந்த நாடுகள் கைத்தொழில் நாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட உலகப் பொருளாதாரத்தோடு ஒன்றிணைக்கப்படுதலும், **மூன்றாவதாக,** வளரும் நாடுகள் இதனூடாக உலகசந்தையுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றமை, **நான்காவதும் இறுதியானதும்,** பொருளாதாரங்கள் உலகமயப்படுத்தப்படுவதும், தொடர்பாடல், போக்குவரத்து என்பவற்றுக்கான செலவுகள் குறைந்து வருகின்றமையும். இவையனைத்தும் சேர்ந்து உத்தேச அடிப்படையினைக்கொண்ட முதலாளித்துவத்தின் எதிர்க்கணிய விளைவுகளான வறுமை, குற்றச்செயல்கள், போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றை சர்வதேசமயப்படுத்துவதோடு இவற்றினூடாக குற்றச்செயல்களும் உலகமயப்படுத்தப்படுகின்றன எனக்கூறுவதும் சரியானதேயென சிலர் வாதாடுகின்றனர். பண்டங்கள், மூலதனம், முதலீடு என்பன நாடுகளுக்கிடையே கட்டின்றிப் பாய்வதற்குத் தடையாகவிருக்கும் காரணிகள் நீக்கப்பட்டு வருவதனால் அவற்றின் பாய்ச்சல் அதிகரித்து வருகின்றது. உதாரணமாக, 1990க்கும் 1998க்குமிடையே மொத்த உலக வர்த்தகம் 4,300 பில்லியன் டொலரிலிருந்து 6,700 பில்லியனாக 55.0 வீதத்தாலும், வளரும் நாடுகளில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 34.4 பில்லியன் டொலரிலிருந்து 155.0 பில்லியனாக 350.0 வீதத்தாலும் உயர்ந்தன. வர்த்தகத்தில் ஏற்பட்ட

இத்துரித வளர்ச்சியானது பல்வேறு வகையான நுகர்பொருட்கள் முன்னரிலும் பார்க்க அதிகரித்த அளவில் நுகர்வோருக்குக் கிடைப்பதை உறுதி செய்வதோடு, உற்பத்தி நிறுவனங்களையும் தொழிலாளரையும் அதிசிறந்த சர்வதேச நடைமுறைகளுக்கு முகங்கொடுக்கச் செய்துவருவதோடு மூலதனமும், ஊழியமும் உற்பத்தியில் திறமையான முறையில் கையாளப்படுவதை இவை தூண்டுகின்றன. மேலும், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்ற உள்ளீடுகளின் கிடைக்குந்தன்மையை அதிகரித்து உற்பத்தித்திறனையும் இது உயர்த்துகின்றது. சுருங்கக்கூறின், உற்பத்தியும் நுகர்வும் சர்வதேசமயப்படுத்தப்பட்டு வருகின்றன எனலாம். உற்பத்தியிலேற்படும் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதனால் வளரும் நாடுகள் தமது வறுமைநிலையைக் குறைத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியுமென்றும் கூறப்படுகின்றது.

மேற்கூறிய, பல நன்மைகளை ஏற்படுத்தும் பூகோளமயமாக்கமானது பாதகமான சில விளைவுகளையும் ஏற்படுத்துகின்றதென்பதை மறுக்க முடியாது. உள்ளூர் உற்பத்தியை சர்வதேசப் போட்டிக்கு உட்படுத்துவதன் மூலம் அது உற்பத்தி நிறுவனங்களுக்கும் தொழிலாளருக்கும் பெரும் அச்சுறுத்தலாகவிருக்கின்றது. மேலும், நிதிச்சந்தைகள் சர்வதேச முதலீட்டிற்குத் திறந்து விடப்படுவதாலும், மூலதனப் பாய்ச்சல்களின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாலும் அச்சந்தைகள் வெளிநாட்டுச் சக்திகளின் செல்வாக்கிற்குட்பட்டு, பல்வேறு நாடுகளில் நாணய-நிதி நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக அஞ்சப்படுகின்றது.

இது தொடர்பில் நாம் இரண்டு விதமான மூலதனப் பாய்ச்சல்களை இனங்காணலாம்: ஒன்று, பல்தேசியக்கம்பனிகள் ஏனைய நாடுகளில் மேற்கொள்ளும் நேரடி முதலீடுகளும், மற்றையது, உத்தேச நோக்கத்திற்காக பல்வேறு பிரிவினரால் மூலதனச்சந்தைகளில் வைக்கப்படும் குறுங்கால நிதிகளுமாகும். இவை இரண்டிற்குமிடையே ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறையிலேற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பின்னைய வகையைச் சார்ந்த நிதிகளை இப்பொழுது நாடுகளுக்கிடையே மின்னல் வேகத்தில் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவாக, அண்மைய ஆண்டுகளில் நாடுகளுக்கிடையிலான குறுங்கால மூலதனப்பாய்ச்சல்கள் அதிகரித்து வருவதுடன், உலக மூலதனச்சந்தைகள் இலகுவில் நிலைகுலையும்

ஆபத்துகளும் அதிகரித்துள்ளன. முதலீட்டாளர்கள் மந்தைகளைப் போன்று நடந்து கொள்வதாலேயே, அதாவது, ஒருவரைத் தொடர்ந்து மற்றையோரும் தமது குறுங்காலநிதிகளை குறிப்பிட்ட நாடுகளுக்குள் ளேயும் வெளியேயும் சடுதியாக கொண்டுசெல்ல முயலுவதாலேயே, மூலதனச் சந்தைகள் இவ்வாறு பலவீனமடைகின்றன. பாரியளவிலான இவ்வித குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களினால் பொருட்களின் உற்பத்தி, விற்பனை என்பவற்றிற்கு தொடர்பில்லாத வகையில் சந்தைவிலைகள் தளம்புகின்றன. அத்துடன், மூலதனத்தை வெளிநாட்டு நிதிச்சந்தைகளுக்குக் கொண்டுசெல்வதற்கு வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால், இம்மூலதன அசைவுகள் நாணயமாற்றுச் சந்தை யிலும் பெரும் தளம்பல்களை ஏற்படுத்துகின்றன. மூலதன உட்பாய்ச்சலும் சடுதியாக அது வெளியே கொண்டு செல்லப்படுவதும் உற்பத்தி நிறுவனங் களையும் வங்கிகளையும் படுகடன்நிலைக்கு உள்ளாக்குவதோடு, சில சந்தர்ப்பங்களில் அவற்றை வங்குறோத்தடையவும் செய்கின்றன. இவ்வாறான ஒரு நெருக்கடிநிலையே 1997 இல் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டது. இது போன்ற நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

## வாஷிங்டன் நிலைப்பாடு

வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும், உலக வங்கி-சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் ஆளுநர் சபைக்கூட்டங்களிலும் ஐக்கிய அமெரிக்கா வலியுறுத்திவரும் கொள்கை சீர்திருத்தங்களினால் ஏற்படும் ஒரு விளைவே பூகோளமயமாக்கமெனவும் கூறலாம். மேற்படிக்கொள் கைகள் ''வாஷிங்டன் நிலைப்பாடு'' (Washington Consensus) என்ற பதத்தால் அழைக்கப்படுகின்றன. கட்டில்லாத சந்தைகள் உருவாக்கப்படு வதையும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கங்களின் பங்கு குறைக்கப்படுவதையும் எல்லா உலகஅரங்குகளிலுமே அமெரிக்கா இன்று வலியுறுத்தி வருகின்றது. இந்த வாஷிங்டன் நிலைப்பாடானது பத்து அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

1. அரசாங்கச்செலவீட்டில் இறைக்கட்டுப்பாட்டைக் கையாளுதல்.
2. அரசாங்கநிதிகளை மானியங்கள் அளிப்பதற்கு கையாள்வதினின்று வேறு துறைகளுக்குத் திருப்புதல்.

3. வட்டிவீதங்களின் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
4. எல்லைநிலை வரிவிகிதங்களைக் குறைத்தல்.
5. நாணயமாற்றுவிகிதங்களை நிலையான மாற்று விகிதங்களிலிருந்து சந்தையால் நிர்ணயிக்கப்படும் மாற்று விகிதங்களாக மாற்றுதல்.
6. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலைத் தாராண்மைப் படுத்தல்.
7. வர்த்தகத்தை தாராண்மைப்படுத்தல்.
8. உற்பத்திச்சந்தைகளில் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
9. அரசுக்கு உடைமையான தாபனங்களைத் தனியார்மயப்படுத்தல்.
10. தனியார்சொத்துடைமையை உறுதிப்படுத்தல்.

ஏனைய சமூக நிறுவனங்களை முற்றாகவே ஒதுக்கிவிட்டு சந்தைகளின் பங்கினை ஊக்குவித்தலே இவற்றின் அடிப்படை நோக்கமாகும். சந்தையில் பங்குபற்றும் பல்வேறு சாரார்களுக்கு அதிலுங்குறிப்பாக, பல்நாட்டுக் கம்பெனிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அதிஉயர்ந்த சுதந்திரத்தை வழங்கும் இந்த வாஷிங்டன் நிலைப்பாடானது அந்நிறுவனங்களின் சுயவிருப்பினையே பிரதிபலிக்கின்றதெனக் கூறின் அது மிகையன்று.

வாஷிங்டன் நிலைப்பாட்டின் சில அம்சங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, வெளிநாட்டு நேரடிமுதலீடுகளின் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவது ஒரு சில நாடுகளிலேனும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளது. அதேபோன்று, வர்த்தகத்தை தாராளமயப்படுத்தியமை ஏற்றுமதி, இறக்கு மதிகளை ஊக்குவித்து உலகின் எல்லாப் பகுதிகளிலுமே நுகர்வோரின் நலன்களை மேம்படுத்தியுள்ளது. மாறாக, பொருளாதாரத்தில் அரசாங் கத்தின் பங்கினைக் குறைப்பது ஏறக்குறைய எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே சிறப்பாகச் செயற்படத் தவறிவிட்டது என்றே கூறலாம். குறிப்பாக, ஊழியம், நிதிச்சந்தைகள் என்பவற்றைப் பொறுத்தவரை அதன் பலவீனம் இப்பொழுது தெரியவந்துள்ளது. இதனால் வாஷிங்டன் நிலைப்பாடு தோல்வியடைந்துள்ள விடயங்களில் அது திருத்தியமைக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். மேலும், பூகோளமயமாக்கல் நிலைத்திருப்பதற்கு சமூக பாதுகாப்பு வலையானது (Social Safety Network) பலவீனமடைவதற்குப் பதிலாக அதனை வலுப்படுத்தப்படுவது

இன்றியமையாததாகும். வர்த்தகத்தில் ஈடுபடுவது சமூகரீதியாக ஒரு நாட்டிற்கு நன்மைகளை ஏற்படுத்தினாலும் சில விடயங்களிலாவது அது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, கட்டில்லா வர்த்தகமானது ஒரு நாட்டிற்கு எத்துறைகளில் ஒப்பீட்டு நலன் கூடுதலாகக் காணப்படுகின்றதோ அத்துறைகளுக்கு உற்பத்தியை நகர்த்தி, ஒப்பீட்டு நலன் இல்லாத துறைகளை நலிவடையச் செய்வதையும், அவ்வாறு நலிவடையும் துறைகளில் தொழில் புரிவோர் தவிர்க்க முடியாத வகையில் பாதிப்பிற்குள்ளாவதையும் இங்கு குறிப்பிடலாம்.

சர்வதேச வர்த்தகம் ஏற்படுத்தும் இவ்வித பாதிப்புகளை சீர்ப்படுத்துவதற்கான ஒரு வழி இதன் மூலம் நன்மையடைவோர் (அதிகரித்த வருமானத்தையும் இலாபத்தையும் பெறுவோர்) அதன் ஒரு பகுதியை ஏதேனுமொரு நட்டஈட்டு அடிப்படையில் இழப்புகளை எதிர்கொள்வோருடன் பகிர்ந்து கொள்வதாகும். சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளைக் கற்கும் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயமாகும் இது. பாதிப்படையும் தொழிலாளருக்கு மீள்பயிற்சியளித்தல், அவர்களுக்குத் தற்காலிக வருமான ஆதாரங்களை வழங்குதல், தொழில்களைப் பாதுகாக்கும் வகையில் அவற்றின் அமைவிடத்தை மாற்றியமைப்பதற்கென வரிசார்ந்த சலுகைகளை அளித்தல் போன்றன சந்தை ஒருங்கிணைப்பால் தனிப்பட்டோருக்கு ஏற்படும் பளுக்களைக் குறைப்பதற்கான சர்வதேசரீதியான வழிகளாகும். ஆயினும், இவ்வாறான பாதுகாப்பு வலையொன்றை, ஏற்படுத்துவதற்கு வாஷிங்டன் நிலைப்பாட்டில் இடமில்லாதிருப்பதே அதில் காணப்படும் முக்கிய குறைபாடாகும். ஆகவே, இவ்வித சமூக பாதுகாப்பு வலையொன்றினை அறிமுகம் செய்யும் வகையில் அது மாற்றியமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

நிதி மூலதனத்தின் கட்டில்லாப் பாய்ச்சலின் மீது அரசாங்கம் தலையிட வேண்டிய கட்டாயமும் ஏற்கப்படவேண்டும். முன்னரே குறிப்பிட்டது போன்று, குறுங்கால நிதிகள் கட்டின்றிப்பாய்வது நெருக்கடிகளை ஏற்படுத்தவல்லது என்பதை ஏற்போமாயின், அதனை நெறிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு அவசியமே என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். சுருங்கக்கூறுவோமாயின், தாராளமயமாக்கலானது ஒரு முடிவான செயலாகவன்றி, சிறந்ததொரு நிதியமைப்பினை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாகவே கருதப்படவேண்டும். மேற்படி விடயங்களில்

வாஷிங்டன் நிலைப்பாட்டினின்றும் விலகுவது பூகோளமயமாக்கத்தை எந்த விதத்திலுமே தாமதப்படுத்தமாட்டாது என்பதை திட்டவட்டமாகக் கூறலாம். இந்தவகையில், நிதித்துறையில் தோன்றும் பீதிகளினாலேற்படும் உற்பத்தி இழப்புகளை தவிர்த்துக்கொள்ள உதவுவதன் மூலம் இவ்விதத் தலையீடானது கூடிய நன்மை பயக்குமெனக் கூறலாம்.

பூகோளமயமாக்கமானது நன்மை தரக்கூடிய ஒரு செயல்முறையாக (அதாவது, வருங்காலப் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு திறவு கோலாக) இருக்கும் அதேவேளையில், நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக் கிடையேயும் ஏற்றத்தாழ்வுகளை விரிவடையச்செய்து சமூக முன்னேற்றத் திற்கு அது ஒரு முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். பூகோளமயமாக்கம் கணிசமான நன்மைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தபோதும், தவிர்க்க முடியாத வகையில் அது சில எதிர்மாறான விளைவுகளையும் கொண்டதாகவே இருக்கின்றது. அமைப்புரீதியாகப் பலவீனமான வளரும் நாடுகளையும், வறியோர், வேலையற்றோர், குறைந்த வேதனம் பெறுவோர் அடங்கலாக வேறும் பல்லாயிரக்கணக் கானோரையும் அது அபிவிருத்திச் செய்முறையினின்றும் புறக்கணிக்கக் கூடுமென்ற அச்சமும் நிலவுகின்றது.

பூகோளமயமாக்கமானது நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையை அதிகரிப்பதால், நாடுகளுக்கிடையே கொடுக்கல் - வாங்கல் களிலேற்படும் அதிகரிப்பின் ஒரு விளைவே பூகோளமயமாக்கமெனவும் கூறப்படுகின்றது. வர்த்தகம், முதலீடுகள், மூலதனம் என்பவற்றின் பாய்ச்சலின்மீது விதிக்கப்படும் நிர்வாகரீதியான கட்டுப்பாடுகள் அமைப்பு சார் சீராக்கல் கொள்கைகளின் கீழ் துரிதகதியில் தளர்த்தப்பட்டு வருவது இதனை மேலும் ஊக்குவிக்கின்றது. முன்னர் பாதுகாக்கப்பட்டிருந்த பல துறைகள் இப்பொழுது தாராளமயமாக்கப்பட்டு வருவதும், தேசிய சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுவதும், தனியுரிமைகள் உடைத்தெறியப் படுவதும், அரச மானியங்கள் மீளாய்வு செய்யப்படுவதும் உலகவர்த்த கத்தின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்த அடிப்படையில், பூகோளமயமாக்கத்தை ''சந்தைகளின் விரிவாக்கம்'' என்றும் கூறலாம். சந்தைகளின் விரிவாக்கமானது உற்பத்தி நிறுவனங் களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் கடும் போட்டியை ஏற்படுத்தி போட்டித்தன்மையை உலக வர்த்தகத்தின் பிரிக்கமுடியாத ஒரு அம்சமாக மாற்றி வருகின்றது. இவ்வித சர்வதேசரீதியிலான போட்டித்தன்மையை பின்வரும் காரணிகள் தவிர்க்க முடியாததாக்கியுள்ளன:

1. உலக வர்த்தகத்தாபனம் தாபிக்கப்பட்டமையும் வர்த்தகத்தைத் தாராண்மைப்படுத்தும் அதன் நோக்கமும்.
2. இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த பல பொருளாதாரங்கள் திறந்து விடப்பட்டுள்ளமை.
3. தொழில்நுட்பம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளமையும், தொலைத் தொடர்பு, போக்குவரத்து வசதிகள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள புரட்சி கரமான மாற்றங்களும்.
4. நாடுகளுக்கிடையே ஏற்பட்டுவரும் தனியார் முதலீட்டின் அதிகரித்த பாய்ச்சலும் உத்தியோகபூர்வ வெளிநாட்டு உதவியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும்.

## சர்வதேச போட்டித்தன்மையும் தொழிற்சங்கங்களும்

போட்டித்தன்மை என்பதை உற்பத்தித்திறனிலேற்படும் பேண்தகு அதிகரிப்பு எனவும் கூறலாம். உண்மையான தனியார்துறைக்கம்பனிகள் உண்மையான தொழில்களில் போட்டியிடுவதனூடாகவே உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. இவ்வித போட்டியினூடாக உற்பத்தித்திறனில் ஏற்படும் அதிகரிப்பு வரவேற்கத்தக்க ஒன்றே என்பதையும், கம்பனி முகாமையாளர் தமது தொழில்களில் சீர்திருத்தங்களையும் புதுமைகளையும் புகுத்துவதற்கு தீவிரமான போட்டியே தூண்டுகோலாக அமைகின்றது என்பதையும் தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், போட்டித்தன்மையானது எவ்வாறு அமையப்பட வேண்டும் என்பது தொடர்பாக அவை முகாமை யாளருடன் முரண்படுகின்றன. தொழிலாளரது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலமும், சிறந்த வேலைநிலைமைகளை உருவாக்குவதன் மூலமும் உற்பத்தி நடவடிக்கைகளில் தொழிலாளரின் சுயவிருப்புடன் கூடிய பங்கேற்றலையும், ஒத்துழைப்பையும் உறுதி செய்து கொள்வதே போட்டித் தன்மையை உயர்த்திக் கொள்வதற்கான அடிப்படையாக அமையவேண்டுமென அவை கூறுகின்றன. இதற்கு மாறாக, தீவிர மடைந்து வரும் பூகோளமயமாக்கமானது தொழிலாளருக்கும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்களுக்கும் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களையும் சவால்களையும் ஏற்படுத்தி வருகின்றது:

i. நாடுகளின் பொருளாதார இறைமையானது தனிப்பட்ட நாடுகளது அரசாங்கங்களின் செல்வாக்கு, ஆதிக்கம் என்பவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு உற்பத்தி, வர்த்தகம், தொழில்நுட்பம் என்ப

வற்றைக் கட்டுப்படுத்தும் பல்நாட்டுக் கம்பெனிகளையும், வளரும் நாடுகள் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை நிர்ணயிக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களையும் சென்றடைந்துவிட்டது.

ii. வளரும் நாடுகளில் நிதிச்சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டுள்ளமை அந்நாடுகளை முன்னொருபோதும் இல்லாத வகையில் நிதிசார்ந்த அதிர்ச்சிகளுக்கு உள்ளாக்குகின்றது.

அண்மைக்காலங்களில் மூலதனத்தைப் போன்றே ஊழியமும் நாடு களுக்கிடையே குறிப்பாக, தெற்கிலிருந்து வடக்கிற்கு பாயத்தொடங்கி யுள்ளது. ஆனால், வடக்கிலிருந்து தெற்கிற்குப்பாயும் மூலதனத்தைப் பின்னையது வரவேற்பதைப் போன்று, தெற்கிலிருந்து பாயும் ஊழியத்தை வடக்கேயுள்ள நாடுகள் ஏற்கத் தயங்குகின்றன. உலக வர்த்தக நிறுவனம் (WTO) கூட, பொருட்கள்-சேவைகள், முதலீடு என்பவற்றை கட்டின்றிப் பாயவிடுவது போன்று தென்கோள நாடுகளிலிருந்து தொழில்மயமாகிய நாடுகளுக்கு ஊழியம் செல்வதை தாராளமனதோடு அனுமதிப்பதில்லை. இறைக்கட்டுப்பாடு, தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் என்ற மூன்றுமே வாஷிங்டன் நிலைப்பாட்டின் மூன்று தூண்களாகும். Stiglitz என்பாரது கருத்தின்படி, லத்தீன் அமெரிக்க நாடுகளின் நடைமுறைப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட இக்கொள்கைகள் ஏனைய வளரும்நாடுகளின் மீது துரிதகதியிலும் தேவைக்குமதிகமாகவும் திணிக்கப்பட்டு வருவதால் இவை எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாறான விளைவுகளை இந்நாடுகளில் ஏற்படுத்தி வருகின்றன. பொருத்தமற்ற சூழ்நிலைகளில் திணிக்கப்படும் இறைக்கட்டுப்பாடுகள் பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. உயர்ந்த வட்டிவீதங்கள் புதிய தொழில் முயற்சிகளைப் பாதிக்கின்றன. மூன்றாம் உலக நாடுகளில் மூலதன - நிதிச்சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டமை பூகோளரீதியான நிதி நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதுடன், சிறிய முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளுக்குப் பெரும் சவாலாகவும் உள்ளது

உலகமயமாக்கத்திற்கு எதிராக இவ்வாறான பல கண்டனங்கள் கூறப்பட்ட போதும், வளரும் நாடுகளிலுள்ள வறிய மக்களுக்கு அது பல்வேறு நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது என்பதை மறுக்க முடியாது என்பது சிலரது வாதமாகும்:

i. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதிகளே உந்துசக்தி யாகவிருக்கும் சந்தர்ப்பங்களில் சர்வதேச வர்த்தகம் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுகின்றது.

ii. சர்வதேச வர்த்தகத்திற்கு சந்தைகளைத் திறந்துவிடுவது பல நாடுகளின் துரிதமான வளர்ச்சிக்கு உதவியுள்ளது. ஏற்றுமதிசார்ந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டிருந்த பெரும்பாலான ஆசிய நாடுகளின் கைத் தொழிற் கொள்கை கோடிக்கணக்கான மக்களது வாழ்க்கைநிலையை மேம்படச்செய்துள்ளது. உதாரணமாக, மக்கள் முன்னரிலும் பார்க்க நீண்ட காலம் வாழக்கூடியதாக உள்ளதோடு அவர்களது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது.

iii. உலகமயமாக்கம் வளரும் நாடுகளின் தனிமையைப் போக்கி அங்கு வாழும் மக்கள் இலகுவில் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி யுள்ளது. உலகமயமாக்கத்தின் இன்னொரு அம்சமான வெளிநாட்டு உதவியானது பல்வேறு குறைபாடுகளைக்கொண்டிருந்தபோதும், கோடிக்கணக்கான மக்களுக்கு அது நன்மையளித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

தனிப்பட்டமுறையில் உலகமயமாக்கம் நல்லதோ, தீயதோ அன்று. தனது சொந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும், தமக்கு வேண்டிய வேகத்திலும் அதனைத் தழுவிக் கொண்ட கிழக்காசிய நாடுகள், 1997ஆம் ஆண்டு நெருக்கடியினாலேற்பட்ட பின்னடைவிற்கு மத்தியிலும், பல நன்மை களைப் பெற்றுக்கொண்டன. எனினும், உலகமயமாக்கம் நடைமுறைப் படுத்தப்பட்ட முறையும் உலகமயமாக்கத்தின் பேரில் வளரும் நாடுகளின் மீது திணிக்கப்பட்டுவரும் கொள்கைகளும் மீளாய்வு செய்யப்படுவது அவசியமானதாகும். மேலும், பொருளாதார உலகமயமாக்கத்துக்கும் அதோடு தொடர்புள்ள விடயங்களை நெறிப்படுத்துவதில் உள்ள அரசியல் ஆற்றலின்மைக்குமிடையே காணப்படும் இடைவெளியானது அதிகரித்து வருகின்றமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். தென்கிழக்காசிய நாடுகள், யப்பான், ரஷ்யா, பிரேசில் ஆகியவற்றில் ஏற்பட்ட நிதிநெருக் கடிகள், பொருளாதாரநெருக்கடிகள் என்பவற்றின் மத்தியில் G-7 நாடு களினதும், பிரெட்டன்வுட்ஸ் தாபனங்களினதும் அரசியல் இயலாமை யானது, ஆபத்துகளை முகாமை செய்வதற்குத் தேவையான பூகோள ரீதியான ஏற்பாடுகள் இல்லாமையை விளக்குகின்றது. சுருங்கக் கூறுவோ மாயின், பகிரப்பட்டுள்ள இறைமை என்ற எண்ணக்கருவின் அடிப் படையில் அமைந்த பூகோளரீதியான ஆட்சிமுறையொன்று இல்லாத நிலையே இன்று காணப்படுகின்றது எனலாம்.

9

# பூகோளமயமாக்கமும் அபிவிருத்தியும்

இரண்டாவது உலகப்போருக்குப் பிந்திய காலப்பகுதியில் உலகப் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளதோடு, கடந்த இரு தசாப்தங்களில் முன்னொருபோதும் இல்லாத வகையில் பொருளாதார ரீதியானதும் அரசியல்ரீதியானதுமான மாற்றங்களுக்கு அது உள்ளாகி வந்துள்ளது என்பதும், இம்மாற்றங்களின் விளைவாக, உலகப்பொருளா தாரம் போட்டித்தன்மை நிறைந்த ஒன்றாக மாறிவருகின்றது என்பதும், நாடுகளுக்கிடையிலான பரஸ்பர தங்கியிருக்கும் தன்மை அதிகரித்து வருகின்றது என்பதும், தகவல் பரிமாற்றத்துறையில் ஏற்பட்டுள்ள வியத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள், உற்பத்திசார்ந்த தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள அதிநவீன அபிவிருத்திகள் என்பவற்றின் நன்மைகளை இப்பொழுது பெரும்பாலான உலகநாடுகள் அனுபவிக்கக் கூடியதாக உள்ளது என்பதும் முன்னைய கட்டுரையில் தெளிவாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், தொழில்நுட்பமானது சர்வதேச மயமாக்கப்பட்டு வருகின்றது. அதிகரித்துவரும் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், அவற்றின் விளைவாக ஏற்பட்டுவரும் பூகோள மயமாக்கம் என்பவற்றின் செல்வாக்கிற்குட்பட்டதாக உலகம் இன்று மாறிக்கொண்டு வருகின்றது என்பதையும் அது சுட்டிக்காட்டியது.

தொழில்சார்நிபுணர்கள் பூகோளமயமாக்கம் என்ற பதத்தை வெவ் வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்ட கருத்துகளில் கையாளுவதால் அதனை வரையறுக்க முயலும்போது சிக்கல்கள் எழுகின்றன. இருந்த போதிலும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் அதேபோன்று, பொருளாதாரம் சாராத ஏனைய துறைகளிலும் உலகம் இன்று புதியதொரு பண்புசார்ந்த ஒருங்கிணைப்பினைக் கண்டு வருகின்றது என்ற கருத்து இவற்றில் பரவலாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். இந்த ஒருங் கிணைப்பானது இரு முக்கிய பரிமாணங்களைக் கொண்டிருப்பதும் கவனிக்கற்பாலது. இவற்றுள் முதலாவது, உலக வர்த்தகமும், நாடு களுக்கிடையிலான மூலதனப்பாய்ச்சல்களும் தாராளமயமாக்கப்பட்டு

வருவதாலும், தகவல் பரிமாற்றல்துறையில் வியத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதாலும் தகவல், அறிவு என்பவற்றின் பரிமாற்றம் உலகளாவியரீதியில் அதிகரித்து வருகின்றது. இதன்மூலமாக நாடுகளுக்கிடையே பூகோளமட்டத்தில் இடம்பெற்று வரும் துரிதமான ஒருங்கிணைப்பையே பூகோளமயமாக்கல் என்பது குறிக்கும். மற்றையது, இவ்வித மாற்றங்களின் விளைவாக பூகோளமட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் உள்ளூர்மட்டத்திலும் ஏற்பட்டுவரும் தாபனரீதியான மாற்றங்களைக் கருதும். பூகோளமயமாக்கம் தொடர்பான மேற்படி விளக்கத்திற்கு மாறாக, கடந்த சுமார் இரு தசாப்தகாலப்பகுதியில் தேசிய நிதிச்சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவை ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டு பூகோளரீதியிலான நிதிச்சந்தையொன்று உருவாகியுள்ளமையே பூகோளமயமாக்கல் எனக் கூறுவோரும் உண்டு.

பூகோளமயமாக்கம் என்பது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது: மூலதனம், முதலீடுகள், பொருட்கள், தொழில்நுட்பம் என்பனவும் மக்களும் நாடுகளுக்கிடையே அசைதல், புதிய தொடர்புச்சாதன தொழில்நுட்பங்களினூடாக மக்களிடையே ஏற்பட்டுவரும் நெருக்கமான பிணைப்புகள், வெளிநாட்டுக் கம்பனிகளின் நடவடிக்கைகளினூடாக பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தி கட்டங்கட்டமாக பல்வேறு நாடுகளில் நடைபெறுதல் என்பன சேர்ந்து சர்வதேசரீதியான புதியதொரு தொழிற்பிரிவினை ஏற்படுத்தி வருகின்றமை, முழு உலகத்தையுமே அச்சுறுத்திவரும் ஆபத்துகள் பற்றிய அதிகரித்த விழிப்புணர்வு, சர்வதேசரீதியான தாபனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறான பல்பரிமாணங்களைக் கொண்ட பூகோளமயமாக்கத்தை பொருளாதாரப் பரிமாணம் என்ற ஒன்றினை மட்டும் கொண்டு விளக்க முடியாது. பூகோளமயமாக்கம் பற்றி இன்று இடம்பெற்று வரும் விவாதங்களின் அடிப்படையில் நோக்குவோமாயின், அது பின்வரும் **நான்கு** விடயங்களுள் ஏதாவதொன்றையோ அல்லது அவை அனைத்தையுமோ குறிக்கலாம்: **முதலாவது,** பூகோளரீதியான தாக்கத்தைக் கொண்டிருக்கும் சூழல் தொடர்பான ஆபத்துகளும் சூழலின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவோருக்கும் அவ்விளைவுகளால் பாதிக்கப்படுவோருக்குமிடையே ஏற்படும் பூகோளரீதியான இணைப்பு, **இரண்டாவது,** வளரும் நாடுகள் படிப்படியாக மேற்கத்திய பொருளாதார

அமைப்பிற்குள் உள்வாங்கப்படுவதனால் அவை மேற்கத்திய சந்தைப் பொருளாதார மாதிரியினது செல்வாக்கிற்கு உட்பட்டு பாரம்பரிய கலா சாரங்களை இழந்துவருவதும், விருத்திகுறைந்த நாடுகள் கைத்தொழில் நாடுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட உலகப் பொருளாதாரத்தோடு ஒன்றிணைக்கப்படுவதும், **மூன்றாவது**, வளரும் நாடுகள் இதனூடாக உலகசந்தையுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றமை. **நான்காவதும்** இறுதி யானதும், பொருளாதாரங்கள் உலகமயப்படுத்தப்படுவதும், தொடர்பாடல், போக்குவரத்து என்பவற்றுக்கான செலவுகள் குறைந்து வருகின்றமையும் இவையனைத்தும் சேர்ந்து உத்தேச அடிப்படையினைக்கொண்ட முதலாளித் துவத்தின் எதிர்க்கணிய விளைவுகளான வறுமை, குற்றச்செயல்கள், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றை சர்வதேசமயப்படுத்துவதோடு இவற்றினூடாக குற்றச்செயல்கள் பூகோளமயப்படுத்தப்படுகின்றமையே பூகோளமயமாக்கம் எனக் கூறுவதும் சரியானதேயென சிலர் வாதாடு கின்றனர். பண்டங்கள், மூலதனம், முதலீடு ஆகியன நாடுகளுக்கிடையே கட்டின்றிப் பாய்வதற்குத் தடையாகவிருக்கும் காரணிகள் நீக்கப்பட்டு வருவதனால் அவற்றின் பாய்ச்சல் அதிகரித்து வருகின்றது. உதாரணமாக, 1990க்கும் 1998க்குமிடையே மொத்த உலக வர்த்தகம் 4,300 பில்லியன் டொலரிலிருந்து 6,700 பில்லியனாக 55.0 வீதத்தாலும், வளரும் நாடு களில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 34.4 பில்லியன் டொலரிலிருந்து 155.0 பில்லியன் டொலராக 350.0 வீதத்தாலும் உயர்ந்தன. வர்த்தகத்தில் ஏற்பட்ட இத்துரித வளர்ச்சியானது பல்வேறு வகையான நுகர்பொருட்கள் முன்னரிலும் பார்க்க அதிகரித்த அளவில் நுகர்வோருக்குக் கிடைப்பதை உறுதிசெய்வதோடு, உற்பத்தி நிறுவனங் களையும் தொழிலாளரையும் அதிசிறந்த சர்வதேச நடைமுறைகளுக்கு முகங்கொடுக்கச் செய்துவருகின்றது. மூலதனமும் ஊழியமும் உற்பத்தியில் திறமையானமுறையில் கையாளப்படுவதை இவை தூண்டுகின்றன. மேலும், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்ற உள்ளீடுகளின் கிடைக்குந்தன்மையை அதிகரித்து உற்பத்தித்திறனை இது உயர்த்துகின்றது. சுருங்கக்கூறின், உற்பத்தியும் நுகர்வும் சர்வதேசமயப்படுத்தப்பட்டு வருகின்றன எனலாம். உற்பத்தியிலேற்படும் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதனால் வளரும் நாடுகள் தமது வறுமைநிலை யைக் குறைத்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள முடியுமென்றும் கூறப்படுகின்றது.

மேற்கூறிய, பல நன்மைகளை ஏற்படுத்தும் பூகோளமயமாக்கமானது பாதகமான சில விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது என்பதை மறுக்க முடியாது. உள்ளூர் உற்பத்தியை சர்வதேசப்போட்டிக்கு உட்படுத்துவதன் மூலம் அது உற்பத்தி நிறுவனங்களுக்கும் தொழிலாளருக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. மேலும், நிதிச்சந்தைகள் சர்வதேச முதலீட்டிற்குத் திறந்து விடப்படுவதாலும், மூலதனப்பாய்ச்சல்களின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாலும் அச்சந்தைகள் வெளி நாட்டுச்சக்திகளின் செல்வாக்கிற்குட்பட்டு, பல்வேறு நாடுகளில் நாணய, நிதி நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக அஞ்சப்படுகின்றது. மூலதனம் உட்பாய்தலும், தொடர்ந்து சடுதியாக அது வெளியே கொண்டு செல்லப்படுவதும் உற்பத்தி நிறுவனங்களையும் வங்கிகளையும் படுகடன்நிலைக்கு உள்ளாக்குவதோடு, அவற்றை வங்குறோத்தடையவும் செய்கின்றன. இவ்வாறான ஒரு நெருக்கடிநிலையே 1997 இல் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டது. இது போன்ற நெருக்கடிகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. மேற்படி விடயங்கள் தொடர்பாக ஆராயும்போது ''வாஷிங்டன் நிலைப்பாடு'' (Washington Consensus) என்பது பற்றியும் ஆராய்வது முக்கியமானதாகும்.

**வாஷிங்டன் நிலைப்பாடு** (Washington Consensus)

வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும், உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் என்பவற்றின் ஆளுநர் சபைக்கூட்டங்களிலும் ஐக்கிய அமெரிக்கா வலியுறுத்திவரும் கொள்கை சீர்திருத்தங்களினால் ஏற்படும் ஒரு விளைவே பூகோளமயமாக்கமெனவும் கூறலாம். மேற்படிக் கொள்கைகள் ''வாஷிங்டன் நிலைப்பாடு'' என்ற பதத்தால் அழைக்கப்படுகின்றன. கட்டில்லாத சந்தைகள் உருவாக்கப்படுவதையும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கங்களின் பங்கு குறைக்கப்படுவதையும் எல்லா உலக அரங்குகளிலுமே அமெரிக்கா இன்று வலியுறுத்தி வருகின்றது. இந்த வாஷிங்டன் நிலைப்பாடானது பத்து அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

1. அரசாங்கச்செலவீட்டில் இறைக்கட்டுப்பாட்டைக் கையாளுதல்.
2. அரசாங்கநிதிகளை மானியங்கள் அளிப்பதற்கு கையாள்வதினின்று வேறு துறைகளுக்குத் திருப்புதல்.
3. வட்டிவீதங்களின் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

4. எல்லைநிலை வரிவிகிதங்களைக் குறைத்தல்.
5. நிலையான மாற்றுவிகிதங்களை சந்தையால் நிர்ணயிக்கப்படும் மாற்று விகிதங்களாக மாற்றுதல்.
6. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலைத் தாராண்மைப் படுத்தல்.
7. வர்த்தகத்தை தாராண்மைப்படுத்தல்.
8. உற்பத்திச்சந்தைகளில் காணப்படும் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
9. அரசுக்கு உடைமையான தாபனங்களைத் தனியார்மயப்படுத்தல்.
10. தனியார்சொத்துரிமையை உறுதிப்படுத்தல்.

ஏனைய சமூகநிறுவனங்களை முற்றாகவே ஒதுக்கிவிட்டு சந்தைகளின் பங்கினை ஊக்குவித்தலே இவற்றின் அடிப்படை நோக்கமாகும். சந்தையில் பங்குபற்றும் பல்வேறு சாரார்களுக்கு அதிலுங்குறிப்பாக, பல்நாட்டுக் கம்பெனிகளுக்கும் நிதிநிறுவனங்களுக்கும் அதிஉயர்ந்த சுதந்திரத்தை வழங்கும் இந்த வாஷிங்டன் நிலைப்பாடானது அந்நிறுவனங்களின் சுயவிருப்பினையே பிரதிபலிக்கின்றதெனக் கூறின் அது மிகையன்று.

வாஷிங்டன் நிலைப்பாட்டின் சில அம்சங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, வெளிநாட்டு நேரடிமுதலீடுகளின் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவது ஒரு சில நாடுகளிலேனும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளது. அதேபோன்று, வர்த்தகத்தை தாராளமயப்படுத்தியமை ஏற்றுமதி, இறக்குமதிகளை ஊக்குவித்து உலகின் எல்லாப்பகுதிகளிலுமே நுகர்வோரின் நலன்களை மேம்படுத்தியுள்ளது. மாறாக, பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கினைக் குறைப்பது ஏறக்குறைய எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே சிறப்பாகச் செயற்படத் தவறிவிட்டது என்றே கூறலாம். குறிப்பாக, ஊழியம், நிதிச்சந்தைகள் என்பவற்றைப் பொறுத்தவரை அதன் பலவீனம் இப்பொழுது தெரிய வந்துள்ளது. இதனால் வாஷிங்டன் நிலைப்பாடு தோல்வியடைந்துள்ள விடயங்களில் அது திருத்தியமைக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். மேலும், பூகோளமயமாக்கல் நிலைத்திருப்பதற்கு சமூக பாதுகாப்புவலையினை (Social Safety Network) பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதனை வலுப்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். வர்த்தகத்தில் ஈடுபடுவது சமூகரீதியாக ஒரு நாட்டிற்கு நன்மைகளை ஏற்படுத்தினாலும் சில விடயங்களிலாவது அது

பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, கட்டில்லா வர்த்தகமானது ஒரு நாட்டிற்கு எத்துறைகளில் ஒப்பீட்டுநலன் கூடுதலாகக் காணப்படுகின்றதோ அத்துறை களுக்கு உற்பத்தியை நகர்த்தி', ஒப்பீட்டுநலன் இல்லாத துறைகளை நலிவடையச் செய்வதையும், அவ்வாறு நலிவடையும் துறைகளில் தொழில்புரிவோர் தவிர்க்க முடியாத வகையில் பாதிப்பிற்குள்ளாவதையும் இங்கு குறிப்பிடலாம்.

சர்வதேச வர்த்தகம் ஏற்படுத்தும் இவ்வித பாதிப்புகளை சீர்ப்படுத்து வதற்கான ஒரு வழி வர்த்தகத்தின் மூலம் நன்மையடைவோர் அதன் ஒரு பகுதியை ஏதெனுமொரு நட்டஈட்டு அடிப்படையில் இழப்புகளை எதிர்கொள்வோருடன் பகிர்ந்து கொள்வதாகும். ஒப்பீட்டுநலன் அடிப்படை யிலான வர்த்தகத்தினால் ஏற்படும் இது சர்வதேச வர்த்தகக் கோட்பாடு களைக் கற்கும் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயமாகும். பாதிப்படை யும் தொழிலாளருக்கு மீள்பயிற்சியளித்தல், அவர்களுக்குத் தற்காலிக வருமான ஆதாரங்களை வழங்குதல், தொழில்களைப் பாதுகாக்கும் வகையில் அவற்றின் அமைவிடத்தை மாற்றியமைப்பதற்கென வரிசார்ந்த சலுகைகளை அளித்தல் போன்றன சந்தை ஒருங்கிணைப்பால் தனிப்பட் டோருக்கு ஏற்படும் பளுக்களைக் குறைப்பதற்கான சர்வதேசரீதியான வழிகளாகும். ஆயினும்', இவ்வாறான பாதுகாப்பு வலையொன்றை ஏற்படுத்துவதற்கு வாஷிங்டன் நிலைப்பாட்டில் இடமில்லாதிருப்பதே அதில் காணப்படும் முக்கிய குறைபாடாகும். ஆகவே, இவ்வித சமூக பாதுகாப்பு வலையொன்றினை அறிமுகம் செய்யும் வகையில் அது மாற்றியமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். நிதிமூலதனத் தினது கட்டில்லாப்பாய்ச்சலின் மீது அரசாங்கம் தலையிட வேண்டிய கட்டாயமும் ஏற்கப்படவேண்டும். முன்னரே குறிப்பிட்டது போன்று, குறுங்கால நிதிகள் கட்டின்றிப்பாய்வது நெருக்கடிகளை ஏற்படுத்தவல்லது என்பதை ஏற்போமாயின், அதனை நெறிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு அவசியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சுருங்கக்கூறுவோமாயின், தாராளமயமாக்கலானது ஒரு முடிவான செயலாகவன்றி, சிறந்ததொரு நிதியமைப்பினை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாகவே கருதப்படவேண்டும். மேற்படி விடயங்களில் வாஷிங்டன் நிலைப்பாட்டினின்றும் விலகுவது பூகோள்மயமாக்கத்தை எந்த விதத்திலுமே தாமதப்படுத்தமாட்டாது என்பதை திட்டவட்டமாகக்

கூறலாம். இந்தவகையில், நிதித்துறையில் தோன்றும் பீதிகளினாலேற்படும் உற்பத்தி இழப்புகளை தவிர்த்துக் கொள்ள உதவுவதன் மூலம் இவ்விதத் தலையீடானது கூடிய நன்மை பயக்குமெனக் கூறலாம். பூகோளமய மாக்கமானது நன்மை தரக்கூடிய ஒரு செயல்முறையாக (அதாவது, வருங்காலப் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு திறவுகோலாக) இருக்கும் அதேவேளையில், நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் ஏற்றத் தாழ்வுகளை விரிவடையச்செய்து சமூகமுன்னேற்றத்திற்கு ஒரு முட்டுக் கட்டையாக இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். பூகோளமயமாக்கம் கணிசமான நன்மைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தபோதும், தவிர்க்க முடியாத வகையில் அது சில எதிர்மாறான விளைவுகளையும் கொண்ட தாகவே இருக்கின்றது. அமைப்புரீதியாகப் பலவீனமான வளரும் நாடு களையும், வறியோர், வேலையற்றோர், குறைந்த வேதனம் பெறுவோர் அடங்கலாக வேறும் பல்லாயிரக்கணக்கானோரையும் அது அபிவிருத்திச் செய்முறையினின்றும் புறக்கணிக்கக்கூடுமென்ற அச்சமும் நிலவுகின்றது.

பூகோளமயமாக்கமானது நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையை அதிகரிப்பதால், நாடுகளுக்கிடையே கொடுக்கல் - வாங்கல் களிலேற்படும் அதிகரிப்பின் ஒரு விளைவே பூகோளமயமாக்கமெனவும் கூறப்படுகின்றது. வர்த்தகம், முதலீடுகள், மூலதனம் என்பவற்றின் பாய்ச்சலின்மீது விதிக்கப்படும் நிர்வாகரீதியான கட்டுப்பாடுகள் அமைப்பு சார்சீராக்கல் கொள்கைகளின் கீழ் துரிதகதியில் தளர்த்தப்பட்டு வருவது இதனை மேலும் ஊக்குவிக்கின்றது. முன்னர் பாதுகாக்கப்பட்டிருந்த பல துறைகள் இப்பொழுது தாராளமயப்படுத்தப்பட்டு வருவதும், தேசிய சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுவதும், தனியுரிமைகள் உடைத்தெறியப் படுவதும், அரசமானியங்கள் மீளாய்வு செய்யப்படுவதும் உலக வர்த்த கத்தின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்த அடிப் படையில், பூகோளமயமாக்கத்தை ''சந்தைகளின் விரிவாக்கம்'' என்றும் கூறலாம். சந்தைகளின் விரிவாக்கமானது உற்பத்தி நிறுவனங்களுக் கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் கடும்போட்டியை ஏற்படுத்தி போட்டித்தன்மையை உலக வர்த்தகத்தின் பிரிக்கமுடியாத ஒரு அம்சமாக மாற்றி வருகின்றது. இவ்வித சர்வதேசரீதியிலான போட்டித்தன்மையை பின்வரும் காரணிகள் தவிர்க்க முடியாததாக ஆக்கியுள்ளன:

1. உலக வர்த்தக நிறுவனம் (WTO) தாபிக்கப்பட்டமையும் வர்த்த கத்தைத் தாராண்மைப்படுத்தும் அதன் நோக்கமும்.

2. இதுவரைகாலமும் மூடப்பட்டிருந்த பல பொருளாதாரங்கள் திறந்து விடப்பட்டுள்ளமை.

3. தொழில்நுட்பம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளமையும், தொலைத் தொடர்பு, போக்குவரத்துவசதிகள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள புரட்சி கரமான மாற்றங்களும்.

4. நாடுகளுக்கிடையே ஏற்பட்டுவரும் தனியார்முதலீட்டின் அதிகரித்த பாய்ச்சலும் உத்தியோகபூர்வ வெளிநாட்டு உதவியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும்.

**சர்வதேச போட்டித்தன்மையும் தொழிற்சங்கங்களும்**

போட்டித்தன்மை என்பதை உற்பத்தித் திறனிலேற்படும் பேண்தகு அதிகரிப்பு எனவும் கூறலாம். உண்மையான தனியார்துறைக்கம்பனிகள் உண்மையான தொழில்களில் போட்டியிடுவதனூடாகவே உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. இவ்வித போட்டியினூடாக உற்பத்தித்திறனில் ஏற்படும் அதிகரிப்பு வரவேற்கத்தக்க ஒன்றே என்பதையும், கம்பனி முகாமையாளர் தமது தொழில்களில் சீர்திருத்தங்களையும் புதுமைகளையும் புகுத்துவதற்கு தீவிரமான போட்டியே தூண்டுகோளாக அமைகின்றது என்பதையும் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால், போட்டித்தன்மை யானது எவ்வாறு அடையப்பட வேண்டும் என்பது தொடர்பாக அவை முகாமையாளருடன் முரண்படுகின்றன:

i. தொழிலாளரது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலமும், சிறந்த வேலைநிலைமைகளை உருவாக்குவதன் மூலமும், உற்பத்தி நடவடிக்கைகளில் தொழிலாளரின் சுயவிருப்புடன்கூடிய பங்கேற் றலையும், ஒத்துழைப்பையும் உறுதி செய்து கொள்வதே போட்டித் தன்மையை உயர்த்திக் கொள்வதற்கான அடிப்படையாக அமைய வேண்டுமென அவை கூறுகின்றன. இதற்கு மாறாக, தீவிரமடைந்து வரும் பூகோளமயமாக்கமானது தொழிலாளருக்கும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்களுக்கும் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களையும் சவால்களையும் ஏற்படுத்தி வருகின்றது:

ii. நாடுகளின் பொருளாதார இறைமையானது தனிப்பட்ட நாடுகளது அரசாங்கங்களின் செல்வாக்கு, ஆதிக்கம் என்பவற்றிலிருந்து பிரித் தெடுக்கப்பட்டு உற்பத்தி, வர்த்தகம், தொழில்நுட்பம் என்பவற்றைக்

கட்டுப்படுத்தும் பல்நாட்டுக் கம்பெனிகளையும், வளரும் நாடுகள் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை நிர்ணயிக்கும் சர்வதேச நிதிநிறுவனங்களையும் சென்றடைந்துவிட்டது.

iii. வளரும் நாடுகளில் நிதிச்சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டுள்ளமை அந்நாடுகளை முன்னொருபோதும் இல்லாதவகையில் நிதிசார்ந்த அதிர்ச்சிகளுக்கு உள்ளாக்குகின்றது.

அண்மைக்காலங்களில் மூலதனத்தைப் போன்று ஊழியமும் நாடுகளுக் கிடையே குறிப்பாக, தெற்கிலிருந்து வடக்கிற்கு பாயத்தொடங்கியுள்ளது. ஆனால், வடக்கிலிருந்து தெற்கிற்குப் பாயும் மூலதனத்தைப் பின்னைய நாடுகள் வரவேற்பதைப் போன்று, தெற்கிலிருந்து பாயும் ஊழியத்தை வடக்கேயுள்ள நாடுகள் ஏற்கத்தயங்குகின்றன. உலக வர்த்தகநிறுவனம் கூட, பொருட்கள், சேவைகள், முதலீடு என்பவற்றை கட்டின்றிப் பாயவிடுவது போன்று தென்கோள நாடுகளிலிருந்து தொழில்மயமாகிய நாடுகளுக்கு ஊழியம் செல்வதை தாராளமனதோடு அனுமதிப்பதில்லை. இறைக்கட்டுப்பாடு, தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல் என்ற மூன்றுமே வாஷிங்டன் நிலைப்பாட்டின் மூன்று தூண்களாகும். Stiglitz என்பாரது கருத்தின்படி, லத்தீன் அமெரிக்க நாடுகளின் நடைமுறைப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட இக்கொள்கைகள் ஏனைய வளரும் நாடுகளின் மீது துரிதகதியிலும் தேவைக்குமதிகமாகவும் திணிக்கப்பட்டு வருவதால் இவை எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாறான விளைவுகளை இந்நாடுகளில் ஏற்படுத்தி வருகின்றன. பொருத்தமற்ற சூழ்நிலைகளில் திணிக்கப்படும் இறைக்கட்டுப்பாடுகள் பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. உயர்ந்த வட்டிவீதங்கள் புதிய தொழில் முயற்சிகளைப் பாதிக்கின்றன. மூன்றாம் உலகநாடுகளில் மூலதன - நிதிச் சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டமை பூகோளரீதியான நிதிநெருக்கடி களை ஏற்படுத்தியுள்ளதுடன், சிறிய முன்னேறிக் கொண்டிருக்கும் நாடு களுக்கு அது பெரும் சவாலாகவும் உள்ளது

பூகோளமயமாக்கத்திற்கு எதிராக இவ்வாறான பல கண்டனங்கள் கூறப்பட்டபோதும், வளரும் நாடுகளிலுள்ள வறியமக்களுக்கு அது பல்வேறு நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது என்பதையும் மறுக்க முடியாது என்பது சிலரது வாதமாகும்:

i. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதிகளே உந்துசக்தி யாகவிருக்கும் சந்தர்ப்பங்களில் சர்வதேச வர்த்தகம் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுகின்றது.

ii. சர்வதேச வர்த்தகத்திற்கு சந்தைகளைத் திறந்துவிடுவது பல நாடுகளில் துரிதமான வளர்ச்சி ஏற்படுவதற்கு உதவியுள்ளது. ஏற்றுமதிசார்ந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டிருந்த பெரும்பாலான ஆசிய நாடுகளின் கைத்தொழிற் கொள்கை கோடிக்கணக்கான மக்களது வாழ்க்கைநிலையை மேம்படச்செய்துள்ளது. உதாரணமாக, மக்கள் முன்னரிலும் பார்க்க நீண்ட காலம் வாழக்கூடியதாக உள்ளதோடு அவர்களது வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது.

iii. பூகோளமயமாக்கம் வளரும்நாடுகளின் தனிமையைப்போக்கி அங்கு வாழும் மக்கள் இலகுவில் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி யுள்ளது. பூகோளமயமாக்கத்தின் இன்னொரு அம்சமான வெளிநாட்டு உதவியானது பல்வேறு குறைபாடுகளைக்கொண்டிருந்தபோதும், கோடிக்கணக்கான மக்களுக்கு அது நன்மையளித்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

தனிப்பட்டமுறையில் பூகோளமயமாக்கம் நல்லதோ, தீயதோ அன்று. தமது சொந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும், தமக்கு வேண்டிய வேகத்திலும் அதனைத்தழுவிக் கொண்ட கிழக்காசியநாடுகள், 1997ஆம் ஆண்டு நெருக்கடியினாலேற்பட்ட பின்னடைவிற்கு மத்தியிலும், பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டன. எனினும், உலகமயமாக்கம் நடை முறைப்படுத்தப்பட்ட முறையும் உலகமயமாக்கத்தின் பேரில் வளரும் நாடுகளின் மீது திணிக்கப்பட்டுவரும் கொள்கைகளும் மீளாய்வு செய்யப் படுவது அவசியமானதாகும். மேலும், பொருளாதார பூகோளமயமாக் கத்துக்கும் அதோடு தொடர்புள்ள விடயங்களை நெறிப்படுத்துவதில் உள்ள அரசியல் ஆற்றலின்மைக்குமிடையே காணப்படும் இடைவெளி யானது அதிகரித்து வருகின்றமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். தென்கிழக்காசிய நாடுகள், யப்பான், ரஷ்யா, பிரேசில் ஆகியவற்றில் ஏற்பட்ட நிதி நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றின் மத்தியில் G-7 நாடுகளினதும், பிரெட்டன்வுட்ஸ் தாபனத்தினதும் அரசியல் இயலாமையானது ஆபத்துகளை முகாமை செய்வதற்குத் தேவையான பூகோளரீதியான ஏற்பாடுகள் இல்லாமையை விளக்குகின்றது. சுருங்கக் கூறுவோமாயின், பகிரப்பட்டுள்ள இறைமை என்ற எண்ணக்கருவின்

அடிப்படையில் அமைந்த பூகோளரீதியான ஆட்சிமுறையொன்று இல்லாத நிலையே இன்று காணப்படுகின்றது எனலாம்.

2000ஆம் ஆண்டு நடந்த தென்மண்டல உச்சிமகாநாட்டில் கியூப ஜனாதிபதி பிடெல் கெஸ்ரோ கூறியது இங்கு நோக்கத்தக்கது: ''நாம் வாழுகின்ற இந்த உலகம் என்ற படகில் நாமெல்லோரும் பயணிகளாக உள்ளோம். ஆனால், இதில் பயணிப்போர் வெவ்வேறு நிலைமைகளின் கீழ் பயணிக்கின்றனர் என்பதே பூகோளமயமாக்கத்திற்கு அடிப்படையாக விருக்கும் உண்மைநிலையாகும்''. பூகோளமயமாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு யுகத்தில் வளரும்நாடுகள் எதிர்நோக்கும் முரண்பட்ட நிலையை இக்கூற்று தெளிவுபடுத்துகின்றது.

# பூகோளமயமாக்கமும் தொழிற்சங்க இயக்கமும்

இரண்டாம் உலகப்போருக்குப்பிந்திய காலப்பகுதியில் கடந்த இரு தசாப்தகாலப்பகுதியிலேயே முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு உலகம் பொருளாதாரரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் துரிதமான மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. தகவல்துறையில் ஏற்பட்டுள்ள வியக்கத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள், உற்பத்திசார்ந்த தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள அதிநவீன அபிவிருத்திகள் என்பவற்றால் எழும் நன்மைகளை இப்பொழுது பெரும்பாலான உலகநாடுகள் அனுப விக்கக் கூடியதாக உள்ளது. தொழில்நுட்பம் சர்வதேசமயமாக்கப்பட்டுள்ள மையை இது காட்டுகின்றது. அத்துடன், அதிகரித்துவரும் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், அவற்றின் விளைவாக ஏற்படும் பூகோளமயமாக்கம் என்பவற்றின் செல்வாக்கிற்குட்பட்டதாக இன்றைய உலகம் மாற்றமடைந்து வருகின்றது. தாராளமயமாக்கல் என்பது பொருட்கள், முதலீடுகள், மூலதனம் என்பவற்றின் நாடுகளுக்கிடையிலான பாய்ச்சல்களின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதை அல்லது நீக்கப் படுவதைக் குறிக்கும். இவற்றின் மீது அரசாங்கங்கள் விதிக்கும் நிர்வாகக் கட்டுப்பாடுகள், இவற்றிற்கு அரசாங்கம் வழங்கும் மானியங்கள் என்பன அகற்றப்படுவதையும் இது உள்ளடக்கும். அரசுக்குடைமையான தாபனங் களின் உரிமை, கட்டுப்பாடு என்பவற்றை தனியார்துறை நபர்களுக்கும் தாபனங்களுக்கும் மாற்றுவது தனியார் மயமாக்கல் எனப்படும். இவ் விரண்டினதும் மொத்த விளைவாக ஏற்படுவதே பூகோளமயமாக்கமாகும். மேற்படி மாற்றங்களின் விளைவாக, உலகப்பொருளாதாரம் ஒரு பக்கத்தில் போட்டித்தன்மை நிறைந்ததாகவும், மறுபக்கத்தில், நாடுகள் அதிகரித்த அளவில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மை கொண்டனவாகவும் மாறிவருகின்றன.

## சர்வதேச போட்டித்தன்மையும் தொழிற்சங்கங்களும்

போட்டித்தன்மை என்பதை உற்பத்தித்திறனிலேற்படும் பேண்தகு அதிகரிப்பு எனவும் கூறலாம். உண்மையான தனியார்துறைக்கம்பெனிகள் உண்மையான தொழில்களில் போட்டியிடுவதனூடாகவே உற்பத்தித்

திறனில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. போட்டியினூடாக உற்பத்தித்திறனில் ஏற்படும் இவ்வித அதிகரிப்பு வரவேற்கத்தக்க ஒன்று என்பதையும், கம்பனி முகாமையாளர் தமது தொழில்களில் சீர்த்திருத்தங்களையும் புதுமைகளையும் புகுத்துவதற்கு தீவிரமான போட்டியே தூண்டுகோளாக அமைகின்றது என்பதையும் தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்கின்றன. எனினும், இப்போட்டித்தன்மை எவ்வாறு அடையப்படவேண்டும் என்ற விடயம் தொடர்பாக அவை முகாமையாளருடன் முரண்படுகின்றன. தொழிலாளரது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தல், சிறந்த வேலை நிலைமைகளை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் அவர்களது சுய விருப்புடன் கூடிய பங்கேற்றலையும், ஒத்துழைப்பையும் உறுதி செய்து கொள்வதே போட்டித்தன்மையை உயர்த்திக் கொள்வதற்கான அடிப்படைகளாக அமையவேண்டுமென அவை கருதுகின்றன. தீவிரமடைந்து வரும் பூகோளமயமாக்கலானது இதற்கு மாறாக தொழிலாளருக்கும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்களுக்கும் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களையும் சவால்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

## பூகோளமயமாக்கமும் தொழிலாளரும்

தீவிரமடைந்து வரும் பூகோளமயமாக்கலினால் உருவாகிவரும் பல்வேறு பிரச்சினைகளுள் தொழிலாளரின் கவனத்தை ஈர்க்கவேண்டிய விசேட பிரச்சினைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படுதல் அல்லது நசுக்கப்படுதல்.
2. அரசாங்கத்தின் சமூகசேமநலன் மீதான செலவீடுகள், வீட்டுத்துறையினருக்கான வருமானமாற்றல்கள் என்பவற்றில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சிப்போக்கு.
3. வருமானப்பங்கீட்டிலேற்பட்டுவரும் பாதகமான மாற்றங்களும், அவற்றால் வருமான ஏற்றத்தாழ்வுகளில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பும்.
4. தொழில்வாய்ப்புகளினது கட்டமைப்பிலும் ஒழுங்கமைப்பிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்.
5. சர்வதேசரீதியிலான ஊழியஅசைவும் புலம்பெயர்ந்த ஊழியம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும்.
6. பல்நாட்டுநிறுவனங்களின் அதிகரித்துவரும் செயற்பாடுகள் உருவாக்கும் வேறு பிரச்சினைகள்.

## 1. தொழிற்சங்கஉரிமைகள்

தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், பூகோளமயமாக்கம் என்பன தொழிற்சங்கங்களை அமைத்தல், கூட்டுப்பேரம்பேசல், இருபக்க - முப்பக்க அடிப்படையிலான பிரதிநிதித்துவம் போன்ற தொழிற்சங்க உரிமைகளின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கும், அவ்வுரிமைகள் நசுக்கப்படுவதற்கும் இடமளித்துள்ளன. உதாரணமாக, வெளிநாட்டு நேரடிமுதலீட்டை ஈர்க்கும் நோக்கமாக பல்வேறு நாடுகளில் தாபிக்கப்பட்டு வரும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தொழிலாளர்நலன் தொடர்பான சட்டங்களின் அமுலாக்கம் தளர்ச்சியடைந்துள்ளது அல்லது அவற்றின் அமுலாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அங்கு வேலைசெய்யும் தொழிலாளருக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, 1977 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட அமைப்புசார் பொருளாதார சீர்திருத்தக்கொள்கைகளின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை செயற்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (Greater Colombo Economic Commission – GCEC) தொடர்பான ஆரம்பத்திட்டத்தில் முக்கிய சில தொழிற்சட்டங் களுக்கு விலக்களிக்கவும் வேறு சிலவற்றில் திருத்தங்களை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் தொழிலாளர் தொடர்பான வேதனச் சபை சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், தொழிற்சங்கச்சட்டம், தொழில் பிணக்குகள் சட்டம், தொழிலாளரை தொழிலிலிருந்து இடை நிறுத்தும் சட்டம் போன்றவற்றில் தொழில் வழங்குநருக்குச் சார்பான திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான சில பிரேரணைகளும் அதில் காணப் பட்டன. இம் மாற்றங்களுக்கெதிராக தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட சட்ட நடவடிக் கைகள் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டது. எனினும், அவற்றிற்குப் பதிலாக சேர்த்துக் கொள்ளப்பட்ட சில நிர்வாகரீதியான கட்டுப்பாடுகள் தொழில்ஆணையாளரது அதிகாரங்களைக் கட்டுப் படுத்தியதோடு, தொழிற் சங்க நடவடிக்கைகளை தவிர்ப்பனவுமாக இருந்தன. உதாரணமாக, தொழிலமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் இவ் வலயத்திற்குட்பட்ட தொழிற் சாலைகளுக்குச் செல்வதற்கு அனுமதி அட்டை (Gate Passes) வழங்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி, முன்னறிவித்தலின்றி அத்தொழிற்சாலைகளுக்கு அவர்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. இதன்மூலம் தொழிலதிகாரிகள் அங்கு

செல்வதன் முக்கிய நோக்கம் அதாவது, திடீர்சோதனைகளை மேற் கொள்ளும் நோக்கம் முறியடிக்கப் பட்டது. தொழிலாளரின் தொழிற் சங்க உரிமைகள் சில பறிக்கப்படுவதை இச்சட்ட நடவடிக்கைகளால் தடைசெய்ய முடியாது போயிற்று என்பதற்கு 1980ஆம் ஆண்டு ஜூலை வேலைநிறுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டமை சான்றாக உள்ளது. அத்துடன், தொடர்ந்து அமுல்செய்யப்பட்ட அவசரகால சட்டத்தின்கீழ் வேலை நிறுத்தங்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. தொழிலாளர் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் பற்றிய 1948ஆம் ஆண்டு சர்வதேச தொழில் தாபனத்தின் 87ஆவது பிரகடனத்திற்கு இவை முரணானவை என்பதை இங்கு நினைவுபடுத்திக்கொள்வது அவசிய மாகும். மேற்படி நடவடிக் கைகளின் காரணமாக தொழிற்சங்க இயக்கம் இக்காலப்பகுதியில் ஓரளவிற்கு வலுவிழந்தது என்பதற்கு தொழில் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை, தொழிற்சங்க அங்கத் தவர்களின் எண்ணிக்கை என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி சான்று பகருகின்றது.

**2. சமூகசேமநலன் மீதான அரசாங்கச் செலவீடுகள், வீட்டுத்துறைக்கான வருமான மாற்றல்கள் என்பவற்றிலேற்பட்டுவரும் வீழ்ச்சி**

படுகடன்நிலையிலுள்ள அபிவிருத்தியடையும் நாடுகள் நுகர்விற்கு உயர்ந்த மானியங்களை அளித்துவருவதோடு தேவைக்குமதிகமான பொதுநிர்வாகசேவையொன்றையும் பொதுச்சேவைகளையும் பராமரித்து வருவதால், அவை தமது வரவு-செலவுத்திட்டங்களில் குறைநிலையை அனுபவிப்பதாக சர்வதேச நாணயநிதியமும் உலகவங்கியும் குறை கூறுகின்றன. இவற்றின் மீது செலவிடும் தொகையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நாடுகள் பொருளாதாரத்திறனை மேம்படுத்திக்கொள்ள முடியு மென்பதும், இதன்மூலம் சேமிக்கப்படும் பணத்தை தமது கடன்களை அடைப்பதற்கு கையாளமுடியுமென்பதும் அவற்றினது கருத்தாகும். எனவே, பொது நிர்வாகசேவையைச் சீராக்குவதுடன் கல்வி, சுகாதாரம் போன்ற சமூகசேமநலன்துறைகளில் அரசாங்கங்கள் தமது ஈடுபாட்டைக் குறைக்க வேண்டுமென்பதும் அவற்றினது ஆலோசனைகளாகும். மேற்படி ஆலோசனைகளுக்கமைய பல நாடுகளில் அரசாங்கங்கள் சமூகசேம நலனை இலக்காகக் கொண்டு சந்தையில் தலையிடுவதினின்றும் பின் வாங்கியுள்ளன. அதாவது, நிர்வாகரீதியிலான விலைக்கட்டுப்பாடுகளை

விதித்தல், நுகர்வுக்கு மானியம் வழங்குதல், வீட்டுத்துறையினருக்கு வருமானமாற்றங்களை வழங்குதல் போன்றவற்றை பெருமளவிற்கு கைவிட்டுள்ளன. இதன்விளைவாக, நுகர்பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் உயர்ந்து தொழிலாளர் அதிலுங்குறிப்பாக, குறைந்த வேதனம் பெறுவோர் பாதிக்கப்படுகின்றனர். தொழிற்சங்கங்களின் கவனத்தை ஈர்க்கவேண்டிய விடயங்களுள் இதுவும் ஒன்றாகும்.

### 3. வருமானப்பங்கீடு

முழு உலகையும் வளர்ச்சி அடையச்செய்கின்ற பூகோளமயமாக்கலானது மறுபக்கத்தில், அதன் மூலம் எழும் வாய்ப்புகளையும் ஆபத்துகளையும் பல்வேறு நாடுகளிடையிலும் தனிப்பட்ட ஒரு நாட்டிற்குள்ளும் பெரிதும் சமமற்றவகையில் பங்கீடு செய்வதன்மூலம் உலகைப் பிளவுபடவும் செய்கின்றது. அதிகரித்து வரும் பூகோளமயமாக்கலானது பல நாடுகளில் வருமானப்பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்து தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மோசமடையச் செய்துள்ளது. பல நாடுகளில் இன்று வசதி படைத்தோருக்கும் வறிய மக்களுக்குமிடையேயும் மூலதனஉரிமையாளருக்கும் தொழிலாளருக்குமிடையேயும் காணப்படும் இடைவெளி விரிவடைந்து வருகின்றது.

அண்மைக்காலத்தில் பல நாடுகளில் ஏற்பட்டுவந்த பொருளாதார வளர்ச்சியானது மக்களுக்கு போதுமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், அதனூடாக அந்நாடுகளில் நிலவும் மோசமான வறுமை நிலையைக் குறைப்பதற்கும் போதுமானதாக இருக்கவில்லை. மேலும், இந்த வரையறுக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியினது நன்மைகள்கூட சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே சமமாக பங்கிடப்படாததால், வருமான ஏற்றத்தாழ்வுகள் விரிவடைந்துள்ளன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் 1986 முதல் செல்வந்தருக்கும் வறியவருக்குமிடையிலான இடைவெளி அதிகரித்து வந்துள்ளது. கீழ்மட்டவருமானம் உழைக்கும் 20.0 வீதமானோரது வருமானங்கள் 20.0 வீதத்தால் அதிகரித்த அதேவேளையில், உயர்வருமானம் பெறும் 20.0 வீதமானோரின் வருமானங்கள் 44.0 வீதத்தாலும், அதிஉயர்வருமானம் பெறும் உச்சமட்ட 5.0 வீதமானோரின் வருமானங்கள் 60.0 வீதத்தாலும் உயர்ந்தன. வருமானப் பங்கீட்டிலேற்பட்ட சார்பு அடிப்படையிலான இம்மாற்றங்கள் செல்வந்தருக்கும் வறியோருக்குமிடையிலான இடைவெளியை மேலும் விரிவடையச் செய்துள்ளன. 1979ஆம் ஆண்டின் பின்னர் ஐக்கிய இராச்சி

யத்திலும் இதேவித போக்குகள் காணப்பட்டன. 1980களில் வேகமாக உயர்ந்த வறுமைமட்டம் 1990களிலும் தொடர்ந்தது. வளர்ச்சியடைந்த நாடுகளில் மேற்குறிப்பிட்டவாறு வருமானப்பங்கீட்டில் சார்பு அடிப்படையிலான வேறுபாடுகள் அதிகரித்த அதேவேளையில், அமைப்புசார்சீராக்கல் திட்டங்களின் கீழ் தாராளமயமாக்கும் கொள்கையை அமுலாக்கிவரும் லத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட வேறு பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் கடந்த சுமார் இருபது ஆண்டுகளில் வருமானப்பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்ததோடு முழுவறுமை நிலையும் அதிகரித்தது. உதாரணமாக, இலங்கையில் அமைப்புசார்சீராக்கலின் முதலாவது கட்டத்தில் விரிவடையத் தொடங்கிய வருமானப் பங்கீட்டுச்சமமின்மை 1990-91க்கும் 1995-96க்குமிடையே மேலும் அதிகரித்தது. குறைந்த வருமானம் பெறும் 50.0 வீதமான வீட்டுத்துறையினரின் வருமானப்பங்கு 21.2 வீதத்திலிருந்து 19.5 வீதமாக சுமார் 8.0 வீதத்தால் குறைந்தது. இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகளில் முழு வறுமையில் வாடும் மக்களது விகிதாசாரம் அதிகரித்ததனாலேயே இந் நாடுகளில் உலகவங்கியின் அனுசரணையுடன் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. எனவே, பூகோளமயமாக்கத் தினால் அதிகரித்துவரும் சமூக ஏற்றத்தாழ்வுகள் தொழிற்சங்கங்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய முக்கியமானதொரு விடயமெனக் கருதலாம். சமூகத்தில் ஒரு பகுதியினர் ஆடம்பரவாழ்க்கை நடத்திவரும் அதே வேளையில் இன்னொரு பகுதியினர் முழுவறுமை நிலையில் வாழ வேண்டியிருப்பது தொழிற்சங்கங்களின் அடிப்படையான நோக்கங்களுக்கு முரணானதாகும்.

## 4. தொழில்வாய்ப்புகளின் கட்டமைப்பிலும் ஒழுங்கமைப்பிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

புகோளமயமாக்கத்தினால் அண்மைக்காலத்தில் தொழில்வாய்ப்புகளினது கட்டமைப்பிலும் ஒழுங்கமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. அவையாவன:

### (அ) தொழில் வாய்ப்புகளின் கட்டமைப்பு

i. வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதில் மரபுரீதியாக விவசாயத் துறையே முதன்மை வகித்து வந்தநிலை இப்பொழுது மாறிவருகின்றது. பூகோளஅளவில், விவசாயத்துறைசார்ந்த வேலைவாய்ப்புகளின்

பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது. கைத்தொழிற்றுறை வேலைவாய்ப் புகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளபோதும், அதன் வீழ்ச்சி வேகம் முன்னையதிலும் பார்க்கக்குறைவானதாகும். வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சேவைகள்துறை இன்று முன்னணியில் நிற்கின்றது. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க நாட்டினது மொத்த தொழிற் படையில் சேவைகள்துறைத் தொழிலாளரின் பங்கு அதிகரித்து வருவதோடு, அத்துறையில் பெண்களினது பங்கும் கணிசமாக அதிகரித்துள்ளது. மேலும், இத்துறையில் முகாமையாளருக்கும், ஊழியருக்கும் இடையிலான வேறுபாடு மங்கிவருவதாகவும், இதனால் தொழிலாளர் வகுப்பினரின் வழமையான பிரச்சினைகளான வேதனங்கள், வேலைநேரம், தொழில் பாதுகாப்பு என்பவற்றை மையமாக வைத்து தொழிற்சங்கங்கள் அங்கத்தவர்களை திரட்ட முடியாதிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ii. ஊழியச்சந்தையில் பொதுவாகவே பெண்களின் பங்கு அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்திருக்கின்றது. ஆனால், அவர்களுட் பெரும் பாலானோர் ஊழியச்சந்தையின் அடிமட்டங்களிலேயே தொழில் புரிகின்றனர். அவர்கள் செய்யும் தொழில்கள் குறைந்தவேதனம் பெறுவனவும், மோசமான வேலைநிலைமைகளைக் கொண்டனவும் ஆக உள்ளன.

iii. தொழில்நுட்பத்திலேற்பட்டு வரும் துரிதமுன்னேற்றம் காரணமாக ஊழியச்சந்தையில் பயிற்சியும் வினைத்திறனும் கொண்ட தொழிலாள ருக்கே இப்பொழுது கேள்வி உயர்ந்து காணப்படுகின்றது. எனவே, தொழிலாளரது பயிற்சியையும் வினைத்திறனையும் உயர்த்துவதற்கான கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

iv. அண்மைக்காலங்களில் வேகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ள முறை சாராத்துறையானது வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்துவருகின்றது. எனினும், இத்துறையில் பணிபுரிவோர் தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்க முடியாதிருப்பதாலும் அவர்கள் செய்யும் தொழில்கள் சட்டப்பாதுகாப்பைக் கொண்டிராத தாலும் அவர்களின் ஊழியம் சுரண்டப்படுகின்றது. பெண்களும் சிறுவர்களுமே இத்துறையில் பெருமளவினராக இருப்பதால் அவர்களே கூடுதலான பாதிப்புக்குள்ளாகின்றனர். இலங்கையில் 10-14 வயதுப்பிரிவில் இருக்கும் 1.9மில்லியன் சிறுவர்களுள்

250,000 பேர் இத்துறையில் தொழில்புரிவதாக ஒரு கணிப்பீடு கூறுகின்றது.

(ஆ) தொழில்களின் ஒழுங்கமைப்பு

i. பூகோளமயமாக்கத்தின் கீழ் தொழில்களின் முறையானதன்மை மாற்றப்பட்டு (defomalisation) அவை ஒப்பந்தஅடிப்படையிலான வேலைகளாகவும் (அதாவது, ஒப்பந்தஅடிப்படையில் தொழில் வழங்குநருக்கு வேலைசெய்தல் அல்லது தொழில்வழங்குநரால் அமர்த்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் கீழ் வேலைசெய்தல்), பகுதிநேர வேலைகளாகவும், சமயாசமய அல்லது தற்காலிக வேலைகளாகவும் மாற்றப்பட்டு வருவதால் தொழிலினது பாதுகாப்பிற்கான உத்தர வாதம் இழக்கப்பட்டும் வருகின்றது. ஒருவனது வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும் தொழில்முறைக்கு (life-long Employment pattern) இதன்மூலம் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ii. சர்வதேசரீதியான ஊழியஅசைவும் புலம்பெயர்ந்த ஊழியமும் தொழில்வாய்ப்புகள் கிடைக்கும் இடங்களுக்கு (நாடுகளின் எல்லை களுக்கு அப்பாலுங்கூட) ஊழியம் அசைவது பூகோளமயமாக்கலின் இன்னொரு முக்கிய பண்பாக உள்ளதால், பல நாடுகளினது ஊழியச் சந்தைகளில் இன்று புலம்பெயர்ந்த ஊழியம் கணிசமான பங்கு வகிக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வூழியம் மோசமான சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகள் 3D வேலைகள் அதாவது, Dirty, Dangerous and Difficult என வர்ணிக்கப்படுகின்றன. எமது பிராந்தி யத்தைப் பொறுத்தவரை, புலம்பெயர்ந்த தொழிலாளர்களுள் பெரும் பாலானோர் பெண்களாவர். அவர்களுக்கு குறைந்த வேதனங்கள் வழங்கப்படுவதுடன், அவர்கள் வேலைசெய்யும் சூழலும் மோசமான தாக உள்ளது. தொழில்வழங்குநரால் பெண்கள் பாலியல்ரீதியான இம்சைகளுக்கு உட்படுத்தப்படுவதும் பரவலாக காணப்படும் ஒரு பிரச்சினையாகும்.

iii. முறைசாராத்துறை ஊழியத்திலும், புலம்பெயர்ந்தஊழியத்திலும் சர்வதேச ஊழியத்தரநியமங்கள் மதிக்கப்படுவதில்லை.

iv. செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தொழிலுறவுப் பிரச்சினை களினின்று விடுபடுவதற்குமாக உற்பத்தியாளர் உற்பத்திச் செய்முறை

களில் தன்னியக்கக்கருவிகளைக் கையாள்வது (Global Factories) அதிகரித்து வருகின்றமை வேலைவாய்ப்புகள் தொடர்பான இன்னொரு அண்மைக்கால அபிவிருத்தியாகும். இது வேலைவாய்ப்புகளைக் குறைப்பதால் இதுவும் தொழிற்சங்கங்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

v. பல்நாட்டுக்கம்பனிகளின் அதிகரித்துவரும் நடவடிக்கைகளினாலும் பண்டங்களின் உற்பத்தி பல்வேறு கட்டங்களாக நாடுகளுக்கிடையே பிரிக்கப்படுவதாலும் பல்நாட்டுக்கம்பனிகளே பூகோளமயமாக்கலை ஏற்படுத்தும் பிரதான தாபனஅமைப்புகளாக விளங்குகின்றன. தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் துரிதமான முன்னேற்றங்களினாலும் பேரளவு உற்பத்தியினாலும், மிகைசேமிப்புகள் அதிகரிப்பதனாலும் தவிர்க்கமுடியாத வகையில் அவை தமது உற்பத்தியளவை பெருக்கிக் கொள்கின்றன அல்லது தம்மை பூகோளமயப்படுத்திக் கொள்கின்றன. மூலதனமானது சர்வதேச அடிப்படையில் திரட்டப்படும் அதே வேளையில், பூகோளரீதியான தொழிற்சாலைகளில் (Global Factories) அவை உற்பத்தியை மேற்கொள்வதாகவும் கூறப்படுகின்றது. மோட்டார்வாகன உற்பத்தியிலிருந்து இதற்கு சிறந்த உதாரணங்களைக் காட்டலாம். ஜெனரல் மோட்டார்ஸ் (Genetal Motors) கம்பனியானது யப்பானின் டொயோட்டா, சுசூக்கி என்பவற்றுடன் கூட்டுமுயற்சியில் ஈடுபடுவதோடு, சுவீடனின் Saab கம்பனியானது யப்பானின் டொயோட்டா, சுசூக்கி என்பவற்றிலும் பங்குடைமையாளராக உள்ளது. தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உள்நாட்டுச்சந்தைகளின் பருமன் போதுமானதாக இல்லாததாலேயே பல்நாட்டுக்கம்பெனிகள் கட்டுப்பாடுகளற்ற வெளிநாட்டுச்சந்தைகளைத் தேடுகின்றன. மேலும், இக்கம்பனிகள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை பல்வேறு கட்டங்களாகப் பிரித்து அவற்றை வெவ்வேறு நாடுகளில் மேற்கொள்கின்றன. 1993இல் அமெரிக்காவினது ஏற்றுமதிகளில் 36.0 வீதமும், இறக்குமதிகளில் 43.0 வீதமும் அமெரிக்காவில் பதிவுசெய்யப்பட்ட பல்தேசியக்கம்பனிகளுக்கும், அக்கம்பனிகளது வெளிநாட்டுக் கிளைகள், உபகம்பனிகள் என்பவற்றுக்குமிடையே நடைபெற்ற வர்த்தகமாக இருந்தமையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். அரசியற்புவியியல் நோக்கில் இவ்வித வர்த்தகம் வெளிநாட்டு வர்த்தகமென கூறப்பட்டபோதும், பொருளாதாரநோக்கில் இது ஒரே

கம்பெனிக்குள்ளேயே நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களேயாகும். இவ்வித நடவடிக்கைகளின் மூலம் பல்தேசியக்கம்பனிகள் பூகோள ரீதியான தொழிற்சாலைகளை உருவாக்குவதாக கூறப்படுகின்றது. தொழில்நுட்பவளர்ச்சி காரணமாக, போக்குவரத்துச்செலவுகளும், தொலைத்தொடர்பு செலவுகளும் வெகுவாகக் குறைந்துள்ளமை இதற்கு சாதகமாக உள்ளது. பேரளவு உற்பத்தி, ஏனைய நிறுவனங் களை இணைத்துக்கொள்ளுதல் என்பவற்றினூடாக தமது பூகோள அளவிலான உற்பத்திப்பங்கையும் இவை பெருப்பித்துக்கொள்கின்றன.

vi. இறுதியாக, பூகோளமயமாக்கத்தினால் தீவிரமடைந்து வரும் சர்வதேச போட்டித்தன்மையானது உற்பத்தியின் சமூகநோக்கங்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. இந்நிலையில் தொழிலாளருக்குப் பாதுகாப்பானதும், சுகாதாரமானதும், போதுமான வருமானத்தைத்தருவதுமான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்கும், தொழிலாளரது தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், கட்டாய ஊழியத்தைத் தடை செய்வதற்கும், வேலையில் அமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லையை நடைமுறைபடுத்துவதற்கும் தேவையான உத்தி களைக் கையாளவேண்டிய கட்டாயம் தொழிற்சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் இவற்றை செயற்படுத்த முயலும்போது உற்பத்திச்செலவுகள் உயர்வதால் ஊழியத்தைச் சிக்கனப்படுத்தும் தொழில்நுட்பங்களைக் கையாள்வதற்கு உற்பத்தி யாளரை அவை தூண்டுகின்றன. வேலைவாய்ப்புகளை இது குறைக் கக்கூடும் என்பதையும் தொழிற்சங்கங்கள் கவனத்திற் கொள்ள வேண்டி இருக்கின்றது.

## இன்றைய பூகோளநிலைமையில் தொழிற்சங்கங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், சமூகநீதியினை நிலை நாட்டுவதற்கும் பொறுப்புவாய்ந்த முகவர்களாகவும், அதேவேளையில், சமூகமாற்றங்களை முன்னெடுத்துச்செல்லும் தாபனங்களாகவுமிருக்கும் தொழிற்சங்கங்கள் இன்றைய சூழ்நிலையில் பெரும் பொறுப்புகளைக் கொண்டனவாக இருக்கின்றன. உண்மையிலேயே அவை, வரலாற்றில் முன்னொருபோதும் எதிர்கொள்ளாத சவால்களுக்கு இப்பொழுது முகங் கொடுத்து வருகின்றன எனலாம். பூகோளரீதியாக ஏற்பட்டுவரும் மேலே

குறிப்பிட்ட மாற்றங்களில் தொழிலாளரும் தொழிற்சங்கங்களும் தமது நேரடியான செல்வாக்கைச் செலுத்துவதோடு, அதன்மூலம் ஏற்படும் நன்மைகளில் நியாயமான பங்கினை தொழிலாளர் அனுபவிப்பதை உறுதி செய்துகொள்வதற்கு அவை தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்படி மாற்றங்களை பெரும் சவால்களாகக் கருதும் அதேவேளையில், அவற்றை தமக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்புகளாகவும் கருதி அவை செயற்பட வேண்டியது அவசியம்.

**இதற்கான வழிவகைகள் யாவை?**

இன்றைய பூகோளநிலைமையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் இருவிதமான வழிமுறைகளைக் கையாளலாம். ஒன்று, தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், அவற்றின் விளைவாக ஏற்படும் பூகோளமயமாக்கல் என்பவற்றின் பாதகமான விளைவுகளை எதிர்கொள் வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்தல் இவற்றுள் முதலாவதாகும். இப்படியான விளைவுகளை வெற்றிகரமாக எதிர்கொள் வதற்கு அவை தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். மற்றது, இன்று இடம்பெற்றுவரும் மாற்றங்களுக்கு மாற்றுவழிகளை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்களைத் தூண்டுதல். முதலாவது வழியைப் பின்பற்றுவதாயின், தமது முழுச்சக்தியையும் கொண்டு இம்மாற்றங்களை அவை எதிர்க்கலாம் அல்லது அவற்றிற்கு விட்டுக்கொடுத்து அவற்றின் விளைவுகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முயலலாம். இரண்டாவது வழியைப் பின்பற்றுவதாயின், தாம் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நன்கு பரிசீலித்து, அவற்றை முறையான வேலைத்திட்டங்களாகத் தயாரித்துக்கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்களைத் திசைதிருப்ப முயலலாம். திட்டமிட்ட தலையீடுகளின் மூலம் இம்மாற்றங்களில் செல்வாக்கு செலுத்தவேண்டு மாயின், அவற்றின் பலம், பலவீனங்கள், அவை உருவாக்கும் வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை கவனமாகப் பரிசீலனை செய்து மதிப்பீடு செய்யவேண்டும். தொழிற்சங்கங்கள் தமது சமூகப்பங்காளிகளால் முன்வைக்கப்படும் எல்லாத் திட்டங்களுக்குமே எதிர்ப்புத்தெரிவிக்காது அவற்றிற்கு மாற்றுத்திட்டங்களை முன்வைப்பதோடு அவை அமுல் செய்யப்படுவதைத் தூண்டவும் வேண்டும். அரசாங்கம் அமுலாக்கும் கொள்கைகள், திட்டங்கள் என்பன தொடர்பான தகவல்களைத்திரட்டி

ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதன் மூலமே அவை பற்றிய சரியான மதிப்பீட்டைச் செய்து கொள்ளலாம்.

தொழிலாளர்களும் அவர்களது பிரதிநிதிகளும் ஒரு நாட்டினது பொருளாதாரம் எவ்வாறு செயற்படுகின்றது. பல்வேறு கொள்கைகளும் செயற்றிட்டங்களும் அதனை எவ்வாறு பாதிக்கின்றன என்பன பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும். தமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், தொழில்வழங்குநருடனும், சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடனுங்கூட அர்த்தபுஷ்டியுள்ள பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கும் இது அவசியமானதாகும். பல்வேறு கொள்கைகள் தம்மீதும், தமது தொழில்நிலைமைகளின் மீதும் எவ்வாறான தாக்கங்களைக் கொண்டிருக்கும். இக்கொள்கைகளால் தோன்றும் பாதக மான விளைவுகளை எவ்வாறு தணித்துக் கொள்ளலாம் என்பன பற்றியும் அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. சுருக்கமாகக்கூறுவோமாயின், தொழிற்சங்கவாதிகளிடையே தொழில் சார்பண்பும், தொழில்சார் அணுகுமுறையும் வளர்ச்சியடைவது இன்றி யமையாத தேவைகளாகும். இன்றைய தலைவர்கள் தம்மிடம் இது போதியளவு இல்லையென்பதை ஏற்று தமது திறமைகளை உயர்த்திக் கொள்ளும் முயற்சிகளில் தாமதமின்றி ஈடுபடவேண்டும்.

## உள்நாட்டில் தொழிற்சங்கங்களுக்கிடையே ஒற்றுமையின் முக்கியத்துவம்

இறுதியாக, இன்றைய சூழ்நிலையில் தொழிற்சங்கங்கள் தமக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்வது தவிர்க்க முடியாத ஒரு தேவை யாகும். தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை அதிகமாகவிருப்பதும், அவை தமக்கிடையே பரஸ்பரம் பகைமையுணர்வைக் கொண்டிருப்பதும் தொழில் வழங்குநருக்கெதிராக தம்மைப் பலவீனப்படுத்தும் என்பதை அவை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். எனவே, தொழிற்சங்கங்கள் தமக்கிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்திக்கொள்வது ஒரு கட்டாய தேவையெனக் கூறலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தொழிற் சங்கங்கள் ஒன்றுபடுவதற்குப் பதிலாக அவை மேலும்மேலும் பிரிந்து செல்லும் ஒரு போக்கினை இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையைப்பொறுத்தவரை, பெருந்தோட்டத்துறைசார்ந்த தொழிற் சங்க இயக்கம் இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. ஏற்கனவே சிதறிக்கிடக்கும் அது அண்மைக்காலத்தில் தலைவர்களிடையே காணப்படும்

புரிந்துணர்வின்மை, தலைமைத்துவத்திற்கான போட்டி என்பன காரணமாக மேலும் பிளவுபட்டு வருகின்றது. பலம்வாய்ந்த தனியார்கம்பனிகளது நிர்வாகத்தின் கீழ் தொழில்புரியும் தோட்டத்தொழிலாளரைப் பிரதி நிதித்துவப்படுத்தும் இச்சங்கங்கள் ஏற்கனவே சிதறுண்டு காணப் படுகின்றன. சிதறிக்கிடக்கும் இத்தொழிற்சங்கங்கள் ஒன்றிணைவதற்குப் பதிலாக, மேலும்மேலும், உடைந்து சிறுசிறு சங்கங்களாக மாறிவருகின்றன. தோட்டத்தொழிலாளருக்கு இது எந்தவிதத்திலும் சாதகமாகவிருக்க மாட்டாது என்பதை இப்போதாயினும் உணர்ந்து ஒன்றுபடுவதன் மூலமே இத்தொழிற்சங்கங்கள் தமது நோக்கங்களை அடைவதில் வெற்றி காண முடியும் என்பதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமிருக்கமுடியாது. பூகோளமயமாக்கல் துரிதமாக இடம்பெற்று வரும் இன்றைய உலகில் தோட்டத்துறைசார்ந்த தொழிற்சங்கங்களுக்கு மட்டுமன்றி பொதுவாக எமது நாட்டின் எல்லாத் தொழிற்சங்கங்களுக்குமே இது பொருந்தக்கூடிய ஒன்றாகும்.

## தொழிற்சங்கங்களுக்கிடையே சர்வதேசரீதியான ஒற்றுமையின் அவசியம்

இறுதியாக, பூகோளமயமாக்கல், அதன் விளைவாக நாடுகள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருத்தல் என்பவற்றால் எழும் சவால்களை வெற்றி கரமாக எதிர்கொள்வதற்கு பல்வேறு நாடுகளிலும் செயற்பட்டுவரும் தொழிற்சங்கங்களுக்கிடையே சர்வதேசரீதியில் ஒற்றுமை ஏற்படுவது இன்றியமையாததாகும். பூகோளமயமாக்கப்பட்டு வரும் கம்பனிகளைப் பற்றியும், அவை செயற்படும்விதம் பற்றியும் தொழிற்சங்கங்கள் தெளிவான விளக்கங்களைக் கொண்டிருக்க வேண்டியிருப்பதால், அவை தொடர்பான தகவல்களைத் திரட்டி அவற்றை ஆய்விற்குட்படுத்த வேண்டிய கட்டாயத்தேவை தொழிற்சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. பொருத்தமானதொரு சர்வதேச வலையமைப்பினூடாகவே இவ்வித தகவல்களை திரட்டிக்கொள்வது சாத்தியமாகும். இந்தவகையில், தொழிற் சங்கங்களுக்கிடையே சர்வதேசரீதியில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படுவது இதற்கு வாய்ப்பாகவிருக்கும் எனலாம். எனவே, தேசிய தொழிற்சங்கங்கள் சர்வதேச தொழிற்சங்கஇயக்கத்திலும் தொழிற்சங்க சம்மேளனங்களிலும் இணைந்து கொள்வது இன்றைய காலத்தின் பொதுவான தேவையெனலாம். பரஸ்பரம் தங்கியிருக்கும் தன்மை அதிகரித்துவரும் இன்றைய உலகில் பூகோளமயமாக்கலின் விளைவுகளை எதிர்கொள்வதற்கு இதுவே சிறந்த தொழிற்சங்க அணுகுமுறையுமாகும்.

# அபிவிருத்தியின் வேறுபட்ட பரிமாணங்கள்[1]

## ''பொருளாதார அபிவிருத்தி'' என்றால் என்ன?

பொருளாதார அபிவிருத்தி என்பதற்கு பலரும் பலவிதமான விளக்கங் களைக் கூறுகின்றனர். கடந்தகாலங்களில் பொருளாதார அபிவிருத்தியும் தலாமொத்தத் தேசிய உற்பத்தியும் அடிக்கடி ஒரே கருத்திலேயே கையாளப் பட்டன. ஆனால், இப்போது இவ்விரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு என்பது ஏற்கப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திக்கு அவசியமான ஒரு கூறு மட்டுமே. மாறாக, அபிவிருத்தியானது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒன்றாகும். வருமானம், வெளியீடு என்பன அதிகரிக்கும் அதேவேளையில், ஒரு நாட்டின் தாபன-சமூக-நிர்வாகக் கட்டமைப்புகளில் மாற்றங்களேற்படுவதும் அபிவிருத்திக்கு இன்றியமை யாததாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில், சமூகபாரம்பரியங்கள், நம்பிக்கைகள், மக்களது மனப்பாங்குகள் என்பவற்றிலுங்கூட மாற்றங்கள் ஏற்படவேண்டியது அபிவிருத்திக்கு அவசியமானதாகவிருக்கலாம்.

அபிவிருத்தி என்பது ஒரு தனிமனிதனோ, ஒரு சமூகமோ வாழ்க்கை யில் முன்னரிலும் பார்க்க சிறந்ததொரு நிலையை அடைந்து கொள்வதைக் குறிக்கும். பொருளாதார அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளமையை மறுக்க முடியாது. பொருளாதார வளர்ச்சி இன்றி அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியாது. பொருளா தார அபிவிருத்திக்கு உணவு, உடை, உறையுள், மருத்துவ சேவைகள், கல்விக்கான வசதிகள் போன்றவற்றின் நிரம்பலில் அதிகரிப்பு ஏற்படு வதோடு, பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி, இவை அனைத்துமே அபிவிருத்திக்கு இன்றியமையாதனவாகும். மேலும், பொருளாதார வளர்ச்சி மொத்ததேசிய உற்பத்தியைக் குறித்தபோதும்,

1. அனைத்துப் பல்கலைக்கழகங்களினின்றும் தெரிவுசெய்யப்பட்ட அரசறிவியல் துறை மாணவர்களுக்கென மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் (Centre for Alternative Policies) கொழும்பில் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்.

அத்தேசிய உற்பத்தியானது மக்களிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றது என்பதை விளக்கமாட்டாது. ஒரு நாட்டினது அபிவிருத்தியைப் பொறுத்த வரை, பொருளாதாரவளர்ச்சியானது வருமானம், செல்வம் போன்றவற்றை அடைந்து கொள்வதற்கான ஒரு வழி மட்டுமே. பொருளாதார வளர்ச்சி ஏற்படும் அதே வேளையில் வருமானப்பங்கீட்டில் சமமின்மை ஏற்பட்டு, சமூகத்தின் ஒரு பகுதியினரின் மெய்வருமானங்கள் வீழ்ச்சியடைந்து அவர்கள் மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படவும் கூடும். ஆகவே, பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்கு வருமானத்தை மொத்த அடிப்படையில் மட்டும் நோக்குவது போதுமானதன்று. மக்களிடையே அந்த வருமானமானது எவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது, உண்மையிலேயே பொருளாதார அபிவிருத்தியை அது ஏற்படுத்துகின்றதா என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மொத்த தேசிய உற்பத்தியானது ஒரு நாட்டு மக்கள் தமது நலனை மேம்படுத்திக் கொள்வதற்குக் கிடைக்கப் பெறும் மொத்த சாதனங்களை மட்டுமே அளவிடுகின்றது. இதற்கு மாறாக, அதன் மூலம் மக்கள் எவ்விதமான வாழ்க்கை நிலையையடைந்து கொள்கின்றார்கள் என்பதே அபிவிருத்தியில் முக்கியமாகக் கருதப்படும். அமார்த்தியா சென் (1992) அவர்களது அபிவிருத்தி பற்றிய ''சாதனைத் திறன்'' அணுகுமுறையானது இதனைத்தெளிவாக விளக்குகின்றது. மக்கள் தாம் அடைய விரும்பும் ஒன்றை சாதனைத்திறனிலேற்படும் அதிகரிப்பு, மனிதசுதந்திரங்களைப் பூரணமாக அடைந்து கொள்வதற்குத் தடையாக விருக்கும் அத்தியாவசியத் தேவைகளினின்றும் விடுபடுதல் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர் அபிவிருத்தி என்பதை விளக்குகின்றார். ஒருவன் அல்லது ஒருத்திக்கு தான் உயர்ந்ததாகக் கருதும் ஒரு வாழ்க்கை நிலையை அடைந்து கொள்வதற்கு இருக்கும் வாய்ப்புகளை அது குறிக்கும். மக்களது ஆற்றலிலேற்படும் அதிகரிப்பே உண்மையான பொருளாதார அபிவிருத்தி என்பதை இந்த அணுகுமுறை விளக்குகின்றது. மேற்படி அணுகுமுறையானது, அபிவிருத்தியின் உண்மையான தன்மையை வலியுறுத்துவதுடன், வளர்ச்சி, மூலதனத்திரட்டல், பொருளா தாரத்தின் தொகைரீதியான வளர்ச்சி போன்றவற்றினின்றும் விலகி, மக்களது வாழ்க்கைத்தரம், மக்கள் அனுபவிக்கும் சுதந்திரங்கள் என்பவற்றின் மீது கவனத்தைத் திருப்புகின்றது.

## ஒரு பொருளாதாரத்தில் அரசினது பங்கு

ஒரு பொருளாதாரத்தில் அரசினது பங்கினை இரு எல்லைநிலைகளிலிருந்து நாம் நோக்கலாம். ஒன்று, சந்தைப் பொருளாதாரமுறைமை. இங்கு உற்பத்திச் சாதனங்கள் பெருமளவிற்கு தனியார்துறைக்கு உரித்தானதாகவும், அதுவே உற்பத்திக்கு அவற்றைக் கையாளுவதாகவுமிருக்கும். சந்தைமுறையின் செயற்பாட்டில் அரசாங்கத்தின் ஆகக்குறைந்தளவு தலையீட்டையும் அது கொண்டிருக்கும். மற்றையது, மத்திய திட்டமிட்ட பொருளாதாரமுறையாகும். ஆனால் நடைமுறையில், சந்தைப் பொருளாதாரங்களிலும் பொதுத்துறையின் பங்கு ஓரளவு காணப்படவே செய்யும். அதேபோன்று, மத்திய திட்டமிட்ட பொருளாதாரத்திலும் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார்துறை பங்கு கொள்ளும். உற்பத்தி நடவடிக்கைகளில் தனியார்துறை, பொதுத்துறை என்ற இரண்டுமே பங்கு கொள்ளும் ஒரு கலப்புப் பொருளாதாரமுறையே நடைமுறையில் இன்று பல நாடுகளில் காணப்படுகின்றது. பின்பழம்பொருளியல் கோட்பாடுகள் சந்தையின் செயற்பாட்டில் குறைந்தளவு அரசதலையீடு காணப்படும் ஒரு பொருளாதாரமுறைமையே சிறந்தது என்ற கருத்தை முன்வைத்தன. அவ்வாறான ஒரு பொருளாதாரம் எல்லா உற்பத்தி நடவடிக்கைகளிலுமே எல்லைச்செலவானது விலைக்குச் சமனானதாகவிருப்பதை உறுதி செய்யும் நிறைபோட்டி மாதிரியினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இக்கோட்பாட்டின்படி, (i) தனிப்பட்டோர் அல்லது சமூகக்குழுக்களின் அழுத்தம் காரணமாக மட்டுமே பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிட வேண்டும் (ii) பொருளாதார நடவடிக்கைகளில் அரசு ஒரு நடுவர் போன்று பக்கச்சார்பின்றி செயற்படுவதாக இருக்க வேண்டும், (iii) தனியார்துறை சுதந்திரமாக செயற்படுவதற்கான ஒரு கட்டுக்கோப்பை ஏற்படுத்துவதை மட்டுமே அரசு கடமையாகக் கொண்டிருக்க வேண்டும் என அது கூறுகின்றது. இதற்கமைய, சொத்துடைமை தொடர்பான விதிமுறைகளை செயற்படுத்தல், போட்டித்தன்மையுள்ள சந்தைகளைப் பராமரித்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல், வெளிநாட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றை அரசின் கடமைகள் உள்ளடக்கும். பின்பழம்பொருளியல் மாதிரிக்கு (அ) பொருளாதாரத்தில் தனியுரிமைகள் இன்மை, (ஆ) பொதுப்பண்டங்களின்மை, (இ) புறவிளைவுகள் இன்மை, (ஈ) பேரளவு சிக்கனங்கள் இன்மை போன்ற மிகவும் இறுக்கமான எடுகோள்கள் அடிப்படையாக உள்ளன. சந்தையினது திறமையின் அடிப்

படையிலும் பின்பழம்பொருளியல் கோட்பாடுகள் அரச நடவடிக்கை களுக்கு எதிரானவையாகவிருந்தன. தனியார்சந்தைமுறையில் காணப் படும் விலைப்பொறிமுறையே பொருளாதார நடவடிக்கைகளில் திறமையை உறுதி செய்யுமென்றும், மாறாக, அரசதனியுரிமையானது உற்பத்தியில் போட்டியையும் பரீட்சார்த்த நடவடிக்கைகளையும் மழுங் கடிக்கும் என்றும் அது வாதிட்டது. அரசாங்கம் செய்பவற்றை தனியார் துறையானது அதிலும் பார்க்க சிறப்பாக செய்யுமென்றும் சிலர் வாதிடு கின்றனர். பின்பழம்பொருளியல் மாதிரிக்கு அடிப்படையாகவிருக்கும் மேற்குறிப்பிட்ட எடுகோள்கள் முறிவடையும்போது, திறமையான முடிவுகளை ஏற்படுத்துவதில் அது தோல்வியடைகின்றமையே "சந்தைத் தோல்வி" என கூறப்படுகின்றது. இதை சரிசெய்வதற்கு அரசாங்கத் தலையீடு தேவையானது என்பதை அது வலியுறுத்திற்று. பொருளாதார நடவடிக்கைகளில் அரசதலையீட்டிற்கு சார்பாக இது தவிர்ந்த வேறு சில காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன: வறுமை, உரிமைகள் மறுக்கப் படல் என்பவற்றை சரிசெய்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன உட்பட வேறு சில விடயங்களில் அரசினது தலையீடு கட்டாய மாகவே தேவைப்படும். போதைப்பொருட்களின் பாவனையை ஒழித் தலை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். இங்கு சமூகநலனை கருத்திற்கொண்டு தனியாரது விருப்புகளுக்கு அரசாங்கம் அனுமதியளிப் பதில்லை. சமூகபாதுகாப்பு வலைகளை உருவாக்கிப் பராமரித்தல் எதிர்கால சந்ததியினருக்கான பொறுப்பினை ஏற்றல் என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். இரண்டாம் போருக்குப் பின்னர் இந்த அடிப்படை யிலேயே அரசாங்கத்தலையீடு பலநாடுகளில் விரிவடைந்தது. பொருளா தாரக் கட்டுப்பாடுகளையும், இறைக்கட்டுப்பாடுகளையும் அமுலாக்குதல், சட்டவிதிமுறைகளை வகுத்து செயற்படுத்தல், தனியார்துறைக்கு பல்வேறு ஊக்குவிப்புகளை அளித்தல், அத்துறைக்கு பல்வேறு சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல் போன்ற பல்வேறு வடிவங்களை அது எடுத்தது.

அரச தலையீட்டின் மூலம் பல நாடுகள் நன்மையடைந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இந்தியா வில் காலத்திற்குக்காலம் ஏற்பட்டு வந்த உணவுப்பஞ்சங்கள் சுதந்திரம் பெற்றதன் பின்னர் விவசாயத்துறையில் அரசாங்கம் தலையிட்டதன் காரணமாக ஒரு வரலாற்று நிகழ்வாக மாறியமையை இதற்கு உதாரண மாகக் கூறலாம். இலவச அல்லது மானியமளிக்கப்பட்ட சுகாதார-மருத்துவ

வசதிகள், கல்விச்சேவைகள் என்பன வழங்கப்பட்டதன் காரணமாக இலங்கை உட்பட பல நாடுகளில் கடந்த மூன்று அல்லது நான்கு தசாப்தங் களில் இறப்பு விகிதம், படிப்பறிவு விகிதம், ஆயுள் எதிர்பார்க்கை என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், பொருளாதார நடவடிக்கைகளில் அரசு இன்று தேவைக்கும் அதிகமாகவே தலையிடுவதாக வாதாடுபவர்கள் இதனை அரசினது தோல்வி என்றும் கூறுவர். அரச தலையீடு ஏற்கனவே இருக்கும் நிலைமைகளை மேலும் மோசமாக்கும் என்ற தொனி இதில் காணப்படுகின்றது. ஆகவே, அரசு தனது தலையீடுகளை குறைத்துக்கொள்ள வேண்டுமென இவர்கள் வாதிடு கின்றனர். அதே வேளையில், ''சந்தைத்தோல்வி''க்கு எதிராக இப்பொழுது ''அரசினது தோல்வி'' என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. சுதந்திரத்தை இறுதி இலக்காகவும் சமூகத்தில் தனிமனிதனை முதன்மையாகவும் வைக்கும் தாராண்மைவாதமே தலையிடாமைக் கொள்கையை வலியுறுத்து கின்றது. சுதந்திரம், தனியார்துறையின் செயற்பாடு என்பவற்றிற்காக அரசாங்கத்தலையீடு குறைக்கப்பட வேண்டுமென்பது இவர்களது வாதமாகும். தனியார்துறைக்கு கூடுதலான சுதந்திரத்தை வழங்குவதும் சமூகநல சேவைகளுக்கு சந்தைகளை உருவாக்குவதும் இவர்களது வாதங் களில் காணப்படும் முக்கிய அம்சங்களாகும். 1920ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதிக்கும் இரண்டாம் போருக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தின் வெற்றி என்ற மாயையினால் ஈர்க்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகள் பல திட்டமிடல் கமிஷன்களை நியமித்து பொருளாதாரத் திட்டமிடலை நடைமுறைப்படுத்தி வந்தன. உற்பத்திச் சாதனங்களில் அரச உடைமையையும், உற்பத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் நேரடியாக ஈடுபடுவதையும் இந்நாடுகள் ஊக்குவித்தன. ஆனால் குறுகிய காலத்திலேயே இதில் நம்பிக்கை இழந்த இந்நாடுகள் இப்பொழுது கலப்புப் பொருளாதாரமுறையைத் தழுவியுள்ளன. சாதனங் களின் ஒதுக்கீடு, நுகர்வோரிடையே பண்டங்களைப் பங்கீடுசெய்தல் என்பவற்றில் சந்தை சமிக்ஞைகள், அரச அறிவுறுத்தல்கள் என்ற இரண்டுமே பங்குவகிப்பது கலப்புப் பொருளாதாரமுறையின் ஒரு முக்கிய பண்பாகும். அதேவேளையில், இதன்மூலம் ஏற்படும் விளைவுகள் எதிர்பார்த்த முடிவுகளைக் கொண்டிருக்காவிடில், இதனை மாற்றியமைப் பதற்கு அரசாங்கம் பல்வேறு கொள்கைகளை அமுலாக்க வேண்டி யிருக்கும். அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் மேற்படி விளைவுகளைத் திருத்துவதில் அல்லது சரிசெய்வதில் எல்லாச் சந்தர்ப்பங்

களிலுமே வெற்றியடையும் எனவும் கூறமுடியாதுள்ளது. கலப்புப் பொருளாதாரங்களில் சந்தையினதும் அரசினதும் சார்புப்பங்குகள் நாட்டுக்குநாடு வேறுபடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளாதாரத்தோடு தொடர்புபட்ட விடயங்களில் அரசினது பங்கினைப் பொறுத்தவரை, கிழக்காசிய நாடுகளின் அனுபவம் பயனுள்ள தாகும். இறுக்கமான திட்டமிடல் மாதிரியைக் கைவிட்ட கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் தலையிடாக்கொள்கை என்ற மறுஎல்லைக்குச் சென்றுவிடாது (அதாவது, தலையிடாக்கொள்கையை முற்றாக ஆதரிக் கவோ, அதற்கு முற்றாக மண்டியிடவோ இல்லாது) தேவையான சந்தர்ப் பங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிட்டு, சந்தைகள் இல்லாத துறைகளில் அவற்றை உருவாக்கியும், சந்தைகள் ஏற்கனவே உள்ளவற்றில் அவற்றை நெறிப்படுத்தியும் அபிவிருத்தியில் வெற்றி கண்டன. இந்த நாடுகளில் அரசாங்கங்கள் பின்வரும் ஆறு முக்கிய கடமைகளை ஆற்றுகின்றன:

1. கல்வியை ஊக்குவித்தல்.
2. ஆராய்ச்சிக்கு உதவுவதன் மூலம் தொழில்நுட்பத்தை வளர்த்தல்.
3. அரிதாகவிருக்கும் மூலதன சாதனங்களை உற்பத்தியில் மிகத் திறமையாகக் கையாளுவதை உறுதி செய்யும் பொருளாதாரத்தின் ''மூளை'' எனப்படும் நிதித்துறைக்கு உதவுதல்.
4. உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்தல்.
5. சூழல் அழிவைத்தடுத்தல்.
6. சமூக பாதுகாப்புவலைகளை அறிமுகம் செய்தலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும்.

இந்த ஆறு கடமைகளையும் எல்லா நாடுகளினது அரசாங்கங்களுமே திறம்பட செயற்படுத்த வேண்டியது அவசியமாக இருப்பதோடு, தகவல் களைப் பெற்றுக் கொள்வதில் கைத்தொழில் நாடுகளிலும் பார்க்க கூடிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதும், சிறந்த முயற்சியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுமான விருத்தியடையும் நாடுகளில் அரசாங்கமானது ஒரு பதிலீட்டு முயற்சியாளராகவும் செயற்படவேண்டியது இன்றியமை யாததாகும். அதாவது, சில துறைகளில் அரசாங்கம் தானே உற்பத்திகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

இலங்கையில் போரினால் ஏற்பட்ட இழப்புகளும் சமாதானமும் போரினால் ஏற்பட்ட நேரடிச்செலவுகள் அதாவது, போரைக் கொண்டு நடத்துவதற்காக செலவிடப்பட்ட (அல்லது இழக்கப்பட்ட) நிதிகள், போர் காரணமாக இழக்கப்பட்ட உற்பத்தி, வருமானங்கள் என்பவற்றைப் போரினது பொருளாதாரப் பரிமாணங்கள் உள்ளடக்கும். இழக்கப்பட்ட வருமானம் என்பது, போரில்லாத இயல்புநிலையொன்று நாட்டில் இருந் திருக்குமாயின் அதன்மூலம் பொருளாதாரம் உருவாக்கியிருக்கக்கூடிய மேலதிக வருமானத்தை (அப்படியானதொரு சூழ்நிலையில் பொருளா தாரம் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடைந்திருக்கும் என்ற எடுகோள் இதில் காணப்படுகின்றது) குறிக்கும். போரினது நேரடிச்செலவுகளானவை போருக்காக அரசாங்கம் செலவிட்ட தொகையையும் விடுதலைப்புலிகள் செலவிட்ட தொகையையும் உள்ளடக்கும். போரினால் வடக்கில் பொருளா தார உட்கட்டமைப்புகள் பாரிய சேதத்திற்குள்ளாகின. அதேபோன்று, கிழக்கிலும் கொழும்பு நகரிலுங்கூட, அவற்றிற்கு சேதம் விளைவிக்கப் பட்டது. அத்துடன், போரினால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்புகளை புனர்நிர்மாணம் செய்வதற்கும், புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றல் என்பவற்றிற்கும் செலவிடப்பட்ட தொகையும் இதில் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டும். போரின் கொடூரம் காரணமாக உந்தப்பட்ட மனித வெளியேற்றத்தாலேற்பட்ட மனிதமூலதன இழப்பு, நாட்டில் காணப்பட்ட உறுதியற்ற நிலைமை காரணமாக சுற்றுலாத்துறை, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பவற்றிலேற்பட்ட வீழ்ச்சியினால் இழக்கப்பட்ட வருமானத் தொகைகள், வடக்கு - கிழக்குடனான வர்த்தகத்திலேற்பட்ட வீழ்ச்சி என்பன ஏனைய இழப்புகளாகும். போரானது ஏறக்குறைய எல்லாத்துறைகளினது உற்பத்தியிலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்திற்று.

# சமூகநலன்சேவைகளின் வழங்கலும் ஊழியத்தினது உற்பத்தித்திறனும்: இலங்கையின் தேயிலைத்தொழில்

தோட்டக்கம்பெனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே 1998ஆம் ஆண்டில் தொழிலாளரின் நாளாந்தவேதனம் தொடர்பாக செய்துகொள்ளப் பட்ட கூட்டுஒப்பந்தத்தின்கீழ், தொடர்ந்துவந்த காலப்பகுதியில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் ஊடாக நாளாந்தவேதனம் உயர்த்தப்பட்டுவந்தது. 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி, நாளாந்தவேதனம் ரூபா 515.0 ஆகவும், தொடர்ந்து 2012ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகளின் பின்னர் ரூபா 620.00 ஆகவும் உயர்த்தப்பட்டது. மேலே கூறியவாறு, வேதனம் உயர்த்தப்பட்டபோது ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேவைக்காலக்கொடுப்பனவு என்பன தொடர்பான கொடுப்பனவு களும் ரூபா 81.00 ஆல் அதிகரித்ததால், நாளாந்த வேதனத் தின் மொத்தப் பெறுமதி ரூபா 701.0 ஆக அதிகரித்ததாக கூறப்படுகின்றது.

கடைசியாகக் கைச்சாத்திடப்பட்ட 2013ஆம் ஆண்டு ஒப்பந்தம் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவிற்கு வந்தபோது அதனை மீளாய்வு செய்வதற்கு கடந்த பல மாதங்களாக இடம் பெற்றுவந்த பேச்சுவார்த்தை களில் எந்தவித தீர்க்கமான முடிவுகளையும் எட்டமுடியாத நிலையில் வேதனநிர்ணயம் இப்பொழுது இழுபறிநிலையில் உள்ளது. தொழிற் சங்கங்கள் நாளாந்த வேதனமாக ரூபா 1000ஐக் கோரியநிலையில் தோட்டக்கம்பனிகள் தேயிலையின் ஏற்றுமதிவிலையில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சிப்போக்கினால் தாம் நட்டத்தில் செயற்படுதாகக்கூறி வேதன அதிகரிப்பை வழங்குவ தினின்றும் பின்வாங்கின. அத்துடன், எதிர்காலத்தில் வேதனஉயர்வு ஊழியத்தின் உற்பத்தித்திறனோடு பிணைக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற கருத்தையும் சிலர் முன்வைத்தனர். இதனைக் கவனத்திற்கொண்டு, ஊழியத்தினது உற்பத்தித்திறன் என்பது எதனைக் குறிக்கின்றது, அதனை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய

நடவடிக்கைகள் யாவை என்பன பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். மேற்படி விடயங்களே இச்சிறுகட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

ஊழியத்தின் உற்பத்தித்திறன் என்பது, அதன் வழமையான கருத்தில், ஊழிய உள்ளீட்டில் எவ்வித அதிகரிப்பும் இல்லாமலே உற்பத்தி அதிகரிப்பதைக் குறிக்கும். இலங்கையின் தேயிலைத்தொழிலில் உற்பத்தித் திறனானது அதன் போட்டிநாடுகளுடன் ஒப்பீட்டுரீதியில் குறைவாக இருப்பதை அது தொடர்பான புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இலங்கையில் தேயிலைச்செடிகளின் வயதுமுதிர்ச்சி, வினைத்திறன்கொண்ட தொழிலாளருக்கான தட்டுப்பாடு போன்ற காரணங்களால் தேயிலையின் உற்பத்திச்செலவு உயர்வாக உள்ளது. இது தொழிலினது இலாபத்தன்மையைப் பாதிப்பதோடு, தேயிலைத்தொழிலின் நீண்டகால நிலைத்திருக்கும் தன்மைக்கும் பாதகமாக உள்ளது. வேறு எந்தஒரு விவசாயத்தொழிலிலும் போன்றே தேயிலைத்தொழிலிலும் இலாபத்தன்மையும், தொழிலின் நீடித்து நிலைத்திருக்கும்தன்மையும் அதில் கையாளப்படும் நிலம், ஊழியம் என்பவற்றின் உற்பத்தித்திறன், உள்ளீடுகளுக்கான செலவுகள், உற்பத்தி செய்யப்படும் இறுதிப்பொருளின் தரம் என்பவற்றிலேயே தங்கிஇருக்கும். இவற்றுள் முதல் இரண்டும் உற்பத்திச்செலவை நிர்ணயிக்கும் அதேவேளையில், மூன்றாவதான இறுதிப்பொருளின் தரமானது சந்தையில் தேயிலையின் போட்டித்தன்மையையும், சந்தைவிலையையும் நிர்ணயிப்பதில் முக்கியபங்கு வகிக்கும். போட்டிநாடுகளோடு ஒப்பிடும்போது, தேயிலை உற்பத்தியில் இலங்கையில் ஊழியத்தினதும் நிலத்தினதும் உற்பத்தித்திறன் குறைவாக உள்ளது. நாளொன்றிற்கு ஒரு தொழிலாளி பறிக்கும் தேயிலைத்தளிரின் அளவு போட்டிநாடுகளான கென்யா, இந்தியா, வியட்நாம் என்பவற்றோடு ஒப்பீட்டுரீதியில் குறைவாக உள்ளது. கென்யாவில் 30-35 கிலோவாகவும், இந்தியாவில் 25 கிலோ வாகவும், வியட்நாமில் 30 கிலோவாகவும் இருக்கும் அது, இலங்கையில் 12-20 கிலோவாக குறைந்தமட்டத்தில் உள்ளது. அதேபோன்று, கெனயாவில் 2300 கிலோவாகவும், தென்னிந்தியாவில் 2240 கிலோவாகவும் இருக்கும் ஒரு ஹெக்டயருக்கான தேயிலை விளைச்சல் இலங்கையில் 1688 கிலோவாக உள்ளது. 500 கிலோவிற்கும் குறைந்த விளைச்சலைக் கொண்ட தோட்டங்களும் இங்கு கணிசமான அளவு உள்ளமை குறிப்பிடத்தக்கது. நிலத்தினதும், ஊழியத்தினதும் குறைந்த உற்பத்தித்திறன் காரணமாக ஒரு கிலோ தயாரித்த தேயிலைக்கான உற்பத்திச்செலவு இலங்கையில்

உயர்வாக உள்ளது. இந்தியாவில் 1.25 டொலராகவும், வியட்நாமில் 0.75 டொலராகவும் இருக்கும் அது, இலங்கையில் 1.75 டொலராக உயர்வாக உள்ளது. மேற்படிகாரணிகளால் இலங்கையின் தேயிலைத் தொழில் ஏனைய போட்டிநாடுகளோடு ஒப்பிடும்போது இலாபத்தன்மை குறைந்த ஒன்றாக இருக்கின்றது. போட்டிநாடுகளினது போன்றே இலங்கையினது தேயிலைத்தொழிலின் இலாபத்தன்மையும் தேயிலையின் உலகசந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்கள், உற்பத்திச்செலவு என்பவற்றிலேயே தங்கி இருக்கும். இந்த நிலையில் கென்யா, இந்தியா, வியட்நாம் போன்ற குறைந்த செலவினைக் கொண்ட நாடுகளின் போட்டி காரணமாக, உயர்வானதும் கட்டுப்படுத்த முடியாததுமான மேந்தலைச் செலவுகளைக் கொண்ட எமது பெருந்தோட்டக்கம்பெனிகள் இலாபம் உழைப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றன.

இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் ஊழியத்தின் உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதற்கு பல காரணங்கள் கூறப்பட்டபோதும், தோட்டத்தொழிலாளரின் தரங்குன்றிய வாழ்க்கைநிலையே இதற்கான முக்கிய காரணி எனக்கூறலாம். தோட்டத்துறையில் ஆரம்பகாலந்தொட்டே ஊழியமானது அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஒரு உற்பத்திச் சாதனமாக கருதப்படாது வெறுமனே அது ஒரு உற்பத்திச் செலவாகமட்டுமே கருதப்பட்டு, ஊழியத்தின் நலன்மீதான செலவீடு இயன்றமட்டும் குறைக்கப்பட்டு வந்தது. மலிவானதும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் கட்டுண்டதுமான ஊழியம் வேண்டியமட்டும் கிடைக்கக்கூடியதாக இருந்தமையாலேயே அவர்களது சமூகநலனை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் உணரப்படவில்லை எனக்கூறுவதில் உண்மை உள்ளது. வேதனஉயர்வை மட்டுப்படுத்தி, உற்பத்திச்செலவினை கட்டுப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. ஊழியத்தினது நலனை உயர்த்தும் வகையான செலவுகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் கவனத்தில் எடுக்கப்படவில்லை. தோட்டத்துறையில் காலப்போக்கில் நலன்சார்ந்த நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் மனிதாபிமான காரணங்களுக்காகவே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. அதாவது நோய், நொடிகள் காரணமாக ஊழியத்தின் வேலைவரவில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டே அவ்வித செலவுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதே உண்மையாகும். தொழிலாளருக்கு ஆகக்குறைந்த சுகாதார - வைத்திய - வாழ்க்கை வசதிகளே செய்துகொடுக்கப்பட்டன. தோட்டத்

துறையில் மோசமான இருப்பிடவசதிகள், முறையான குடிநீர்வசதி, சுகாதாரவசதிகள் என்பன இல்லாதமையினால் தொழிலாளர் அடிக்கடி சுகயீனமுறுதல், தொழிலாளரிடையே அதிலுங்குறிப்பாக, பெண்களிடையே போஷாக்கின்மை, மந்தபோஷணை காணப்படுதல் போன்ற பிரச்சினைகள் தோன்றுவதற்கு இவையே முக்கிய காரணமாயிற்று. அடிக்கடி சுகயீனம் உறுவோரின் விகிதாசாரம் தோட்டத்துறையிலேயே உயர்வாக உள்ளதாக இது தொடர்பான புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இதனால் வேலை வழங்கப்படும் நாட்களில் சுகயீனம் காரணமாக வேலைக்கு சமுகமளிக் காது விடுவோரின் விகிதாசாரமும் தோட்டத்துறையிலேயே உயர்வாக உள்ளது.

உற்பத்தி நிறுவனங்களின் இலாபத்தன்மைக்கு மட்டுமன்றி, தொழிலா ளரதும் அவர்களது குடும்பத்தாரதும் சுபிட்சத்திற்குங்கூட, ஊழியத்தினது உற்பத்தித்திறன் அதிகரிப்பது முக்கியமானதாகும். தொழிலாளரது உற்பத்தித்திறனை நிர்ணயிப்பதில் வேலைத்தளத்தில் உற்பத்திச் செயற் பாடுகளுக்காக அவர்களுக்கு செய்துகொடுக்கப்படும் வசதிகளும், ஊழியத்திற்கு செலுத்தப்படும் ஊதியமும் முக்கிய காரணிகளாகும். அதேவேளையில், தாம் செய்யும் வேலை தொடர்பாக ஊழியர் கொண்டி ருக்கும் மனப்பாங்குகளும் உற்பத்தித்திறனை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்பது இப்பொழுது உணரப்பட்டுள்ளது. எந்த ஒரு தொழிலிலும் அதன் உரிமையாளர் (அல்லது முகாமையாளர்) தொழிலாள ருக்கு பல்வேறு நலன்சார்ந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவது ஊழியர் கள் தாம் செய்யும் தொழிலைப் பற்றிய சரியான மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்வதற்கு பெரிதும் உதவும் எனலாம். தொழிலாளருக்கு செலுத்தப்படும் வேதனங்களுக்குப் புறம்பாக, அவர்களது சமூகநலனையும் சேமநலனையும் மேம்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் எல்லாவித நடவடிக்கைகளும் நலன்சார்ந்த நடவடிக்கைகளில் அடங்கும். தொழிலாளர் தொழில்புரியும் களநிலைமைகளைக் கவனத்திலெடுத்து அவற்றை சீர்படுத்தல், தொழிலில் சமூகநலனை உறுதிசெய்தல், தொழிலாளருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் ஏற்படக்கூடிய நோய்கள், விபத்துகள், வேலையின்மை என்பவற்றிற்கு எதிராக காப்புறுதிகளை ஏற்படுத்தல், வேறு சமூகநலன்சார்ந்த சேவைகளை வழங்குதல் போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்வித நடவடிக்கைகள் தொழிலாளரது உடல்ரீதியானதும், உளரீதியானதும், உணர்வுசார்ந்ததுமான நலனை மேம்படுத்தி தாம்செய்யும்

தொழிலின் மீது அவர்களது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் மேலோங்கச் செய்யும். ஊழியத்தின் உற்பத்தித்திறனை நிர்ணயிப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கும். கம்பெனி உரிமையாளரும் முகாமையாளரும் தமது நலனில் அக்கறை கொண்டிருப்பதாக தொழிலாளர் உணரும்போது தாம் செய்யும் தொழில் மீதான அவர்களது ஈடுபாடும், நிறுவனத்தின் மீதான அவர்களது விசுவாசமும் மேம்படுவதால் அவர்கள் முழு அக்கறையுடனும் மிகுந்த ஆர்வத்துடனும் வேலைசெய்வர். இதனால் அவர்களது உற்பத்தித் திறன் அதிகரித்து இறுதியாக, கம்பெனியின் இலாபங்கள் அதிகரிக்கும். ஊழியரது உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் கம்பெனிகளுக்கு கணிசமான பங்கு உண்டு என்பதை இது குறிக்கின்றது என்பதும் இங்கு வலியுறுத்தப் பட வேண்டும். தொழிலாளரின் சமூகநலனையும் சுகநலனையும் மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் அவர்களது உற்பத்தித்திறனுக்கும் இடையிலான தொடர்பினை அளவீடு செய்வது இலகுவானதாக இல்லாவிடினும், அவை இரண்டிற்கும் இடையே நேர்மறையான தொடர்பு இருப்பதை எவரும் மறுக்கமுடியாது.

தொழிலாளருக்கு நல்ல இருப்பிடவசதிகளை அமைத்துக் கொடுத்தல், கல்வி-தொழிற்பயிற்சி என்பவற்றிற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல், குடும்பத்திட்டமிடல் சேவைகளை வழங்குதல் போன்றன இதிலடங்கும். குறிப்பாக, வளரும் நாடுகளில் இவை முக்கிய நலன்சார்ந்த நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன. இவ்வித நடவடிக்கை களினூடாக தொழிலாளரின் உற்பத்தித்திறனை உயர்த்தமுடியும் என்பது இப்பொழுது பொதுவாக ஏற்கப்படுகின்றது.

தேயிலைத்தொழிலைப் பொறுத்தவரை, உற்பத்தித்திறனை நிர்ணயிப் பதில் பயிர்செய்யப்படும் நிலத்தின் செழிப்புத்தன்மை, முறையான பசளை உபயோகம், தேயிலைச்செடிகளின் முறையான பராமரிப்பு, தேயிலைச்செடிகளின் வயது (தேயிலையின் முறையானமறுநடுகை) என்பவற்றோடு காலநிலைத்தன்மையும் முக்கிய பங்கு வகிக்கும் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்குகள்

பேராசிரியர் மு. சின்னத்தம்பி

இந்நூலிலே பொருளாதாரத்துறை குறித்து ஆழ்ந்த அனுபவமிக்க ஒருவரின் கருத்துக்கள் கட்டுரைகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மொத்தமாக 12 கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூலில் பொருளாதாரம் குறித்த 8 கட்டுரைகள் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்திலும் பல்கலைக்கழகங்களிலும் பொருளியலை பாடமாகப் பயிலுகின்ற மாணவர்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளன. இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கண்ணோட்டம்; மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு முதலீடு, ஊழியச்சந்தை, இறைக்கொள்கை போன்ற தலைப்பிலான கட்டுரைகள் பொருளாதாரம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம் அல்லாது பொருளாதாரம் பற்றி அக்கறை கொண்ட பொதுவாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. பொருளாதாரம், அதனது பல்வேறு மூலகங்கள் என்பன குறித்த அவரது விளக்கங்கள் இலங்கையின் பொருளாதார நிலைமையை வெளிக்காட்டுகின்றன. பூகோளமயமாக்கல் பற்றிய மூன்று கட்டுரைகள் இந்நூலுக்கு ஒரு முத்தாய்ப்பாக அமைந்துள்ளன. இலகு தமிழில் ஆற்றொழுக்குபோன்ற தெளிந்த நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய மையக்கருத்துக்களை வாசகர்களிடையே கொண்டுசேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் ஆங்காங்கே அட்டவணைகளும் வரைபடங்களும் சேர்க்கப்பட்டிருப்பது நூலுக்கு மெருகூட்டுகிறது.

**எம். வாமதேவன்**

ஆலோசகர், மலைநாட்டு புதியகிராமங்கள், உட்கட்டமைப்பு,
மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு



*மு. சின்னத்தம்பி (1940): இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தின் பொருளியல் துறையில் இளங்கலை மாணி சிறப்புப்பட்டத்தையும் இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுகலைமாணி* (MA) *பட்டத்தையும் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றிய இவர் அதே காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தினதும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினதும் பொருளியல் துறை ஆலோசகராகவும் செயற்பட்டவர். இவர் எழுதிய ஏராளமான கட்டுரைகள் ஆய்விதழ்களிலும் பொருளியல் சார்ந்த தொகுப்பு நூல்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. உலகவங்கி, சர்வதேச தொழிலாளர் தாபனம், உலக உணவுத் தாபனம்* (FAO), *ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்* (UNDP), Commonwealth Secretariat, CARE International, Save the Children (UK) *போன்றவற்றின் அனுசரணையுடன் பல ஆய்வுகளை மேற்கொண்டவர். பல்கலைக்கழக புலமைசார் ஆராய்ச்சியில் மட்டுமன்றி மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இவர் மலையக மக்களின் சமூக மேம்பாட்டிற்கான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருபவர்.*

குமரன் புத்தக இல்லம்

விடயம்: பொருளாதாரம்

ISBN 978-955-659-456-0

9 789556 594560

விலை ரூபா 450.00

#643